**24-4-2000**

**உள்ளடக்கம்**

பக்கங்கள்


1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. 13-50

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

(அ) தமிழக மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல் .. 50-52,54-56

திரு. இரா. பெர்னார்டு .. 50-51

டாக்டர் தே. குமாரதாஸ் .. 51-52

திரு. சி. வேலாயுதன் .. 52

திரு. ஜி.கே. மணி .. 54-55

திரு. வை. சிவபுண்ணியம் .. 55

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் .. 55

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. 56

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் 56

(ஆ) கடலூர் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு உடனடி சிகிச்சை அளிக்காதது .. 56-68

திரு. இ. புகழேந்தி .. 57-58

திரு. சி. ஞானசேகரன் .. 58-60

திரு. நா. பெரியசாமி .. 60-62

திரு. டி. மணி .. 62-63

223300 1.



பக்கங்கள்


**2. சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி

(ஆ) கடலூர் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு உடனடி சிகிச்சை அளிக்காதது—தொடர்ச்சி

திரு. சி. வேலாயுதன் .. 63-64

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 64-68

(இ) எண்ணூர் துறைமுகப் பராமரிப்புப் பணியால் மீன்கள் பாதிக்கப்படுவது 68-72

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் .. 69-70

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி.. 70-72

**3. தகவல் கோரல்**—

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்.. 53

(ஆ) விவசாயிகள் கூட்டுறவுக் கடனை ரத்து செய்தல் .. 53-54

**4. அறிக்கை அளித்தல்**—

பொது நிறுவனங்கள் குழு 68

**5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்**

(அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி-பண்பாடு } 73-168

*மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் .. 73,77-78, 81,142-163




பக்கங்கள்


**5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய— அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி-பண்பாடு—தொடர்ச்சி

திரு. ப. மோகன் கந்தசாமி .. 82-89

திரு. த. பூவேந்தன் .. 89-93

திரு. வை. சிவபுண்ணியம் .. 93-101

திரு. செ. இராமலிங்கம் .. 101-106

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் .. 106-113

திரு. ம. அப்துல் லத்தீப் .. 113-122

திரு. வெ.அ. ஆண்டமுத்து .. 122-125

திரு. சி. வேலாயுதன் .. 125-127

*டாக்டர் க. கிருஷ்ணசாமி .. 128-132

திரு. ஜி.கே. மணி .. 132-135

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் .. 135-142

**6. அறிவிப்பு**—

தமிழ் நூல்கள் மற்றும் திருக்கோயில் பிரசாதங்கள் வழங்குதல்.. 82

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 168-170

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 12, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 ஏப்ரல் 24, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

கடவுளே என்று கூவி அழைப்பதால் நடக்காத காரியம் ஒருவர் முயற்சியுடன் உழைக்கும்போது அந்த உழைப்புக்கேற்ற வெற்றியைத் தரும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 341, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**341—**

**புதிய தொடக்கப் பள்ளி**

***24564—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியைச் சேர்ந்த பதினெட்டாங்கோட்டை கிராமத்தில் புதிதாக தொடக்கப் பள்ளி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பதினெட்டாங்கோட்டை கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி தொடங்க விதிகளில் இடமில்லை.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினெட்டாங்கோட்டை கிராமம் மானாமதுரை தொகுதியில் உள்ளது. 300 குடும்பங்களுக்கு மேலாக இருக்கக்கூடிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளியைத் தொடங்குவதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினெட்டாங்கோட்டை கிராமத்திற்கு அருகில் சுமார் 200 அல்லது 300 அடி தூரத்தில், அரை கிலோமீட்டருக்குக் குறைவாக ஆர்.சி. அருளானந்தபுரத்தில் பள்ளி ஒன்று இருக்கிறது. அரசு விதிகளின்படி ஒரு பள்ளிக்கும் மற்றொரு பள்ளிக்கும் இடையில் ஒரு கிலோமீட்டர் தூரம் இடைவெளி இருக்க வேண்டும். எனவே, அப்படிப் பக்கத்திலேயே பள்ளி இருக்கிற காரணத்தால், அரசுக்கு வீணாகச் செலவாகக்கூடிய முறையில் தொடக்கப் பள்ளி தொடங்க வாய்ப்பு இல்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சிவகங்கை மாவட்டம் பற்றிய கேள்வி, உங்களுக்கு அனுமதி இல்லை.

வினா எண் 342, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**342—**

**பெண்கள் உயர்நிலைப் பள்ளி**

***30205—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களைத் தவிர்த்து 700 மாணவியர் படிப்பதால், தனியாக அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மங்கலம்பேட்டையில் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வரும் கல்வியாண்டில் இப்பள்ளியை பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகப் பிரிக்கக் கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால், இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி எனச் செயல்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது மாணவ, மாணவியர் 2,000 பேர் படித்து வருகின்றனர். அதிலே மாணவியர் 590 பேர் படித்து வருகின்றனர். இந்த ஆண்டு அங்கே தனியாக பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்க வேண்டும் என பெற்றோர்-ஆசிரியர் கழகத்தினரும், நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் வேண்டுகோள் வைத்திருக்கிறோம். ஓர் இலட்சம் ரூபாய் பணத்தை ஆறு மாதங்களுக்கு முன்னாலே செலுத்தியிருக்கிறோம். பெற்றோர்-ஆசிரியர் கழகம் பள்ளியை அமைப்பதற்காக வேண்டிய இடத்தை வாங்கித் தருவதற்குச் சம்மதித்து உரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அரசுக்குப் போதிய கருத்துருவை நாங்கள் அனுப்பி வைத்திருக்கிறோம்; வேண்டுகோளையும் வைத்திருக்கிறோம். ஏறத்தாழ மங்கலம்பேட்டையைச் சுற்றியுள்ள 25 கிராமங்களிலேயுள்ள குழந்தைகள் அங்கேதான் வந்து படித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து இந்த ஆண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் தரவேண்டும் என்று வலியுறுத்தி, தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏராளமான விளக்கங்களைச் சொன்னார்கள். அவர் சொன்ன ஒவ்வொரு

[2000 ஏப்ரல் 24

விளக்கத்திற்கும் மறுப்பு இருக்கிறது. இதைவிட அதிக பெண்கள் படிக்கிற பள்ளிகளும் இருக்கின்றன. இவருக்கு முன்னாலேயே நிதி கட்டியவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, நிதியும் செலுத்தி, இதைவிட அதிக பெண்கள் படிக்கிற பள்ளி இருக்குமானால், ஒரு மாவட்டத்திலே ஏதேனும் ஒரு பள்ளி என்கிற அளவிலேதான் ஏற்கக்கூடிய வாய்ப்பு உண்டு. எனவே, இந்தப் பள்ளிக்கு முன்னுரிமை கொடுக்க முடியுமா என்பதை குழு பரிசீலித்து அந்தப் பள்ளிக்கும், அடுத்த பள்ளிக்கும் இருக்கிற தூரம், அதேபோல் மாணவிகளுடைய எண்ணிக்கை - இதிலே 593 - இதைவிட அதிகமான, 750 பெண்கள் இருக்கிற பள்ளிக்கூடம் இல்லாமல் இருந்து அந்த வாய்ப்பு இந்தப் பள்ளிக்குக் கிடைக்குமானால் உறுப்பினருடைய விருப்பம் நிறைவேற்றப்படும்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே உங்களுக்கு என்ன துணை வினா இருக்கிறது?

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சருடைய துறையின் வினாக்கள் சிறிது நேரம் கழித்து எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 345, திரு. ஏ. கோதண்டம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 9-35

**345—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***21775—திரு. ஏ. கோதண்டம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பெரும்புதூர் வட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் சீராக இல்லாதது குறித்து அரசு அறியுமா?

(ஆ) இதனை சீர்செய்யவும், காட்டரம்பாக்கம், சமந்திரம்பேடு, இருங்காட்டுக்கோட்டை, செங்காடு, தண்டலம், பென்னலூர், கீவளூர்,



2000 ஏப்ரல் 24]

செட்டிப்பேடு ஆகிய கிராமங்களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியுடன் திருத்தப்பட்ட விடையை இங்கே படிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) திருப்பெரும்புதூர் மற்றும் 23 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பராமரிப்பில் உள்ளது. வழியோரத்தில் முறையற்ற குடிநீர் இணைப்புகள் எடுத்துள்ளமையாலும், போதுமான மின் அழுத்தம் இல்லாத சமயங்களிலும், திருப்பெரும்புதூரிலிருந்து இருங்காட்டுக்கோட்டை வரை உள்ள நீருந்து குழாய்களுக்குத் தேவையான நீர் அழுத்தம் கிடைக்கப்பெறாததாலும், குடிநீர் விநியோகம் சீராக அமையவில்லை.

**திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் தொகுதியில் திருப்பெரும்புதூர் பேரூராட்சிக்கும், 23 ஊராட்சிகளுக்கும் பாலாற்றில் இருந்து குடிநீர் வருகின்றது. அது போதுமானதாக இல்லை. அதனால், தயவுசெய்து நான் அமைச்சரிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், பேரூராட்சிக்குத் தனியாக ஒரு கிணற்றை அமைத்து, மேல்நிலைத்தொட்டி அமைத்துத் தருவாரா, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இன்னும் நான்கைந்து ஊராட்சிகளுக்கு வழங்க ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா 1998, அக்டோபரில் போடப்பட்டது. அதுபற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அப்போது இருந்த நிலைக்குத் தக்கவாறு பதில் தயாரித்து வந்ததற்குப் பிறகுதான், இப்பொழுது இருக்கிற நிலையைச் சேர்த்து, தங்களிடத்தில் அனுமதி பெற்று, அதை நான் திருத்திப் படித்தேன். தற்போது குடிநீர் விநியோகத்தினைச் சீர் செய்ய, திருப்பெரும்புதூர் முதல் இருங்காட்டுக்கோட்டைவரை மாற்று நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டு, தற்சமயம் சோதனையோட்டம் நடைபெற்று வருகின்றது. சோதனையோட்டம் முடிக்கப்பட்டு, 31-5-2000-ல் இருங்காட்டுக்கோட்டை, காட்டரம்பாக்கம், சமந்திரம்பேடு, பென்னலூர் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்க இயலும்.

செங்காடு, தண்டலம், கீவளூர் மற்றும் செட்டிப்பேடு குடியிருப்புகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த சாத்தியக்கூறு இல்லை. காரணம், எடுத்திருக்கிற நீர் ஆதாரம் குறைந்துவிடுமாதலால், ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்ததற்குக் குந்தகம் வருமென்று கருதி, இந்த நான்கு குடியிருப்புகளுக்கும் தனி மின்விசைத் திட்டம் நடப்பு நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படுவது என்று முடிவெடுக்கப்பட்டு, அந்தப் பணியும் இந்த ஆண்டு தொடங்கலாம் என்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 346, டாக்டர் அ. மணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**346—**

**பேருந்து நிலையம்**

***33415—டாக்டர் அ. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. மணி, இருக்கையில் இல்லை. திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் நம்முடைய தமிழக அரசால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அது தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்துள்ளது. மேலும், இப்போது சேலத்திற்கு உளுந்தூர்பேட்டையிலிருந்து பிரிகின்ற சாலை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இந்தக் காரணத்தினாலும்,



போக்குவரத்து அதிகம் இருக்கின்ற காரணத்தினாலும், உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்திலே அடிப்படை வசதிகள் கூடுதலாகத் தேவைப்படுகின்றது. அதைமட்டும் செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் துணை வினாவிற்கு ஒரு திருத்தம். சென்ற முறை அங்கே அந்தப் பேருந்து நிலையத்திற்கு சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டது உண்மை. ஆனால் விரிவுபடுத்தப்படவில்லை. விரிவுபடுத்துவதற்கான இடம் அங்கே போதுமான அளவுக்கு இல்லை. காரணம், உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தின் மேற்குப் பக்கத்தில் அரசு மருத்துவமனையும், கிழக்கே பேரூராட்சி வணிக வளாகமும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், தெற்கே தேசிய நெடுஞ்சாலையும், வடக்கே சேத்தியா தெரு பேரூராட்சிக் கடைகள் மற்றும் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடமும் உள்ளதால், பழைய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால் தற்போது உளுந்தூர்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட ஊ. கீரனூர் கிராமம் புல எண் 108/68-ல் சுமார் 78 சென்ட் நிலத்தில் வாரச் சந்தை நடைபெற்று வருகிறது. வாரச் சந்தை மற்றும் நகராட்சி நிகழ்ச்சிகள் அந்த இடத்தில் நடைபெறுகிற காலங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, வாரச் சந்தையை சேலம் சாலை அல்லது விருத்தாசலம் சாலைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வாரச் சந்தையை மாற்றிவிட்டால், இந்த இடத்தைப் பேருந்து நிலைய விரிவாக்கத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 347, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**347—**

**புதிய பேருந்து**

***24977—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) போடியிலிருந்து திருநெல்வேலிக்குப் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போடியிலிருந்து திருநெல்வேலிக்கு தேனி, இராசபாளையம் வழியாக பகுதி வாரியாக போதுமான அளவு பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் புதிய பேருந்துகளை இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 348, திரு. க. வேல்சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**348—**

## பேருந்து வசதி

***26469—திரு. க. வேல்சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல்லிலிருந்து எருமப்பட்டி-காவக்காரப்பட்டி-வடவத்தூர்-செவந்திப்பட்டி-தொட்டியம் வழியாக திருச்சிராப்பள்ளிக்குப் பேருந்துவிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல்-திருச்சி வழித்தடத்தில் சராசரியாக ஒவ்வொரு 5 அல்லது 6 நிமிட இடைவெளியில் நேரடிப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. நாமக்கல்-எருமப்பட்டி-காவக்காரப்பட்டி-வடவத்தூர்-செவந்திப்பட்டி-தொட்டியம் வழித்தடத்திலும் பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. இவ்வழித்தடத்தில் உள்ள பொதுமக்கள் இந்தப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி நாமக்கல் அல்லது தொட்டியம்





சென்றடைந்தால் அங்கிருந்து திருச்சி செல்ல போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. இது ஒரு சுற்று வழித்தடம். எனவே, கோரிக்கை வழித்தடத்தில் தனியே பேருந்துகள் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**திரு. க. வேல்சாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லிலிருந்து திருச்சிக்கு 5 நிமிடத்திற்கு ஒரு பேருந்து போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் தொட்டியம், செவந்திப்பட்டி, காவக்காரப்பட்டி, வடவத்தூர் ஆகிய பகுதிகள் வழியாக எந்தப் பேருந்தும் செல்வது இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை அவசியம் ஆலோசனை செய்து, இந்த வழித்தடங்களில் பேருந்துகளைவிட ஆவன செய்வாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லிலிருந்து திருச்சிக்கு தொட்டியம் வழியாக நேர் வழியில் சென்றால் 31.8 கிலோமீட்டர்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற வழியிலே சென்றால் 42.6 கிலோமீட்டர். ஆகவே, நாமக்கல்லிலிருந்து திருச்சிக்குச் செல்கிற பயணிகள் யாரும் அதில் செல்லமாட்டார்கள். ஆகவேதான் பகுதிவாரியாக நாமக்கல்லிலிருந்து தொட்டியத்திற்கு நிறையப் பேருந்துகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற ஊர்கள் எல்லாம் அந்த வழித்தடத்திலே இருக்கிற காரணத்தால், அவர்கள் தொட்டியம் வந்து அங்கிருந்து திருச்சிக்குச் செல்வதற்கு நிறைய பேருந்துகள் இருக்கின்றன. ஆகவே நேரடியாக பேருந்துகளை இயக்கினால் அது நட்டத்திலே இயங்கும் என்பது மட்டுமல்ல, அங்கிருந்து நேரடியாக பயணம் செய்பவர்களுக்கு வசதியாகவும் இருக்காது என்ற காரணத்தால் அதை இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 349, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**349—**

## அண்ணா சிலை

***4237—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 24

குத்தாலம் பேருந்து நிலையத்திற்கு அருகில் நெடுஞ்சாலையில் பேரறிஞர் அண்ணாவின் சிலையை வைக்க அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அண்ணாவின் சிலை அமைப்பது சம்பந்தமாக, முதலில் இடம் சரியானதல்ல என்று மறுதலிக்கப்பட்டது. மாற்று இடம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த மாற்று இடத்திற்கான மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை வரப்பெற்றவுடன் முடிவு செய்யப்படும்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1993 ஆம் ஆண்டு குத்தாலம் ஒன்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட விண்ணப்பம். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு இடத்தை நாங்கள் தேர்வு செய்து, ஒரு சிலை அமைப்பதற்கு என்னென்ன விதிமுறைகள் உண்டோ அனைத்தையும் பூர்த்திசெய்து அரசுக்கு நாங்கள் கொடுத்துவிட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையும் இங்கே வந்திருப்பதாகத் தெரிகிறது. பேரூராட்சியினுடைய தீர்மானமும் கொடுத்திருக்கிறோம். காவல் துறையினுடைய மறுப்பின்மைச் சான்று வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே அனைத்தையும் கொர்டுத்ததற்குப் பிறகு, அந்த சிலைக்கான அனுமதியை விரைந்து வழங்க வேண்டும் என்று கேட்டு, வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஏற்பட்ட பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், பல்வேறு சமுதாயத் தலைவர்களையெல்லாம் கூட்டி, அந்தக் கூட்டத்திலே ஒரு முடிவு எடுக்கப்பட்டது. புதிதாக சிலை அமைப்பதற்கு சில வழிமுறைகள், விதிமுறைகள் வகுக்கப்பட்டு அந்த விதிமுறைகள் இப்போது முழுமையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. சிலை அமைப்பதற்கு காவல் துறையினிடத்திலிருந்து அனுமதி வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அதை சிபாரிசு செய்ய வேண்டும். பிறகு, அது நெடுஞ்சாலைத் துறைக்கோ அல்லது வருவாய் துறைக்கோ சொந்தமான இடமாக இருந்தால், அந்தத் துறையினுடைய அனுமதி வேண்டும். அதையடுத்து, Traffic Cell என்று மாநில அளவிலே இருக்கக்கூடிய அந்த அமைப்பு



2000 ஏப்ரல் 24]

அந்த இடத்தைப் பார்வையிட்டு அவர்கள் சான்றிதழ் வழங்க வேண்டும். இவ்வளவும் பெற்ற பிறகு, அரசு ஆணை வெளியிட வேண்டும். எனவே இப்போது இருக்கிற சூழ்நிலையில் — மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை வந்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார் — எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. அது கிடைத்தவுடன் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு சிலை அமைப்பதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 350, திரு. செங்கை சிவம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**350—**

### கான்கிரீட் சாலை

***25357—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள அண்ணா சாலை முழுவதையும் கான்கிரீட் சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மைய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் செயலாக்கப்படும்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதத்திற்கு என்ன காரணம்? இந்தியாவில் உள்ள பிற நகரங்களான டெல்லி, மும்பை, கல்கத்தா, ஐதராபாத் போன்ற பெரு நகரங்களில் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக பல Concrete சாலைகள் போடப்பட்டு வருகின்றன. ஆனால், தமிழகத்திலே இதுவரையிலே ஒரு concrete சாலைகூடப் போடவில்லை. நம்முடைய முதல்வர் அவர்களும், மத்திய அமைச்சர் மாண்புமிகு முரசொலி மாறன் அவர்களும், இதிலே மிகவும் ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். பல கோடிக்கணக்கான ரூபாயை நாம் மத்திய

[2000 ஏப்ரல் 24

அரசுக்கு வரியாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். 90 கோடி ரூபாய்தான் அண்ணா சாலையை concrete சாலையாக மாற்ற செலவாகும் எனத் தெரிகிறது. அதற்கு மத்திய அரசு ஏன் இப்படிப்பட்ட காலதாமதத்தை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது? இந்தச் சாலை வருமா, வராதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல வெறும் 90 கோடி ரூபாய் அல்ல. ஏறத்தாழ 190 கோடி ரூபாய் அதற்கு செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு டி.ஜி. வெங்கட்ராமன் அவர்கள் மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் முரசொலி மாறன் அவர்களும் இதுகுறித்துப் பேசி முடிவெடுத்து, மத்திய அரசு அந்தக்காலச் சூழ்நிலையில் ஏற்றுக்கொண்டுவிட்டது. அதுகுறித்து ஆய்வு செய்வதற்கு Kadiyali Associates என்ற ஒரு நிறுவனத்திற்கு வாய்ப்பு தரப்பட்டது. அவர்கள் முழுமையாக ஆய்வு செய்து அவர்களுடைய அறிக்கையை நம்முடைய அரசுக்குத் தந்திருக்கிறார்கள். இந்த அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய பரிசீலனையில் அது இருக்கிறது. நானும் 3, 4 கடிதங்கள் மத்திய அரசுக்கு எழுதியிருக்கின்றேன். கடந்த மார்ச் மாதம் 15 ஆம் தேதியன்று, நானே நேரில் சென்று மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றிருக்கிற மாண்புமிகு ராஜ்நாத் சிங் அவர்களிடத்தில் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில், அண்ணா சாலையாவது முழுமையாக cement சாலையாக அமைய வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்கள் அதை ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். முடிவு தெரிந்த பிறகு செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் கைவிடப்படாது, செயல்படுத்தப்படும் என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 351, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 24]

351—

### நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

***22927—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டில் இயங்கிக்கொண்டு இருக்கும் நியாயவிலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

வினா எண் 352, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

352—

### விடுகள் கட்டுதல்

***29420—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, வெட்டையம்பாளையத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் எப்போது வீடுகள் கட்டித் தரப்படும்?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு இல்லை.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டையம்பாளையம் என்ற கிராமம் எலத்தூர்

பேரூராட்சிக்கு உட்பட்டது. பேரூராட்சிக்கு Group house அல்லது I.R.D.P. loan போன்றவைகள் எல்லாம் கிடைப்பதற்கு வழி இல்லை. இப்படி 4 ஆண்டுகாலமாக அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லை. ஓர் அரசு எல்லா மக்களுக்கும் உதவி செய்ய வேண்டும். ஒரு கிராமப் பஞ்சாயத்து மக்களுக்குக் கொடுப்பதுபோல Town panchayat மக்களுக்குக் கொடுக்கவில்லையென்றால், அந்த மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு வேறு ஏதாவது மாற்றுத் திட்டங்கள் வைத்திருக்கிறீர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி, எலத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வெட்டையம்பாளையம் ஆதிதிராவிடர் காலனி அமைந்துள்ளது. இப்பகுதியில் சுமார் 75 குடும்பங்கள் வசிக்கின்றன. இக்குடும்பங்கள் தனித்தனியே மனைப்பட்டா பெற்றுள்ளன. இதுபோன்ற தனித்தனியே மனைப்பட்டா பெற்றுள்ள குடும்பங்களுக்கு தனித்தனியே வீடுகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 353, திரு. எம். ரங்கநாதன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

353—

## நீதிமன்றம் பிரித்தல்

***22331—திரு. எம். ரங்கநாதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்னூர் நகரில் தற்பொழுது Civil மற்றும் Criminal வழக்குகள் ஒரே நீதிமன்றத்தில் இயங்கி வருவதால், அதை இரண்டாகப் பிரித்து Civil Court தனியாக அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குன்னூர் நகரில் தற்பொழுது இயங்கி வருகின்ற மாவட்ட உரிமையியல் குற்றவியல் நீதிமன்றத்தை இரண்டாகப் பிரித்து, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தனியாகவும், குற்றவியல் நீதிமன்றம் தனியாகவும் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குன்னூரில் நடக்கின்ற அந்த நீதிமன்றம் வாரத்திற்கு 3 நாட்கள் நடுவர் நீதிமன்றமாகவும், வாரத்திற்கு இரண்டு நாட்கள் உரிமையியல் நீதிமன்றமாகவும் இயங்குகிறது. அதனால் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாகவும், வழக்கில் நிலுவையும், தாமதமும் இருக்கின்ற காரணத்தை முன்னிட்டு, மறுபரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புவதோடு, குளத்தேரி, குன்னூர் இரண்டையும் சேர்த்து ஒரு Sub-Court நிறுவ அரசு முன்வருமா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூரில் இயங்குகின்ற நீதிமன்றத்தை தனித்தனியாகப் பிரிக்க வேண்டும், அதற்குத் தேவையான அளவு வழக்குகள் இருக்கின்றன என்று உயர்நீதிமன்றம் இதுவரை பரிந்துரைக்கவே இல்லை. இதுபோன்ற நீதிமன்றங்கள் பிரிக்கப்பட்டு தனியாக இயங்க வேண்டுமானால் முதலிலே உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை வேண்டும். அப்படிப்பட்ட பரிந்துரையே வராத சூழ்நிலையில் அதைப் பிரிப்பதற்கான வாய்ப்பு தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Sub-Court பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். இப்போது அதற்கும் அரசிடம் நிதி ஆதாரம் பொருத்தமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலையில் இருக்கின்ற சார்பு நீதிமன்றத்தை இரண்டாகப் பிரித்து, பொள்ளாச்சியிலே சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற உயர்நீதிமன்றப் பரிந்துரையும் வந்தது. சென்ற ஆண்டு பகுதி-2 திட்டத்திலேயும் அறிவிக்கப்பட்டது. ஆனாலும்கூட, இதுவரை அதை ஆரம்பிப்பதற்கான எந்தவித அறிகுறியும் தெரியாத நிலையில் எங்கள் பகுதி மக்கள் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே வருகிற ஆண்டிலாவது சார்பு நீதிமன்றம் பொள்ளாச்சியிலே அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூல வினாவுக்குத் தொடர்புடையதல்ல. என்றாலும்,

பொள்ளாச்சியிலே ஒரு Sub-court, சார்பு நீதிமன்றம் இருக்க வேண்டுமென்பதிலே இரண்டுபட்ட கருத்து இல்லை. உயர்நீதிமன்றத்திலிருந்து அதற்குப் பரிந்துரை வந்திருக்கிறது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நிதியாதாரம் இடம் கொடுக்கவில்லை என்பதைத் தவிர அது தேவையில்லை என்பதைச் சொல்ல நான் தயாராக இல்லை. என்றாலும் இது தொடர்பாக மாண்புமிகு முதல்வரிடத்திலே பேசி, அதை எந்த அளவுக்கு ஆக்கபூர்வமாக அமல்படுத்துவது என்பதைப் பற்றி சட்டத் துறை முனைப்போடு செயல்படும் என்பதை மாண்புமிகு . உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூரில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களைப் பிரிப்பது குறித்து உயர்நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வரவில்லையென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். நான் வசிக்கக்கூடிய அந்த ஊரில் காவல் நிலையம், தாலுகா அலுவலகம், Registrar அலுவலகம் போன்ற எல்லா அலுவலகங்களும் சேர்ந்து இருக்கிற இடத்தில் அந்த நீதிமன்றம் அமைந்திருக்கிறது. தினந்தோறும் போகும்போது ஆயிரக்கணக்கான மக்கள் வழக்குகளுக்காக நிற்பதும், பல வழக்குகள் முறையாக பைசல் செய்ய முடியாமல் தாமதிப்பதும் இயற்கையாகத் தெரிய வருகிற விஷயம். ஆகவே அரசே முயற்சி எடுத்து அந்த நீதிமன்றங்களை இரண்டாகப் பிரித்து, அவ்வாறு செய்வதற்கு உயர்நீதிமன்றத்தைத் தொடர்புகொள்ள இயலுமா என்பதை நமது அமைச்சர் அவர்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினையில் அரசே தன்னிச்சையாக எந்த முடிவும் எடுக்க முடியாது. அது பழக்கமும் அல்ல. ஏனென்றால், நீதி நிருவாகம் என்பது முழுக்க முழுக்க உயர்நீதிமன்றத்திலே இருக்கிறது. அரசிடத்திலே இல்லை. நிதி ஒதுக்குகிற ஒரே பொறுப்பு அரசிடத்திலே இருக்கிறது. எங்கெங்கு நீதிமன்றம் தொடங்கப்பட வேண்டும், எப்படி தொடங்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயித்துக்கொள்பவர்கள் அவர்கள்தான். அவற்றை நிதிநிலைமைக்கேற்ப நாம் ஒப்புக்கொள்கிறோம். நிருவாகம் அவர்கள் கையிலே இருக்கிறது. எனவே இதுசம்பந்தமாக, உயர்நீதிமன்றம்தான்



பரிந்துரைக்க வேண்டும். குன்னூரில் இருக்கிற வழக்கறிஞர்கள் சங்கமும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இது தொடர்பாக உயர்நீதிமன்றத்திற்கு நல்லமுறையிலே விண்ணப்பம் கொடுப்பார்களானால், அங்கிருந்து பரிந்துரை வருமானால் உடனடியாக இதை ஏற்பதில் அரசுக்கு ஆட்சேபணை இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 354, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**354—**

**பஞ்சு உற்பத்தி**

***25180—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சு உற்பத்தி செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பஞ்சு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ ஆம். பஞ்சு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்யுமாறு ஏற்கெனவே மத்திய அரசை இந்த அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சு உற்பத்தி நம்முடைய தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா என்பதுதான் என்னுடைய மூல வினா. எனவே தேவையான அளவுக்குப் பஞ்சு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஓர் ஆண்டுக்கு உற்பத்தி ஆகக்கூடிய

[2000 ஏப்ரல் 24

பஞ்சின் அளவு 5 இலட்சம் bale-கள்தான். ஆனால் நமது தேவையோ 35 இலட்சம் bale-களிலேயிருந்து 40 இலட்சம் bale-கள் அளவிற்கு இருக்கிறது. குறிப்பாக, தமிழகத்திலே Textile Policy கடந்த ஆண்டு அறிவித்ததையொட்டி, Cotton Council என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு, விவசாயிகள் மத்தியில் மீண்டும் முழுமையாக பருத்தி சாகுபடியை புதிய தொழில்நுட்ப முறையிலே செய்ய வேண்டும் என்ற நிலையை ஒருபக்கம் உருவாக்கி வருகிறோம். அதேநேரத்திலே, மத்திய அரசிடம் தேவைப்பட்ட நேரங்களில் எல்லாம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் நேரடியாகவும், கடிதம் மூலமும் தெரிவித்து ஏற்றுமதியைத் தவிர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், சர்வதேச ஒப்பந்தத்திலே ஏற்றம் இருந்தாலும், இறக்கம் இருந்தாலும் சில வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கு இருப்பதால், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பஞ்சை ஏற்றுமதி செய்துதான் ஆகவேண்டுமென்ற நிலை மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்துள்ளார்கள். இதுதான் இன்றைய உண்மையான பஞ்சு உற்பத்தியினுடைய நிலை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்குத் தேவையான 35 இலட்சம் டன் பஞ்சு உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு நல்ல புதிய வீரிய விதைகளும் மற்றும் அதற்குத் தேவையான இடுபொருட்களும், மானிய விலையில் கிடைக்க ஆவன செய்வார்களா என்பதோடு, தமிழ்நாட்டில் நூல் கிடைக்காமல் எத்தனை ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதை அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சு உற்பத்தி செய்ய விவசாயிகளை தயார் செய்வதே ஒரு பெரிய பிரச்சினை. அதிலே போடுகின்ற முதலீட்டை திரும்பப் பெறக்கூடிய வாய்ப்பு இப்போது இல்லை என்ற முடிவிற்கு எங்களது இரண்டு மாவட்டங்களுமே வந்து இருக்கின்றன. தெரிந்து ஒரு விவசாயி மீண்டும் நட்டத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால் புதிய அணுகுமுறை, புதிய Bio-Technology பத்து நாளைக்கு ஒரு தடவை மருந்து அடிப்பது, அதற்கு 500 ரூபாய் செலவு



2000 ஏப்ரல் 24]

செய்வது, அதன்பிறகு காவி அடிப்பது, என்ற முறையிலே, பருத்தி சாகுபடியை தமிழ்நாட்டிலே அதிகப்படுத்த முடியுமேயொழிய, fertilisers, pesticides வைத்து பருத்தி உற்பத்தி செய்து, தரமான பருத்தியாகக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் அதற்கு உரிய ஏற்பாடுகளை நம்முடைய Cotton Council என்ற விவசாயத் துறையிலே போடப்பட்டு இருக்கின்ற அந்தக் குழு செய்கிறது. தென் மாநிலங்களிலே பெரிய அளவிலே 1000 ஏக்கர், 2000 ஏக்கரை இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்தி, நல்ல பருத்தியை உற்பத்தி செய்யலாமா என்பதுதான் இப்போதைய நிலை. ஆனால், இப்போது இருக்கின்ற நிலை, நாம் ஆஸ்திரேலியாவிலிருந்தும், எகிப்திலேயிருந்தும் இலட்சக்கணக்கான bale-களை நம்முடைய தேவைக்காக வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு இது இலாபமாக இருந்தால்தான் பருத்தி போடுவார்கள். இல்லாவிட்டால் நிச்சயம் பருத்தி உற்பத்தியை தமிழகத்திலே அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலே திருப்திகரமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெருமளவில் வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய ஒரு தொழில் ஜவுளித் தொழில். ஜவுளித் தொழிலினுடைய கச்சாப் பொருளாக இருக்கக்கூடிய பஞ்சு தமிழகத்தில் 7-ல் 1 பங்குதான் விளைகிறது என்பது ஒரு நெருக்கடியான, எதிர்காலத்தில் சிக்கலை தோற்றுவிக்கக்கூடிய ஒரு யதார்த்த உண்மையாகும். இந்தப் பிரச்சினையை மாநில அரசு serious-ஆக எடுத்துக்கொண்டு, எதிர்காலத்தில் இந்த பஞ்சுப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கு, பருத்தி உற்பத்தியை தமிழ்நாட்டில் அதிகரிப்பதற்கு உரிய அறிவியல்பூர்வமான ஆலோசனைகள் ஏதாவது முன்வைத்திருக்கிறதா, அதற்குரிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த ஏதாவது சிந்தித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த இந்தியாவிலே இருக்கின்ற 1400 ஆலைகளில், தமிழ்நாட்டில் மட்டும் 800 நூற்பாலைகள் இருக்கின்றன. இந்த 800 நூற்பாலைகளுக்கும், தமிழகத்திலேயே பருத்தி உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லும் போது, நாம் யாரைக் கேட்டு இந்த ஆலைகளை ஆரம்பித்தோம் என்ற கேள்விக்கு, யார் எதிர்காலத்திலே பதில் சொல்வது? இதிலே அனுமதி பெறவேண்டுமென்ற கட்டாயம் இல்லாத காரணத்தால், 50 சதவிகிதம் நூற்பாலைகள் தமிழகத்திலே யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாமல், தாங்களாகவே, தங்களுடைய சொந்த முதலீட்டிலே நூற்பாலைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள் உருவாக்கிய காரணத்திற்காகவே, தமிழகத்திலே இருக்கின்ற நெசவாளர்களுக்குத் தேவையான 35 இலட்சம் டன் பஞ்சையும், தமிழகத்திலே உற்பத்தி செய்வது என்பது இயலாத காரியம். வேண்டுமென்றால், தேவைக்கேற்ப, நூற்பாலைகளுடைய உற்பத்தியைக் குறைத்து, நாம் செயலாற்றினால்தான் நாம் இதிலே வெற்றி பெற முடியுமேயொழிய, இல்லையென்றால் நிச்சயம் பருத்தி சாகுபடியிலும் வெற்றி பெற முடியாது, நூற்பாலைகளைச் சிறப்பாக, இலாபகரமாக ஓட்டுவதிலும், வெற்றியைப் பெற முடியாது. நல்ல, தரமான நூலை உருவாக்கி, எதிர்காலத்திலே வர்த்தக ஒப்பந்தப்படி வெளிநாட்டிற்கு அனுப்பக்கூடிய துணி வகையில்கூட நாம் பின்னடைந்து போகக்கூடிய வாய்ப்புதான் இப்போது இருக்கிறது. அதற்கேற்ற நல்ல அணுகுமுறையை, தமிழக அரசுதான் இரண்டு ஆண்டுகாலமாக எடுத்து வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் உள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலை, சாரம் நூற்பாலை, அதேபோல மேலூர் நூற்பாலை, முசௌரியர் கூட்டுறவு நூற்பாலைகளுக்குக் கடைசியாக எப்போது பஞ்சு supply செய்யப்பட்டது? பஞ்சு பற்றாக்குறை காரணமாகத்தான் அவை மூடப்பட்டிருக்கிறதா அல்லது அரசினுடைய இயலாமை காரணமாக மூடப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாத செய்தியை அவர் என்னிடம் கேட்கவில்லை. 50 ஆயிரம் spindles என்று அரியூர் ஆலையை அறிவித்து விட்டு, 25 ஆயிரம் spindles-க்கு மேல் அங்கே frame போடாமல், 50 ஆயிரம் spindles-க்கு அங்கே தொழிலாளர்களை நியமித்து அவர்கள் 25 ஆயிரம் spindles-ல் உற்பத்தி செய்து 50 ஆயிரம் spindles-க்குத் தேவையான தொழிலாளர்களுக்குக் கூலி கொடுத்தால், அந்த ஆலை எப்படி ஓடும்? ஆனால் நம்முடைய மாண்புமிகு பேரவை உறுப்பினர், 5 கோடி கொடுங்கள் என்பார். அரசு பணத்தை அள்ளிக் கொடுத்துவிட முடியாது. அரசு பணத்தைச் சேதாரம் செய்ய முடியாது. உண்மையான நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கு சற்று சிரமப்பட்டுத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையாலே, புதுக்கோட்டையிலே சிறப்பாக அந்த ஆலை இப்போது பணியாற்றுகிறது. இப்போது தினமும் 500 ரூபாய் அளவுக்காவது குறைந்தபட்சம் இலாபம் புதுக்கோட்டை நூற்பாலையிலே ஏற்படுகிற அளவுக்குத்தான் இந்த அரசினுடைய அணுகுமுறை இருக்குமே தவிர நீங்கள் நிர்ப்பந்திக்கிற காரணத்தாலோ அல்லது வேறு சில சூழ்நிலைகளுக்காகவோ தவறான வாக்குறுதிகளை இந்த அரசு கொடுக்க இயலாது. நிச்சயம் தொழிலாளர்களுடைய நலனையும் பாதுகாக்கும், அதேநேரத்தில் அரியூர் ஆலை எதிர்காலத்திலே இலாபகரமாக இயங்குவதற்கு உரிய திட்டங்களையும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால நேர அவகாசத்தைத்தான் குறித்துச் சொல்ல முடியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லையே? நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். இதைப் பற்றி நூறு தடவையாவது, நான் பேரவைத் தலைவராக ஆனதற்குப் பிறகு நீங்கள் பேசியிருக்கிறீர்கள். கடைசியாக என்னுடைய அறையில் நீங்களும் அமைச்சரும் நேரடியாக அந்த அரியூர் நூற்பாலைக்குப் போவது என்று முடிவெடுத்திருக்கிறீர்கள். ஆகையினால் அதற்குமேல் உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது. திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தேவையில்லாமல் ஏராளமான நூற்பாலைகளை தமிழகத்திலே, குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் நிறைய ஆரம்பித்துவிட்டோம். ஆகவே அவற்றை

[2000 ஏப்ரல் 24

எப்படிக் காப்பாற்றுவது என்று சொன்னார்கள். தேவை இருந்தோ இல்லாமலோ, விருப்பம் இருந்தோ இல்லாமலோ குழந்தைகள் நிறைய பிறந்துவிட்டால், குழந்தைகளைக் காப்பாற்றுவது அந்தக் குடும்பத் தலைவனுடைய கடமை, அந்தக் குழந்தைகளை எப்படியாவது காப்பாற்றிவிடுகிறான். அதுபோல நம்முடைய அரசு இந்தப் பஞ்சாலைகளுக்குத் தேவையான பருத்தியைப் உற்பத்தி செய்வதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். கோவை மாவட்ட விவசாயிகளைப்பற்றி அவர்களுக்குத் தெரியும், பஞ்சு உற்பத்தியிலே முன்னணியிலே நின்றவர்கள். ஆகவே மீண்டும் பஞ்சு உற்பத்தி செய்வதற்குரிய யோசனைகளை அமைச்சர் சொல்ல வேண்டும். அரசு சொல்ல வேண்டும். அதற்குரிய ஆராய்ச்சி நிலையங்களை அந்த மாவட்டத்தில் நம்முடைய தமிழக அரசு ஏற்படுத்துவது குறித்து அறிவித்து, மீண்டும் பஞ்சு விளைவிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் நான் சொல்கிற பதில் இதுதான். பருத்தி வெடிக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு இருந்தால், நானோ நீங்களோ அல்லது யாரையுமே கேட்டு பருத்தியைப் பயிரிட மாட்டார்கள், அவர்களாகவே பயிரிடுவார்கள். ஆனால் தமிழகத்திலே ஒரு சங்கடமான நிலை கடந்த காலத்திலே இருந்தது. எல்லோரும் பருத்தியைப் போட்டு, மருந்துக்காக மட்டும் ஓர் ஏக்கருக்கு 6000 ரூபாய், 7000 ரூபாய் செலவு செய்து, அதற்குப் பின்பும் வெடிக்காமல் போன காரணத்தால், பல குடும்பங்களில் தாய்மார்கள் பிரச்சினையே பெரிய பிரச்சினை ஆயிற்று. நிச்சயம் அவர்களுக்கு ஒரு சலுகையான முறையிலே அந்த நோயைக் குணப்படுத்தக்கூடிய உயிரின உற்பத்தி முறையிலே, Bio-technology அடிப்படையிலே, நாம் பயிர் பாதுகாப்பை செய்தால்தான் நிச்சயம் இலாபகரமாகவும் இருக்கும், தரமான நூலும் கிடைக்கும். அல்லாமல் நாம் இதிலே ஈடுபடுவது என்பதில் தனி விவசாயிகளுடைய உரிமையும் அடங்கியிருக்கிறது என்பதை நெஞ்சத்திலே கொண்டுதான் இதிலே நாம் செயலாற்ற வேண்டுமே தவிர, வேறு இதற்கு வழியே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 355, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 24]

**355—**

**துணை நகரங்கள் ஏற்படுத்துதல்**

***10649—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜமீன் பல்லாவரம், மாமல்லபுரம், சோளிங்கநல்லூர் மற்றும் திருப்பெரும்புதூர் பகுதிகளில் துணை நகரங்கள் ஏற்படுத்துவது எந்த அளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜமீன் பல்லாவரம், மாமல்லபுரம், சோளிங்கநல்லூர் மற்றும் திருப்பெரும்புதூர் பகுதிகளில் துணை நகரங்கள் அமைக்கும்பொருட்டு 3963.986 ஏக்கர் நிலத்தை நிலமெடுப்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமீன் பல்லாவரம், மாமல்லபுரம், சோளிங்கநல்லூர் மற்றும் திருப்பெரும்புதூர் பகுதிகளில் துணை நகரங்கள் ஏற்படுத்துவதற்காக நிலங்கள் கையகப்படுத்துகிற திட்டம் மட்டும் நடைபெறுவதாகச் சொன்னார்கள். நிலம் கையகப்படுத்துகின்ற பணி எப்போது முடியும்? எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் அந்த நகரம் விரிவாக்கப்பட்டு, எப்போது அந்தப் பணி முடிக்கப்படும்? இணை நகரத்திற்கும் துணை நகரத்திற்கும் இருக்கக்கூடிய வித்தியாசம் என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலங்கள், நன்செய் நிலங்களாக இருக்கின்ற காரணத்தினால் அரசின் அனுமதி பெற்றுத்தான் நன்செய் நிலங்களை எடுக்க வேண்டும். ஆகவே, இப்போது நன்செய் நிலத்திற்கு அனுமதி பெற்று 4(1) அறிவிக்கை வெளியிட்டு 5(ஏ) அறிவிக்கை வெளியிடப்பட்டு, சுமார் 600 ஏக்கர் அளவுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. மீதி நிலங்களை எடுப்பதற்காக அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. துணை நகரங்கள் மதிப்பீடு எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். நிலத்தினுடைய

சொந்தக்காரர்களைக் கேட்டபோது, அவர்கள் அந்த விலைக்கு ஒத்துக்கொள்ளாததால் அரசு இப்போது கட்டாயமாக நிலத்தை கையகப்படுத்துகின்ற முயற்சியிலே இறங்கி இருக்கிறது. ஆகவே, துணை நகரங்கள் விரைவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நகரங்களை பொதுவாக, HUDCO போன்ற நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெற்றுதான் நீங்கள் செய்ய இருக்கிறீர்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு நீங்கள் எந்த நிறுவனத்திடமிருந்து பணத்தைப் பெற இருக்கிறீர்கள்? எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் இதை உருவாக்கலாம் என்று அரசு திட்டமிட்டிருக்கிறது? நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இணை நகரம்—Satellite town—அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகுதான் எல்லா நிதி நிறுவனங்களும் பணம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றன. ஆகவே, பணத்தைப் பெற்று அந்த நகரங்கள் அமைக்கப்படும். இணை நகரங்களை சிறப்பாக அமைப்பதற்காகத்தான் இப்போது அதற்காக துணை நகரங்களாக மாற்றுவதற்கு அரசு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *356*, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**356—**

**பத்திரப் பதிவு அலுவலகம்**

***29513—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், சீனிவாச உத்தியாவனம் கிராமப் பத்திரப் பதிவு அலுவலகத்தை தேவிகாபுரத்திலிருந்து ஆரணிக்கு மாற்றித் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா?



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை இங்கே அளிக்கின்றேன்.

ஆம். சீனிவாச உத்தியாவனம் கிராம மக்களுடைய பத்திரப் பதிவு அலுவலகத்தை தேவிகாபுரத்திலிருந்து ஆரணிக்கு மாற்ற அரசு முடிவு செய்துள்ளது.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராம மக்களுடைய 40 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, திருவண்ணாமலை மாவட்டத்திலே ஆரணியில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகம் அதிக வருவாய் ஈட்டித் தருகின்ற அலுவலகம். ஆனால், அந்தக் கட்டடம் பழைய கால, ஜாகீர் காலத்து குதிரை லாயங்களில் செயல்படுகிறது. அந்தக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. பத்திரப் பதிவு ஆவணங்கள் எல்லாம் மழைக் காலங்களில் அழிந்து வருகின்றன. எனவே, அந்தக் கட்டடத்தைப் புதியதாகக் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல ஒவ்வோர் ஆண்டும் தமிழகத்திலே உள்ள பழுதடைந்த கட்டடங்களை வரிசைப்படுத்தி இந்த அரசு நிதிநிலைக்கேற்ப எடுத்துக்கொள்ளும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *357*, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**357—**

**கால்நடை மருந்தகம்**

***27481—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 24

அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், இலுப்பையூரில் கால்நடை மருந்தகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேயே மிகப் பிற்படுத்தப்பட்ட ஓர் ஒன்றியப் பகுதி நரிக்குடி ஒன்றியம். அதில் மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதி இலுப்பையூர் பகுதி. முழுக்க விவசாயப் பெருங்குடி மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியினுடைய அடிப்படைத் தேவைகளே மூன்றுதான். காடு, ஆடு மற்றும் மாடு, இந்த மூன்றுதான். இதிலே, கால்நடைகளுக்குரிய சிகிச்சைகளைப் பெற வேண்டுமென்றால் மக்கள் சுமார் 20 கிலோமீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய திருச்சுழிக்கு வந்துதான் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, இலுப்பையூர் பகுதியிலே ஒரு கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி இலுப்பையூர் கிராமம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ளது. இலுப்பையூரில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும், அக்கால்நடைக் கிளை நிலையத்திற்கு பனையூர் என்ற இடத்தில் பார்வைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேலும், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் நரிக்குடி என்ற ஊரில் கால்நடை மருந்தகமும், இது தவிர பனைகுடி, நாலூர், வீரசோழன், இருஞ்சிரை, புல்வாய்க்கரை ஆகிய ஐந்து இடங்களில் கிளை நிலையங்களும், அவற்றிற்கு முறையே மறையூர், உலக்குடி, கீழசெம்பூர், புத்தனேந்தல், ஏ. முக்குளம் ஆகிய ஐந்து இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்புக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் கால்நடைக் கிளை நிலையம், மருந்தகம், மருத்துவமனை இல்லாத பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதந்தோறும் ஒரு சிறப்பு கால்நடை சிகிச்சை



2000 ஏப்ரல் 24]

முகாம் நடத்தப்பட்டு அனைத்து மருத்துவ சிகிச்சைப் பணிகளும், கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வல்லுநர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் அப்பகுதியிலுள்ள கால்நடைகள் சிகிச்சை பயனைப் பெற முடியும். இருப்பினும் எதிர்வரும் காலங்களில் இலுப்பையூரில் சிகிச்சைக்கு வரும் கால்நடைகள் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டும், அரசு நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டும், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமென்று சொல்லி பல்வேறுவிதமான போராட்டங்கள் நடத்தி, கடந்த வாரத்திலிருந்து சிறை நிரப்பும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். கடந்த வாரம் மாத்திரம் 3 தினங்கள் 200 பேர், 200 பேர் வீதம் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் மத்திய அரசுக்கு இணையாக ஊதியம் வேண்டுமென்று கேட்கிறார்கள். கிட்டத்தட்ட அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படுமென்று சொன்னால், அரசுக்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகும் என்று சொல்கிறார்கள். 21 ஆயிரம் கோடி ரூபாய்க்கு வரவு-செலவு செய்கிற நாம், ஒரு கோடி ரூபாயை மனதிலே கொள்ளாமல், அவர்களுக்கும் ஓர் அந்தஸ்து வருகிற விதத்திலே, M.B.B.S. Doctor, Siddha Doctor, இவர்களுக்கு இணையாக 8 ஆயிரம் ரூபாய் அடிப்படை ஊதியத்தை வழங்குவதற்கு இந்த அரசு கருணை உள்ளத்தோடு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிலே பணியாற்றுகின்ற கால்நடை மருத்துவர்கள் உதவி இயக்குநர் என்ற நிலையிலே இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே பணியாற்றுகின்ற கால்நடை மருத்துவர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள் என்ற நிலையிலே இருக்கிறார்கள். மத்திய அரசிலே பணியாற்றுகின்ற அந்தக் கால்நடை மருத்துவர்கள் எல்லாம் உதவி இயக்குநர்கள் என்ற நிலையிலே, அவர்களுக்கு சம்பளம் 8 ஆயிரம் ரூபாய்; தமிழ்நாட்டிலே பணியாற்றுகின்ற கால்நடை உதவி இயக்குநர்களுக்கும் 8 ஆயிரம் ரூபாய்தான். இருப்பினும், அவர்கள் 8

ஆயிரம் ரூபாய் என்று கேட்கின்ற இந்த நிலையில், கால்நடை உதவி மருத்துவர்களுடைய ஊதிய நிலைக்கு ஒப்ப வேளாண் அலுவலர்கள், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர்கள் எல்லாம் வருகின்ற காரணத்தினால், ஒரு கோடி ரூபாய் என்ற அளவிலே மட்டுமல்லாமல் பெரிய நிதிச் சுமை ஏற்பட வாய்ப்பு உள்ளது. இருப்பினும், கால்நடைப் பராமரிப்பு மானியக் கோரிக்கையின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலிக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். நேரம் வரும்போது பரிசீலிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 358, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

**358—**

**கட்டடம் கட்டுதல்**

***21688—திரு. மு. அப்பாவு:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்ட சமூக நலத் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலகம், பேருந்துகள் செல்லும் பிரதான சாலையில் 5 ஆயிரம் ரூபாய் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அலுவலகத்திற்குத் தேவையான இட வசதியும் அங்கு உள்ளபடியால், புதிதாகக் கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 359, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.*



**359—**

**வீட்டுமனைப் பட்டா**

***4704—திரு. இரா. தாமரைக்கனி:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சியைச் சேர்ந்த மாலைப்பட்டி, ஆலடிப்பட்டி ஆகிய கிராமங்களில் வீடில்லாத ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் யாது?*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி, மாலைப்பட்டி, ஆலடிப்பட்டி கிராமங்களில் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏழை எளிய அரிசனங்களுக்கு பட்டா வழங்குவதில் இந்த அரசு காலதாமதம் செய்கிறது. ஏனென்றால், தனி தாசில்தார்களுக்கு phone வசதியும் கிடையாது, jeep-ம் கிடையாது. R.I., Tahsildar போன்றவர்களுக்கு ஏதோ punishment கொடுத்த மாதிரி இங்கே போடுவதால், திடீர் திடீரென்று transfer ஆகிப் போய்விடுகிறார்கள். அதனால் அரிசன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தடுப்பதற்கு அரசிடம் ஏதாவது ஒரு Master Plan உள்ளதா? எனது தொகுதியில் வத்திராயிருப்பு பேரூராட்சியிலே நொண்டியம்மன் கோயில் தெரு இருக்கிறது. அங்கு ஏழை எளிய மக்களுக்கு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இதுவரை பட்டா கொடுக்க முடியவில்லை. அதேமாதிரி சுந்தரபாண்டியபுரம் அருந்ததியர் தெரு; அங்கேயும் நஞ்சை நிலம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பட்டா கொடுப்பது என்று சொன்னால், அங்கே நிலச்சுவான்தார்கள் சமாதியே வைத்துவிடுகிறார்கள்; இல்லை என்றால்,

செங்கல் சூளைக்கு வாடகைக்கு விட்டுவிடுகிறார்கள். இதையெல்லாம் போக்கி வத்திராயிருப்பு பேரூராட்சி நொண்டியம்மன் கோயில் தெருவில் உள்ள அரிசன மக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கும், சுந்தரபாண்டியபுரம் அருந்ததியர் தெருவில் உள்ள ஏழை எளிய அரிசன மக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கும் அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு விரைந்து பட்டா வழங்குவதற்காக தனி தாசில்தார்களுக்கு ஈப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. 1998-99 ஆம் ஆண்டுகூட 20 ஈப்புகள் வழங்குவதற்காக 71 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, வேண்டிய நடவடிக்கை எடுத்து விரைவாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் தனியாக phone வேண்டும் என்று சொல்கின்றார். நிதி நிலைமைக்கு ஏற்ப அடுத்து வருகின்ற காலகட்டத்தில் அதைப்பற்றிப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இருந்தால் பரிசீலிக்கப்படும். சுந்தரபாண்டியபுரம் அருந்ததியர் தெருவில் உள்ளவர்களுக்கு விரைந்து பட்டா வேண்டும் என்று கேட்கின்றார். அங்குள்ள மக்களிடமிருந்து, பயனாளிகளிடமிருந்து அவர்கள் முன்மொழிவு வாங்கி அனுப்புவார்களேயானால், தகுதி இருந்தால் அதன்மீது விரைந்து நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சின்னமனூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய மேலபூலாநந்தபுரம் என்ற ஒரு சிறிய கிராமத்தில் கிட்டத்தட்ட 250 ஆதிதிராவிட குடும்பங்கள் வசித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதைச் சுற்றி இருக்கக்கூடிய நிலங்கள் அனைத்தும் முல்லைக்கால் பாசனத்தில் இருக்கக்கூடிய நஞ்சை நிலங்களாக இருக்கிற காரணத்தினால், பல ஆண்டுகளாக அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல், பட்டா வழங்க முடியாமல் இருக்கிறது. அதையும் அரசு கவனித்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு வேறொரு நல்ல இடத்தைத் தேர்வு செய்து பட்டா வழங்குவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நஞ்சை நிலமாக இருந்தால் காலதாமதம் ஏற்படுகின்றது; ஆகவே விரைந்து நடவடிக்கை எடுத்து பட்டா வழங்கப்படுமா என்று கேட்டார்கள். முன்னால், மத்திய அரசு சட்டத்தின்படி உச்சநீதிமன்றம் வரைக்கும் சென்று காலதாமதம் ஏற்படுத்தப்பட்டது. இப்போது, உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி 22-11-1994 முதல் தமிழ்நாடு அரசு அதைக் கையகப்படுத்துவதற்கு அரசின் சட்டத்தில் இடம் இருக்கிறது. இதை எதிர்த்து நீதிமன்றம் செல்ல முடியாது. ஆகவே, விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்திலே இடம் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய மக்களிடமிருந்து முன்மொழிவுகள் வாங்கி அனுப்புவாரேயானால், விரைந்து நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-15*

(திரு. இரா. தாமரைக்கனி கையை உயர்த்திக் கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைக் கூப்பிடுகிறேன், இப்போது என்ன அவசரம்?

**திரு. இரா. தாமரைக்கனி:** கையை உயர்த்திக் கொண்டேயிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையை கீழே போடுங்கள். இந்தக் கை வலிக்கிறது என்றால் அந்தக் கையைத் தூக்குங்கள். (சிரிப்பு) திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்கள் பெருவாரியாக பல மாவட்டங்களிலும் சாலையோரங்களில் உள்ள புறம்போக்கில் குடியிருந்து வருகிறார்கள். பல மாவட்டங்களில் பெருமுதலாளிகளினுடைய கையிலே அரசினுடைய புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக உள்ளன. அந்தவகையிலே கன்னியாகுமரி மாவட்டத்தில், சாலையோரங்களில் குடியிருக்கின்ற ஆதிதிராவிட மக்களுக்கு, பெரும் தோட்ட முதலாளிகள் கையிலே இருக்கின்ற அரசு புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்தி, வழங்கி, இவர்களைக் குடியமர்த்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோர புறம்போக்கு நிலமாக இருந்தாலும்

சரி அல்லது கண்மாய் புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி அல்லது நத்தம் புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, அதைத் தனியார் ஆக்கிரமித்திருந்தால், அதற்குத் தகுந்த ஆதாரம் கொடுத்தால், அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது புதிதாக ஓர் அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். நத்தம் புறம்போக்கோ அல்லது கண்மாய் புறம்போக்கோ, அதில் 20 வருடமல்ல, 10 வருடம் குடியிருந்தாலும், அவர்களுக்கு அந்த வீட்டு அடிமனையை வழங்க வேண்டுமென்று ஓர் உத்தரவினைப் பிறப்பித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, எவ்வளவு பெரிய தனியாராக இருந்தாலும் சரி, அவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து, அந்த ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள கிருஷ்ணன்கோயிலில் உள்ள சமத்துவபுரம் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் வந்தார்கள். தட்சணியாபுரம் என்ற கிராமத்தில் உள்ள வீடில்லாத ஏழையெளிய 56 அரிசன மக்களுக்கு பட்டா கொடுத்தார்கள். ஒவ்வொருவருக்கும் 3 சென்ட் நிலம் கொடுத்தார்கள். ஆனால் இன்னும் survey செய்ய மாட்டேன் என்கிறார்கள். ஏனென்று கேட்டால், அந்த அரிசன மக்களுக்குள் சண்டையை இழுத்துவிட்டு விடுகிறார்கள். 2 சென்ட்தான் நிலம் கொடுப்போம், உங்களிடத்தில் நிலம் அதிகமாக இருக்கிறது என்று கட்டப் பஞ்சாயத்து செய்கிறார்கள். தற்போது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்ட வேண்டியிருக்கிறது. அந்தக் கிராமத்தினை எடுத்திருக்கிறார்கள். வீடு கட்டமுடியாத அளவில் survey செய்யாமல் இருக்கிறார்கள். அதையெல்லாம் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் மற்றும் முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா? வத்திராயிருப்பு, சுந்தரபாண்டியபுரத்தைப் பற்றிக் கேட்டார்கள். அதற்கெல்லாம் மனு கொடுத்து 4 வருடமாயிற்று. இன்னும் நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கவில்லை. மக்கள் ஊர்வலமாகப் போய் கோரிக்கை மனுவே கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குறைகளைப் போக்குவதற்கு, பட்டா கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அருந்ததியினர்களுக்கு நீங்கள் பட்டா போட்டுக்





கொடுப்பதே இல்லை. இதர பிரிவினர்களுக்கெல்லாம் பட்டா கொடுக்கிறீர்கள், ஆனால், அருந்ததியர் மக்களுக்கு சமத்துவபுரத்தில் வீடும் ஒதுக்குவது கிடையாது, பட்டா கொடுப்பதும் கிடையாது, மற்ற, பல பிரிவுகளில் உள்ள மக்களுக்கெல்லாம் அதிகமாகப் பட்டா போட்டு கொடுக்கிறீர்கள். ஆகவே, அரிசின மக்களுக்கு அதிகமாகப் பட்டா கொடுப்பதற்கும், வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சித்தம்போக்கு சிவன் போக்கு' என்று பொத்தாம் பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்கின்றார்கள். அருந்ததியர் இன மக்களுக்கு வீட்டு அடிமனை வழங்குவதே இல்லை என்று சொன்னார்கள். அருந்ததியினராக இருந்தாலும் சரி, ஆதிதிராவிடராக இருந்தாலும் சரி, தேவேந்திரகுலமாக இருந்தாலும் சரி, அவர்களை இந்த அரசு சமமாகப் பாவித்து, அவர்களுக்கு வீட்டு அடிமனை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல சமத்துவபுரங்களில் அருந்ததியர்களுக்கு வீடு வழங்கப்படுவதில்லை என்ற ஒரு பெரும் குற்றச்சாட்டையும் எடுத்துவைத்தார்கள். அதற்கு நிச்சயமாக ஆதாரம் இருக்காது. அவர்கள் ஆதாரமின்றி கூறியிருக்கின்றார்கள் என நினைக்கிறேன். அருந்ததியர்களுக்கு, அந்தப் பகுதியில் உள்ள இந்த இன மக்கள் தொகை அடிப்படையில், சமத்துவபுரங்களில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. குறிப்பாக, கிருஷ்ணன்கோயிலில் 65 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது. இப்போது அதை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கோ மற்றும் பல திட்டங்களுக்கோ எடுத்துக் கையாள வேண்டுமென்று சொல்கிறார். மாண்புமிகு திருவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர், நீண்டகாலமாக இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். கிருஷ்ணன்கோயிலில் இருக்கக்கூடிய பிரச்சினையை அவரால் தீர்க்க கூடியும். , விரைந்து நடவடிக்கை எடுத்து அந்த மக்களுக்கு பட்டா வழங்கிட இருக்கிறோம். அதைப் பிரித்துக் கொடுப்பதற்கு நீங்கள் உதவி செய்து உறுதுணையாக இருந்தால், இந்த அரசின் சார்பாக இந்த மக்களுக்காக விரைந்து நடவடிக்கை எடுத்து பட்டா வழங்கப்படும். வழங்கியதை அவர்களுக்கு அண்ணா மறுமலர்ச்சிக்கோ மற்றும் பல திட்டங்களுக்கோ எடுத்துக்கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[2000 ஏப்ரல் 24

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி நீங்கள் உட்காருங்கள். நீங்கள் இரண்டு கேள்விகள் கேட்டாகி விட்டது, போதும். அடுத்து வினா எண் 343.

**திரு. இரா. தாமரைக்கனி:** நாங்கள் கேள்வி கேட்கத்தானே வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் கேளுங்கள், அவர் பதில் சொல்ல வேண்டும் என்பது கிடையாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** கேள்வி கேட்கத்தான் வருகிறோம். வேறு எதற்காவது பதில் சொன்னால் எப்படி? சரியான பதில் தரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் கிடையாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சரி உட்காருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி உட்காருகிறேன் என்று மரியாதை இல்லாமல் பேசக் கூடாது. நீங்கள் கேட்கிற கேள்விகளுக்கு அமைச்சர் தெரிந்த பதிலைத்தான் சொல்வார்கள். அவர் சொன்ன பதில் திருப்தி இல்லையென்றால் நீங்கள் வேறு ஏதாவது நடைமுறைகளைக் கையாளலாம். அமைச்சர் அவர்கள் நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லையென்றால், திரும்பத் திரும்ப கேள்வி கேட்பதற்கு அனுமதி கொடுக்க முடியாது.

வினா எண் 343, திரு. ஜி.எல். வெங்கடாசலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**343—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***16655—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 24]

பாலக்கோடு வட்டம், காரிமங்கலம் ஒன்றியம், காரிமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய நிலையில் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*அரசாணை (ப) எண் 745,* மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-5-1996-ன்படி வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களை மட்டுமே 24 மணி நேரம் இயங்கும் மையங்களாக மாற்றிடுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாறே பாலக்கோடு வட்டம், காரிமங்கலம் ஒன்றியத்தில் அனுமந்தபுரத்திலுள்ள வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேர மையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, காரிமங்கலம் ஒன்றியத்திலுள்ள காரிமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மையமாகத் தரம் உயர்த்தும் சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரிமங்கலம் என்பது ஒரு பேரூராட்சியாகும். மேலும் காரிமங்கலம், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைமையிடமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. காரிமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். இங்கே போக்குவரத்து அதிகமாகவும், சுற்றுப்புற கிராமங்கள் ஏராளமாக இருப்பதாலும் மக்கள் நெருக்கடி இருப்பதாலும், தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளபடியாலும் அங்கே சாலை விபத்துகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதேபோன்று பெண்கள் மகப்பேறு காலங்களில் பிரசவத்திற்காகச் செல்ல வேண்டுமென்று சொன்னால் பக்கத்தில் 25 கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கிற தருமபுரிக்குத்தான் செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. இந்தப் பொது மக்களின் அவல நிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 24 மணி நேரமும் இங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்குவதற்கு ஆணை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு வட்டாரத்திற்கு ஒரு 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம்தான் தொடங்குவது என்று அரசு

[2000 ஏப்ரல் 24

முடிவு செய்து இதுவரையில் 250, 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இன்னும் 130, 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடர்ந்து நாங்கள் தொடங்க திட்டமிட்டிருக்கிறோம். இவை எல்லாம் முடிந்தால்கூட வட்டார அளவில்தான் முதல்கட்டமாக முடியுமே தவிர தமிழ்நாட்டிலுள்ள 1399 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக ஆக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 344, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**344—**

**கிளை மருத்துவமனை**

***30962—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சியால் நடத்தப்பட்டு வரும் கண்டியப்பேரி பா. இராமசாமி மருத்துவமனையை பாளையங் கோட்டையிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையோடு இணைத்து அதன் கிளை மருத்துவமனையாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியில் உள்ள அரசு மருத்துவமனை, மருந்தகங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் மூலமாக அப்பகுதி மக்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் கிடைக்கின்றன என்பதால், திருநெல்வேலி நகரிலுள்ள மாநகராட்சியால் நடத்தப்பட்டு வரும் கண்டியப்பேரி பா. இராமசாமி மருத்துவமனையை பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி



2000 ஏப்ரல் 24]

மருத்துவமனையோடு இணைத்து அதன் கிளை மருத்துவமனையாக, Peripheral Hospital-ஆக அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வினா எண் 360, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**360—**

**சுற்றுலா மையம்**

***7963—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதியிலுள்ள வீடூர் அணையை அழகுபடுத்தி அப்பகுதி சுற்றுலா மையமாக உருவாக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதியில் உள்ள வீடூர் அணையை அழகுபடுத்த பகுதி-2 திட்டத்தின்கீழ் 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, வீடூர் அணையில் கால் பகுதி மட்டும் அழகுபடுத்தப்பட்டிருக்கிறது. மீதி இருக்கின்ற முக்கால் பகுதி எப்போது சுற்றுலாத் துறையால் அழகுபடுத்தப்படும் என்று தெரிந்துகொள்ள விரும்புவதோடு, பொதுப் பணித் துறையால் அழகுபடுத்தப்பட்ட பகுதியைப் பார்த்தேன்; மிக அழகாக இருக்கிறது. அதற்காக நான் பொதுப் பணித் துறைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றுலாத் துறை வாயிலாக மீதி இருக்கின்ற பகுதியை அழகுபடுத்த உரிய நடவடிக்கையை துறை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிலையைப் பொறுத்தமட்டில் அங்கே வருகின்ற பயணிகளுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. வருங்காலத்தில் அதிகமான பயணிகள் வருகின்றபோது மீதி இருக்கின்ற இடத்தையும் அழகுபடுத்தக்கூடிய பணியில் நிச்சயமாக சுற்றுலாத் துறை ஈடுபடும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) தமிழக மீனவர்களைப் பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல்

*(உறுப்பினர்கள் திரு. பி.ஆர். சுந்தரம், திரு. கே. சுப்பராயன், திரு. இரா. பெர்னார்டு ஆகியோர் எழுந்து நின்றனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 3 பேர் எழுந்து நிற்கிறீர்கள், எல்லோரும் உட்காருங்கள். திரு. இரா. பெர்னார்டு.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாகிஸ்தான் சிறையில் பல மாதங்களாக வாடிய தமிழ்நாட்டைச் சார்ந்த, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 19 மீனவர்களை, அவர்களில் பெரும்பாலோர் நம்புகின்ற ஏசுபெருமானின் மீட்பு நாளில், ஈஸ்டர் பெருநாளில் தாயகம் கொண்டுவந்து சேர்த்ததன் மூலம் மீனவர்களுடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த இந்திய பிரதமர் மாண்புமிகு அடல்பிகாரி வாஜ்பேயி அவர்களுக்கும், உள் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தப் பிரச்சினையில் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் உரிய நேரத்தில் குரல் கொடுத்த உறுப்பினர்களுக்கும், அனைத்துக்



2000 ஏப்ரல் 24] [திரு. இரா. பெர்னார்டு]

கட்சிகளுக்கும், அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் மீனவ மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது போதும்.

**திரு. இரா. பெர்னார்டு:** ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மீனவ மக்களின்மீது அதிக அக்கறை கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த மீனவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயும், புத்தாடையும், நல்லுணவும் வழங்கிச் சிறப்பித்தமைக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு உறுதுணையாக இருந்த பத்திரிகையாளர்களுக்கும், வானொலி, தொலைக்காட்சியினருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, அவர்கள் பல இலட்சங்களை இழந்து வறுமையில் வாடி தாயகம் திரும்பி இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வை வளம்பெறச் செய்கின்ற வகையில் பல கோரிக்கைகளை வைக்க முன்வருகிறார்கள். அந்தக் கோரிக்கைகளைக் கருணையுடன் பரிசீலித்து அவர்களுக்கு வாழ்வளித்து மீண்டும் உண்மையான மீனவர்களின் உற்ற நண்பர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை நிரூபிக்கும் வகையில் ஆவன செய்ய வேண்டி, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19 மீனவர்கள், குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் பாகிஸ்தான் சிறையிலே அடைபட்டிருந்து, இப்போது அவர்கள் விடுதலை செய்யப்பட்டு இங்கே வருகை தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், என்னைப் பொறுத்தவரையில் முதல் நன்றியை உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், பல்வேறு காலக் கட்டங்களில் ஒத்திவைப்புத் தீர்மானங்களை, கவன ஈர்ப்புகளை நான் கொண்டுவந்த நேரங்களில் அவற்றை அனுமதித்து, அதன்மூலம் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் ஒத்துழைத்து, மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் அவர்களும் தலையிட்டு இப்போது 19 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மீனவர்களின் பிரச்சினைகளை நாங்கள் எடுத்துரைத்த நேரத்தில் கருணை உள்ளத்தோடு செயல்பட்டு,

விரைந்து அவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட தமிழக அரசுக்கும் முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் அதற்குள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? கட்சிக்கு ஒருவரைத்தான் நான் அனுமதிக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** இது வேறு subject.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு subject-ஆ? இந்த Subject-ஏ இன்னும் முடியவில்லை. ஒருவருக்கு அனுமதி கொடுத்து மற்றவர்களுக்கு அனுமதி கொடுக்காமல் இருந்தால் அது ஒருதலைப்பட்சம் என்று சொல்கிறீர்கள். மாலையிலே பத்திரிகையிலே அறிக்கை கொடுப்பீர்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுப்பீர்கள், இல்லை யாரையாவது கொடுக்கச் சொல்லுவீர்கள். திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ஓராண்டு காலத்திற்குமேல் பாகிஸ்தான் சிறையில் அடைபட்டு, துன்பப்பட்ட 19 மீனவர்களை, பாரத அரசுக்கும், பாகிஸ்தான் அரசுக்கும் நியாயமான, சுமுகமான சூழ்நிலை ஏற்படாத போதும்கூட,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

*முற்பகல் 10-30*

**திரு. சி. வேலாயுதன்:** சுமுகமான சூழ்நிலை இல்லாத இந்த காலகட்டத்தில்கூட, தமிழக அரசினுடைய சிறப்பான முயற்சியாலும், மத்திய அரசினுடைய சிறப்பான முயற்சியாலும், பாகிஸ்தான் அரசு ஏற்றுக்கொண்டு, அந்த 19 பேரை விடுதலை செய்யக்கூடிய அளவிற்கு இரண்டு அரசுகளும் முயற்சித்ததற்கு கன்னியாகுமரி மாவட்ட மொத்த மீனவர்களுடைய நன்மையை நாடக்கூடிய மாவட்ட மக்கள் சார்பிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பிலும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பிலும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும், குறிப்பாக தமிழக முதல்வர் அவர்களுக்கும், அடல்பிகாரி வாஜ்பேயி அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி அமைகிறேன்.



## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீனவர் பிரச்சினையா? இல்லையென்றால், உட்காருங்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசினுடைய தமிழ்வழிக் கல்வி உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது குறித்து நான் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன். அதேபோல, வேறுபல உறுப்பினர்களும் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து அரசு இப்பொழுது பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறதா; இப்பொழுது அந்தக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை மட்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே நீங்கள் இதுபற்றி என்னுடைய அறையிலே கேட்டீர்கள். தெளிவான பதிலை உங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தீர்ப்பை இன்னும் அமைச்சரே பார்க்கவில்லை. அந்தத் தீர்ப்பின் நகல் வந்தபிறகுதான் நீங்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கு முறையான பதிலைச் சொல்ல முடியும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஆகையினாலே, தீர்ப்பு வந்த பிறகு நிச்சயமாக அது எடுத்துக்கொள்ளப்படும்.

### (ஆ) விவசாயிகள் கூட்டுறவுக் கடனை ரத்து செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று, நாளையதினம் நாகை, திருவாரூர், தஞ்சை, திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும், அனைத்து எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ஒரு பெரிய மறியலை நடத்த இருக்கின்றார்கள். அதாவது, சாலை மறியல், ரயில் மறியல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்த மறியலோடு நிறுத்திக்கொண்டு, என்ன பிரச்சினை என்பதை மட்டும் சொல்லுங்கள். ஆனால், அதை இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** விவசாயிகளெல்லாம் போராடி, இறுதியாக அந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். ஆகவே, அரசு ஒரு நல்ல முடிவெடுத்து, அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்தவுடன் உங்களுடைய பிரச்சினை அவர்களுக்குச் சொல்லப்படும்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) தமிழக மீனவர்களைப் பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19 மீனவர்கள் பாகிஸ்தான் சிறையிலே முதலை வாயில் சிக்கிய ஆட்டுக்குட்டியைப்போல, மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருந்த நேரத்திலே, இந்த மீனவர்கள் எப்படியாவது மீட்கப்படுவார்களா; இயலாத சூழ்நிலை ஏற்படுமா என்று எண்ணி, தமிழ்நாட்டு மக்களே எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்திலே, கண்ணிழந்தான், பெற்றிழந்தான் என்பதைப்போல, அவர்கள் ஏங்கிக் கொண்டிருந்த நேரத்திலே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களும், பாரதப் பிரதமரோடு தொடர்புகொண்டு பேசிய நேரத்திலே, பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் என்ன சூழ்நிலை இருக்கிறது; இதில் எப்படி அவர்களை மீட்க வேண்டுமென்ற அரிய ஆலோசனையின்பேரிலே, பாரதப் பிரதமர் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியமாதிரி, முள்மேல் போட்ட சேலையை எடுக்க வேண்டுமென்ற அந்த நிலைக்கு ஏற்ப மீனவர்களைத் தக்க பாதுகாப்போடு மீட்டுக் கொணர்ந்த இந்த நேரத்திலே தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், பாரதப் பிரதமர் வாஜ்பேயி அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதேநேரத்திலே, அவர்கள் குடும்பத்திற்கு 5,000 ரூபாய் வழங்குவதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நீண்டகாலம் சிறையிலே வாடிய காரணத்தினாலேயும், குடும்பங்கள் பெருத்த வறுமையிலே இருக்கின்ற காரணத்தினாலேயும் அந்த நிதி உதவியைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையோர் அனைவருமே ஆவலோடு எதிர்பார்த்த பிரச்சினை; 19 தமிழக மீனவர்களுடைய பிரச்சினை. பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டு, அவர்களைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து, அந்தக் குடும்பத்தினரும், மற்றவர்களும் மகிழ்ச்சியடையத்தக்க வகையிலே சிறப்பாகப் பணியாற்றிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மத்திய அரசுக்கும், இதற்காகக் குரல் கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்த மீனவர்களுடைய ஓராண்டு கால பாதிப்பு நிலையை உணர்ந்து, அதற்குரிய முறையிலே உதவிடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

*முற்பகல் 10-35*

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக பாகிஸ்தான் சிறையிலே இருந்த மீனவர்களை, மத்திய அரசு மற்றும் மாநில அரசினுடைய முயற்சியினால், நல்லமுறையிலே, கடந்த வெள்ளிக்கிழமையன்று, தமிழகத்திற்குக் கொண்டு வந்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே, எங்களது நெஞ்சார்ந்த நன்றியையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தினுடைய உணர்வுகளைக் கணக்கிலே எடுத்து, 19 மீனவர்களைப் பாகிஸ்தான் சிறையிலேயிருந்து விடுவிப்பதற்காக தமிழக அரசும், அதிலும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், அதேபோன்று மத்திய அரசும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டு காலமாக, பாகிஸ்தான் சிறையிலே வாடிய 19 தமிழக மீனவர்களை மீட்டு எடுப்பதற்கான அரிய பெரிய முயற்சிகளை எடுத்துக்கொண்ட தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்த மீனவர்களை மீட்டு எடுப்பதற்காக அரிமா சங்கத்தைச் சார்ந்தவர்களும் பெரிதும் முயன்றார்கள். எனவே, அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கடந்த ஓராண்டு காலமாக, அவர்கள், பெரிய பொருளாதார இழப்புக்கு ஆளாகியிருக்கிற காரணத்தாலே, அதையும் கருத்திலேகொண்டு, மறுபடியும் அவர்கள் புனர்வாழ்வைப் பெறுகின்ற அளவுக்கு, சிறப்புக் கடனுதவித் திட்டங்களை அரசு வழங்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். நன்றி.

**(ஆ) கடலூர் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு உடனடி சிகிச்சை அளிக்காதது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கடலூர் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு உரிய சிகிச்சை அளிக்காதது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. நிஜாமுதீன், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. சி. வேலாயுதன், திரு. இ. புகழேந்தி மற்றும் திரு. லா. சந்தானம் ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பாகவும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நா. பெரியசாமி மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பாகவும் கொடுத்திருக்கிறார்கள். இது சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. தொகுதி சட்டமன்ற உறுப்பினர்



ன்ற முறையில் திரு. இ. புகழேந்தி அவர்களை முதலிலே பேச ழைக்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, றிப்பிடப்பட்டு இருக்கிற சம்பவம் நடைபெற்ற கடலூர் தலைமை ருத்துவமனையில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக, புற நாயாளிகளாக வருகை தந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரம் மற்றும் யிரத்திற்கும் குறைவாக என்று இருந்த நிலையை மாற்றி, நம்முடை ாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக புங்கே வருகை தந்து பார்வையிட்டதற்குப் பிறகு, நம்முடைய ாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படியும், மக்கள் ல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய எண்ணத்தின்படியும், ானும் மாதத்திற்கு இரண்டு முறைக்கு மேலாக திடீர் நிகழ்வுகளாக புங்கு சென்று பார்க்கின்றபோது, தற்போது புறநோயாளிகள், ,500-லிருந்து 4,000 பேருக்குமேல் தினசரி வருகை தருவதும், ல்லாவிதமான மருந்துகளும் சரியான முறையிலே அங்கே வைக்கப்பட்டிருப்பதும், அதேபோல், தினசரி குழந்தை பிறப்புகூட 10-பிருந்து 15 குழந்தைகள் வீதம் அங்கே பிறந்து கொண்டிருக்கிற நிலையிலே, ஐந்தாறு குழந்தைகளுக்கு மேலாக ceasarean என்று சொல்லப்படுகிற அறுவை சிகிச்சை மூலமாகவும் அங்கே பிரசவிக்கப்படுகின்றன. இந்த நிலையிலே, எதிர்பாராத ஒரு சூழ்நிலையாக, விரும்பத்தகாத நிலையாக, ஏதோ ஒரு நாள் ஏற்பட்ட ஓர் அணுகுமுறைக் கோளாறின் காரணமாக, ஒரு தவறான அணுகுமுறை காரணமாக ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தாலும், அதற்குப் பிறகு, உடனடியாக, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, அங்கே உள் விசாரணை வைக்கப்பட்டு, வருவாய்த் துறை மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், அதேபோல், மருத்துவத் துறையின் மூலமாக, மருத்துவ சங்கத் தலைவர் அவர்களும், J.D. அவர்களும், கலந்து பேசி, சுமுகமான ஒரு நிலையை அங்கே உருவாக்கி, இப்போது நல்லமுறையிலே மருத்துவமனையில் அனைத்து நிலைகளும் இயங்கிக்கொண்டு வருகின்றன. இந்த நிலையில், கடலூர் தலைமை மருத்துவமனையில் C.T. scan பிரிவும், குழந்தைகளுக்காக 45 இலட்சம் ரூபாய் செலவில், தனியாக ward-ம், காச நோய் பிரிவிற்காக தனியாக 45 இலட்சம் ரூபாய் செலவில் சிகிச்சை மையமும், மத்திய அரசு, மாநில அரசுகளின் மூலமாக புதியதாக கண் நோய் நீக்குவதற்கான ward-ம் அமைக்கப்பட்டு மருத்துவமனைக்கு வருகின்ற மக்கள் முழு நம்பிக்கை வைத்திருக்கிற சூழ்நிலையிலே, நான் அரசின் கவனத்திற்குக்

கொண்டுவர விரும்புவது, ஒருசில விரும்பத் தகாதவர்களால், தனிப்பட்ட நிலையிலே நிலைமைகள் உருவானாலும்கூட, அரசுக்கு, அதன்மூலமாக கறை ஏற்படுத்த வேண்டும் என்பதில், அக்கறையுடைய சிலரால், மிகைப்படுத்தித் தரப்பட்ட ஒரு செய்தி அது என்பதையும் இங்கே குறிப்பிட்டு, இனிமேல் அப்படிப்பட்ட சூழல் நடைபெறாமல் தவிர்க்கும் வண்ணமாக, கடலூர் தலைமை மருத்துவனைக்கு, மேலும் மருத்துவர்களை புதியதாக நியமிக்க வேண்டும் என்ற என் கருத்தை இந்த சிறப்புக் கவன ஈர்ப்பில் தெரிவித்து அமருகிறேன், நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-4-2000 நாளன்று, சரசு, விக்டர் என்பவருடைய மனைவி, நிறைமாத காப்பிணியாக, சிகிச்சைக்கு முதலிலே குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனைக்குச் சென்று இருக்கிறார்கள். குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையிலே, குழந்தை கருப்பையிலிருந்து வெளியேறினால், அபாயம் இருக்கிற காரணத்தாலே, நீங்கள் உடனடியாக தலைமை மருத்துவமனைக்குச் செல்லுங்கள் என்று, அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்கள் எல்லாம் advice கொடுத்த காரணத்தாலே, அந்த அம்மையார் உடனடியாக, கடலூர் மருத்துவமனைக்கு உறவினர்கள் மூலமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். கடலூர் மருத்துவமனையிலே அப்போது பணியிலிருந்த ஒரு Doctor அவர்களை அனுமதித்து, சிகிச்சை அளிக்காமல், மனிதாபிமானமற்ற முறையிலே, அவர்களிடம் இங்கே சிகிச்சை செய்ய முடியாது என்று அலுத்துக்கொண்டு, நீங்கள் JIPMER மருத்துவமனைக்குப் போங்கள் என்று பணித்து இருக்கிறார்கள். உடன், இந்த அம்மையார், துடிதுடித்து மருத்துவமனைக்கு வெளியே இருக்கக்கூடிய ஒரு மணல் மேட்டிலே உருண்டு புரண்டு இருக்கிறார்கள். அப்பொழுது, அவருடைய கணவர், அரசு மருத்துவமனைக்கு மனிதாபிமானமற்ற முறையிலே நடத்தப்பட்ட காரணத்தாலும், தனது மனைவி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த காரணத்தாலும், யாருக்கு இதைத் தெரிவிப்பது, எப்படி நடவடிக்கை எடுப்பது என்ற நிலையில், தன்னுடைய முதலாளியைத் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு, அந்த முதலாளி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஜோதி நிர்மலா அவர்களுக்குத் தகவல் தந்து, அவர்கள் உடனடியாக வாகனம்கூட இல்லாமல், தன்னுடைய கணவர் Scooter-லே



மருத்துவமனைக்கு வந்து, அந்தப் பெண்ணைத் தேடிப்பிடித்து, அனுமதித்திருக்கிறார்கள். அப்பொழுது, எங்கே மருத்துவர் ' என்று கேட்டபோது, மருத்துவர் இப்போதுதான் சாப்பாட்டிற்குப் போய் இருக்கிறார் என்று ஊழியர்கள் பொய் உரைக்க, அந்தப் பெண் மருத்துவர், அப்பொழுதுதான் தூக்கத்திலிருந்து கண்ணை கசக்கிக்கொண்டு வெளியே வந்தபோது, D.R.O. என்றுகூடத் தெரியாமல், ஊழியர்கள் எல்லாம் மரியாதை இல்லாமல், அவரைப் பேசியிருக்கிறார்கள். பிறகு, தான் D.R.O. என்று அந்த அம்மையார் சொன்ன பிறகுதான் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். அப்பொழுதே, Joint Director of Health Services திரு. ஏழுமலை என்பவரைத் தொடர்பு கொண்டு பேசி, பிறகு operation-க்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். Operation-க்கு ஏற்பாடு செய்த பின்னால், அந்தக் குழந்தை இறந்து பிறந்த நிலையில், இன்னும் அரை மணிநேரம் தாமதித்திருந்தால், septic ஆகி, அந்தத் தாயாரே இறந்திருப்பார் என்றுகூடச் சொல்லப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூட, கடலூர் அரசு மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டு, இப்படிப்பட்ட மோசமான மருத்துவரை நான் பார்த்ததேயில்லையென்று, அவர்கள் சான்று பகர்ந்ததாகக்கூட பத்திரிகையிலே செய்தி வந்தது.

இப்படி, நடவடிக்கை எடுத்தபிறகு, அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி D.R.O. எப்படி எங்கள் மருத்துவத் துறையிலே தலையிடலாம் என்று எதிர்ப்பு தெரிவித்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. அதோடுமட்டுமல்ல, சென்னை மருத்துவமனையிலேகூட கால் உடைபட்ட சித்தூர்காரர் ஒருவர் 15 நாட்களாக மருத்துவமனை வாசலிலேயே நின்று தன்னை அனுமதிக்கச் சொல்லி கேட்டும்கூட அவர்கள் அனுமதிக்காமல், திரும்பிப்போன செய்தியும் பத்திரிகையிலே வெளியாகியிருக்கிறது.

அதுபோல, வேலூர் மருத்துவமனையிலே நாய் கடி மருந்து இல்லாமல், சாலை மறியல் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. மருந்தாளுநர்கள் போராட்டம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற காரணத்தாலே, அவர்களை சரியாக அழைத்துப் பேசி தீர்வு காணாத காரணத்தாலே, மருந்தும் இல்லாமல், மருத்துவமனையினுடைய நிலையைப் பார்த்தால், இப்பொழுது, மனிதாபிமானம் இல்லாமல் இருக்கிறார்கள். சிலபேர் நன்றாக நடந்துகொள்கிறார்கள்; சில

மருத்துவர்கள் சிறப்பாகப் பணிபுரிகிறார்கள்—நான் இல்லையென்று சொல்லவில்லை. அதே துறையிலே பல கறுப்பு ஆடுகள் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு கடலூர் உறுப்பினர் புகழேந்தி அவர்கள், சரியான அணுகுமுறை இல்லாத காரணத்தாலே இது ஏற்பட்டது என்றும் அல்லது அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று சில பேர் இவ்வாறு சொன்னதாகச் சொல்கிறார்கள். நிச்சயமாக புகழேந்தி அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். சில கறுப்பு ஆடுகள் இந்தத் துறையிலேயிருந்துகொண்டு, மனிதாபிமானமற்ற முறையிலே அவர்கள் சில நோயாளிகளை நடத்துகிறார்கள். பணம் இருந்தால்தான் அங்கே வேலை நடக்கிறது. Bandage போட வேண்டுமென்று சொன்னாலும் அல்லது glucose கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும், பணம் இல்லாமல் பல மருத்துவமனைகளிலே வேலையே நடப்பது இல்லை என்ற நிலைதான் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அதனாலே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மாறுவேடத்திலாவது, அடிக்கடி அந்த மருத்துவமனைகளுக்குச் சென்று சோதனையிட்டு, யாரெல்லாம் தவறு செய்கிறார்களோ, அவர்களையெல்லாம் தண்டிப்போம் என்று சொன்னால்தான், ஒரு நல்ல நிலை மருத்துவமனைகளிலே ஏற்படும். உடனடியாக நோயாளிகள் அங்கே காப்பாற்றப்படுவார்கள். ஆகவே, மனிதாபிமானமற்ற முறையிலே நடந்துகொண்ட, அந்த மருத்துவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா, இனி அப்படிப்பட்ட நிகழ்வுகள் தமிழகத்தில் ஏற்படாதவாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

முற்பகல் *10-45*

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15-4-2000 அன்று கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் நடைபெற்ற மோசமான சம்பவம் குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு மூலமாக விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். நம்முடைய அவையிலேயே, நாமக்கல் மாவட்டம் பள்ளிவளையம் அரசு மருத்துவமனையில் இதுபோன்ற ஒரு கொடூரச் சம்பவம் நடந்த விவரம்





குறித்து ஏற்கெனவே நாம் விவாதித்திருக்கின்றோம். குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் நடந்த சம்பவம் குறித்து விவாதித்திருக்கிறோம். அரசு மருத்துவமனைகள்மீதும், மக்கள் நல்வாழ்வு அமைப்புகள் மீதும், பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துகிற பல்வேறு முயற்சிகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம். வருமுன் காப்போம் திட்டமும், வாழ்வொளித் திட்டமும் ஆரம்ப கட்ட நிலையிலேயிருந்து சுகாதார நடவடிக்கையை உறுதிப்படுத்துவதற்கான திட்டமாக அறிவிக்கப்பட்டு, அதிலும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறோம். இவ்வளவுக்குப் பிறகும், ஏற்கெனவே, இந்த அவையிலே கண்டித்திருக்கிற ஒரு நிகழ்வுபோல மற்றொரு நிகழ்வு கடலூர் அரசு மருத்துவமனையிலே நடைபெற்றிருப்பதும், அதுவும் மிக, மிக ஏழ்மையான லாரி ஓட்டுநர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி அவர்களுக்கு இந்த இழிநிலை ஏற்பட்டிருப்பது என்பது நம்முடைய மருத்துவத் துறை செயல்பாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற களங்கம் என்று நான் கருதுகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் அந்த அரசு மருத்துவமனையில் இருக்கிற கட்டமைப்பு வசதிகளைப்பற்றியெல்லாம் எடுத்துக்கூறினார்கள். மருந்து இருக்கிற நிலவரம் குறித்தெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். அந்த நிலவரங்களையெல்லாம் எடுத்துச்சொல்கிறபோது, இந்தச் சம்பவம் ஏதோ ஒரு பெரிய பொருட்டாக எடுத்துக்கொள்ள வேண்டாத சம்பவம் என்ற கருத்துப்படும்படியான பொருளில் எடுத்துச் சொன்னதாக நான் கருதுகிறேன். இதுபோன்ற நிகழ்வுகளை நாம் அப்படிப்பட்ட பார்வையிலே பார்க்கக்கூடாது என்று நான் அவரையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே, மருத்துவத் துறையில் இப்படிப்பட்ட கொடூரமான இழிநிலைகள் ஏழைகளுக்கு எந்தக் காலத்திலும் ஏற்படக்கூடாது என்பதை நான் வலியுறுத்துகிறேன். லாரி ஓட்டுநர் குடும்பத்தைச் சார்ந்தவருடைய கஷ்டத்தைப்பற்றி அந்த மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியே எடுத்துச்சொன்னதற்குப்பிறகுகூட, அவர் தன்னை அதிகாரி என்று அறிமுகப்படுத்திக்கொள்வதற்கு முன்பாக அங்கே மருத்துவர்கள் நடந்துகொண்ட விதம், சாதாரண குடிமகனுக்கு எவ்வளவு தூரம் மருத்துவத் துறை அதிகாரிகள் மரியாதை செலுத்துகிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. எனவே, குழந்தையை இழந்த நிலை ஏற்பட்டிருப்பதற்கு அந்த மருத்துவமனையிலே அந்த நேரத்திலே பணியாற்றிய மருத்துவர்கள்தான் காரணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவர்கள்மீது இலாகாபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்றும் நான் நம்புகிறேன். ஆனால், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை என்பது மிக உறுதியானதாகவும், எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்வுகள் நேராவண்ணம் ஓர் எச்சரிக்கையாகவும் அமைய வேண்டும் என்ற என் கருத்தை வலியுறுத்தி இதன்மீது அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரனா அல்லது திரு. டி. மணியா? திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் தலைமை அரசு மருத்துவமனையில் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட நிலையை ஒரு சாதாரண விஷயமாக நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. நம்முடைய அரசு மருத்துவமனைகளில் பல பகுதிகளில் நடக்கின்ற ஒரு சம்பவத்தினுடைய பின்னணியாகத்தான் இதை நான் கருதுகிறேன். ஏன் என்றால், இரண்டு மாதங்களுக்கு முன்னால் குழித்துறை அரசு மருத்துவமனையிலே இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. பிரசவத்திற்காக வருகின்றபோது, பொறுப்பிலிருந்த Doctor அங்கேயில்லை. நான் தொலைபேசியில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்புகொண்டு, அவர் அதற்குப் பின்னால் அந்த மருத்துவரைக் கூப்பிட்ட பின்பும், அந்த மருத்துவர் வந்து சேரவில்லை. அவருடைய தாயாருக்குச் சொந்தமான தனியார் மருத்துவமனையிலே அந்த நேரத்திலே இருந்தார். ஆள் அனுப்பி கூப்பிட்டபிறகுதான், நடவடிக்கைகள் மேற்கொண்டார். எனவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏதோ கடலூர் மாவட்டத்தில் மட்டும் நடந்த நிகழ்ச்சி மட்டுமல்ல. இப்படி பல பகுதிகளில் நடக்கிறது. அரசு மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் கடமையுணர்வோடு செயல்படாததன் விளைவுதான் இது. கடலூர் சம்பவத்தினுடைய பின்னணியில் அங்கே வந்த அதிகாரியான D.R.O. அவர்களைக்கூட கண்டுகொள்ளாத ஒரு போக்கும் அங்கே இருந்திருக்கிறது. எனவே, குறைந்தபட்சம் தங்களுடைய கடமையை ஆற்ற வேண்டும், ஆற்றவில்லை என்று சொன்னால், நடவடிக்கைக்கு உள்பட நேரிடும் என்ற ஒரு பய உணர்வு, ஓர் அச்ச உணர்வு இவர்களுக்கு ஏற்படுமேயானால்தான், இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெறாமல் நாம் தடுத்துக்கொள்ள முடியும். அந்தவகையிலே இந்த மருத்துவர் நடந்துகொண்ட முறை கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.





இந்த மருத்துவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

*முற்பகல் 10-50*

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மருத்துவமனையில், சென்னை மருத்துவமனையில், குழித்துறை மருத்துவமனையில் நடந்த சம்பவங்கள் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டப்பட்டுவிட்டன. இதுபோன்று நானும் ஒரு சம்பவத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தச் சம்பவம் எல்லாம் இதில் வராது. நீங்கள் இந்தச் சம்பவத்தைப் பற்றிப் பேசுங்கள். அந்தமாதிரி இன்னொரு சம்பவம் நடந்தது என்று வேண்டுமானால் சொல்லலாமேயொழிய, அதனுடைய விவரங்களை இங்கே சொல்ல அனுமதி கிடையாது.

**திரு. சி. வேலாயுதன்:** சரி. சொல்லவில்லை. மொத்தத்தில் அரசு ஊதியம் பெறக் கூடியவர்கள் பாமர மக்களிடமிருந்து வரி மூலம் வரக் கூடிய பணத்தைச் சம்பளமாகப் பெறுகிறோம். வாங்கக்கூடிய சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டுமென்ற உணர்வு பொதுவாகக் குறைந்துவிட்டது. அதிலும் அதிகமான உணர்வு இருக்க வேண்டியது மருத்துவத் துறையில். மருத்துவத் துறையில் பணியாற்றக் கூடியவர்களுக்கு—service mentality—சேவை மனப்பான்மை அதிகமாக இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். அவர்களுக்கு சேவை மனப்பான்மை குறைந்துவிட்டது. இந்தச் சேவை மனப்பான்மையை, service mentality-யை அதிகமாகக் கொண்டுவர, அரசு என்ன செய்ய வேண்டுமென்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

இன்னொன்று, D.R.O. ஜோதி நிர்மலா அவர்கள் சரியான நேரத்திற்கு அங்கே சென்று, அந்தத் தாயைக் காப்பாற்றியிருக்கிறார்கள். இதுபோன்று துணிச்சலோடு செயல்படக்கூடிய அரசு அதிகாரிகளுக்கு வெகுமதி அளித்துப் பாராட்ட வேண்டும். அத்தோடு இதுபோன்று கடமையில் தவறிய அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சமீபகாலமாக அரசாங்கத்தினுடைய மருத்துவத் துறை மேம்பட்டு வந்துகொண்டிருந்தாலும்கூட, service mentality குறைந்தபட்சம் அரசு மருத்துவமனைகளில் வேலை பார்க்கக் கூடியவர்களுக்காவது வர வேண்டும். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை அரசு பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுத்து, இதுபோன்ற சம்பவங்கள்

மேலும் நடக்காமல் தடுக்க வேண்டும். மற்றவர்கள் அதை ஒரு பாடமாகக் கருத வேண்டும். அத்தகைய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்ற வகையில், அரசினுடைய கவனத்தை ஈர்த்து, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன அந்த உணர்வோடு என்னுடைய உணர்வையும் நான் அதிலே இணைத்துக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வேலூரிலே நாய்க்கடி மருந்து இல்லை என்று ஒரு கருத்தைச் சொன்னார். அது உண்மையல்ல. ஒரு நாள் 4, 5 பேருக்கு அங்கே மருந்து தேவைப்படும் என்று சொன்ன நேரத்தில், 2 பேருக்குத்தான் மருந்து இருக்கிறது என்று தெரிவித்ததாகவும், உடனே மற்றவர்களுக்கும் பக்கத்திலேயிருந்த மருத்துவமனையிலேயிருந்து அந்த மருந்து கொண்டுவரப்பட்டதாகவும்தான் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இப்போது வேலூர் மருத்துவமனையில் தேவையான அளவிற்கு நாய்க்கடி மருந்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருந்தாளுநர்கள் வேலைநிறுத்தத்தைப் பற்றியும் இதிலே இணைத்துக்கொண்டார்கள். மருந்தாளுநர்கள் திடீரென்று சட்டத்திற்குப் புறம்பாக வேலைநிறுத்தம் என்று சொல்லி ஆரம்பித்தார்கள். அந்த வேலைநிறுத்தம் சட்டத்திற்குப் புறம்பானது. இருந்தாலும்கூட, எந்த மருத்துவமனையும் மருந்தாளுநர்கள் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்படவில்லை. அங்கேயிருக்கக்கூடிய மருத்துவர்கள், நர்சுகள் மற்றும் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிற மருந்தாளுநர்கள் எல்லோரும் நோயாளிகளுக்கு முறையாக மருந்துகளை வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மருத்துவமனைகளிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதற்குக் காரணம், சில இடங்களில் ஏழைகளிடத்திலே பணம் கேட்கிறார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாறுவேடத்திலே போய்ப் பார்க்க வேண்டும் என்று ஒரு கருத்தையும் சொன்னார்கள், இப்படி சில நேரங்களில் நாங்கள் திடீர் திடீரென்று சோதனை செய்து சில பேர் மீது நடவடிக்கைகூட எடுத்திருக்கின்றோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையிலே ஏழையிடத்திலே,





அதுவும் ரிக்ஷா ஓட்டுநருடைய மனைவியிடத்திலே, பிரசவத்தின்போது பணம் கேட்டார்கள் என்ற ஒரே குற்றத்திற்காக அங்கே யார் யார் பணம் கேட்டார்களோ, அவர்கள் எல்லாம் வேலையிலிருந்து suspend செய்யப்பட்டு, இப்போது நிரந்தரமாகவே பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த மாதம், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுடைய வேலூர் மாவட்டத்தில், திருப்பத்தூரிலே அரசு மருத்துவமனையிலே கண்ணகி என்ற ஒரு மருத்துவர், மருத்துவம் பார்க்கின்ற நேரத்திலே, ஒரு சகோதரி பிரசவத்திற்காகச் சென்றிருந்தபோது பணம் கேட்டார் என்ற செய்தி கேட்டு, விசாரணை நடத்தி, அவர் மீதும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. எனவே, எங்கேயெல்லாம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு இந்தச் செய்திகள் வருகின்றனவோ, அங்கேயெல்லாம் தயவு தாட்சண்யமில்லாமல் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும், அதுவும் உறுதியான நடவடிக்கையாக எடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நிச்சயமாக இந்த அரசு அவருடைய வேண்டுகோளைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலாயுதன் அவர்கள்கூட சேவை மனப்பான்மை குறைந்துவிட்டது என்று சொல்லும்போது, அங்கேயிருக்கக்கூடிய D.R.O. உடனடியாக இரவு நேரத்திலேயே போய் அவருடைய கடமையைச் செய்திருக்கிறார் என்றும் சுட்டிக்காட்டினார்கள். ஆக, அரசு ஊழியர்கள் அத்தனைபேருமே கடமையில் தவறியவர்கள் என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. கடமை உணர்ச்சி உள்ளவர்கள் என்பதற்கு D.R.O. ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறார் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் செய்தி அரசுக்கு கிடைத்தவுடனே ஒரு நிமிடம்கூட வீணாக்காமல் உடனடியாக இதுகுறித்து அரசுக்கு விசாரணை நடத்தி அறிக்கை தரவேண்டும் என்று ஆணையிட்டதன்பேரில் டாக்டர் என். பக்திதேவி என்ற கூடுதல் இயக்குநர் அவர்கள் அங்கே சென்று விசாரித்து அறிக்கையும் தந்திருக்கிறார்கள். அதுகுறித்த முழு விவரங்களை இந்த அவைக்குச் சொல்வது கடமை என்று கருதுகிறேன்.

குறிஞ்சிப்பாடியில் ஒரு தனியார் மருத்துவமனையில் மூன்றாவது

பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட திரு. விக்டர் என்பவருடைய மனைவி சரசுவிற்கு பிரசவத்தில் சிக்கலாகிவிட்டதாகவும் மேற்கொண்டு சிகிச்சை செய்ய தனியார் மருத்துவமனையில் மருத்துவ வசதிகள் இல்லாமையால் அரசு மருத்துவமனைக்குக் கொண்டுபோகும்படி அம் மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் அப்பெண்ணின் உறவினர்கள் அந்தப் பெண்மணியை குறிஞ்சிப்பாடியிலிருந்து கடலூர் அரசு மருத்துவமனைக்கு bus-லே கொண்டு வந்துள்ளனர். அதன்பிறகு 15-4-2000 அன்று இரவு 10-45 மணிக்கு அவர் கடலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது மருத்துவர் கலா, M.D., D.G.O., பணியில் இருந்தார். அவர் ஏதோ தூங்கிக்கொண்டிருந்தார் என்றெல்லாம் சொன்னார்கள். அது உண்மையல்ல. அவர் நோயாளியைப் பரிசோதித்துவிட்டு, நோயாளி வெளியில் மிகவும் மோசமாக வைத்தியம் செய்துகொண்டதாலும், மிகவும் நேரம் கடந்து வந்ததாலும், முன்பாகவே பெண் உறுப்பில் சீழ் படிந்து இருந்ததைக் கண்டு பிடித்துள்ளார். மேலும் குழந்தைக்கு நாடித் துடிப்பு இல்லை என்பதையும், குழந்தை தாயின் வயிற்றிற்குள்ளேயே இறந்துவிட்டதையும் பனிக்குடம் ஏற்கெனவே உடைந்துவிட்டதையும் கண்டுபிடித்துள்ளார். எனவே, நோயாளியின் நலனைக் கருதி மேல் சிகிச்சைக்காக JIPMER மருத்துவமனைக்கு அனுப்ப நோயாளியின் உறவினரிடம் ஆலோசனை கூறியதாக மருத்துவர் கலா கூறியிருக்கிறார். அதைக்கேட்டு பயந்து போன உறவினர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் புகார் செய்துள்ளனர். அதன் பின்பு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஜோதி நிர்மலா அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்து வந்து மருத்துவர் கலாவைச் சந்தித்து ஏன் நோயாளிக்கு அங்கே வைத்தியம் செய்ய முடியாது என்பதற்கான காரணத்தைக் கேட்டதாகவும், அதற்கு மருத்துவர் கலா அவர்கள் நோயாளியின் தன்மையை எடுத்துக்கூறி நோயாளியின் நன்மையைக் கருதித்தான், தான் அவரை மேல்சிகிச்சைக்கு JIPMER மருத்துவமனைக்குச் செல்ல ஆலோசனை கூறியதாகவும் தெரிவித்தார். மருத்துவரின் பதிலில் திருப்தி அடையாத காரணத்தால், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் இணை இயக்குநர் திரு. ஏழுமலை அவர்களிடம் இதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார். உடனடியாக இணை இயக்குநர் அவர்கள் டாக்டர் கலா அவர்களிடம் நோயாளியின் நோயின் தன்மை, முடிவு எல்லாவற்றையும் எடுத்துக்கூறிவிட்டு மேற்கொண்டு சிகிச்சை அளிக்கும்படி கூறியுள்ளார். 16-4-2000 அன்று அதிகாலையில் மருத்துவர் கலா அவர்கள் நோயாளி சரசு அவர்களுக்கு எல்லாவித முன்சிகிச்சையும் அளித்து ஓர் unit





இரத்தம் கொடுத்து அறுவை சிகிச்சை செய்து இறந்த பெண் குழந்தையை வெளியே எடுத்து உள்ளார். அப்பொழுது கர்ப்பப்பை முழுவதும் சீழ் பிடித்திருந்தது என்பது உறுதியாகி உள்ளது. 16-4-2000 அன்று காலையில் நடைபெற்ற அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளியை இன்றுவரை சிறப்பு மருத்துவர்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள். 18-4-2000 அன்று மீண்டும் அவருக்கு இரத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லாவித உயர்ந்த உயிர்காக்கும் மருந்துகளும், glucose-ம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நோயாளி ஆபத்தான நிலையில் இருந்தாலும்கூட, படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வருகிறார் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும்கூட, விசாரணைக்குச் சென்ற டாக்டர் என். பக்திதேவி அவர்கள் விசாரித்து ஓர் இடைக்கால அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறிக்கையில் டாக்டர் கலா அவர்கள் கடந்த ஓராண்டு காலமாக கடலூர் மருத்துவமனையிலே பணிபுரிந்து வருவதாகவும், ஒரே ஆண்டில் 143—ceasarean—அறுவை சிகிச்சைகள் அவர்கள் செய்துள்ளார்கள் என்றும், இதுவரை எந்த நோயாளியையும் வேறு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அவர் அனுப்பியதில்லை என்றும் தெரிவித்திருக்கின்றார்கள். இருந்தாலும்கூட, அந்த மருத்துவர் கலா தன் பணியில் அன்று சரிவர கவனம் செலுத்தாதது தவறுதான் என்றும் அறிக்கை கொடுத்திருக்கின்றார்கள். அதன்பேரில் இலாகாபூர்வமாக டாக்டர் கலா அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்து Director of Medical Services மூலமாக உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்து இருக்கின்றோம். இதற்கிடையில் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் குறிப்பிட்டதைப்போல் டாக்டர் கலா அவர்கள் அங்கே Doctors Association-ல் முறையிட்டு D.R.O. தன்னுடைய வேலையிலே தலையிட்டது தவறு என்று கூறியிருக்கிறார். உடனே அவர்கள் தர்ணா செய்ய வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். இது தெரிந்தவுடனேயே இணை இயக்குநர், அவர்களையெல்லாம் சமாதானப்படுத்தி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே பேசி ஒரு சுமுகமான தீர்வு கண்டிருக்கிறார். நடவடிக்கைகள் எடுப்பது என்பது இந்த அரசுக்கு சாதாரணமான ஒன்றுதான். இருந்தாலும்கூட மருத்துவர்களும் ஒரு Association வைத்துக்கொண்டு பல நேரங்களிலே அரசாங்கத்தோடு ஒத்துழைப்பு தந்து நம்முடைய பல்வேறு திட்டங்களை மிகச் சிறப்பாக செய்துகொண்டும் இருக்கின்றார்கள். ஓரிருவர் இப்படித் தவறு செய்வதன் மூலமாக பொதுவாக எல்லா மருத்துவர்களையும்

நாம் குறை கூறிவிட முடியாது. என்றாலும், தவறு செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட சம்பவங்கள் எங்கும் நடைபெறாமல் இருக்க தக்க அறிவுரைகள் எல்லா மருத்துவமனைகளுக்கும் வழங்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

## 4. அறிக்கை அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 102 முதல் 106 வரையிலான 5 அறிக்கைகளை@ குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (இ) எண்ணூர் துறைமுகப் பராமரிப்புப் பணியால் மீன்கள் பாதிக்கப்படுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, எண்ணூர் துறைமுகப் பகுதியில் கடலை ஆழப்படுத்துவது மற்றும் தூர்வாருவது போன்ற பணிகளால் மீன் இனம் பாதிக்கப்படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஆரூண் ரஷீத் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். திரு. ஆரூண் ரஷீத் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

---

@ அறிக்கைகள் 20-4-2000 அன்று அவையில் வைக்கப்பட்டன.



**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூரிலே Satellite Harbour ஒன்றை இப்போது நிறுவுவதன் விளைவாக பழவேற்காடு பகுதியிலே இருக்கின்ற 29 கிராமங்களிலே 2 கிராமங்கள் இப்போது நீரிலே மூழ்கிவிட்டன. மீதம் இருக்கின்ற 27 கிராமங்களும் நீரில் மூழ்கக்கூடிய ஓர் அபாயம் இருக்கின்றது. கோரக் குப்பம், சாத்தான் குப்பம், வைரவன் குப்பம், அரங்கம், கரிமணல் குப்பம், கலங்கரை விளக்கக் குப்பம், நடுக்குப்பம், தெம்பாசிப்பள்ளி, ஜமீலாபாத், திருமலை நகர், இடையாட்டுக் குப்பம், போன்ற குப்பங்களெல்லாம் மூழ்குகின்ற ஓர் அபாயம் இருக்கின்றது. இதனால் அங்கே ஏறத்தாழ 4,500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 1,500 குடும்பங்களுக்காக மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களும். அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஏனைய Electricity Board அதிகாரிகளும், Port Trust அதிகாரிகளும், Revenue அதிகாரிகளும் அடங்கிய Joint Meeting ஏற்கெனவே இரண்டுமுறை நடந்திருக்கின்றது. அதிலே, அந்தக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புத் தருவதாக அரசுத் தரப்பிலேயிருந்து சொல்லி இன்னும் அந்த வேலைவாய்ப்புகள் சரியாகத் தரப்படவில்லை. dredger மூலமாக கடலை ஆழப்படுத்துதல் காரணமாக, அங்கே சேற்றை எடுத்து விடுகிறார்கள். சேற்றை எடுக்கின்ற காரணத்தினாலே அங்கே மீன் இனங்களெல்லாம் பாதிக்கப்பட்டுவிடுகின்றன. அங்கே இருக்கின்ற மின்சாரத் துறையினுடைய, எண்ணூர் Thermal Plant-க்காக நிறையத் தண்ணீர் பழவேற்காடு ஏரியிலிருந்து எடுப்பதனால் அங்கே மீன்களெல்லாம் உள்ளே இழுத்துச் செல்லப்பட்டு மீன்களே வளர முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றது. அதிலேயிருந்து வரப்பெறுகின்ற சுற்றுச்சூழல் மாசுபடும் fly-ash என்ற அந்தக் கலவைத் தண்ணீர் மீண்டும் அந்த ஏரிக்கு வருவதனால் அங்கே மீன் வளம் முழுமையாகப் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத ஒரு நிலை இருக்கின்றது. பழவேற்காடு ஏரி ஏறத்தாழ 600 கிலோமீட்டர் பரப்பளவிலே இருக்கின்ற மிகப்பெரிய ஏரியாகும். உலகத்திலே இருக்கின்ற பாதுகாக்கப்பட வேண்டிய ஏரிகளிலே அதுவும் ஒன்று என்று மத்திய நிபுணர் குழு, ராம்சார் குழு அறிக்கை தந்திருக்கின்றது. ஆனால் அது முறையாகப் பாதுகாக்கப்படவில்லை. அங்கேயிருந்து தண்ணீர் முழுமையாக எடுக்கப்படுவதனாலே அங்கே மீன் வளம் பாதிக்கப்படுவது மட்டும் அல்லாமல் அந்த மீனவர் கிராமங்களிலே மீன் பிடிக்க முடியாத ஓர் அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் அறிவித்தபடி அவர்களுக்கு வேலைவாய்ப்பு உடனடியாகத் தரவேண்டும். அந்த 5 வருடப் பாதிப்பினாலே ஏறத்தாழ 15 வயதிலே ஒரு மகள் ஒருவருக்கு இருப்பாரேயானால் அந்த மகளுக்கு 20 வயது ஆகிவிட்டது என்றால் அவருக்குத் திருமணம்கூடப் பண்ண முடியாது. பலபேர் அவதிப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் சொல்கின்றார்கள்.

தமிழ் மாநில காங்கிரஸ் மீனவர் பிரிவின் சார்பிலே அங்கே இருக்கின்ற ஜெகநாதன் போன்றவர்களும், அங்கே இருக்கின்ற மீனவத் தலைவர் எம்.வி. ராஜா போன்றவர்கள் எல்லாம்கூட ஒரு போராட்டத்தை தங்கசாலையிலே நடத்தினார்கள். மொத்த கிராமத்தினரும் குழந்தை குட்டிகளோடு அங்கே வந்து அந்தப் போராட்டத்திலே கலந்துகொண்டார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து, அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அந்த 4,500 குடும்பங்களுக்கும் உடனடியாக வேலைவாய்ப்பைத் தர வேண்டும். ஏற்கெனவே 1,500 பேருக்குத் தருவதாகச் சொல்லி photo identity card எடுத்திருக்கிறார்கள். வேலைவாய்ப்புத் தருவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு மானியம் வழங்கிடவும் அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற பெயரால் வடசென்னை அனல் மின் நிலையத்திலிருந்து வருகின்ற நீர் அதிகமான உஷ்ணமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே மீன்கள் பாதிக்கப்படுகின்றன என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். பொதுவாக அனல் மின் நிலையமிருக்கின்ற இடங்களிலே மீனவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் அத்தனை பேருக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். ஒரு அனல் மின் நிலையத்திலே அதிகபட்சமாக 1000 பேர் வேலை செய்யலாம். ஆனால் வடசென்னை அனல் மின் நிலையத்தைச் சுற்றி ஏறக்குறைய 5000 மீனவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மீன் பிடிக்கின்ற தொழில் அதனால் பாதிக்கப்படுகின்றதா என்றால் இல்லை. ஆனால் எப்படியும்



அரசாங்கம் தங்களுக்கு வேலை கொடுத்துவிடும் என்ற அடிப்படையில் ஒரு தவறான பிரச்சாரத்தின் காரணமாக இப்படிப்பட்ட போராட்டங்களிலே மீனவர்கள் அந்தப் பகுதியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக கடந்த கால ஆட்சியில் அங்கே 750 பேரைத் தான் வேலைக்கு நியமிக்கலாம் என்றிருந்தபோது 1250 பேரை அதாவது 500 பேரை அதிகமாக நியமித்துவிட்டார்கள். நியமித்ததிலேகூடத் தவறில்லை. ஆனால் யார், யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் forgery certificate கொடுத்தவர்கள், படிக்காதவர்கள், வயது அதிகமாக இருந்தவர்கள் இவர்களை எல்லாம் அவர்கள் நியமித்துவிட்டார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடனே மாவட்ட ஆட்சித் தலைவரும், தலைமைப் பொறியாளரும் மற்றும் மின் வாரியத்தின் தலைவரும் அங்கேயுள்ள நிலைமைகளை எல்லாம் பரிசீலனை செய்து, ஒரு நாள் அந்த இடத்திற்கு நாங்கள் எல்லோருமே சென்று உண்மைகளைக் கேட்டு அறிந்தோம். அதிலே 380 பேர் தவறாக certificate கொடுத்து வேலைக்குச் சேர்ந்ததாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர், வேலையிலிருந்து அவர்களை நீக்குவதுதான் சரி என்று ஒரு கருத்தைத் தெரிவித்தார். மின் வாரியமும் அதை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில் அந்தத் தொழிலாளிகள் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே வந்து 4, 5 ஆண்டு காலமாக வேலை செய்துவிட்டோம்; அதிலே ஏதாவது தவறுகள் இருக்குமானால் மன்னித்து எங்களை மீண்டும் வேலைக்கு எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மறுபடியும் அந்த 380 பேரிலே எந்தெந்த நியாயத்தின் அடிப்படையிலே அவர்களை மீண்டும் பணியைத் தொடர அனுமதிக்கலாம் என்று பார்த்தபோது உண்மையிலேயே 6-வது வரையிலே படித்து இருக்கிறார்கள்; ஆனால் 8-வது வரையிலே படித்ததாக certificate கொடுத்திருக்கிறார்கள்; சில பேர் ஒன்றுமே படிக்காமல் certificate கொடுத்திருக்கிறார்கள்—இதையெல்லாம் எண்ணிப்பார்த்து குறைந்தபட்ச படிப்பு யாராவது படித்திருந்தால் அவர்களை மன்னித்து அவர்களுக்குப் பணி வழங்கலாம் என்று முடிவு செய்து, முதலமைச்சர் அறிவுரையின் பேரிலே பாதிப் பேருக்கு வேலைவாய்ப்பு மீண்டும் தந்திருக்கிறோம். இப்போது இல்லாத கற்பனையாக ஒன்றை உருவாக்கிக் கொண்டு வடசென்னை அனல் மின் நிலையத்திலே பிரச்சினையை உருவாக்குகிறார்கள். அதுகுறித்து நான் இங்கே விவரமான பதிலை அளிக்க விரும்புகின்றேன்.

வடசென்னை அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நீர் பழவேற்காடு ஏரியிலிருந்து எடுக்கப்படவில்லை. மேலும் இந்த அனல் மின் நிலையத்திலிருந்து எவ்விதக் கழிவுநீரும் பழவேற்காடு ஏரியில் விடப்படவும் இல்லை. வடசென்னை அனல் மின் நிலையத்திலிருந்து வெளிவரும் நீராவியைக் குளிர்விப்பதற்குத் தேவையான நீர் மட்டுமே எண்ணூர் கடற் கழியிலிருந்து எடுக்கப்படுகிறது. பயன்படுத்தப்பட்ட பின் இந்நீரானது எவ்வித வேதியல் மற்றும் பௌதீக மாற்றமில்லாமல் 5-லிருந்து 6 டிகிரி சென்டிகிரேடு வெப்பநிலை உயர்வுடன் பக்கிங்காம் கால்வாயில் விடப்படுகிறது. 10 டிகிரி வரையிலே அந்த வெப்பம் இருக்கலாம் என்று ஏற்கெனவே Pollution Control Board-லே தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட அந்த வெப்பத்தினுடைய அளவு 5-லிருந்து 6 டிகிரி சென்டிகிரேடுவரைதான் இருக்கிறது என்று தெளிவாக அங்கே பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் எண்ணூர் கடற்கழியில் எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு குளிர்வித்தலுக்குத் தேவையான நீர் எப்போதும் இருக்க வகை செய்யப்பட்டுள்ளது. வடசென்னை அனல் மின் நிலையத்திலிருந்து எவ்விதக் கழிவுநீரும் பக்கிங்காம் கால்வாயில் விடப்படுவதில்லை. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலரால் 15-4-2000 அன்று மேற்கொள்ளப்பட்ட சமீப ஆய்வும் மேற்கண்டவைகளை உறுதி செய்து இருக்கிறது. மேலும் அவர்கள் நடத்திய பரிசோதனை பக்கிங்காம் கால்வாயில் விடப்படும் நீரின் வெப்பநிலை உயர்வு 4 டிகிரி சென்டிகிரேடு மட்டுமே என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறது. வடசென்னை அனல் மின் நிலையத்திலிருந்து பழவேற்காடு ஏரி சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் இருப்பதால் இம்மின் நிலையத்தின் செயல்பாட்டினால் பழவேற்காடு ஏரிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் அறிக்கை தரப்பட்டிருக்கிறது. எனவே, வெப்ப நீர் விடுவதனாலே யாராவது பாதிக்கப்பட்டால், அதற்கும் மின் வாரியம் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால் அதனைப் பயன்படுத்திக்கொண்டு ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரக்கூடிய நிலைமை மின்சார வாரியத்திலே இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.





## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

### (ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி— பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து. 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 24,94,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1706, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், முல்கொம்பை கிராமத்தில் உள்ள பெருமாள் கோயிலுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்குச் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1959, திரு. நா பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருள்மிகு செல்லியாண்டி அம்மன் ஆலயத்தின் சொத்துகளில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4551, இருக்கைக்கு இப்போது வந்திருக்கும் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள், சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1416, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1825, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1546, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4212, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, பசுபதிக்கோயிலில் உள்ள புள்ளமங்கை கோயில், திருவைகாவூர் ஸ்ரீ ஈஸ்வரர் கோயில்களில் செய்யப்பட வேண்டிய திருப்பணிகளை உடனே மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2771, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, மடப்புறம் பத்திரகாளி அம்மன்கோயில் அறக்கட்டளையின் சார்பில் மகளிர் கலைக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4361, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3638, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2831, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, செந்துறை தாலுகா, நிண்ணியூரிலுள்ள சிவன் கோயிலைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1872, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு வட்டத்திலுள்ள மேலக்கருவேலன் குளம் நடராஜர் கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



*"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4038, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாக்க சிறப்புக் கண்காணிப்புக் குழு ஏற்படுத்துவதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2731, டாக்டர் க. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2338, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2379, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,94,40,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

### (ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி-பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51, -தமிழ் வளர்ச்சி-பண்பாடு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 33,81,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2896, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4571, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4179, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2858, திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3673, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2685, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3135, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4335, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2798, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4134, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் ஆட்சிமொழியினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் பள்ளிகளுக்கும் அலுவலகங்களுக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2411, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1976, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி நடப்பதுபோல மேலைச் சிதம்பரமான பேரூரிலும் நாட்டியாஞ்சலி நடத்த ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,81,73,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மற்றும் தமிழ் வளர்ச்சி-பண்பாடு ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 171 முதல் 243 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

## 6. அறிவிப்பு

### தமிழ் நூல்கள் மற்றும் திருக்கோயில் பிரசாதங்கள் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இரண்டு புத்தகங்களைக் கொடுப்பதற்கு அனுமதி கேட்டிருக்கின்றார்கள். அனுமதி கொடுக்கப்படுகின்றது. "பேசும் கலை வளர்ப்போம்", "முத்தமிழ் வடிவில் மணிமேகலை" என்ற இரண்டு புத்தகங்கள்.

இன்றைய தினம் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை என்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சர்க்கரைப் பொங்கலும், புளியோதரையும் கொடுக்கப்படும் என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து-சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்**—தொடர்ச்சி

**(ஆ) கோரிக்கை எண் 51 தமிழ் வளர்ச்சி—பண்பாடு**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தைத் தொடங்குமாறு திரு. ப. மோகன் கந்தசாமி அவர்களை அழைக்கின்றேன். 10 உறுப்பினர்கள் பேசவிருக்கின்றார்கள். விவாதத்தைத் தொடங்கி வைப்பவருக்கு மட்டும் 15 நிமிடங்கள், மற்ற எல்லோருக்கும் 10 நிமிடங்கள்தான் பேச அனுமதி அளிக்கப்படுகிறது. திரு. ப. மோகன் கந்தசாமி.

*முற்பகல் 11-15*

**திரு. ப. மோகன் கந்தசாமி:** எல்லாம் வல்ல என்னுடைய இதய தெய்வம் முருகனையும், எங்கள் அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களையும் வணங்கி, எனக்கு இந்த மானியத்திலே பேச வாய்ப்பு அளித்த மீனாட்சியின் அருள் கடாட்சம் பெற்ற தங்களுக்கும், கலைஞர் அவர்களுக்கும் நன்றி கூறி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே பலமுறை நாங்கள் பேசும்போது, திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும்போது அதிலே ஈடுபாடு உடையவர்களை நியமியுங்கள், அதேபோல அதிகாரிகளை நியமிக்கும்போதும் அதிலே கொஞ்சம் அக்கறை உள்ளவர்களை நியமியுங்கள் என்று பல முறை கோரினோம். ஆனால் மீண்டும் மீண்டும் கட்சி சார்புடையவர்களையே அறங்காவலர்களாக நியமித்து இருக்கிறார்கள். அதைப்பற்றிக்கூட கவலைப்படவில்லை. ஆனால் அவர்களுக்கு அதில் ஈடுபாடு இருக்கிறதா என்று சொன்னால், சில இடங்களிலே இல்லை என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

உதாரணத்திற்கு, காரமடை அரங்கநாதர் கோயிலைப் பற்றி உங்களுக்கு எல்லாம் தெரியும். மிகப் பிரசித்தமான கோயில். அங்கே தேர்த் திருவிழா மிகச் சிறப்பாக நடக்கிறது. அங்கே உள்ள பட்டர்கள் எல்லாம் நீண்ட அனுபவமும், ஆகம விதிகளை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கக்கூடிய அளவுக்கு அறிவும் படைத்தவர்கள். ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்னால் அங்கே நடந்த திருவிழாவிலே, ஆகம விதிகளின்படி முறையாக அந்த விழாவை நடத்த வேண்டுமென்று சொன்னதற்கு முரண்பாடாக, அங்கே இருக்கின்ற அதிகாரி, நான் ஓர் அதிகாரி சொல்கிறேன், நீ இதைக் கடைபிடித்துத்தான் ஆகவேண்டுமென்று அவர்களை வற்புறுத்தி, அங்கிருந்த இறைப் பணியாளர்களையெல்லாம் மனம் புண்படும்படியாகப் பேசி நடந்து கொண்டார் என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவேதான் நான் ஒவ்வொருமுறை பேசும்போதும், யாரை வேண்டுமானாலும் அறங்காவலர்களாகவோ, அதிகாரிகளாகவோ போடுங்கள், ஆனால் அவர்கள் அதிலே அக்கறையும் ஈடுபாடும் உள்ளவர்களாக இருக்கிறார்களா என்று பார்த்துப் போடுங்கள் என்று சொல்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது அதிகாரிகளை foreign service-ல் deputation என்று போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓர் இலட்சம் ரூபாய் அளவுக்குச் சம்பளம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அது எல்லாம் தேவையில்லை. அதுபோன்ற அதிகாரிகளை மாற்றினால் இங்கே உள்ள அதிகாரிகளுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்க முடியும்.

இப்போது திருக்கோயில்கள் உபயோகப்படுத்தும் மின்சாரத்திற்கு அதிகப்படியான கட்டணம் வசூலிக்கிறார்கள். அதாவது வணிக

நிறுவனங்களுக்குரிய கட்டணம் tariff, நிர்ணயிக்கிறார்கள். வியாபார நிறுவனம் அல்ல திருக்கோயில். மக்கள் இறை வழிபாடு செய்யக்கூடிய இடங்களாக இருப்பதால், சாதாரணமாக வீடுகளுக்கு உபயோகப்படுத்தக்கூடிய மின்சாரக் கட்டணத்தையே கோயில்களுக்கும் நிர்ணயிக்க வேண்டும். அப்படிச் செலுத்துவதற்குத் தாங்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மடாலயங்கள் மூலம் இப்போது விவசாயம் செய்கின்றனர். மடாலயங்கள் மூலம் விவசாயம் செய்யும்போது, அவர்களின் விவசாய உற்பத்திப் பொருட்களை அங்கே இருக்கிற திருமடங்களுக்கும் அதேபோல அவர்கள் நடத்துகிற அறக்கட்டளைகளுக்கும்தான் கொடுக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் இலவச மின்சாரம் கொடுக்க வேண்டும். அல்லது குறைந்தபட்ச tariff-ல் அவர்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்வேன். அதற்குரிய அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல திருக்கோயில்களில் இப்போதும் கோயில்களுக்குச் சொந்தமான பல காலியிடங்கள் உள்ளன. இப்போது திருக்கோயில்கள் அன்றாடச் செலவுகளுக்கே மிகவும் கஷ்டப்படுகின்றன. அந்தக் காலி இடங்களில் கட்டடங்கள் கட்டி அவற்றை வாடகைக்கு விட்டால் அந்தத் திருக்கோயில்களைப் பராமரிப்பதற்குரிய பணம் நிச்சயமாகக் கிடைக்கும். எனவே அந்தக் காலி இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு கிராமக் கோயில்களுக்கு இலவச மின்சாரம் என்று முன்பு சொன்னார்கள். இன்னும் ஏராளமான கிராமக் கோயில்களுக்கு இந்த வசதி கிடைக்கவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அறநிலையத் துறையிலே மேல்மட்டத்திலே தமிழகம் முழுவதையும் கவனிக்க ஆணையர் இருக்கிறார். மாவட்டங்களில் இணை ஆணையர்கள் இருக்கிறார்கள். ஒரு கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்று சொன்னால், அந்த இணை ஆணையருக்கு 5 இலட்சம் ரூபாய்வரைதான் செலவு செய்ய அதிகார வரம்பு கொடுத்து இருக்கிறார்கள். மற்ற வேலைகளைச் செய்ய வேண்டுமென்றால், ஒவ்வொரு வேலைக்கும், ஒவ்வொரு முறையும் சென்னைக்கு வந்து உத்தரவு பெற்றுத்தான் செய்ய வேண்டிய சூழ்நிலை



இருக்கிறது. ஆகவே இணை ஆணையருக்கே அந்தப் பொறுப்பைக் கொடுத்தால், அந்தத் திருப்பணிகளைச் செய்வதற்கு மட்டுமல்ல, திருக்கோயில்களுக்கு சில பணிகளைச் செய்யலாம். உதாரணத்திற்கு கழிப்பிடம் கட்டுவது, ஸ்தலங்களைச் செப்பனிடுவது, இப்படி அந்தத் திருக்கோயில்களுக்கு சில பணிகளைச் செய்வதற்கு அவர்களுக்கே அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. 20 இலட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு திருக்கோயில் இருந்தால் அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்தால், இணை ஆணையரே அதற்குரிய பணத்தையும் அந்தத் திருக்கோயிலிலிருந்து எடுத்து, அந்தப் பணத்தை அந்தத் திருக்கோயிலுக்கே செலவு செய்யும் வகையில் நீங்கள் உத்தரவிட வேண்டும். காரணம் அங்கே வருமானம் வருகிறது. ஆனால் donation மூலம் செய்யுங்கள், என்று சொல்கிறீர்கள். 20 இலட்சம் ரூபாய் வரக்கூடிய திருக்கோயில்களிலே அந்தப் பணத்தை எடுத்து அந்தக் கோயிலுக்கே செலவு செய்வதில் எந்தத் தவறுமில்லை. ஆகவே, அதைச் செய்வதற்கு நீங்கள் ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

இப்போது கோவை மாவட்டத்திலே மருதமலைக் கோயில் திருப்பணி நல்லமுறையிலே நடந்து, அதிலே மறுபடியும் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. இராஜகோபுரம் கட்ட வேண்டுமென்று நினைத்தோம். எப்போது இராஜகோபுரம் கட்டப் போகிறீர்கள் என்பதையும் தாங்கள் இந்த நேரத்திலே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய பகுதியான செஞ்சேரி மலையிலே மிகப் பிரசித்தி பெற்ற பழமையான திருக்கோயில் ஒன்று இருக்கிறது. அதற்கு இன்னும்கூட நீங்கள் Committee போடவில்லை. நான் என்னுடைய காலத்திலே, மக்களுடைய உதவியோடு அந்தக் கோயிலுக்கு திருப்பணியைச் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இதுவரைகூட Committee போடவில்லை என்று சொன்னால், இதுபோன்ற பழமையான கோயில்களை எப்படிச் சீராக்க முடியும் என்பதைத் தயவுசெய்து கருத்திற்கொண்டு, அதற்கு உடனடியாக Committee போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பழனி ஆண்டவர் கோயிலைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இங்கு கொஞ்சநேரத்திலே நீங்கள் பிரசாதம் கொடுக்கப்

போகிறீர்கள். நான் அதை வரவேற்கிறேன். ஒவ்வொரு வருடமும் பிரசாதம் கொடுக்கிறீர்கள், விபூதி கொடுக்கிறீர்கள். ஆனால் அந்த முருகனுடைய திருமேனி பழுதடைந்து இருக்கிறது. அதனைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனை எங்களுடைய அருமைக்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையிலே ஒரு Committee பலமுறை ஆய்வு செய்திருக்கிறது. அந்த முருகனுடைய திருமேனியைச் செப்பனிடுவதற்கு இன்னும் எவ்வளவு காலமாகும்? அதைத் தங்கள் காலத்திலேயே செய்யப் போகிறீர்களா, இல்லையா என்பதைப்பற்றி தாங்கள் இந்த நேரத்திலே கூற வேண்டும். மக்கள் மிக மிக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற பணி அந்தப் பணி. இன்னும்கூட, அந்த மூல விக்கிரகத்தைச் சிதைக்காமல், சின்னாபின்னப்படுத்தாமல் அதற்கு ஒரு நல்ல சிற்பியை வைத்து பணிகளைச் செய்ய வேண்டும். முன்பு, ஒரு சிற்பி போயிருந்தார், ஒரு சிற்பி போதாது. அரசாங்க சிற்பி அங்கு வந்திருந்தார், அப்போது அதிர்ஷ்டவசமாக நாங்களும் போயிருந்தோம். அங்கே அந்தச் சிலையை பக்கத்திலே சென்று பார்ப்பதற்கு Committee-க்கு அதிகாரம் அளிக்கவில்லை. அது மிகவும் கொடுமையான செயல். இங்கிருந்து ஒரு Committee போகிறது. சிலையைப் பக்கத்திலே சென்று பார்க்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு அனுமதி இல்லை. ஆகவே, தாங்களே நேரடியாகச் சென்று அந்தச் சிலையைப் பார்க்க வேண்டும். ஏராளமான திறமையான சிற்பிகள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உங்களுடைய தலைமையிலே அழைத்துச் சென்று, நீங்கள் பார்த்து அந்தத் திருமேனியைச் சீர்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, பல்வேறு திருக்கோயில்களிலே பெரிய பெரிய தேர்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தத் திருத்தேர்கள் எல்லாம செப்பனிடப்படாமல், தேரோட்டம் நின்று போய் இருக்கிறது. சில கோயில்களிலே மக்கள் வருடா வருடம் அதை நல்லமுறையிலே கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக, கிராம மக்கள் எல்லாம் மீண்டும் இந்தத் தேர்கள் ஓட வேண்டுமென்று நினைக்கிறார்கள். தயவுசெய்து, பழுதுபட்டிருக்கின்ற அந்தத் திருத்தேர்களை எல்லாம் செப்பனிடுவதற்கு ஆணையிடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். சென்றமுறைகூட நான் ஒரு கேள்வியிலே கேட்டேன்.

கும்பாபிஷேகம் செய்யப்படாமல் நிறைய கோயில்கள் இருக்கின்றன. மற்ற கோயில்களில் இருக்கின்ற உபரி நிதியை எடுத்து நீங்கள் அந்தத் திருக்கோயில்களுக்குச் செலவு செய்ய வேண்டும். ஏராளமான திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. அதேபோல பழமை வாய்ந்த கோயில்கள் நிறைய இருக்கின்றன. அவற்றிற்கு எல்லாம் குடமுழுக்கு விழா செய்வதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல 20 இலட்சம் ரூபாய் ஒரு கோயிலுக்கு வருமானம் வருகிறது என்று சொன்னால், மறுபடியும் donation வசூல் செய்வதைவிட அந்தப் பணத்தை எடுத்து அங்கிருக்கிற அறங்காவலர்களைக் கொண்டு—நீங்கள் போட்ட அறங்காவலர்களை நம்பி விட்டீர்களேயானால்—விரைந்து அந்த குடமுழுக்கு விழா நடப்பதற்கு நிச்சயமாக வழி ஏற்படும்; அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய இடங்களிலே அதிகாரிகள் இல்லாமல் திருக்கோயில்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கோயில்களில் இருக்கின்ற காலியிடங்களை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்வேன்.



முற்பகல் 11-25

சில கோயில்களில் ஒரு ரூபாய் கட்டணம் வசூலிப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தக் கோயில்களிலெல்லாம் காலையிலே இரண்டு மணி நேரத்திற்கு ஒரு ரூபாய் கட்டணம் வசூலிப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா, பொய்யா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படியிருந்தால், அந்தக் கட்டண வசூலை நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோயில்களில் திருப்பணி செய்யக்கூடிய, ஊழியம் செய்யும் நிறைய ஊழியர்களுக்கு சம்பளம் போதவில்லையென்ற பெரிய குறைபாடு இருக்கிறது. அமைச்சரவர்களைக் கேட்டால், அந்தந்தக் கோயில்களிலே வருகிற வருமானத்திற்குத் தகுந்தவாறுதான் ஊதியம் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். உங்களுடைய கோணத்திலே பார்த்தால் அது நியாயமாகத் தெரிந்தாலும்கூட, இப்போது இருக்கிற விலைவாசியில், அந்தக் கோயில்களுக்கு வருமானம் இல்லையென்று சொன்னால், அவர்கள் என்ன செய்ய முடியும்? ஆகவே எல்லோருக்கும் ஒரே சீரான சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டும் போதாது. ஓதுவார் மூர்த்திகள். பெயரெல்லாம் மூர்த்திகள் என்று கௌரவமாகத்தான் சொல்கிறோம். ஓதுவார் மூர்த்திகள் பாடு படாத பாடு. இறைவன் திருநாமத்தை

காலையும், மாலையும் சொல்லி வழிபட்டுக் கொண்டிருக்கிற அந்த ஓதுவார் மூர்த்திகள் படுகின்ற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அந்த ஓதுவார் மூர்த்திகளுக்கெல்லாம் நியாயமான அளவிற்கு, வாழ்க்கையை ஓட்டக்கூடிய அளவிற்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாடகக் கலையைப் பொறுத்தவரை, சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் கொடுக்கிறோம். ஆனால் சென்ற மாதம் வரவேண்டிய அந்த ஓய்வூதியம் வரவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே உரிய நேரத்திலே அவர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்குக் காலையிலே இங்கே ஒரு குறளைச் சொன்னார்கள். எப்பொழுதுமே திருக்குறளைச் சொல்லி ஆரம்பிப்பார்கள். இன்றைக்கு 'கடவுளே என்று கூறி அழைப்பதால்,, நடக்காத காரியம், முயற்சியுடன் உழைக்கும்போது நடக்கும், வெற்றியைத் தரும்' என்று சொன்னார்கள். அதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என்றாலும்கூட இந்த மன்றத்திலே நடந்ததை ஓர் உதாரணமாகச் சொல்லி, கடவுள் அருள் இல்லாவிட்டால் நடக்காது என்பதை நான் எடுத்துக் கூறி என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசு, இங்கே எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. குமாரதாஸ் போன்றவர்களெல்லாம் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலம் பாகிஸ்தான் சிறையில் சிக்கி, சிதைந்து கொண்டிருந்த நண்பர்களை, மீனவர்களை விடுவிக்க வேண்டுமென்று சொல்லி படாத பாடு பட்டார்கள். ஆனால் கடைசியில் மலை போல உழைப்பு இருந்தாலும், கடுகளவு கருணை இறையருள் இருந்தால்தான் முடியும் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம், நேற்று Easter திருநாள். அவர்களெல்லாம் கிறிஸ்தவர்கள். Easter திருநாள் அன்றைக்கு அவர்களை விடுதலை செய்தார்கள் என்பதை இங்கே எல்லோரும் மகிழ்ச்சியோடு சொன்னார்கள். ஆகவே, இறையருள் இருந்தால்தான் நடக்கும் என்பதற்கு நான் இதை ஆணித்தரமாகக் கூற விரும்புகிறேன். உழைப்பிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என்றாலும்கூட நம்முடைய முதல்வர் அவர்கள், நம்முடைய மீன் வளத் துறை அமைச்சரவர்கள், மத்தியப் பேரரசு இவர்களெல்லாம் முயன்றும்கூட அந்த ஒன்றரை ஆண்டு காலத்திற்குப்



பின்னால் Easter திருநாள் அன்றைக்கு விடுதலை பெற்ற அந்த மீனவர்களுக்கும், அதற்காக முயற்சித்தவர்களுக்கும் நல்வாழ்த்துகளைக் கூறி எனக்கு இந்த வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்துசமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், எங்களுடைய தலைவர், தமிழ்ச் சமுதாயத்தினுடைய தலைவர், கடவுளைப் போற்றுகின்ற, தமிழைப் போற்றுகின்றவர்களுக்கெல்லாம் தமிழ்ப் பற்றை ஏற்றிய அந்தத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில், இந்த நாட்டினுடைய தலைவர்களைப் போற்றுகின்ற வகையில் தமிழ்மொழிக் காவலர்களை எல்லாம் கௌரவிக்கும் வகையிலே இப்போது ஓய்வூதியமாக கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய் வழங்கியதற்காக தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களையும் இந்த அரசையும் பாராட்டுகிறேன்.

*முற்பகல் 11-30*

சென்ற மாதம் இதே தேதியில் தமிழக முதல்வர் அவர்களால் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அந்தப் பொது விவாதத்திலே பங்கேற்றுப் பேசிய அனைத்து உறுப்பினர்களானாலும் சரி, அரசு விழாவானாலும் சரி அல்லது எந்தவொரு நிகழ்ச்சியானாலும் சரி, எங்களைப் பொறுத்தவரை எங்களுடைய முழக்கங்களெல்லாம், எங்களுடைய தலைவர் ஏழு வயதில் இளநீரை விற்கவில்லை, *16* வயதிலே *17* பிள்ளைகளையும் பெறவில்லை. ஆனால் தன்னுடைய *14* வயதில் தமிழ்ச் சமுதாயத்திற்காக தமிழ்க் கொடி ஏந்தி உலா வந்த தலைவர் ஆவார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, ஆரம்பக் காலந்தொட்டு அனைத்துக் கிராமப்புறங்களானாலும் சரி அல்லது நகர்ப்புறங்களானாலும் சரி, அவர்கள் செல்லாத இடமே இல்லை என்கிற காரணத்தினால்தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஊரகச் சாலைகளுக்கும், இணைப்புச் சாலைகளுக்கும், குடிநீருக்கும் முன்னுரிமை தந்து, இப்போது எந்த ஒரு பகுதியானாலும் சாலை வசதி இல்லை என்று சொல்லாத அளவுக்கு, அதைப்போல எந்த ஒரு கிராமம் ஆனாலும், கிராமப்புறங்களிலே தாய்மார்கள் குடிநீருக்காகப் படுகின்ற

சிரமங்களைப் போக்குகின்ற வகையில், தமிழ்நாடு முழுக்க எந்த ஒரு குக்கிராமம் ஆனாலும், 10 வீடு 15 வீடு இருந்தாலும்கூட அங்கேயும் திறந்தவெளிக் கிணறு அல்லது bore well போட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையாக முடிக்கின்ற பணிகளுக்கான நிதியை கோடிக்கணக்காக ஒதுக்கித் தந்தமைக்காக கிராமப்புற மக்களுடைய சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதைப்போலத்தான், 76 வயதிலும் 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் இந்த மக்களை எண்ணுகின்ற காரணத்தினால், இந்தச் சமுதாய மக்கள் முன்னேறுவதற்காகப் பாடுபடுகிற தலைவர் அவர். வரலாறாக வாழ்கின்ற எங்களுடைய தலைவர் வேலியைப் பார்த்ததில்லை; ஆனால் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாய மக்களுடைய வேலியாக, எந்தத் தரப்பு மக்களுக்கு ஆபத்து என்றாலும் அவர்களுக்கு வேலியாக இருக்கின்ற தலைவர் அவர். இந்த நாட்டு மக்கள் முன்னேறுவதற்கு, இந்த நாட்டிலே இருக்கின்ற அனைத்து தரப்பட்ட மக்களும் முன்னேறுவதற்காகப் பாடுபடுகிற முதலமைச்சர் நம் முதலமைச்சர். உதாரணத்திற்கு 2050ஆம் ஆண்டு குடிநீர்த் தட்டுப்பாடு வரும் என்று வைத்துக்கொள்வோம். அந்த உணர்வை இப்போதே மனதில் வைத்துக்கொண்டு பாடுபடுகின்ற தலைவர் உலகத்திலேயோ அல்லது இந்தியாவிலேயோ எந்த ஒரு மாநிலத்திலாவது தமிழக முதல்வரைப்போல உண்டா என்கின்ற அளவிற்கு இப்போது பணியாற்றிக்கொண்டிருக்கின்ற தலைவர் நம் முதல்வர். உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, இப்போது பழனி நகரைப் பொறுத்தவரை, 11 கோடி ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கி பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதைத் தொடங்கியவர் தமிழகத்தினுடைய முதல்வர். அந்தப் பொறுப்பைக் கையிலே வைத்திருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூன்று முறை அந்த வேலை நடப்பதைப் பார்வையிட்டார்கள். தொடர்ந்து அவர்கள் பார்வையிடுகின்ற காரணத்தினால், அந்தப் பணிகள் நிறைவுறுகிற தருவாயில் இருக்கிற காரணத்தினால், முதல்வருக்கு நன்றி சொல்வதற்காக இதைச் சொல்கிறேன்.

இப்போது எப்படி mineral water, சிறுவாணி water எல்லாம் வருகிறதோ, அதைவிடச் சிறப்பான முறையிலே அந்தப் பணிகள்



50 ஆண்டு காலத்திற்கு, 70 ஆண்டு காலத்திற்கு பழனி நகரைப் பொறுத்தவரை குடிநீர்த் தட்டுப்பாடு வராத அளவிற்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதைப்போல, இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரை, அத்துறைக்குப் பொறுப்பேற்று இருக்கிற அமைச்சர் அவர்கள் பலமுறை பழனி கோயிலுக்கு வந்திருக்கிறார்கள். இன்றைக்குக்கூட அனைத்து உறுப்பினர்களுக்கும் பழனி கோயில் பஞ்சாமிர்தம்தான் வழங்கப்பட்டிருக்கிறது. பல்வேறு பணிகளையும் அமைச்சர் மிகச் சிறப்பாகப் பழனியிலே செய்திருக்கிறார்.

தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தவரை தமிழ் ஆய்ந்த தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு, தமிழுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற ஓர் அமைச்சரை நியமித்ததன் காரணமாக, தமிழுக்கும், தமிழ் மொழிக்கும் இப்போதுகூட வேண்டா வெறுப்பாக என்ன என்னமோ நடைபெற்றாலும்கூட, தமிழுக்கு முன்னுரிமை தருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்து அறநிலையத் துறையை கையிலே வைத்திருப்பதால்தான், கோயில் சொத்துகளைக் கொள்ளையடிப்பதைத் தடுக்கின்ற வகையிலும், கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் உள்ள நிலங்களை மீட்கின்ற வகையிலும் செயல்படுகின்றது இந்த அரசு. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-35*

இந்தியாவிலே உள்ள எல்லா மாநிலங்களிலே இருந்தும் பழனிப் பகுதிக்கு முருகனை தரிசிக்க பக்தர்கள் வருகின்றனர். இன்னும் சொல்லப்போனால் சிங்கப்பூர், மலேசியா போன்ற உலகத்தின் பல்வேறு நாடுகளிலேயிருந்தெல்லாம் மிகச் சிறப்பான அருள்மிகு பழனி தண்டாயுதபாணியை தரிசிக்க அந்தத் திருக்கோயிலுக்கு வருகின்றனர்; (மணியடிக்கப்பெற்றது) இன்னும் சொல்லப்போனால், ஒரு கால பூசைகூட இந்த தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பழனி கோயில் நிதியிலிருந்துதான் நடைபெறுகின்றது; ஆகவே, அந்த அளவுக்கு செயல்படுகின்ற அமைச்சரையும், அரசையும் பாராட்டுகிறேன். தொடர்ந்து பழனிக்கு பக்தர்கள் அதிகமாக வருகின்ற காரணத்தினாலும், வளர்ந்து வருகின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தினாலும், எங்களுடைய கோரிக்கையான பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தித்

தர வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருவதன் அடிப்படையில், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், தமிழக முதலமைச்சர் அவர்களும் கருணை உள்ளத்தோடு அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு பரிசீலித்து—ஏற்கெனவே முன்னுதாரணம் இருக்கின்றது; திருச்செந்தூர் கோயிலில், அந்தக் கோயில் நிதியிலிருந்து அங்கே குடிநீருக்காகவும், பேருந்து வசதிகள் போன்ற பல்வேறு வசதிகளுக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டதைப்போல—அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிதியிலிருந்து, அறநிலையத் துறை நிதியிலிருந்து நிதி ஒதுக்கி பழனி பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தித் தர வேண்டும்.

அதைப்போல, விழாக் காலங்களிலேயும் சரி, திருவிழாக் காலங்களிலேயும் சரி, தினசரி குறைந்தபட்சம் 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை பக்தர்கள் வந்து செல்கின்ற காரணத்தால் எப்படி உள்ளாட்சித் துறை மூலம் குடிநீர் பழனி நகரத்திற்கு வருகிறதோ, அதுபோல ஒரு மேல்நிலைத் தொட்டி கோயிலுக்காகத் தனியாகக் கட்டி, குடிநீர் வசதியையும் செய்து தர வேண்டும். அதுபற்றி கலந்தாலோசித்து தமிழ்த்தாயின் தலைமகன் தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய கடைசிப் பிள்ளையான, கடைக்கோடியில் இருக்கின்ற எனக்கு இதன் மூலம் சிறப்புச் சேர்க்கின்ற வகையில் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தித் தருவதற்கும் தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசி மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் இன்று அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, அந்தத் தொகுதி மக்களின் சார்பாக வேண்டுகோளாக வைத்து, இந்த அளவிற்கு வாய்ப்பு கொடுத்த பேரவையின் துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, ஏற்கெனவே அவர்கள் பழனி ஆலயத்தின் கூட்டத் தீர்மானத்தின்படி 1½ கோடி ரூபாயை பேருந்து நிலையத்திற்கு அளிப்பதாக உறுதி அளித்து இருக்கிறார்கள். ஆனால், நகராட்சி மன்றம் அதற்குத் தகுந்த அக்கறை



எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சி மன்றத்தை அணுகி—அங்கு இடமும் தேர்வு செய்யப்பட்டு விட்டது— தீர்மானம் போட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளச் சொன்னால், விரைவாக இந்த ஆண்டே நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அதைப்போல எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நகராட்சி மன்றத்திலிருந்து தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. நானே அனைத்து உறுப்பினர்களுடன், நகராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் பேசி அதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

*முற்பகல் 11-40*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மற்றும் தமிழ் வளர்ச்சி-பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் 1996ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே அறநிலையத் துறையின் மூலமாக, பல்வேறு சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டமன்றத்திலே இடையிடையே பல கருத்துகள் பேசப்படுகின்ற காரணத்தாலே அதை நான் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியத்திலே இருக்கிறேன். சாகுபடி செய்து கொண்டிருக்கிற குத்தகை விவசாயிகள், அதேபோல மனைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிற ஏழையெளிய மக்கள், இவர்களுக்கு கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பது எந்த வகையிலுமே பொருத்தமாக இருக்காது. சென்ற வாரம் நான் இதை ஒரு கேள்வியின் மூலமாகக் கேட்டபோது, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள்.

சாதாரணமாக வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்கள்கூட்: அந்த மனைப் பகுதியை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் பள்ளமாக இருக்கிற பகுதியை மேடிட்டு, சமன் செய்து, அதிலே 50 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வருபவர்கள், இப்போது மனை வாடகை என்ற பெயராலே, சதுர அடிக் கணக்கிலே வாடகை நிர்ணயிக்கப்படுகிற காரணத்தாலே, அவர்களுக்கு மிகப் பெரிய சுமை ஏற்பட்டிருக்கிறது. 10 ரூபாய் அவர்கள் கட்டி வந்தார்கள், இப்போது 2,480 ரூபாய் வரையிலும் ஒருவர் கட்ட வேண்டிய அவசியமிருக்கிறது. இதை நான் கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இதுவரையிலும் ஏமாற்றினார்கள், இப்போது அரசு விழித்துக்கொண்டிருக்கிறது' என்று சொன்னார்கள். அரசு விழித்துக்கொண்டு செயல்படுவதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், சாதாரண ஏழையெளிய மக்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிற மக்கள் குடியிருப்புக்குப் பயன்படுத்துகிற அந்த மனைக்கு வாடகையை இவ்வளவு உயர்த்தியிருப்பது என்பது நியாயம்தானா? இதைப் பரிசீலிக்க வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி, ஒரு சட்டத் திருத்தமாகவே கொண்டுவந்து, இந்த வாடகை நிர்ணயத்தினை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், ஆக்கிரமிப்புதாரர்கள் மறுக்கிறார்கள் என்று காரணம் காட்டி, அவர்களை விலக்கிவிடுவது அல்லது வெளியேற்றி விடுவது என்கிற நிலையில்கூட அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆகவே, இந்த முறை என்பது சாதாரண ஏழையெளிய மக்களைப் பாதிக்கக்கூடிய முறையாக இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் கூறுகின்ற இந்தக் கருத்து, சில முறையீடுகளாகவே எங்களுக்கு வந்திருக்கின்றன. திடீரென்று இந்த அளவுக்கு வாடகை உயர்த்தப்பட்டதால், ஆலயங்களுக்குச் சொந்தமான வீடுகள் அல்லது மனைகள், இவைகளுக்கு திடீரென்று பல மடங்கு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது; எங்களால் கட்ட இயலவில்லையென்று தொடர்ந்து பல முறையீடுகள் வந்திருக்கின்றன. இன்று காலையிலேகூட ஒரு முறையீடு, 900 ரூபாய் என்று இருந்த வாடகை 9,000 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது என்ற அளவிலே, அதனால் ஏற்படக்கூடிய சிரமங்களைச் சொல்லி, விரிவாக எழுதி என்னிடத்திலே



தரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் அறநிலையத் துறை அமைச்சரோடு கலந்து பேசியிருக்கிறேன். இதிலே ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டும்; அதற்காக, அதைப் பரிசீலிப்பதற்காக இப்போது எடுக்கப்பட்ட இந்த முடிவு அல்லது ஆணை நிறுத்திவைக்கப்படுகிறது. பிறகு யோசித்து, அதற்குப் பிறகுதான் அந்த ஆணை பிறப்பிக்கப்படும். அதுவரையிலே அதை வசூலிக்க வேண்டாமென்று துறைக்குக் கூறப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பல செய்திகள் வந்திருக்கின்றன. திருத்துறைப்பூண்டி நகரத்திலிருந்துகூட முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் மனு வந்திருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குத்தகைதாரர்கள் பிரச்சினை, ஓர் ஆழமான உணர்வுக்குரிய பிரச்சினையாக இருக்கிறது. கோவில், மடம், தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்து கொண்டிருக்கக்கூடிய குத்தகைதாரர்கள் கிட்டத்தட்ட லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். கோவில், மடம் நிலங்களையெல்லாம், உழுபவனுக்கே சொந்தமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் 2 ஆண்டுகளாக வைத்துப் பேசுகிறேன். சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கோரிக்கை மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையாகவும் இருக்கிறது. அதைப் பற்றி பரிசீலித்து, உகந்த முறையிலே முடிவெடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த முடிவை மறுபரிசீலனை செய்வதற்குரிய முயற்சிகள் .இல்லை.

அண்மையிலே சட்டமன்றத்திலே கோயில், மடம், தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் உழுகிற விவசாயிகளுக்குச் சொந்தமாக்குவோம் என்று சொன்னீர்களே, முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்யவில்லையே என்று நான் கேள்வி கேட்டபோது, 'விவசாயிகளினுடைய கூட்டத்தினைக் கூட்டினேன், அதிலே யாருமே இதுகுறித்துப் பேசவில்லை, நான் என்ன செய்வது?', என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகளினுடைய கடன் பிரச்சினைக்காக

அந்தக் கூட்டத்தினை நீங்கள் கூட்டினீர்கள், எங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால், இந்தக் கூட்டத்தினைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் மடாதிபதிகளை, ஆன்மீகவாதிகளை, அரசியல்வாதிகளை, நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளையெல்லாம் ஒன்றிணைத்துக் கூட்டிப் பேசி அதிலே ஒரு முடிவெடுப்போம் என்றுதான் அறிவித்தார்கள். அந்த முடிவின் அடிப்படையில் மடாதிபதிகளை, ஆன்மீகவாதிகளை, அரசியல்வாதிகளை, விவசாயிகளையெல்லாம் அழைத்துப் பேசி, கோயில் நிலங்களை உழுகிற விவசாயிகளுக்கே சொந்தமாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா? இதைப்பற்றிய கருத்து இப்போது பேசப்படவில்லையே. இப்போது இருக்கிற சூழ்நிலையின் காரணத்தால் தவிர்க்கப்படுகிறதா அல்லது ஏற்றுக்கொண்ட கொள்கை நிலையை உறுதியாகச் செயல்படுத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள மறுப்பது ஏன் என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த கொள்கை நிலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான சிந்தனை உள்ளவர்கள். இதிலே ஏதோ மாறுபட்டுவிட்டதாகவோ அல்லது கொள்கையை விட்டுவிட்டதாகவோ கருதி கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் பேச மாட்டோம். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை ஏதோ தடையாக இருக்கிறது என்பதுபோலத்தான் எங்களுக்குத் தோன்றுகிறது. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை, சூழ்நிலையைப் பார்ப்பது என்பதுகூட நம்முடைய அடிப்படையான கொள்கை நிலையிலிருந்து மாறுபட்டுவிடுவோமோ என்ற அச்சம் வெளியிலே தோன்றுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அச்சத்தைப் போக்கி விவசாயிகளைப் பாதுகாத்து உழுகிற விவசாயிகளுக்கு நிலத்தை சொந்தமாக்குவதற்கான முயற்சிகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதன்மூலம் பல காரியங்களைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

*முற்பகல் 11-45*

நம்முடைய மாண்புமிகு பழனி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சற்று முன்பு ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். பல கோடிக்கணக்கான ரூபாய் பழனி கோயிலிலிருந்து வருமானமாக வருகிறது. அந்தக் கோயில் வருமானத்திலிருந்து பல கோடி ரூபாயை வைப்பு நிதியாக வைத்து, அதிலிருந்து சம்பள பாக்கியைச் செலுத்துவதாக நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச்சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே,



பழனி சாமிக்கு வருமானம் வருகிறது. அந்தக் கோயிலுக்கு இருக்கிற நிலம் குறைவு. ஆனால் வேதாரண்யத்திலே 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தை வைத்திருக்கிற அந்த சாமிக்கு வருமானம் இல்லை. வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிற, காரணம் இருக்கிற வேதாரண்யம் கோயிலுக்கு வருமானம் இல்லை. ஆனால் நிலம் குறைவாக உள்ள பழனி ஆண்டவருக்கு வருமானம் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்த வருமானத்தை வைத்து பல்வேறு பணிகளைச் செய்கிறபோது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் ஒன்றைச் சொல்கிறோம். நிலம் என்பது வெறும் பொருளாக இருக்கிறதே தவிர, அதன்மூலமாக பயன்பாட்டிற்குரிய வழிவகைகள் இல்லை. வேதாரண்யம் கோயிலிலே ஆறு கால பூஜை நடத்த வேண்டுமென்றால் அதை நடத்த முடியவில்லை. அப்படி ஒரு பாதிப்பு இருக்கிறது. ஒரு கால பூஜையைக் கூட நிறைவேற்ற முடியாத பாதிப்பு இருக்கிறது.

நாம் சொல்லுகிற திராவிட இயக்கத்தினுடைய கொள்கை வழி நின்றோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கை வழி நின்றோ தெய்வ மறுப்பு அல்லது வேறுவிதமாக வழிபாட்டு மறுப்பு என்ற நிலையிலிருந்து நாம் பார்க்க வேண்டியதில்லை. நம்முடைய கொள்கை தனியாக இருக்கட்டும். மற்றவர்களுடைய கொள்கையை ஏற்று நாம் செயல்படுத்துவோம். அப்படி ஆன்மீகவாதிகள், பக்தர்கள் விரும்புவதற்கு ஏற்றாற்போல் நாம் செய்ய வேண்டுமானால், நாங்கள் சொல்கிற இந்தக் கோரிக்கையை நிறைவேற்றினால்தான் அதை நடத்த முடியும். சுமாராக ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தாலே, இப்போது வருகிற இந்த நிலத்தினுடைய வருவாய் குறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், கல்வி நிலையங்களுக்கு, சமத்துவபுரத்திற்கு, மருத்துவமனைக்கு, மின்சார நிலையத்திற்கு நிலம் ஒப்படைக்கப்பட்டது வெறும் 910 ஏக்கர்தான். அதிலிருந்து கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. இதை வைப்பு நிதியாக வைத்து, அதிலிருந்து வருகிற வருமானத்தைக்கொண்டு பல காரியங்களைச் செய்வதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள்.

குறிப்பிட்ட அளவிலே இருக்கிற நிலத்திலிருந்து இவ்வளவு வருமானம் வருகிறபோது எல்லா நிலங்களையும், பயன்படுத்தினால் நாம் சொல்கிற இந்தப் பாணியிலே செய்வதற்கான முயற்சிகளை எடுத்தால்— கிட்டத்தட்ட 1000 கோடி ரூபாய் வருமானம் வருவதற்குரிய வாய்ப்பிருக்கிறது. 1000 கோடி ரூபாய் வருமானால், கோயில் நிர்வாகம் சிறப்பாக அமையும். பக்தர்களுடைய மனம் கோணாமல் அவர்களுடைய

மகிழ்ச்சிக்கு ஏற்றவகையில் தெய்வ வழிபாடு நடக்கும். விவசாயிகள் மகிழ்ச்சியாக தங்களுடைய வாழ்க்கையை நடத்தி, குத்தகையை செலுத்துவதற்குரிய முறையில் பிரச்சினை இல்லாத வகையிலே, நில உடைமையாளர்களாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதை நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இதற்கான கூட்டத்தைக் கூட்ட வேண்டும். ஒரே முழுக்கில் மண் எடுக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. இதை ஆலோசனை செய்வதற்குரிய முறையில் நீங்கள் கூட்டத்தைக் கூட்டுங்கள். அதில் எப்படிப்பட்ட கருத்து வருகிறது என்பதைப் பரிசீலித்து அதற்கான முடிவுகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* பேசுவதற்கு கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை எடுத்து பணிகளைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும்.

அதுபோல பல்வேறு கருத்துகள் வந்திருக்கின்றன. நேற்றுகூட நீதிமன்றத்திலிருந்து ஒரு தீர்ப்பு, தமிழ் வழிக் கல்விக்கே ஒரு சவாலாகததான் வந்திருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பை விமர்சனம் செய்வது என்பது சரியில்லை என்று சொன்னாலும்கூட, நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின்மூலமாக நாங்கள் இதை முற்றிலுமாக எதிர்க்கிறோம். ஒரு சிறப்புக்குரிய நம்முடைய தாய் மொழியைப் படிப்பதற்கே தடை வருகிறது என்று சொன்னால், இது எப்படி வேடிக்கையாகவும், விநோதமாகவும் இருக்கிறது. இதற்குரிய முயற்சிகளை ஆழ்ந்த சிந்தனையோடுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசும் சிறப்பாக செய்திருக்கிறது. ஆனால் இதை வெற்றியாக வக்கீல்கள் எல்லாம் விழாக் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. ஆகவே, மேல்முறையீடு செய்து எப்படியாவது இந்தத் தமிழ்வழிக் கல்வியை உறுதி செய்வதற்கான முயற்சிகளை நம்முடைய மாநில அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதை அலட்சியமாக நாம் விட்டுவிட முடியாது.

அதுபோல அர்ச்சகர்கள் பிரச்சினை. அது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் சட்டமாகக் கொண்டுவரப்பட்டது. உங்களுடைய சிந்தனையிலிருந்து சிறப்புக்குரிய அந்த காரியத்தை மேற்கொண்டீர்கள். அதுவும் இப்போது தடைப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்திற்கு முறையீடு செய்து அவர்கள் சில வழிமுறைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அந்த வழிமுறைகள்மீது சில காரியங்களை நடவடிக்கைகளைச் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அர்ச்சகர்களாக அனைத்து சாதியினரும் வருவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தி, அவர்களுக்குரிய பயிற்சிக் கல்லூரி அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டாலும் கூட, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலே அதை நடைமுறை வழிமுறையாக ஏற்றுதான் அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். ஆகவே, அதை மீண்டும் புனரமைத்து சிறப்பாகச் செயல்படுத்தி, அனைத்து சாதியினரும், அர்ச்சகர்களாக வருவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான முன் முயற்சிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் இங்கு மேற்கொள்ள முடியும். அதற்கான திட்டத்தைத் தீட்டி சட்டத்தைப் புதுப்பித்து உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் *11-50*

அடுத்து, திருக்கோயில் பணியாளர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதுபற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வருமானம் இல்லாத காரணத்தாலே போதுமான அளவுக்கு அவர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியவில்லை. அவர்கள் அரசு ஊழியர்களுக்குரிய சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள். எதிர்பார்ப்பது என்பது இயல்பான ஒன்றுதான் என்றால்கூட அதை வழங்குவதற்குரிய முறையிலே இந்தத் துறைக்கு அதற்கான வாய்ப்பே இல்லை. நான் பழைய விஷயங்களைத் திரும்ப திரும்ப சொல்ல விரும்பவில்லை. அப்படி அந்த ஊழியர்களுக்குரிய ஊதியம், மற்ற காரியங்களை எல்லாம் செய்வதற்கான வாய்ப்பு என்பது அந்தக் கொள்கை முடிவுகளின் மூலமாகத்தான் இருக்கிறது. அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குத்தகை விவசாயிகள். நாம் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டேயிருக்கிறோம். வெள்ளத்தால், வறட்சியால், புயலால் மாறி மாறி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நிலத்தைவிட்டு வெளியேற்றுவதற்கான நடவடிக்கை Revenue Court மூலமாக நடைபெறுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் 1996ஆம்

ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, விவசாயிகள் என்ற முறையிலே, நானும், பழனிச்சாமி அவர்களும் மற்றவர்களும் சந்தித்து உங்களிடம் கோரிக்கை வைத்தோம். நீங்கள் அதை ஒத்திவைத்து, உதவி செய்தீர்கள்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான கருத்தைச் சொல்லக் கூடாது. குத்தகை நிலுவையை வசூல் செய்வதற்கு வருவாய் நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. வெளியேற்றுவதற்கு அல்ல.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை. அதை நல்ல தமிழில் சொல்கிறார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். ஆனால் Revenue Court என்று சொன்னாலே, அது விவசாயிகளுக்கு விரோதமான Court தான். அதை எங்களுடைய பாணியில் சொல்ல வேண்டுமானால், விவசாயிகளை வெளியேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு Court அது. Revenue Court-ஏ திறக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய அழுத்தமான கருத்து. அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற ஆண்டு என்பதை ஆட்சியே ஏற்றுக் கொண்டிருக்கிறது. விவசாயிகளுடைய பிரச்சினையும், குத்தகை விவசாயிகளுடைய பிரச்சினையும் அதுதான். இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற ஆண்டுகளுக்குரிய குத்தகையை நாம் ஒத்தி வைக்கிறோம். ஒத்தி வைக்கிறோம் என்றாலே, அதைச் செயல்படுத்த முடியாது. இயற்கை பாதிப்பு இருக்கிறது என்று ஏற்றுக்கொண்ட காரணத்தாலேதான் அதை ஒத்தி வைக்கிறோம். அப்போது, அதே ஆண்டுக்குரிய வகையிலே, அவர்களை நிர்பந்தப்படுத்தி, நிலத்தை விட்டு வெளியேற்றுவதற்கான முயற்சிகளைக் கண்டிப்பாக மேற்கொள்ளக்கூடாது. இதையெல்லாம் செய்வதன் மூலமாக என்ன பிரச்சினை இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே ரொம்பக் கடுமையாக இருக்கிறீர்கள். இதில் கருத்து வருவதும், பத்திரிகைச் செய்தி வருவதும் கூட உண்டு. அதை, உங்களுடைய நிர்வாகத்தை நீங்கள் சரியாக செய்வதற்குரிய முயற்சி என்று கருதினால்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைகளுக்கும், கோட்பாட்டிற்கும் அது கண்டிப்பாக எதிரானதாக இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன். இதை எதிரான கருத்தாக கீழே இருப்பவர்கள் கருதுவார்கள். கொள்கை நிலை என்பது வேறு, ஆட்சி என்பது வேறு, பொறுப்பு என்பது வேறு. ஆனால் அதில் அழுத்தமாக நீங்கள் கருத்தைச் சொல்கின்றபோது விவசாயிகளுக்கு எதிராக, அந்த மனைகளில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழை எளியவர்களுக்கு எதிரான

223309



கருத்தாக அது வர்ணிக்கப்படுகிறது, அப்படி கருதப்படுகிறது. ஆகவே, விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான முயற்[illegible]. இ[illegible] ஆட்சி எடுக்க வேண்டும். மனைகளிலே குடியிருக்கின்ற ஏழை எளியவர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் கொண்டிருக்கிற கொள்கையைத் திரும்ப நாம் பரிசீலிக்க வேண்டும். அதற்குரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிற அரசு, அதற்குரிய தலைவர் முதல்வர் இருக்கிறார். ஆகவே பரிசீலிக்க வேண்டும். கோயில் மட நிலங்களைப்பற்றி திரும்பவும் ஒரு நல்ல முடிவை எடுத்து, தமிழகத்திலே ஆன்மீகவாதிகளும் மகிழ்ச்சி அடையத் தக்க வகையிலே, ஏழை எளியவர்களும் பாதிக்காத வகையிலே, ஒரு நல்ல கொள்கை முடிவு எடுத்து, அறிவித்து, நிறைவேற்றச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆற்றலால், அறிவுத் திறனால், தன்னலமற்ற பணியினால் மக்கள் நெஞ்சில் குடிகொண்டிருக்கின்ற தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்து சமய-அறக்கட்டளைகள் மற்றும் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு மானியக் கோரிக்கைகள்மீது எனது கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

இந்து சமய-அறநிலையங்களின் பராமரிப்பு நிர்வாகமும் சிறப்பாக நடைபெற்று வருகின்ற இந்த நேரத்தில், நான் என்னுடைய கோரிக்கையாக முதலாவதாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திருக்கோயில்களின் சொத்துகளுக்கு நியாயமான வாடகை நிர்ணயிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் அண்மையில் அரசாணையின் மூலமாக வகுத்து அளிக்கப்பட்டுள்ளது. இதில் கடைகளுக்கு 0.6 சதவிகிதமும், கடைகள் கட்ட காலி மனைகளுக்கு 0.30 சதவிகிதமும், வீடுகளுக்கு 0.20 சதவிகிதமும், வீடு கட்ட காலி மனைகளுக்கு 0.20 சதவிகிதமும், கல்வி நிறுவனங்களுக்கு 0.10 சதவிகிதமும் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே இருந்த குத்தகைத் தொகையைவிட பல மடங்கு உயர்வாக உள்ளது. ஏழை எளிய குடிசை வீடுகளில் வசிப்பவர்களுக்கு தாங்க முடியாத அளவுக்கு இந்த குத்தகை உயர்வு, வாடகை உயர்வு இந்த அரசாணையின் மூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டாண்டு

காலமாக, ஏழை எளிய மக்கள் குடியிருந்துவரும் கோயிலுக்குச் சொந்தமான வீட்டு மனைகளுக்கு, அண்மையில் வணிக மதிப்பீடு செய்து, மனை வாடகை அல்லது மனைக் குத்தகை நிர்ணயிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவினால், பல ஏழை எளிய மக்கள், பல மடங்கு குத்தகைத் தொகையை, வாடகைத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களின் காவலராக உள்ள...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த உத்தரவு தற்போது நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக சற்று முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

*முற்பகல் 11-55*

**திரு. செ. இராமலிங்கம்:** அந்த உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டாலும், என்னுடைய தாழ்மையான கோரிக்கை, அதை அடியோடு ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே இலட்சக்கணக்கான ஏழை எளியவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் குடியிருப்பு மனைப்பட்டா வழங்கியதன் மூலமாக குடிசையிலே வசிக்கக்கூடிய அவர்கள் எல்லாம் இப்போது பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த அரசாணையை முழுமையாகத் திரும்பப்பெற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு, வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் சாகுபடி செய்கின்ற குத்தகை சாகுபடியாளர்கள் மின் இணைப்பு கோருகின்ற நேரத்தில், அவர்கள் ஏற்கெனவே குத்தகை சாகுபடி பாக்கி இல்லாதவர்களாக இருக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனை உள்ளது. அப்படி பாக்கி இல்லாதவர்கள் மின் இணைப்பு கோருகின்ற நேரத்தில், மின் இணைப்புக்கான Deposit தொகை கட்டுகின்ற நேரத்தில், திருக்கோயிலின் பெயரிலேயே அந்தக் காப்புத் தொகையைக் கட்ட வேண்டுமென்று குறிப்பிடப்படுகிறது. தயவுசெய்து இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி கட்டப்படுகின்ற Deposit தொகையை பிறகு திரும்பப் பெற வேண்டுமானால் கோயில் நிர்வாக அதிகாரிகள்தான் பெறமுடியுமே தவிர பணத்தைக் கட்டியவர் பெறமுடியாது. அதேநேரத்தில் அந்த மின் கட்டணத்தைச் செலுத்துபவர்கள்கூட கோயில் நிர்வாகத்தவர்களாகத்தான் இருக்க



முடியுமே தவிர, தனிப்பட்ட குத்தகையாளர்கள் மின் கட்டணம் செலுத்துபவர்களாக இருக்க முடியாது. உதாரணத்திற்கு, இப்போது சுயநிதித் திட்டத்தின் மூலமாக மின் இணைப்பு கோருகின்ற நேரத்தில் ஏறத்தாழ 10 ஆயிரம் ரூபாய் செலுத்துபவர்கள் எப்படி கோயிலின் பெயரில் செலுத்த முடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இப்போது பல்வேறு நல்ல காரியங்களுக்காக திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களை ஆர்ஜிதம் செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில்கூட மாண்புமிகு முதல்வர் அவர்களின் சமத்துவபுர திட்டத்திற்கு திருப்பனந்தாளில் அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 7 ஏக்கர் 39 சென்ட் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, அதன் அருகாமையில் இருக்கின்ற அருட்திரு திருப்பனந்தாள் காசி மடத்திற்குச் சொந்தமான சுமார் 3 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்யவும் உரிய ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில், திருவிடைமருதூர் ஒன்றியத்தைச் சார்ந்த நாச்சியார்கோயில் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை வெண்கல வார்ப்படத் தொழிலாளர் சேவை தொழில் கூட்டுறவு நிறுவனத்திற்கு விலைக்கு வழங்குவதற்கு அனுமதி கேட்கப்பட்டுள்ளது. இதற்கு உரிய முறையில் நிர்வாகக் குழுவும், இந்து சமய அறநிலையத் துறையும் பரிந்துரை செய்துள்ளன. நாச்சியார்கோயிலைப் பொறுத்தவரையில் அங்கு தயாரிக்கின்ற குத்துவிளக்கு இப்போது சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது. கூட்டுறவு நிறுவனமான வெண்கல வார்ப்பட தொழிற் சங்கத்திற்கு இந்த நிலம் வழங்கப்படுவதற்கு, அவர்கள் ஆர்ஜிதம் செய்து கொள்வதற்கு துறை அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது ஏராளமான திருக்கோயில்களுக்காக உள்ளாட்சித் துறையின் மூலமாக பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் அருள்மிகு நாகநாதசாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சாலைகள் மாண்புமிகு உள்ளாட்சித்

துறை அமைச்சர் அவர்களுடைய பெருமுயற்சியினால் 10 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் concrete சாலைகளாகப் போடப்பட்டுள்ளன. அதேபோன்று அருள்மிகு உப்பலியப்பன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சாலைகளை concrete சாலைகளாகப் போடுவதற்கு சுமார் 12 லட்சம் ரூபாய் உள்ளாட்சித் துறையினால் வழங்கப்பட்டிருக்கிறது. குத்தாலம் தொகுதியில் இருக்கின்ற திருமணஞ்சேரி கோயிலுக்கு ஏறத்தாழ 30 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவி வழங்கப்பட்டு, சோடியம் விளக்கு, தார்ச் சாலைகள், கழிப்பிட வசதி, சமுதாயக் கூடம் போன்ற பல்வேறு உதவிகளை உள்ளாட்சித் துறையின் மூலமாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்து தந்திருக்கிறார்கள். எனவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12.00

அடுத்து, இப்போது பல்வேறு திருமடங்களால் நிர்வகிக்கப்படக்கூடிய கோவில்கள் போதுமான வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் கஞ்சனூர் என்கிற ஊரில் கேது ஸ்தலம் இருக்கிறது. இது மதுரை மடாதிபதி அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. அங்கே தண்ணீர் வசதி கிடையாது. கழிப்பிட வசதிகூடக் கிடையாது. அங்கேயிருக்கின்ற உண்டியல் நிரம்புகிறதா என்று பார்க்கிறார்களே தவிர, அங்கே வருகிற பக்தர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதில் அவர்கள் எந்தக் கவனமும் செலுத்துவது கிடையாது. அதேநேரத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் அண்மையில் மீட்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், குறிப்பாக, திருத்துறைப்பூண்டியில் 621 ஏக்கர், பேரூரில் 250 ஏக்கர், ஆளவந்தார் அறக்கட்டளைக்கு ரூ.300 கோடி பெறுமானமுள்ள சொத்துகள், திருவட்டீஸ்வரன் கோவிலுக்கு ரூ.100 கோடி பெறுமானமுள்ள சொத்துகள் என்று தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் இப்போது கோயில்களுக்குச் சொந்தமான சொத்துகள் மீட்கப்பட்டிருக்கின்றன. அதேநேரத்தில் 1-7-1999 முதல் வருவாய் நீதிமன்றங்கள் கோவில்களுக்குச் சாதகமாக 13,500 வழக்குளை முடித்திருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வருவாய் நீதிமன்றங்கள் மூலமாக ஏழையெளிய விவசாயிகள் பல இடங்களிலே வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பல திருக்கோயில்கள் மூலமாக, செலுத்தப்பட்ட குத்தகைகளுக்கு கடந்த காலத்தில் முறையான ரசீதுகள் இருந்தாலும்கூட, அவர்களெல்லாம்



வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்த வருவாய் நீதிமன்றங்களையே சிலகாலம் ஒத்திவைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்கள் அறங்காவலர்கள் நியமனத்தில் கட்சிப் பாகுபாடு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதியிலேயே கட்சிப் பாகுபாடு இன்றி, அருள்மிகு உப்பிலியப்பன் கோவில் அறங்காவலர் நியமனக் குழுத் தலைவராக, இப்போது திரு. வெங்கடராம அய்யர் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் ஒரு தனியார் வங்கியில் பொது மேலாளராக இருக்கக்கூடியவர். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் கிடையாது. இப்படி திருக்கோயில்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மட்டுமே அறங்காவலர்களாக இந்த ஆட்சியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், பல திருக்கோயில்களுக்கு இன்னும் அறங்காவலர்கள் நியமிக்கப்படவில்லை. தமிழகத்தில் ஏறத்தாழ 34,284 திருக்கோயில்கள் இருந்தாலும், இதுவரை 10,679 திருக்கோயில்களுக்கு மட்டுமே அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எஞ்சியுள்ள 23,605 திருக்கோயில்களுக்கும் உடனடியாக அறங்காவலர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்கள் நீண்டநெடுங்காலமாக தற்காலிகப் பணியாளர்களாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருவையாறு தமிழ் இசை மன்றம், கடந்த 30 ஆண்டு காலமாக மிகச் சிறப்பாக அங்கே தமிழ் இசையைப் பரப்பி வருகிறது. 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தத் தமிழ் இசை மன்றத்திற்கு மாண்புமிகு இந்து சமய-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்கூட வருகைதந்து, ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய செயல் திட்டத்திற்கேற்ப மிகச் சிறப்பாக அந்தத் தமிழ் இசைச் சங்கம் அங்கே இயங்கிக்கொண்டிருக்கிறது. தமிழ் இசைப் பணியே தலையாய பெரும் பணி என்ற உயர்ந்த நோக்கோடு அங்கே ஆர்வலர்களாலும், ஆன்றோர்களாலும் அந்தத் தமிழ் இசை மன்றம் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சிறிய அளவில் தோன்றிய இம்மன்றம் 30 ஆண்டுகளில் சிறந்த தமிழ் இசை மன்றமாக அங்கே வளர்ச்சி அடைந்துள்ளது. திருவையாறில் நடைபெறும் தியாகப் பிரம்ம

ஆராதனை விழாவில் கர்நாடக இசை திருவையாறுக்குப் பெருமை சேர்ப்பதைப்போல, ஆண்டுதோறும் தை மாதம் முதல் மூன்று நாட்கள் நடைபெறும் தமிழ் இசை விழா திருவையாறுக்கு இரட்டிப்புப் பெருமையைச் சேர்க்கிறது. இத்தமிழ் இசை மன்றத்தின் நிரந்தர உறுப்பினராகவும், காப்பாளராகவும், புரவலராகவும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்களும், தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்களும் அங்கே பங்கேற்றுப் பணியாற்றி வருகிறார்கள். 1971 ஆம் ஆண்டு தொடங்கி பல ஆண்டுகள் தை மாதம் முதல் ஐந்து நாட்கள் நடைபெற்று வந்த அந்த இசைவிழா தற்போது மூன்று நாட்கள்தான் நடைபெற வேண்டிய அளவிற்கு நிதிவசதி குன்றிப்போய் உள்ளது. எனவே, நமது தமிழக அரசு அந்தத் தமிழ் இசை மன்றத்திற்கு கலைப் பண்பாட்டுத் துறை, தென்னகப் பண்பாட்டுத் துறை மூலமாக நிரந்தர உதவியை ஏற்படுத்தி, தொடர்ந்து ஒரு வார காலம் அந்த இசை விழா நடைபெற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சித் துறை, அறநிலையத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது, தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தினுடைய சார்பிலே என்னுடைய கருத்துகளை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழ் உயர்ந்தால், தமிழன் உயர்வான்; தமிழ் தாழ்வுறின், தமிழனும் வீழ்ந்து விடுவான் என்ற நிலைக்கொப்ப, தமிழை உயர்த்துவதற்காக, தமிழ் இனத்தை உயர்த்துவதற்காக, தமிழக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்திக்கொண்டு வருகின்ற நேரத்திலே, இப்போது ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பாடமொழி தமிழாக இருக்க வேண்டுமென்று அரசு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, நீதிமன்றம் அளித்திருக்கின்ற அந்தத் தீர்ப்பானது, உண்மையிலேயே கோடானு கோடி தமிழ் மக்களுக்கு எதிரானதொரு தீர்ப்பாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே மிக்க வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்தியாவிலே எந்தவொரு மாநிலத்திலேயும், அந்த மாநில மொழிக்கெதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக வரலாறு இல்லை. ஆனால், தமிழகத்தில், யாரோ ஒருசிலர் லாப நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறவர்கள், கல்வியை வியாபாரமாக ஆக்கிக் கொண்டிருப்பவர்கள், அவர்களுக்குப் பரிந்து பேசுவதுபோல, ஒட்டுமொத்த தமிழினத்திற்கு எதிராக, இப்போது தமிழ்வழிக் கல்விக்கு எதிராக, உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. தடைக் கற்கள் எத்தனை வந்தாலும், அதனைத் தகர்த்து எறிகின்ற தடந்தோள்களைப் பெற்றிருப்பவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தச் சிக்கல்களையெல்லாம் தயவுசெய்து எப்படியாவது நீக்கி, தொடக்கக் கல்வியிலே இருந்து பல்கலைக்கழகம் வரையிலே தமிழ்வழிக் கல்வியைப் படிப்படியாக அமலாக்குவதற்கு அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அய்யன் திருவள்ளுவரின் சிலை திறப்பு விழாவிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்துகொண்டபோது, நாங்கள் சில கோரிக்கைகளை வைத்தோம். தமிழக முதல்வர் அவர்களும் அதுகுறித்து அங்கே பேசினார்கள். அவற்றை நான் இங்கே மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது classical language என்று சொல்லக்கூடிய, செவ்வியல் மொழி என்று பார்க்கிறபோது, கிரேக்கம், லத்தீனம், பாரசீகம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகள்தான் செவ்வியல் மொழிகளாகக் கருதப்பட்டு வருகின்றன. இலக்கியத்தினுடைய வளமை, தொன்மை, தாய்மைப் பண்பு, உயர்வுத் தன்மை இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துதான், செவ்வியல் மொழியை நிர்ணயம் செய்கிறார்கள். இப்போது கிரேக்கம், லத்தீனம், வடமொழி போன்ற மொழிகள் எல்லாம் பேச்சுவழக்கிலே இல்லை. ஆனால், தமிழ், எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு இரண்டிலேயும் உயிர்ப்புள்ள மொழியாக இருந்துகொண்டிருக்கிறது. வடமொழியைச் செவ்வியல் மொழியாக அறிவித்திருக்கிற மத்திய அரசு, இன்னும் அதைவிட மிகச் சிறப்பு வாய்ந்த மொழியான, தொன்மையான மொழியான தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்காதது, உண்மையிலேயே, தமிழர்களின் மனங்களைப் புண்படுத்துவதாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, மத்திய அரசு, உடனடியாக, தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், தமிழினுடைய சிறப்பும் உலகம் முழுவதும் இன்னும்

மேம்பாடான முறையிலே அறிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதையும், அதேநேரத்திலே, மத்திய அரசு ஒதுக்குகின்ற கணிசமான நிதியுதவியும் தமிழுக்குக் கிடைக்க வாய்ப்பாக இருக்கும்பட்சத்தில், இப்போது தமிழ் வளர்ச்சிக்காக, அதனை அமலாக்குவதிலே இடர்பட்டுக் கொண்டிருக்கின்ற அவல நிலைகளெல்லாம்கூட, அத்தகைய மத்திய அரசு உதவியின் மூலமாக நிறைவு செய்யப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, இந்தியப் பண்பாட்டிற்கு, தமிழினுடைய பங்களிப்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும், வடமொழியோடு ஒப்பிட்டு ஆய்வியல் அறிஞர்கள் ஆய்வு செய்கிறபோது, தமிழினுடைய சிறப்பு மேலும் மேலும் விளங்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இருநூறுக்கும் மேற்பட்ட இந்திய மொழிகள் இருக்கின்ற இந்த நாட்டிலே இந்தி மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அரசுகூட, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து மொழிகளையும் தேசிய மொழிகளாக அறிவிக்க வேண்டுமென்று பலமுறை முயற்சி எடுத்திருக்கிறது. இருந்தாலும்கூட, முதன்முதலாக தமிழை, மத்தியிலும் ஆட்சிமொழியாக ஆக்குவதற்கு, தமிழக அரசும், மத்திய அரசை வற்புறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Bible-க்கு அடுத்தபடியாக உலக மொழிகளிலெல்லாம் மிக அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிற நூல், திருக்குறள். அது, சாதி, மத, இன, நாடு என்ற எல்லைகளைக் கடந்து, பொதுமறையாகக் கருதப்படுகிற ஒரு நூல். அந்த நூலைக்கூட தேசிய நூலாக, இன்னும் மத்திய அரசு அறிவிக்கவில்லை. திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தேசிய ஒருமைப்பாடுபற்றி எல்லோரும் பேசுகிறார்கள். தேசிய ஒருமைப்பாடு என்பது வெறும் கூப்பாடாக இருக்கிறது என்பதற்கு ஒரே ஓர் உதாரணத்தை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பெங்களூரில் இருக்கக்கூடிய திருவள்ளுவர் சிலை இன்னும்கூட திறக்கப்பட முடியாமல் ஓர் அவல நிலைக்கு ஆளாகி இருக்கிறது.



கன்னடத்துக் கவிஞருக்கு சென்னையிலே சிலையை அமைப்பதற்கு, திறப்பதற்கு நாம் பெரிய மனதோடு, பெருந்தன்மையோடு அனுமதித்திருக்கிறோம். அனுமதி கொடுத்திருக்கிறோம். ஆனால் திருவள்ளுவர் சிலை மட்டும் இன்னும் திறக்கப்படுவதற்கு அந்த கர்நாடக அரசானது, எந்தவிதமான ஆக்கபூர்வமான வேலைகளையும் செய்யவில்லை, அனுமதி வழங்கவில்லை என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, பெங்களூரிலே உள்ள திருவள்ளுவர் சிலையைத் திறக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

கேரளம் என்று தனியாகப் பிரிந்தாலும்கூட, இப்போது நாமெல்லாம் சேர, சோழ, பாண்டியர்களை நினைவிலே கொண்டு, நம்முடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு சேரன் என்றும், செங்குட்டுவன் என்றும் பெயர் வைக்கிறோம். ஆனால், கேரள எல்லையிலே இருக்கக்கூடிய கண்ணகிக் கோயிலுக்கு வழிபாடு நடத்தச் சென்றால், அங்கே நம்மவர்களுக்கு சரியான பாதுகாப்பு இல்லை. இடையூறுகள் எல்லாம் வருவதாக பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு முறை போய் இருந்தபோது, அவர்களுக்கேகூட சில இடையூறுகள் செய்ததாக நாங்கள் செய்தித்தாள் மூலம் கேள்விப்பட்டோம். நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, அந்த கண்ணகிக் கோயிலிலே தமிழர்கள் வழிபாடு நடத்துவதற்கு உரிய முறையிலே பாதுகாப்பும், உரிய அனுமதியும் கொடுப்பதற்கு, கேரள அரசோடு, இந்த அரசு பேச்சுவார்த்தை நடத்தி சுமூகமான தீர்வைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுடைய இலக்கியப் பணிகளை, ஆய்வுப் பணிகளைச் செய்வதற்கு வசதியாக பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதி வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழுக்கு, திராவிட இலக்கியங்கள் செய்திருக்கிற சேவைகள், பணிகள் ஏராளம். படைப்பிலக்கியம், ஆராய்ச்சி, பத்திரிகை, இலக்கிய விளக்கம் என்றெல்லாம் பார்க்கிறபோது, திராவிட இயக்கத்தாருடைய பங்களிப்பு

மிக மிக அதிகமாக உள்ளது. எனவே, நான் தமிழக அரசை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வது என்ன என்று சொன்னால், திராவிட இயக்கமும், தமிழும் என்ற அடிப்படையிலே ஒரு தனி மையத்தை நிறுவி, திராவிட இயக்கத்தாருடைய பங்களிப்பு எந்தெந்த வகையில் எல்லாம் தமிழை வளர்த்திருக்கிறது என்பதை இந்த நாட்டிற்கும், உலக மக்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். ஏனென்றுசொன்னால், புரட்சிக் கவிஞரின் 'அழகின் சிரிப்பு' நோபல் பரிசையே பெறக்கூடிய அளவிற்கு ஒரு புதிய முறையில் அமைந்த சிற்றிலக்கியப் பிரிவு, இதுபோல் ஏராளமான செய்திகளைச் சொல்லலாம். ஆக, அப்படிப்பட்ட, திராவிட இயக்கத்தாருடைய பங்களிப்பை உலகம் உணரக்கூடிய அளவிற்கு தனி மையம் ஒன்றை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வழிக் கல்வி நூல்களை மொழி பெயர்த்து வெளியிடுவதற்கு பல்கலைக்கழகங்களுக்கு அரசு சிறப்புச் சலுகைகளைத் தர வேண்டும். இப்போது மொழி பெயர்ப்புத் துறை இருக்கிறது என்று சொன்னாலும்கூட, அந்த மொழி பெயர்ப்புத் துறையின் மூலமாக தமிழ் வழி நூல்களை மொழி பெயர்க்க அவ்வளவாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை. எனவே, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலேயும், மொழி பெயர்ப்புத் துறை என்ற ஒன்றை அமைத்து, தமிழ் வழி கல்வி நூல்களை வெளியிடுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரசு கணினி முறையை அமல்படுத்துகிறபோது, ஒருசில மாவட்டங்களிலே சோதனை முறையாக அமல்படுத்தியதைப்போல, தமிழ் வழிக் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒரு பல்கலைக்கழகத்தைத் தேர்வு செய்து, அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, பல்கலைக்கழகங்களும், நிறுவனங்களும் பல நூல்களை வெளியிட்டிருக்கின்றன. ஆனால், அந்த பல்கலைக்கழகங்களையும், நிறுவனங்களையும் தேடிச் சென்றால்தான் அந்த நூல்கள் கிடைக்கும். பரவலாக வெளி இடங்களிலே கிடைப்பதில்லை. நான் அரசை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம், இத்தகைய பல்கலைக்கழக வெளியீடுகளும், நிறுவனங்களுடைய வெளியீடுகளும், ஓர் இடத்தில் கிடைப்பதைப்போல, குறைந்தது ஒரு மாவட்டத்திற்கு ஒரு மையமாவது, புத்தக விற்பனை நிலையமாவது அரசே தொடங்கி, அவையெல்லாம்



கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலே 15-க்கும் மேற்பட்ட மொழித் துறைகள் தனித் தனியாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவைகளுக்குள்ளாக ஒரு பன்மொழி உறவு மையத்தை ஏற்படுத்தி, அந்த மொழிகளுக்குள்ளே ஒப்பாய்வு செய்தல், பிற இந்திய மொழிகளுடைய இலக்கியங்களை மொழி பெயர்ப்புச் செய்தல், ஒப்பிட்டு அகராதி எழுதுதல் ஆகிய பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆந்திராவிலே திராவிடப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அதற்கு நம்முடைய அரசின் சார்பிலே பல லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அதனுடைய வளர்ச்சி நிலைமை இப்போது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அரசு விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மனிதநேயம் நாட்டிலே மிக மிகக் குறுகி வருகிறது. மக்களை வழி நடத்த வேண்டிய தலைவர்களே, மக்களிடம் வந்து அராஜகங்களையும், அக்கிரமங்களையும் வெளிப்படுத்துகிற அளவிற்கு பேசுகிறார்கள், நடந்து கொள்கிறார்கள். எனவே, பட்டப் படிப்பிலாவது, மனிதநேயத் துறையை ஒரு பாடப் பிரிவாக மாணவர்களுக்கு சொல்லித்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாவட்டந்தோறும், இணைய நூலகத்தை அரசு ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் இப்போது தனியாரிடம் வீண் செலவு செய்து சிரமப்படுவதைத் தவிர்க்கின்ற வகையிலே இணைய நூலகத்தை மாவட்டந்தோறும் ஏற்படுத்தி, மாணவர்கள் அதிலிருந்து தகவல்களை இலவசமாகப் பெறுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எழுத்துச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் குறைந்தபட்சம் 'ஔ' என்ற எழுத்தையாவது, அரசு கொஞ்சம் பரிசீலிக்க வேண்டும். 'ஔ'-வை சில பேர்கள் 'ஒ' 'ள' என்று படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பிருக்கிறது. அந்த 'ள' மாதிரி இருக்கக்கூடிய அந்தச் சுழியை மாற்றி, 'ஔ' என்ற எழுத்தை எழுத்துச் சீர்திருத்தத்திலே கொண்டுவர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்][2000 ஏப்ரல் 24

கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

நூல்களை நாட்டுடைமையாக்குகின்ற திட்டத்தின்கீழ் இப்போது சாமி சிதம்பரனார், மயிலை ஸ்ரீவேங்கடசாமி, கவிஞர் முடியரசன் ஆகியோருடைய நூல்களை நாட்டுடைமையாக்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களுக்கு இதுவரையிலே பரிவுத் தொகையாக வழங்கப்பட்டு வந்த நிதி இப்போது காப்பு நிதியாக வழங்கப்படுகிறது. பதிப்பாளர் இழப்பீட்டுத் தொகை, சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வில் இருக்கின்றவை எல்லாம், இந்த நிதியிலிருந்து அளிக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. நான் அரசிடம் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம், இவை நியாயமான செயல்கள் என்றாலும்கூட, இவற்றைச் செய்தவருக்கு, பதிப்பு வாரியம் ஒன்றை அரசே அமைத்து, அதன்மூலமாக, அந்த அறிஞர்களுடைய நூல்களை வெளியிட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே, எம்.எஸ். சுப்புலட்சுமி வடமொழியிலே பாடிய வெங்கடேஸ்வர சுப்ரபாதத்தை எப்படி கோயில்கள் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதோ, அதேபோல, தமிழில் பாடியதையும் ஏற்று அங்கீகரிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில கோயில்களிலேதான் திருமண மண்டபங்கள் இருக்கின்றன. ஆனால், ஏழைகள் இலவசமாக திருமணம் செய்துகொள்கிற அளவிற்கு திருமண மண்டபங்கள் இல்லாத கோயில்களிலேயும் அரசு திருமண மண்டபங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா கோயில்களிலும் போற்றி நூல்களை அரசு வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. பக்தி நூல்களும், அந்தக் கோயில்களில் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோயில்களின் மூலமாக, நலிந்து வருகின்ற தெரு கூத்து, நையாண்டி மேளம், கரகாட்டம் போன்ற கிராமியக் கலைகள் அழியாமல் இருக்க, அரசு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே எங்கேயெல்லாம் பஜனை கோயில்கள் இருக்கிறதோ, அங்கு தமிழ் இசையைச் கற்றுத்தர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 24][திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

இன்றைக்கு, வெளி வந்திருக்கிற இந்து பத்திரிகையிலே, ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே, இந்த அரசும், தமிழ் வளர்ச்சித் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், எந்த அளவிற்குத் தமிழை அமல்படுத்துவதிலே குறியாக இருக்கிறார்கள் என்பதை கண்டிக்கின்ற வகையிலே, இடித்துச் சொல்கின்ற வகையிலே, தலையங்கம் தீட்டி இருக்கிறார்கள். இது ஒன்றே, இந்த ஆட்சி, தமிழ் வளர்ச்சியிலேயும், தமிழர்களுடைய வளர்ச்சியிலேயும், கருத்தாக, குறியாக இருக்கிறது என்பதற்கு ஓர் அடையாளம். தந்தை பெரியார் பாணியிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவர்கள் என்ன எழுதுகிறார்களோ, அதற்கு எதிராக நாம் நடப்பதுதான், தமிழர்களுக்கு நாம் உண்மையாக, நேர்மையாக நடந்துகொள்வதற்கு அடையாளம் என்று சொல்வார்கள், அந்தவகையிலே, தமிழ் வளர்ச்சித் துறையும், தமிழக அரசும் தமிழுக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழனுடைய வளர்ச்சிக்காகவும் செய்கின்ற செயல்களை நான் நன்றி கூறி பாராட்டி, வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மற்றும் தமிழ் வளர்ச்சி-பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்து, என்னுடைய சில கருத்துகளை அவைமுன் வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அறக்கட்டளைகள் என்ற அந்த சொல்லே, ஒரு பொருளுடைய சொல் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அறத்தை வளர்ப்பதற்கு, நிரந்தரமான கட்டளைகள் சந்திர சூரியன் இருக்கின்ற வரையிலே, யார் தன்னுடைய பொருளை ஒரு அறத்தின் மேம்பாட்டிற்காக வழங்கினார்களோ, அதை அப்படியே பாதுகாத்து, உலகம் உள்ள அளவும், அந்த அறத்தைப் பேண வேண்டுமென்ற ஒரு நிரந்தரமான கட்டளைக்குத்தான், அறக்கட்டளை என்று முன்னோர்கள் பெயர் வைத்திருக்கிறார்கள். எனவே, அந்த அறக்கட்டளையை நிரந்தரமாகப் பாதுகாப்பது, நம்முடைய முதல் தலையாய கடமை என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, பூஸ்துதி என்று சொல்லக்கூடிய நிலங்களைத்தான், நம்முடைய முன்னோர்கள் அதிகமாக வழங்கினார்கள். காரணம், அந்தக் காலத்தில் நாணயம் என்று இருக்கவில்லை. நிலங்கள்தான்

இருந்தன. எனவே, நிலத்தை அறம் வளர்ப்பதற்காக, அறுதியாகவும், உறுதியாகவும், நிரந்தரமாகவும் வழங்கினார்கள். அதோடு அந்த நிலத்தில் இருந்து வருகின்ற வருமானம் எதற்காகப் பயன்பட வேண்டுமென்றும், தங்களுடைய விருப்பங்களைக் கட்டளைகளாக வழங்கிய காரணத்தினால், அவை அறக்கட்டளைகளாக கருதப்படுகின்றன. இவை எல்லாம் தர்மத்தின் அடிப்படையிலே, குறிப்பாக, சமயம் சார்புடையதாக அமைக்கப்பட்ட காரணத்தினால், இந்து சமயத்தைப் பொறுத்தவரையில், இந்து சமயத்தின் நோக்கங்கள், எவற்றைத் தர்மமாகக் கருதினார்களோ, அந்தவகையில், அந்தத் தர்மம் தழைக்க வேண்டுமென்பதற்காக, யார் அவற்றை எழுத்துமூலமாக, அன்று இருந்த கல்வெட்டுகளின் மூலமாக வழங்கினார்களோ, அவைதான் அறக்கட்டளைகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த நிருவாகத்தில் அவரவர்கள்தான் பொறுப்புடையவர்கள் என்பதும் உறுதியாகத் தெரிவிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால், காலப் போக்கில், அதிலே சில முறைகேடுகள் ஏற்பட்ட காரணத்தினால்தான், அண்மைக் காலத்தில் அரசு தலையிட்டு, அறக்கட்டளைகளாக உருவாக்கியவர்கள் குறித்த நோக்கங்கள் நிறைவேறுகின்ற வகையில் அவற்றைக் காப்பாற்ற வழிவகுக்க வேண்டும் என்று விரும்பிய காரணத்தினாலேதான், சட்டங்கள் இயற்றப்பட்டன. அந்தச் சட்டங்களில் ஒன்றுதான், தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளையைச் சார்ந்த ஒரு சட்டமாகும். எனவே, நாம் இயற்றிய சட்டப்படி இந்த அறக்கட்டளைகள் நடக்கின்றனவா என்று கண்காணிக்கக்கூடிய உரிமையைத்தான் இந்தச் சட்டங்களின் வாயிலாக அரசு பெறுகிறதே தவிர, அறக்கட்டளையை முழுமையாக மாற்றி அதை இல்லாமல் செய்யக்கூடிய உரிமையை அரசு பெறவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-20*

அரசு இயற்றிய சட்டப்படி அறக்கட்டளைகள் நடைபெற வேண்டும் என்பதற்கான அதிகாரங்கள் என்கின்ற உரிமைகள் இந்தச் சட்டங்களின் வாயிலாகத்தான் அரசு பெறுகிறது. ஆனால், சமயம் சார்புடைய இந்த நிலம் அல்லது சொத்துகள் ஆசாரப்படி, ஆகமப்படி, பாரம்பரியப்படி, ஒவ்வொரு கோயிலிலேயும் கடைபிடிக்கிற முறைப்படி வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நிலம் உழுபவனுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்பது ஒரு விரிவான பொருள். அதற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. அதைப் பற்றி என்னுடைய நண்பர்கள் எல்லாம் இங்கே பேசினார்கள். எனவே,



உழுபவனுக்கே நிலம் கொடுக்கப்பட வேண்டுமா என்பது இப்போது மட்டுமல்ல, நீண்ட நாட்களாக விவாதிக்கப்படுகின்ற ஒன்று. ஆனால், இந்தத் துறையைப் பொறுத்தவரையில், நான் அமைச்சருடைய கவனத்தை ஈர்ப்பது ஓர் அறக்கட்டளை என்றால் அந்த அறக்கட்டளை குறித்த நோக்கம் சரியாக நிறைவேறுகிறதா என்று பார்க்கக்கூடிய உரிமையும், அதிகாரமும் சட்டப்படி உங்களுக்கு வழங்கி இருக்கிறார்களே, அதன்படி, அந்தச் சட்டத்திற்குட்பட்டு ஓர் அறக்கட்டளை தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்துகிறதா அல்லது பயன்படுத்தப்படுகிறதா என்ற அளவுக்குத்தான் அரசுக்கு அதிகாரம் உண்டே தவிர, மற்ற பிரச்சினைகளை எல்லாம் வேறு சட்டங்களின் அடிப்படையிலேதான் நாம் காணக்கூடிய, கணிக்கக் கூடிய கட்டாயங்கள் எல்லாம் இருக்கின்றன.

உதாரணமாக அரசமைப்புச் சட்டம். அவரவர்களுடைய உணர்வுக்கு ஏற்ப அவர்களுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்குகிற உரிமைகள், அவர்களுக்கு குறிக்கப்பட்டிருக்கிற கடமைகள், அவை எந்த அளவுக்கு பாதிக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது நம்முடைய கடமை. இந்தக் கடமையின் அடிப்படையிலேதான் இந்த அறக்கட்டளைகள் நிர்வகிக்கப்பட வேண்டுமே தவிர, அவர்கள் அடிப்படையாகத் தந்த அந்த அறக்கட்டளை சொத்துகளை இல்லாமல் ஆக்கவோ அல்லது அதனுடைய தன்மையை மாற்றவோ அல்லது உண்மையை மறைக்கவோ அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதுதான் இந்தச் சட்டங்களைப் பொறுத்தவரையில்...(குறுக்கீடு) நான் அந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் போகவில்லை. (குறுக்கீடு) உங்களுடைய பிரச்சினைக்கு நான் போகவில்லை. அது வேறு பிரச்சினை, அந்தப் பிரச்சினையில் வருவது வேறு வகையிலே காணப்படக்கூடிய ஒன்று. இருக்கிற சட்டத்தின் அடிப்படையிலே இந்த அரசுக்கு எதன் மூலமாக இப்போது இந்த அதிகாரம் இருக்கிறது? Hindu Religious Endowments சட்டம் என்று நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்களே, அந்தச் சட்ட ஷரத்துக்களுக்குட்பட்டுதான் இந்தக் கோயில்களை நீங்கள் நிர்வகிக்க வேண்டுமே தவிர, அதனுடைய சொத்துகளை நீங்கள் நிர்வகிக்க வேண்டுமே தவிர, வேறு வகையிலே கூடாது என்பதுதான் சட்டத்தினுடைய நோக்கம், அதுதான் இந்த அறக்கட்டளையினுடைய தாத்பரியம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு சொத்துகளை நம்முடைய முன்னோர்கள்

வழங்கியிருக்கிறார்கள்? உதாரணமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இப்போதைய தொகுதியில் இருக்கிற திருவட்டீஸ்வரன் கோயில். அந்தத் திருவட்டீஸ்வரன் பேட்டைக்குரிய நில புலன்கள் எல்லாம் திருவட்டீஸ்வரன் கோயிலுக்குச் சொந்தமானவை. அதிலேயிருந்து எவ்வளவு வருமானம் கோயிலுக்குப் போய்ச் சேருகிறது? அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அர்த்தஜாம பூஜைக்கு, நண்பகல் பூஜைக்கு, நடுநிசி பூஜைக்கு என்று காலங்களை எல்லாம் குறிப்பிட்டு, இதற்காக இந்தச் சொத்து வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கும்போது, இப்போது அதிலேயிருந்து வருமானம் வருவதில்லை என்பது ஒன்று. வந்தாலும் முறையாக, எந்த நோக்கத்திற்கு அது குறிக்கப்பட்டதோ அதற்குப் பயன்படுவதில்லை என்பது ஒன்று. இதை கண்காணித்து, அந்த நோக்கத்தைக் காப்பாற்றி, அதேநேரத்தில் அதிலே ஆக்கிரமிப்புகள் இருந்தால், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, அதிலேயிருந்து எதிர்பார்க்கப்படுகிற வருமானத்தை உறுதி செய்கிற கடமை, இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே அரசுக்கு உண்டு என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீட்டிற்காக அல்ல. அவர் சொன்ன செய்திக்காக, 29 ஆண்டுகளுக்குப் பின்னால் இப்போதுதான் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் 220 மனைகள், திருவட்டீஸ்வரன் கோயிலினுடைய சொத்து மீட்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அதைத்தான் நான் நன்றியோடு உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன், வேறல்ல. ஏனென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அந்தத் தொகுதிக்கு இப்போது பிரதிநிதியாக இருக்கிறார்கள். மீட்கப்பட்டது. ஏற்கெனவே என்னுடைய காலத்திலேயும் அந்தத் தொகுதியிலே என்னிடத்திலே சொல்லப்பட்ட ஒன்று. முதலமைச்சர் அவர்கள் முறையாக நடவடிக்கை எடுத்ததைப் பற்றி நான் மெய்சிலிர்க்கின்றேன். அது அங்கோடு நிற்காமல் எங்கும் பரவி, விரவி, அறக்கட்டளைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான்.

இன்னொன்று மதத்தின் அறம் என்பது ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு மட்டுமல்ல. இந்து அறம், முஸ்லிம் அறம், கிறிஸ்தவ அறம் என்றெல்லாம் ஒவ்வொருவரும் சொல்கிறோமே தவிர, அறம் என்ற சொல் பொதுச்



சொல். அது எல்லோருக்கும் பொதுவாக உடையது. அந்த அடிப்படையிலேதான் இந்த நாட்டிலே அறம் தழைக்க எல்லோரும் பாடுபட்டிருக்கிறார்கள். உதாரணமாக இந்தத் திருவட்டீஸ்வரன் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலம், ஆற்காடு நவாப் கொடுத்தது. நம்முடைய கபாலீஸ்வரர் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலமும் ஆற்காடு நவாப் கொடுத்தது. அதேநேரத்தில் நம்முடைய ஏர்வாடி தர்காவிற்குக் கிழவன் சேதுபதி 5000 குறுக்கம் நிலம் கொடுத்திருக்கிறார். 5000 குறுக்கம் நிலம் என்று சொன்னால் அது ஏறக்குறைய 4900 ஏக்கர் நிலம் வருகிறது. மிக அழகான நல்ல எழுத்தாக, அந்த மாதிரியான 'document'-ஐ நான் மிகக் குறைவாகப் பார்த்திருக்கிறேன். அவ்வளவு அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு கோயிலுக்கும், ஒவ்வொரு மசூதிக்கும், ஒவ்வொரு தர்காவிற்கும், மதம் பார்க்காமல் வெறும் உணர்வுகள், சமய உணர்வுகள் மேலோங்கி இருக்க வேண்டும், நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் வழங்கியிருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் தெளிவுபடுத்திக்கொள்வது நல்லது.

உதாரணமாக இங்கே சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்ந்த பூமி, சோழ வளநாடு, அந்த வளநாட்டில் கோயில்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டது நிலம்தான். காரணம், அந்தப் பகுதியிலே அதிகம் நிலம்தான். ஆபரணங்களாகச் சிலர் கொடுத்திருக்கிறார்கள். தருமபுரி ஆதீனத்திற்கு ஆயிரம் ஏக்கர் நிலம் ஔரங்கசீப் கொடுத்திருக்கிறார். ஆச்சரியமாக இருக்கிறது. ஔரங்கசீப் தருமபுரி ஆதீனத்திற்கு ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதேமாதிரி ராணி மங்கம்மாள், திருமலை மன்னர் ஏகப்பட்ட நிலங்களை கொடுத்திருக்கிறார்கள். இந்தக் காரணங்களுக்காகத்தான் இதைப் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அண்மைக் காலத்திலே, முறைகேடுகள் ஏற்பட்ட காரணத்தினாலேதான் அரசு தலையிட்டு சட்டங்களை இயற்றியிருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளாக தர்மம் தழைக்க, இவை எல்லாம் நடைபெற்று வந்திருக்கின்றன. நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். சட்டத்திலே குறிப்பிட்டிருக்கிற அரசுக்கு இருக்கிற அதிகாரம், அரசுக்கு இருக்கிற மிக முக்கியமான கடமை, எந்த நோக்கத்திற்காக ஒரு அறக்கட்டளையை உருவாக்கியதாகச் சொல்லியிருக்கிறார்களோ, அதைக் காப்பாற்றித் தருவது அரசினுடைய தலையாய கடமை. இதை நான் வற்புறுத்திச் சொல்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

இப்போது எவ்வளவு கோயில்கள் இருக்கின்றன என்பது குறிப்பிலே இருக்கின்றது. ஆனால் அவை காணக் கிடைக்கவில்லை. நான் பல ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பாலாற்றங்கரையிலே இருக்கின்ற கோயில்கள், அதுபோல் காவிரிக் கரையில் 64 சிவன் கோயில்கள் எல்லாம் இருப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். எனக்கும் தெரியும். காவிரிக் கரையைவிட தமிழகத்தினுடைய முதல் நாகரிகம், பொருணை நாகரிகம், வைகை நாகரிகம் மட்டுமல்ல, அதற்கு முந்தைய நாகரிகம் நம்முடைய பாலாற்று நாகரிகம். எனவே, பாலாற்றங்கரையிலே இருக்கின்ற கோயில்களை முறையாகப் பழுதுபார்த்து, திருப்பணி செய்து காப்பாற்றித் தர வேண்டுமென்று பல ஆண்டுகளாக நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அப்போது சொன்னார்கள், ஒரு குறிப்பைத் தாருங்கள், நீங்களே ஒரு புத்தகத்தை எழுதுங்கள், அந்தப் புத்தகத்தைக் கொடுத்தால், நான் அதன்படி செய்கிறேன் என்று. குறிப்பெல்லாம் கொடுத்திருக்கிறேன். ஆனால் எந்த வேலையும் சரியாக நடக்கவில்லை.

*பிற்பகல் 12-30*

எங்கள் ஊருக்குப் பக்கத்திலே இருப்பது அதிதீஸ்வரர் ஆலயம். அதிதீஸ்வரர் என்றால் விருந்தாளி. எங்கள் ஊருக்கு ஆண்டவன் விருந்தாளியாக வந்தான். அங்கேயிருக்கின்ற வளத்தைப் பார்த்துவிட்டு அங்கேயே விருந்தாளியாகவே தங்கியிருக்கிறான் என்பது ஐதீகம். எனவே அவர் அதிதீஸ்வரர். அந்த ஆலயத்தைச் செப்பனிட்டுத் தாருங்கள் என்று நான் பலமுறை சொன்னேன். குன்றுதோறும் முருகன் என்று சொல்வதற்கேற்ப எங்களுடைய ஜவ்வாது மலையிலே மிக அழகான ஒரு பாலமுருகன் கோயில் இருக்கிறது. யாத்திரிகர்கள் பல இடங்களிலேயிருந்து வருகிறார்கள். அதற்குக் குறைந்தபட்சம் 25,000 ரூபாய் வைப்பு நிதியிலே போடுகிறீர்கள். அந்த 25,000 ரூபாயை பாலமுருகன் கோயில், நாயக்கனூர், ஜவ்வாது மலை; சாமுண்டீஸ்வரி கோயில், பெரியாங்குப்பம்; நம்முடைய சுந்தரபெருமாள் கோயில், மின்னூர் மற்றும் நாகநாதன் கோயில், ஆம்பூர் என்ற 4 கோயில்களுக்கு கொடுங்கள் என்று எழுதிக் கொடுத்தேன். ஆனால் இதுவரையில் அந்த 25,000 ரூபாய் வைப்பு நிதியிலே போடவில்லை. (மணியடிக்கப் பெற்றது) மணியடித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆகையினால் நான் விரும்புவது கோயில் மணியும் அடிக்கப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள் Sir, தயவுசெய்து 4 கோயில்களுக்கும் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தது, இங்கே பல பிரச்சினைகளைப் பேசினார்கள். ஒன்றை நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வது நீதிமன்றங்கள் இருக்கின்றன. நீதிமன்றங்கள் இல்லாமல் அரசமைப்புச் சட்டம் நடைபெறாது. எனவே நீதிமன்றங்களைப் பற்றி நம்முடைய உள்ளுணர்வுகள் பல இருக்கக்கூடும். எனக்கும் உண்டு. ஆனால், நீதிமன்றங்களைப் பற்றி தனியாகவோ அல்லது சட்டமன்றத்திலேயோ விமர்சனம் செய்யும்போது மிகப் பொறுப்போடு விமர்சனம் செய்ய வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். தமிழுக்கு விரோதமான ஒரு தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியிருக்கிறது என்று நாம் சொல்ல வேண்டுமா? நம்முடைய 3 நீதிபதிகள் உட்கார்ந்து இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தமிழ் விரோதிகளா? அதை நாம் இந்தச் சட்டமன்றத்திலேயே சொல்ல வேண்டுமா? எது எப்படி இருந்தாலும், நீதிமன்றததைப்பற்றி பேசும்போது, நீதிபதிகளைப்பற்றிப் பேசும்போது, மிகப் பொறுப்போடுதான் நாம் பேசவேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் நம்முடைய 3 தலை துறைகளிலே அது ஒன்று. சட்டமன்றம், நீதிமன்றம், நிருவாகம் என்று வரும்போது நீதிமன்றத்தினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கும் இருக்கிறது; நாட்டிலுள்ள அனைவருக்கும் இருக்கிறது. நான் ஒன்றை உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். தமிழ் வளர வேண்டும், வளர வேண்டும் என்றால், இதுவரையில் வளரவில்லையா என்றால் வளர்ச்சி என்பது ஒரு தொடர் வேலை. எனவே அது தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருக்க வேண்டும். தமிழும் வளர வேண்டும். தமிழனும் வளர வேண்டும். இவை இரண்டையும் நாம் மறந்துவிடக் கூடாது. ஒன்றையொன்று நாம் பிரித்துவிட முடியாது. தமிழ் வளர்ந்தால் தமிழன் வளர்வான். தமிழன் வளர்ந்தால் வளத்தோடு வாழ்ந்தால், தமிழும் வளரும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஓர் உண்மையைச் சொல்கிறேன். நீங்கள் எவ்வளவுதான் மறுத்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். வடமொழியினுடைய தாக்கம் இல்லாத மொழி இந்த நாட்டிலே எது உண்டு? வெளிநாட்டிலேயிருந்து வந்த மொழிகளை விட்டுவிடுங்கள், நம்முடைய தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் இப்போது அல்ல, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, குறிப்பாக பல்லவர்கள் இந்த நாட்டை ஆண்டதிலிருந்து, களப்பிறர்களுடைய படையெடுப்பிற்குப் பிறகு, நம்முடைய இலக்கியங்கள் எல்லாம் அழிந்துவிட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முதல்

சங்க காலத்தினுடைய இலக்கியங்கள் எங்கே? கடைச் சங்க காலத்தினுடைய இலக்கியங்கள் சிலவற்றைப் பேசுகிறோம். நம்முடைய இடைச் சங்க காலத்தினுடைய இலக்கியங்களிலே முதல் இலக்கியமாக நாம் சொல்வது தொல்காப்பியம். நான் உங்களைக் கேட்கிறேன், தொல்காப்பியத்திலேயே வடமொழிச் சொல் கலந்திருப்பது உங்களுக்குத் தெரியுமா? நமக்கெல்லாம் தெரியும். தொல்காப்பியத்திலேயே தொன்மை தமிழ், காப்பியம் சமஸ்கிருதம். நம்முடைய ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்திலே சிலம்பு தமிழ், அதிகாரம் சமஸ்கிருதம். வளையாபதி, சீவக சிந்தாமணி, குண்டலகேசி இவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டாலும் இப்போதும் இவை அப்பட்டமான சமஸ்கிருத சொற்கள். இப்போதும் சமஸ்கிருதம் நம்மை ஆள்கிறது. இன்றைக்குக்கூட தினமணி பத்திரிகையிலே ஒரு படம் வந்திருக்கிறது. அது ஒரு கல்வெட்டுப் படம். அந்தக் கல்வெட்டுப் படத்தை யாரோ வியாபாரிகள் எழுதியதாக, (குறுக்கீடு) 10 ஆம் நூற்றாண்டிலே எழுதப்பட்ட அதிலே முதல் சில வார்த்தைகள் தமிழ் ஆகவும்....

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் மணிக்கணக்கிலே பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர். எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் இன்னும் 6 பேர் பேச வேண்டும். அதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். எனவே, தயவுசெய்து லத்தீப் அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** லத்தீப் பேச எழுந்தால் எவ்வளவு நேரம் பேசுவார் என்று தெரியுமல்லவா? எனவே, விடவே விடாதீர்கள். (சிரிப்பு) விடாதீர்கள் அதுதான் சரி. சில விஷயங்களை விளக்கித்தான் பேச வேண்டும். இல்லாவிட்டால் பேசாமல் இருந்துவிட வேண்டும். அதனாலேதான் நான் அடிக்கடி பேசுவதையே இப்போது தவிர்த்து வருகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) எனவே, பேசுவதை அரைகுறையாகப் பேசக் கூடாது. பேசினால், ஒரு விஷயத்தைச் சொல்லும்போது பேசுபவர்களுக்கும் திருப்தி ஏற்பட வேண்டும்; கேட்பவர்களுக்கும் முழுமையாகப் புரிய வேண்டும்.



நான் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் தயவுசெய்து ஒரு குழு அமைத்துப் பாருங்கள். பெரியவர்கள் எல்லாம் முயன்றார்கள். திரு.வி.க. போன்றவர்கள் முயன்றார்கள். நல்ல தூய தமிழை நாம் எழுத வேண்டுமென்று முயன்றார்கள். இங்கே சொன்னோம். ஒரு காலத்தில் தமிழ் எப்படி இருந்தது. அண்ணா வந்ததற்குப் பிறகு, கலைஞர் போன்றவர்கள் உருவகம் பெற்ற பிறகுதான் 'கனம் அக்கிராசனாதிபதி அவர்களே' என்பதெல்லாம் மாறி, 'தலைவர் அவர்களே', என்று வந்தது. 'மாண்புமிகு' என்ற சொல் வந்தது. தமிழிலே பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஆனால், மாற்றம் ஏற்பட்டாலும் இப்போதும் வடமொழிச் சொல்லினுடைய ஆதிக்கம் இருக்கிறது. அதை மறந்துவிட வேண்டாம்.

முதல் சங்க காலம் என்று சொல்கிறோமே, சங்க காலம் என்று சொல்வதே சமஸ்கிருதச் சொல்தான். எனவே, அந்த முதல் சங்க காலத்திலே எங்கே இருந்தது என்றால் லெமூரியா கண்டமாம். லெமூரியா கண்டம் என்பது சமஸ்கிருதம். எங்கே அது இருந்தது என்றால் பஃருளி ஆறு ஓடிக் கொண்டிருந்தது, அதன் கரையிலே ஒரு ஊர் இருந்தது. அது கபாடபுரம். கபாடபுரம் என்பதே சமஸ்கிருதம்; பஃருளி ஆறு மட்டும்தான் தமிழ். எனவே, இதைப்பற்றியெல்லாம் நாம் கவலைப்படாமல், நம்முடைய தாய்த் தமிழில், அதனுடைய சீர் இளமையை நாம் பாடுகிறோமே தவிர அந்தச் சீர் இளமை எங்கே போனது? நம்முடைய முதல் இலக்கியங்கள் எங்கே? இலக்கியம் என்ற அந்தச் சொல்கூட சமஸ்கிருதம்தான். முதல் சங்க காலத்தினுடைய இலக்கியங்கள் எங்கே? கடைச் சங்க காலத்தினுடைய இலக்கியங்கள் யாவை? பதினெண்கீழ்கணக்கு, பதிற்றுப்பத்து என்றெல்லாம் பேசுகிறோமே, அந்தத் தமிழை நாம் வழக்குச் சொல்லாகச் சொல்கிறோமா? அகநானூறை, புறநானூறை எடுத்துக் கொண்டால்கூட அகநானூறில் அகம் என்பது சமஸ்கிருதம், (மணியடிக்கப்பெற்றது) புற நானூறு தான் தமிழ். எனவே, ஆய்வு செய்யுங்கள். தமிழ் துறை ஆய்வு செய்ய வேண்டும். வேண்டுமானால் நல்ல தமிழ் அறிஞர்களைக் கொண்டு எங்கே போனது அந்த இலக்கியங்கள் என்று ஆய்வு செய்யுங்கள்; ஆய்வு செய்து பாருங்கள்.

தமிழ் இரத்தத்தில் ஊறியது. நான் ஓர் உண்மையைச் சொல்கிறேன். நான் தமிழே படிக்கவில்லை. கல்லூரியிலேயும் படிக்கவில்லை; பள்ளியிலேயும் படிக்கவில்லை. நான் படித்தது எல்லாம் என்னுடைய அட்சராப்பியாசம் என்று சொல்லக்கூடியது அரபிதான், உருது, பாரசீகம், பிறகு என்னுடைய Medium ஆங்கிலம், நான் தமிழ் படிக்கவில்லையா?

மலையாளம் படிக்கவில்லையா? இந்தி படிக்கவில்லையா? சமஸ்கிருதம் படிக்கவில்லையா? படிக்க வேண்டும் என்கிற எண்ணமிருந்தால் படிக்கலாம். எனவே, தேடுங்கள், தேடிக் கண்டு பிடியுங்கள். பிறர் வீட்டுப் பிள்ளைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு வந்து நம்முடைய பிள்ளைகள் என்று சொல்வதைவிட நம்முடைய பிள்ளைகள் எங்கே சென்றன என்று தேடிக் கண்டுபிடியுங்கள். அதுதான் இந்தத் தமிழ் வளர்ச்சித் துறையினுடைய, தமிழ் பண்பாட்டுத் துறையினுடைய முதல் வேலை என்று சொல்லி, மொழி இருக்கலாம், மதம் இருக்கலாம், கோயில் இருக்கலாம். மசூதி இருக்கலாம், எல்லாவற்றுக்கும் மேலாக அந்த இடத்திலே எல்லாம் மனிதன் இருக்க வேண்டும். அதுதான் மார்க்கத்தினுடைய மிக முக்கியமான நோக்கம். மசூதி இருந்து மனிதன் இல்லாவிட்டால், கோயில் இருந்து மனிதன் இல்லாவிட்டால், Church இருந்து மனிதன் இல்லாவிட்டால், இவையெல்லாம் விழலுக்கு இறைத்த நீர். இவற்றையெல்லாம் உடைத்து நொறுக்க வேண்டும். பெரியார் சொன்னது சரி என்று நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். எனவேதான் பெரியார் 'மனிதனை நினை, கடவுளை மற' என்றார். இதைச் சொல்வதற்குக் காரணம் என்ன? சண்டையிட்டுக்கொள்கிறார்கள். மசூதியை வைத்துச் சண்டை போடுகிறார்கள், கோயிலை வைத்துச் சண்டை போடுகிறார்கள். எனவே, இவற்றையெல்லாம், இந்த அறத்திலெல்லாம் தலையாய அறம் மனித அறம், மனிதாபிமானம். அதைக் காப்பாற்ற இந்தத் துறை முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்புத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

பிற்பகல் *12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ.அ. ஆண்டமுத்து.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மற்றும் தமிழ் வளர்ச்சி-பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது கழக ஆட்சியில்தான் இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக எல்லா கோயில்களுக்கும் முறைப்படி பூஜைகளும், திருவிழாக்களும், குடமுழுக்கு போன்றவைகளும் நடந்து வருகின்றன.



*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குத்தாலம் பி. கல்யாணம் தலைமை)*

நிலச்சுவான்தார்கள் ஆக்கிரமிப்பு செய்த லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கோயில் பூமிகள், சொத்துகள் எல்லாம் இப்போது மீட்கப்பட்டு, அரசு அவற்றை எடுத்துக்கொண்டிருக்கிறது. பெரிய தனவந்தர்கள் ஆக்கிரமிப்பு செய்த நிலங்களை எல்லாம் எடுத்து நிலமற்ற விவசாயிகளுக்குக் குத்தகைக்கு விடலாம். கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்ய அனுமதிக்கலாம். கோயில் நிலங்களை விற்பதற்கு அனுமதிக்கக் கூடாது. ஏராளமான கோயில் நிலங்களை இப்போது விற்று பணம் சம்பாதித்து வருகின்றார்கள்.

பவானிசாகர் தொகுதியிலே கோட்டீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமாக 40 ஏக்கர் நிலம் உண்டு. அதை குறிப்பிட்ட சிலர் மட்டும் அனுபவித்து வருகின்றார்கள். ஆனால் கோயிலுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. அந்தக் கோயிலுக்குச் சரியானபடி பூஜை நடைபெறுவது இல்லை. திருப்பணி செய்வதில்லை. இதன்மூலம் எந்தவிதமான பயனும் இல்லாமல் அந்தச் சொத்துகள் எல்லாம் வீணாகி வருகின்றன. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அங்கு பெரிய கோயில்கள் நிறைய இருக்கின்றன. பன்னாரி அம்மன் கோயில், பேரூர், பழனி போன்ற கோயில்கள் அருகில் இருக்கின்றன. அங்கெல்லாம் வருடா வருடம் இலவசத் திருமணங்கள் ஏழையெளிய மக்களுக்கு நடத்த வேண்டும். வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள் கட்டி கோயில் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். பவானிசாகர் தொகுதியிலே எலத்தூர் கிராமத்திலுள்ள ஈஸ்வரன் கோயில், அம்மன் கோயில் மற்றும் பெருமாள் கோயில் ஆகியவை மிகப் பழமையான கோயில்களாகும். பவானி வட்டத்தில் பட்டைக்காவலயம் என்ற இடத்திலே சிவன் கோயில், விஷ்ணு கோயில், முருகர் கோயில் போன்ற பழமைவாய்ந்த கோயில்கள் திருப்பணி நடைபெறாமல் பூஜைகளின்றி இருக்கின்றன. இதில் அரசு கவனம் செலுத்தி அங்கெல்லாம் முறைப்படி பூஜைகளும், ஆராதனைகளும் நடைபெற ஆவன செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பன்னாரி அம்மன் கோயிலில் பக்தர்கள் தங்குவதற்கு விடுதிகள் இல்லை. இலட்சோபலட்சம் மக்கள் வருகின்ற அந்த இடத்திலே அவர்கள் எல்லாம் வெறும் தரையிலே படுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது காட்டுப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால் அங்கு மிருகங்கள் எல்லாம் வந்து தொந்தரவு கொடுக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது.

உலகிலேயே மிகப் பெரிய அய்யன் திருவள்ளுவர் சிலையை குமரி முனையிலே வைத்து, உலகிலேயே மிகப் பெரிய சாதனையை நிகழ்த்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழியை இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாகக் கொண்டு வருவதற்காக தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வரும் நமது முதல்வர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

பெண்கள் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். மகாத்மா காந்தி அவர்கள் ஒரு பெண் என்று தைரியமாக இரவிலே போய் திரும்பி வருகின்றாளோ அன்றுதான் உண்மையான சுதந்திரம் கிடைத்ததாக அர்த்தம் என்று சொன்னார்கள். அதற்கேற்ப இப்போது ஆயிரக்கணக்கான மகளிர் காவலர்களைப் பணியிலே அமர்த்தி, நடப்பு ஆண்டில் 4000 பெண்களை இங்கு காவலர்களாக நியமனம் செய்ய உள்ளார்கள் என்பது பெருமைக்குரிய விஷயமாக இருக்கிறது. பெண்களுடைய வாழ்வுக்கு வாழ்ந்து காட்டுவோம் என்ற திட்டத்தின் மூலமாக குழுக்கள் அமைத்து உதவி செய்வதைப் பாராட்டுகின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** இப்போதுதான் நான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது, பேசுங்கள்.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** என் தொகுதி பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே சமத்துவம் ஏற்பட வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமத்துவபுரங்களை இப்போது அமைத்து வருகின்றார்கள். என்னுடைய தொகுதியிலே குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால், இன்னும் என்னுடைய தொகுதியிலே சமத்துவபுரம் அமையவில்லை என்பதை நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



பவானிசாகர் பூங்காவிற்கு எதிரிலே Tourism Development Corporation மூலமாக ஓர் உணவு விடுதியும், தங்கும் விடுதியும் அமைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் லட்சோபலட்சம் மக்கள் வருகின்ற இடம் அது. ஆகையால் அங்கு அது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பவானிசாகர் பேருந்து நிலையம். அங்கே அது கேட்பாரற்றுக் கிடக்கிறது. பேருந்து நிலையம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், அதைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் *12-45*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மற்றும் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உலக அரங்கில் பாரத நாட்டின் சிறப்பை எடுத்து இயம்பக்கூடிய பாரதப் பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம், கலைகள் ஆகியவற்றின் இருப்பிடமாக இருப்பது தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ்நாட்டினுடைய ஆலயங்களைப் பாதுகாப்பதன்மூலம் பாரத நாட்டிற்கு நாம் சிறப்பு சேர்க்கின்றோம் என்ற வகையில் இந்த ஆலயங்கள், பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு, பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டன. அதுபோன்று இப்போது நம்மால் கட்ட முடியுமா என்று சொன்னால் நிச்சயமாக முடியாதுதான். ஆனால், அவற்றைப் பாதுகாக்க என்னென்ன முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அத்தனையையும் நம்முடைய அறநிலையத் துறை கண்டிப்பாக எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்னும் அதற்கு அதிகமான சிறப்புக் கவனம் கொடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பெரியவர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் பேசும்போது அறநிலையத் துறையில் நியமிக்கக்கூடியவர்கள், அறங்காவலர்களாக இருந்தாலும் சரி, ஆலயத்தினுடைய பணியாளர்களாக இருந்தாலும் சரி, அந்தத் துறையின்மீது அல்லது செய்யும் தொழிலின்மீது ஆர்வமும்

அக்கறையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய ஓர் அடிப்படைக் கருத்தைச் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். உண்மையிலேயே ஆலயத்தில் பணிக்கு வரக்கூடியவர்கள் அதில் பற்றும் பாசமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த அளவிற்கு ஒரு கல்வி கொடுக்கக்கூடிய சூழ்நிலை நமக்கு இல்லாமல் போனாலும்கூட, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், வெள்ளிமலையில் விவேகானந்தா ஆசிரமம் என்று அமைத்து இலங்கை உட்பட, தமிழகத்திலுள்ள பல பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான சமய வகுப்புகளை, ஆசிரியர்களை நியமித்து, தமிழினுடைய அடிப்படையில் பாரதப் பண்பாடு, இந்து கலாச்சாரம் என்று இவற்றை எல்லாம் எடுத்து இயம்பக்கூடிய வகையில் ஆரம்பக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி, முதுநிலைக் கல்வி என்று ஐந்து வகையான பாடத் திட்டங்களை அமைத்து அதற்குண்டான புத்தகங்களை எல்லாம் கொடுத்து ஐந்தாவது நிலையில் வெற்றி பெறக்கூடியவர்களுக்கு வித்யா ஜோதி என்றவொரு பட்டமும் கொடுக்கின்றார்கள். உண்மையிலேயே ஆச்சரியமாக இருக்கின்றது. அவர்கள் பாடும் பாடல்களில் தேசியமும் தெய்வீகமும் கலந்து அவர்களுடைய உணர்வுகள் இருக்கின்றன. அதுபோன்று இந்தக் கல்வி நிறுவனத்திற்கு, விவேகானந்தா ஆசிரமத்திற்கு, தமிழ்ப் பண்பாட்டுக் கல்வி போதிக்கக்கூடியவர்களுக்கு, நம்முடைய துறை ஏதாவது ஒரு வகையில் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க முடியுமா? நம்முடைய பொருளாதார நிலைகூட எனக்குத் தெரியும். இருந்தாலும்கூட, ஏதாவது ஒருவகையில் அவர்களுக்கு உதவ முடியுமா? ஊக்குவிக்க முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று இந்த வேளையில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். ஆலயத்தினுடைய சொத்துகள் எந்த நோக்கத்திலே வந்ததோ அந்த நோக்கம் நிறைவேறியதற்குப் பிறகுதான் மற்ற காரியங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதில்கூட இந்தத் துறை கண்டிப்பாக இருக்க வேண்டும்.

ஆலயத்தில் பணியாற்றக்கூடியவர்களுக்கு மாதம் 150 ரூபாய்தான் சம்பளம் கிடைக்கிறது. அந்த அளவிற்குக்கூட பண வசதி இல்லாமல் இருக்கிறார்கள். காரணம் இந்தத் துறையில் கிடைக்கின்ற வருமானம் போதாது. இந்த வருமானத்தை அதிகப்படுத்த என்ன வழி என்பதை நிச்சயமாகச் சிந்திக்க வேண்டும்.



ஒவ்வோர் ஆலயத்திற்கும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. ஐந்து ஏக்கர் உள்ள ஒரு நிலச்சுவாந்தாருக்கு, ஒரு சிறிய விவசாயிக்கு வரக்கூடிய வருமானம் ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ள ஆலயத்திற்கு வருவதில்லை. அதிலே நிலைமைகள் பலவிதமாக இருக்கின்றன. 1956 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட குத்தகைதாரர்கள் இப்போதும் அதே குத்தகைத் தொகையைக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் கண்டறிந்து அரசாங்கம் மாற்ற வேண்டும்.

அதுபோன்று எங்களுடைய மாவட்டத்தில், பல ஆலயங்களில் மகாராஜா காலத்தில் கட்டப்பட்ட ஊட்டுப்புரைகள் இருக்கின்றன. அந்த ஊட்டுப்புரைகளை கல்யாண மண்டபங்களாக மாற்றி, அவற்றை வாடகைக்கு விட்டு வருமானம் ஈட்ட முடியும். (மணியடிக்கப்பெற்றது) சுருக்கமாகப் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திங்கள்சந்தை ராதாகிருஷ்ணன் கோயில், தோவாளை முருகன் கோயில், இவற்றிற்கெல்லாம் ஏராளமான சொத்துகள் தேசிய நெடுஞ்சாலையையொட்டி இருக்கின்றன. இவற்றில் கடைகளைக் கட்டுவதற்கு வியாபாரிகள் தயாராக இருக்கிறார்கள். கடைகளைக் கட்டி அந்தத் தொகையை deposit-ஆக வைத்துக்கொண்டு, மாதா மாதம் வாடகை தருகின்றோம் என்கிற திட்டத்திற்குக்கூட அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, அங்கேயெல்லாம் கடைகளைக் கட்டி வாடகைக்குக் கொடுத்தால் கோயிலுக்கு அதிகமான வருமானம் வரக்கூடிய வாய்ப்பு உண்டு.

பிற்பகல் 12-50

அதேபோன்று பல ஆலயங்களில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள பெரிய பெரிய தேர்ச் சக்கரங்கள், தேர் அச்சுகள் கிட்டத்தட்ட கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பல வார்ப்புகள், பாத்திரங்கள் எல்லாம் அப்படியே பயன்படுத்த முடியாமல் முடங்கிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் நல்லபடியாக பொது ஏலம் மூலம் விட்டால் நல்ல தொகை வரும். அந்தத் தொகையை அந்தந்த ஆலயங்கள் பெயரிலேயே வைப்பு நிதியாக வைத்து, அந்த ஆலயங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும். (மணியடிக்கப்பெற்றது)

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி பேச நேரமில்லாத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அவற்றைப் பரிசீலிக்கக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஐந்து நிமிடத்திற்குள் பேசி முடிக்கவும்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி தழைக்க வேண்டும். தமிழன் தலை நிமிர வேண்டும் என்ற அடிப்படையிலே, ஐந்தாம் வகுப்பு வரையிலும் தமிழகத்தில் உள்ள கல்விக்கூடங்களில் தமிழ் வழிக் கல்வி என்ற தமிழ்நாடு அரசின் உத்தரவை உயர்நீதிமன்றம் ரத்துச் செய்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு தளர்ந்துவிடாமல், அந்த முயற்சியிலே மேல்நீதி மன்றங்களில் மேல்முறையீடு செய்வது என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், அதை இந்த மாமன்றத்திலே ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றி, அதை ஒரு சட்டமாக மாற்ற வேண்டுமென்று புதிய தமிழகம் கட்சியினுடைய சார்பாக நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் 1971 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு புரட்சிகரமான சட்டத்தை இந்த அரசு அன்று அறிவித்தது. அந்தச் சட்டத்திற்கும் டெல்லி உச்சநீதிமன்றத்திலே தடை விதிக்கப்பட்டு இப்போது அது அமலாகாமல் இருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு அன்று போடப்பட்ட தடையுத்தரவு இடைக்காலத் தடையா அல்லது இறுதித் தீர்ப்பு வந்து விட்டதா? அப்படியென்றால் அதைத் தொடர்ந்து இந்த அரசு மீண்டும் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதற்கு என்ன நடவடிக்கை மேற்கொண்டு எடுக்க இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்த மாமன்றத்திலே பல உறுப்பினர்கள் பேசுகின்றபோது, கோயில் நிலங்களை, அதிலும் குறிப்பாக விளை நிலங்களை உழுபவனுக்கே சொந்தமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதில் நான் வேறுபடுகிறேன். விளை நிலங்களில் உழுபவன் யார் என்பதை விளக்காமல் வெறும் குத்தகைதாரர்களை உழுபவன் என்று அறிவித்து, அவர்களுக்கே நிலத்தை வாரி வழங்குவதைப் புதிய தமிழகத்தின் சார்பாகக் கடுமையாக நான் எதிர்க்கிறேன். அதை எதிர்ப்போம். இங்கே வேதனைதர கூடிய விஷயம் என்னவென்றால், பல்லாயிரக்கணக்கான விவசாயத்



தொழிலாளர்களுக்கு நிலங்களைக் கொடுங்கள் என்று சொல்ல வேண்டிய பொதுவுடமைக் கட்சிக்காரர்களே குத்தகைதாரர்களுக்கு நிலங்களைக் கொடுங்கள் என்று சொன்னது எந்த விதத்திலே நியாயம் என்று தெரியவில்லை. இந்த நாட்டிலே ஏழை எளியவர்களாக, இன்னும் ஓர் ஏக்கர் நிலம்கூட சொந்தமாக இல்லாமல் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள், அதிலும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலே ஆதீனங்களுக்குச் சொந்தமான நிலங்களிலே கூலிக்காரர்களாக · இப்போது வேலை பார்த்துக் கொண்டு இருக்கக்கூடியவர்கள், அவர்களுக்கு நிலங்களை—அரசு நிலங்களாகட்டும் அல்லது கோயில் நிலங்களாகட்டும் அல்லது ஆதீனங்கள் நிலங்களாகட்டும், அவற்றை—சொந்தமாக்குங்கள், குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களுக்கு, அதிலும் தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு முன்னுரிமை தாருங்கள் என்பதுதான் புதிய தமிழகத்தினுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய தமிழகம் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் தெரிந்து சொல்கிறாரா அல்லது தெரியாமல் சொல்கிறாரா என்று தெரியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி அன்று முதல் இன்று வரையிலும், நிலத்திலே நேரடியாக உழுது உற்பத்தி செய்கின்றவர்களுக்குத்தான் நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்துகிறதே தவிர, நிலம் இல்லாதவர்களுக்கெல்லாம் நிலத்தைக் கொண்டுபோய்க் கொடுங்கள் என்று சொல்லவில்லை. அன்றும் இதைத்தான் சொன்னோம், இன்றும் இதைத்தான் சொல்கிறோம். நிலத்திலே உழக்கூடியவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைச் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். நேரடியாக உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதிலே என்ன பிரச்சினை? நிலத்திற்கு யாரைச் சொந்தக்காரர்களாக்க வேண்டும் என்ற விவரங்களை அவர் சொல்ல வேண்டும். உழுபவனுக்கா, மற்றவர்களுக்கா என்று விளக்கமாகச் சொல்லாமல் இருப்பது சரியாக இருக்காது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உழுபவர்கள், விவசாயத் தொழிலாளர்கள் உழவர்களா, இல்லையா என்பதை பொதுவுடமைக் கட்சி சகோதரர் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே ஒருவருக்கொருவர் விளக்கிக்கொண்டு போனால், அவையின் நேரம் அதிகமாகிவிடும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கோயிலுக்குச் சொந்தமான நிலங்களையோ அல்லது அரசுக்குச் சொந்தமான பெரும்பான்மையான நிலங்களையோ குத்தகைக்கு வைத்திருக்கக்கூடியவர்கள், உயர் வகுப்பினர், வசதி படைத்தவர்கள், மேல்தட்டில் இருக்கக்கூடியவர்கள். அந்தக் குத்தகைதாரர்கள் நிலங்களில்தான் விவசாயத் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள்.

பிற்பகல் *12-55*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே எல்லாம் ஜாதியைப் பார்க்க முடியாது. இதிலே எல்லாம் ஜாதியை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்து கொண்டு இருக்க முடியாது. யார் நேரடியாக உழுகிறானோ, யார் விவசாயம் செய்கிறானோ—விவசாயி—அவனுக்குத்தான் நிலத்தை சொந்தமாக்க வேண்டுமென்று சொல்கிறோமே தவிர, அதிலே போய் ஜாதியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை. இரண்டுக்கும் வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும். விவசாயத் தொழிலாளி உழக்கூடியவனா, இல்லையா? ஏனென்றால், குத்தகைதாரர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும்—இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அதை கம்யூனிஸ்ட் தோழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குத்தகைதாரர்கள் நேரடியாக இறங்கி உழுவது இல்லை. அவர் சொல்வது, நேரடியாக இறங்கி உழுகிறார்களே அவர்களுக்கு என்று. நேரம் ஆகின்றது, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இரண்டும் ஒன்று கிடையாது. அதுதான் வித்தியாசம். இரண்டும் ஒன்றல்ல. விவசாயத் தொழிலாளர்கள் வேறு, குத்தகைதாரர்கள் வேறு.

**மாண்புமிகு திரு. கோ.சி மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் என்பதில் இரண்டு இருக்கிறது. ஒன்று, மொத்தக் குத்தகைதாரர். ஒருவர் உள் குத்தகைதாரர். ஒருவர் நிலச் சொந்தக்காரர், விவசாயி. எல்லோருமே விவசாயிகள்தான். ஆனால், மொத்தக் குத்தகைதார்கள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள். அந்த மொத்தக்



குத்தகைதாரர்கள் இப்போது இல்லை. ஆகையினால், நேரடியாக நிலத்தை யார் உழுகிறார்களோ அவர்கள் குத்தகைதாரர்கள். அவர்களுக்கு உழுநிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற முறைப்படி கொடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சி கோருகிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை, தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களிலே குத்தகைதாரர்களாக இருக்கக்கூடியவர்கள் நிலத்தை உழக்கூடியவர்கள் அல்ல. இதுதான் யதார்த்தமானது. எனவே, உழக்கூடியவர்களுக்கு நிலம் சொந்தமாகின்றபோது மேல் தட்டிலே இருக்கிறவர்களுக்குத்தான் அது பயனளிக்குமே தவிர, விவசாயத் தொழிலாளர்களுக்குப் பயன்தராது. அதிலும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கக்கூடிய 90 சதவிகிதம் பேர்களுக்கு பலன் அளிக்காது. (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, அமைச்சர் அவர்கள் கோயில் நிலங்களிலே வணிக வளாகம் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். அந்த வணிக வளாகங்கள் கட்டப்படுகிறபோது அதிலே குறைந்தபட்சம் 50 சதவிகித கடைகளையாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும்.

அடுத்து, மண்டகப்படி. இந்தியாவில், தமிழ்நாட்டில் பெரும்பாலானவர்கள் வேறு மதத்திற்கு மாறிச் செல்வது இந்து மதத்திலே இருக்கக்கூடிய சாதிய வேறுபாடுகள் காரணமாகத்தான். நாங்கள் இந்துக்களாகவே இருக்கிறோம், சமமாக நடத்துங்கள் என்ற அடிப்படையிலே கோயில்களில் கும்பிடச் செல்லக்கூடியவர்களுக்கு சம மரியாதை அளிக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையிலே கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் கோயிலிலே தேவேந்திரகுல மக்களுக்கு, அதைப்போல அறந்தாங்கி பகுதியிலே ஆவுடையார் கோயிலிலே, பேயாடிக்கோட்டையிலே, அதேபோல... (மணியடிக்கப்பெற்றது) மிக முக்கியமானது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேசி அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** விளங்காத்தூர் கிராமத்தில் மற்றும் தமிழ்நாட்டில் எந்தெந்த கிராமங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மண்டகப்படி கேட்கிறார்களோ அங்கே எல்லாம் விழாக் காலம் முடிவதற்கு முன்பாகவே மண்டகப்படி கொடுப்பதற்கு இந்த அரசு

ஆணை பிறப்பிக்க வேண்டும். அதைப்போல தேர்வடம் பிடித்து இழுப்பதற்கு சம உரிமை வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. 5 மணித் துளியில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டினுடைய தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டைகள் சட்ட நிருவாகம், தமிழ் வளர்ச்சி பண்பாடு மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றியினைச் சொல்லி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை மட்டும் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை அனுபவித்து வரக்கூடிய குத்தகைதாரர்கள் இன்னும் ஏமாற்றி முழுமையாக மோசடி செய்து வரக்கூடிய நிலையிலே நிர்வாகம் இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இந்த நிர்வாகத்தை சீர் செய்ய வேண்டுமென்று முயற்சித்தாலும்கூட, ஏய்ப்பவர்கள் ஏய்த்துக் கொண்டே இருக்கின்ற காரணத்தாலே, மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறைக்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே, இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டிலே தமிழ்மொழி வளர வேண்டும் என்ற பேராவலோடு சிறந்த முறையிலே செயலாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டுவது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தாலே நம்முடைய அமைச்சர் அவர்களுடைய சீர்மிக்க அந்தப் பணியை இந்த நேரத்திலே நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டுகிறேன்.

வருமானம் இல்லாத திருக்கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. இந்தக் கோயில்களுக்கு மின்சாரக் கட்டணம்கூட கட்ட இயலாத ஒரு நிலை இருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணம் விதிப்பதைப்போல, கூடுதலான மின் கட்டணம் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கட்டணத்தை குறைக்க வேண்டும், வருமானம் இல்லாத கோயில்களுக்கு இலவச மின்சாரத்தை வழங்கக்கூடிய திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, பழனி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலைப்போல இல்லாமல் பல்வேறு ஆலயங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு ஊதியம் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குக் கூடுதலாக ஊதியம் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலேகூட பல்வேறு மாநிலங்களிலிருந்து பக்தர்கள் வந்து வழிபட்டுக் கொண்டிருக்கின்ற பிரசித்திபெற்ற, அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில் இருக்கிறது. அதன் திருத்தேர் பழுதுபட்டு இப்போது பாழடைந்த நிலையில் இருக்கிற காரணத்தால், அதைப் புதுப்பிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதைப்போல, சோழப்பாடி என்ற ஊரிலே வீரபத்திரசுவாமி திருக்கோயில் மிகப் பிரசித்த பெற்ற ஆலயம். அந்த ஆலயத்தையும் புதுப்பிப்பதற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

தமிழ் வளர்ச்சிப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த உலகத்திலேயே தமிழ்மொழிக்கு நிகரான இனிமையான மொழி இல்லையென்று சொல்கிறார்கள்.

'தேனினும் இனிய நற்செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழும் மொழியே
ஊனினும் ஒளிர்விடும் ஒண்டமிழ் மொழியே,

என்றெல்லாம் தமிழைப் போற்றி, பாராட்டுகின்ற நேரத்திலே தமிழ்வழிக் கல்விக்குச் சோதனை ஏற்பட்டிருக்கக்கூடிய காலத்திலே தமிழர்களாக இருக்கக்கூடிய நாமெல்லோரும் சிந்திக்கக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எப்பாடுபட்டாவது தமிழ்வழிக் கல்வியை மீண்டும் கொண்டு வருவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளிலெல்லாம் தாய்மொழிக் கல்வி இருக்கிற காரணத்தால்தான் அவர்கள் மேலோங்கி வாழ்கின்ற நிலை அந்த நாடுகளில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரையிலே எல்லாப் படிப்புகளும் தாய்மொழியிலேயே வருவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், தருமபுரி மாவட்டத்தில் கர்நாடக எல்லையோரத்தில் இருக்கின்ற ஒசூர் போன்ற பகுதிகளில் தமிழ்ப் பாடம் கற்றுக்கொடுக்காத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட எல்லையோரப் பகுதிகளிலும், எல்லாப் பள்ளிகளிலும் தமிழில் பாடம் கற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமமுடைய அரசு ஆணையின்படி அரசு அலுவலர்கள் எல்லோரும் தமிழிலேயே கையொப்பமிட வேண்டுமென்று இருந்தாலும்கூட, இன்னும் அரசு அலுவலர்கள் தமிழில் கையொப்பமிடாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே எல்லோரும் தமிழிலேயே கையொப்பம் இடுவதற்கு கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமிழிலேயே கையொப்பம் இடுவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விளம்பரப் பலகையைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களும், துறையினுடைய அமைச்சர் அவர்களும் கடுமையாக ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். 10 பாகம் என்றால், அதில் 5 பாகம் தமிழிலும் 3 பாகம் அவர்கள் விரும்புகிற ஆங்கிலத்திலும் (மணியடிக்கப்பெற்றது) 2 பாகம் அவரவர் விரும்புகிற மொழியிலும் இருக்கலாம் என்று ஆணை பிறப்பித்து இருந்தாலும்கூட இன்று வரை அந்த நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, எங்கு பார்த்தாலும் தமிழ்மொழிக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய வகையில் விளம்பரப் பலகை அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு போன்ற எல்லாப் பாடநூல்களையும் தமிழ்மொழியில் மொழி பெயர்த்து வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்மொழியில் 'தையல்' என்ற வார்த்தையை 'தய்யல்' என்றும் அதேமாதிரி 'மையம்' என்பதனை 'மய்யம்' என்றும், எழுதக்கூடிய அளவுக்கு பெரியார் வழித் தோன்றலாகிய நம்முடைய அரசு சீர்த்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மத்தியிலும் தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டுமென்று நம்முடைய தமிழக அரசும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு



வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேகூட கடந்த ஆண்டு தமிழை மத்தியிலும் ஆட்சிமொழியாக ஆக்கவேண்டுமென்று சொல்லி, எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டை நடத்தி, நம்முடைய பாரதப் பிரதமர் வாஜ்பேயி அவர்கள்கூட அறிவிப்பைச் செய்தார்கள். தமிழ் மத்தியில் ஆட்சிமொழி ஆக்கப்படும் என்று வாக்குறுதி அளித்து, அந்த நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. மீண்டும், நம்முடைய தமிழக அரசுக்கு உற்ற துணையாக மைய அரசு இருக்கிற காரணத்தால் தொடர்ந்து நம்முடைய தமிழ் மத்தியிலும் ஆட்சிமொழியாக ஆக்குவதற்கு முதல்வர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழர் பண்பாடு, கலாச்சாரம் எல்லாம் இப்போது சினிமாத் துறையால் சீரழிந்து கொண்டிருக்கிற ஓர் அவல நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, கிராமியக் கலையை வளர்க்கக்கூடிய வகையில், தமிழன் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய வகையில், 'தமிழன் வாழ்ந்தால் தட்டிக் கொடு, தமிழினம் வீழ்ந்தால் முட்டுக் கொடு' என்ற வகையிலே, தமிழுக்கும், தமிழினத்திற்கும் பெருமை சேர்க்கின்ற வகையில், தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு நிலைபெறக்கூடிய வகையிலே, தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆக்கபூர்வமான காரியங்களை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன். தமிழ் மொழியை வைத்தும், தமிழ்மொழி வளர்ச்சியை வைத்தும், வளர்ந்த இயக்கங்களில் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்று என்பதை வரலாறு மறக்க முடியாது. அண்ணா அவர்களும், இன்றைய முதல்வர் அவர்களும் ஆற்றியிருக்கின்ற பங்களிப்பையும் யாரும் மறுக்க இயலாது.

பிற்பகல் 1-05

இந்தத் துறை மானியத்தின்போது, நம்முடைய தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சர்க்கரைப் பொங்கல் அளிப்பதாக பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள்; சர்க்கரைப் பொங்கல்

அளித்தார்கள். வியாழக்கிழமை அன்று சென்னை உயர் நீதிமன்றம் அளித்திருக்கின்ற கசப்பான உணர்வு நீங்க வேண்டுமென்று சர்க்கரைப் பொங்கலை அவர் அளித்திருக்கிறார் என்று நான் எண்ணுகிறேன். பொதுவாக, இந்த அரசாங்கம் முதல் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயமாக பயிற்று மொழியாக வேண்டுமென்று அரசாணை பிறப்பித்தது. இந்த அரசாணையை தமிழ் மாநில காங்கிரஸ் முழுமையாக வரவேற்கிறது, தமிழ் வழியாகக் கல்வி கற்பதிலே எந்தவொரு ஆட்சேபணையோ அல்லது வெறுப்போ கிடையாது, முழுமையாக ஆதரிக்கிறது. ஆனால், இந்த அரசாங்க ஆணையை வெளியிட்ட அரசு, இந்த அரசாங்க ஆணைக்குத் தரப்படக்கூடிய அத்தனைச் சட்ட பாதுகாப்பையும் அளித்து வெளியிட்டிருக்க வேண்டும். அப்படி வெளியிட்டிருந்தால், தமிழ் மாநில காங்கிரஸ் அதைப் பெரிதும் வரவேற்றிருக்கும், பெரிதும் மகிழ்ந்திருக்கும். ஆனால், அத்தகைய பாதுகாப்பை இந்த அரசாங்கம் தரத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன். ஏறக்குறைய 40 ஆயிரம் பள்ளிகளிலே படிக்கக்கூடிய இலட்சக்கணக்கான மாணவர்களை, பெற்றோர்களை, ஆசிரியர்களை பாதிக்கக்கூடிய ஓர் அரசாங்க ஆணையை வெளியிடுகிறபோது....

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய கல்விக் கொள்கை அந்த நாள் முதல் தொடர்ந்து அரசு ஆணைகள் மூலமாகத்தான் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அரசாங்கம் நடைமுறைக் கல்விக் கொள்கைக்கே சட்டம் செய்ய வேண்டுமென்ற அவசியம் பொதுவாக எந்த மாநிலத்திலேயும் இல்லை. அப்படியொரு சட்டம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல்தான் இருமொழிக் கொள்கையும் அறிஞர் அண்ணா அவர்களால் தீர்மானமாகவே நிறைவேற்றப்பட்டது. அந்தக் கொள்கையைச் சொல்ல அரசுக்கு முழு அதிகாரம் உண்டு. நீதிமன்றம் ஏற்பதற்கும் ஏற்காததற்கும் வேறு காரணங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** என்னுடைய கேள்வியெல்லாம் குகைக்குளே நுழைகின்றபோது, குகைக்குள்ளேயிருந்து எப்படித் திரும்புவது என்ற கவனத்தோடுதான் குகைக்குள்ளே நுழைய வேண்டும். ஒரு கடுமையான அரசாங்க ஆணையை, இதுவரை அமலில் இல்லாத அரசாணையை பிறப்பிக்கின்றபோது, அந்த அரசாங்க ஆணை எப்படிச் செல்லுபடியாகும், எப்படிச் செல்லுபடியாகத்தக்கதாக மாற்ற முடியும் என்று அரசாங்கம் பல மூத்த வழக்கறிஞர்களை அழைத்துப் பேசி



எந்தவோர் ஓட்டை உடைசலும் இல்லாமல் வெளியிட்டிருக்க வேண்டும் என்பதுதான் தமிழ் மாநில காங்கிரசினுடைய வாதம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை வெளியிட்டபோது அடிப்படை உரிமைகளுக்கும் இந்த ஆணை மாறானதல்ல என்று தெளிவாக அறிந்துதான் வெளியிட்டது. ஆனால், அடிப்படை உரிமைகள் என்பது பெற்றோர்கள் உரிமை என்று நீதிமன்றம் ஒரு கருத்தை இப்போது அறிவித்திருக்கிறது. அடிப்படை உரிமை என்னும்போது அவர்களுடைய தாய் மொழியில் அவர்கள் பயில்வது அடிப்படை உரிமைக்கு மாறானதல்ல என்ற அடிப்படையிலேதான் அரசு முடிவு செய்தது. ஆகவே, இப்போதுகூட, அரசு ஆணையாக வெளியிட்ட காரணத்தினாலேதான் மறுக்கப்பட்டது என்று சொல்ல முடியாத அளவுக்கு, சட்டமாக வந்தாலும் அதே கருத்தை நீதிமன்றம் வலியுறுத்தக்கூடிய வாய்ப்பு தொடர்ந்து இருக்கிறது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** சட்டமன்றத்தில் ஓர் உயர் நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிப்பது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விவரம் வந்த பிறகு அதைப் பற்றிப் பேசலாம். இப்போது அடுத்த point-க்கு வாருங்கள். இன்னும் தீர்ப்பை யாரும் பார்க்கவில்லை, paper-ல் வந்ததுதான்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** Paper-ல் வந்ததுதான். பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய விஷயம் என்பதால் பேச வேண்டியிருக்கிறது. சமஸ்கிருத ஆண்டாக சென்ற ஆண்டை மத்திய அரசு கொண்டாடியது. இந்த ஆண்டை தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டுமென்று, அதுவும் புத்தாயிரம் ஆண்டு, குமரி முனையிலே அய்யன் வள்ளுவனுக்கு மிகப் பெரிய ஒரு சிலையை எழுப்பி வரலாற்றுச் சகாப்தம் படைத்திருக்கும் இந்த நாளிலே, இந்தப் புத்தாயிரம் ஆண்டை தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தியிருக்கிறது. ஆனால், வெற்றி பெற்றிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். சமஸ்கிருத வளர்ச்சிக்காக ஏறக்குறைய 30 கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது.

நம்முடைய அமைச்சர்கள் அங்கே பங்கேற்கக்கூடிய நிலையிலே நம்முடைய தமிழ் வளர்ச்சித் துறைக்காக மத்திய அரசிடம் எந்த அளவுக்கு நிதி உதவியை நாம் பெற்றிருக்கிறோம் என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன். அப்படிப் பெற்றால் மிகப் பெரிய வெற்றியாக அதைக் கொண்டாட முடியும்.

*பிற்பகல் 1-10*

அமெரிக்க அதிபர் கிளிண்டன் வருகையின்போது, பிரதம அமைச்சர் அட்டல் பிகாரி வாஜ்பேயி அவர்கள் இந்தியிலே பேசியதை நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் மறுதலித்து வருத்தம் தெரிவித்தார்கள். ஏன் வாஜ்பேயி அவர்கள் இந்தியிலே பேசினார்கள் என்று கேட்டபோது, அங்கே இருக்கின்ற வட இந்தியத் தலைவர்கள், முலாயம் சிங் யாதவாக இருக்கட்டும் அல்லது யாராக இருக்கட்டும், அவர்கள் எல்லாம் வலியுறுத்தி இந்தியிலே பேச வைத்தார்கள் என்று செய்தி வருகின்றது. வட இந்தியத் தலைவர்களுக்கு ஒப்பாக ஆற்றலிலே சற்றும் சளைக்காதவர்களாக இருக்கின்ற மத்திய அமைச்சர்கள் பங்கேற்கக்கூடிய மத்திய அரசிலே அத்தகைய நெருக்கடியை வாஜ்பேயி அவர்களுக்கு ஏன் நம்முடைய அமைச்சர்கள் தரவில்லை என்பதுதான் எங்களுடைய ஆதங்கம்? ஒரு சர்வதேசத் தலைவர் வருகின்றபோது, நம்முடைய பிரதம அமைச்சர், தலைமை அமைச்சர் எல்லோருக்கும் புரியும்படியாக, ஆங்கிலத்திலே பேசுகின்ற முறையைப் பின்பற்றியிருந்தால், நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர்கூட வருத்தப்பட்டிருக்கமாட்டார்கள். ஆனால், அத்தகைய ஆளுமையை ஏன் நம்முடைய அமைச்சர்கள் செலுத்தத் தவறினார்கள் என்றுதான் கேட்க விரும்புகின்றேன்.

அதேபோல, நம்முடைய சென்னைத் தொலைக்காட்சியைப் பொறுத்தவரையிலே, காலையிலே அரை மணிநேரம் தமிழ் ஒளிபரப்பை நிறுத்தி, இந்திக்கு அவர்கள் இடம் அளித்திருக்கிறார்கள். இப்போது கட்டணம் செலுத்திப் பார்க்க வசதியில்லாத கிராமப்புற மக்கள் இந்த அரை மணி நேர ஆக்கிரமிப்பை மிகவும் வருத்தத்தோடு எடுத்துச் சொல்கிறார்கள். பொதிகை போன்ற தமிழ்ச் சேனல்கள், மிகப் பரவலான வகையிலே ஆண்டெனா அளவில், கட்டணம் செலுத்தாமல் இலவசமாகப் பெறக்கூடிய ஒளிப்பரப்பை செய்ய வேண்டுமென்று நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டும். அப்படி வலியுறுத்தினால்தான் மிகச் சிறப்பாக அமையும் என்று நான் கூற விரும்புகின்றேன்.



குறள்பீடத்தைப் பற்றி நான் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். பொதுவாக, நம்முடைய தமிழ் அறிஞர்கள் பீடம் என்பதே தமிழ்ச் சொல் அல்லவென்று சொல்கிறார்கள். வித்யாபீடம், காமகோடிபீடம் என்ற வரிசையிலே குறள்பீடம் என்று இருப்பதே தமிழ்ச் சொல் அல்ல என்று சொல்கிறார்கள். அதற்கு நம்முடைய தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் நிச்சயமாகப் பதில் சொல்வார் என்று நம்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியிலே ஜனவரி ஒன்றாம் தேதி பேசுகின்றபோது, திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன விளக்கம். பீடம் தமிழ்ச் சொல் அல்ல என்பது வடமொழியாளர்கள் தமது மொழிக்குச் செல்வாக்கு தேடுவதற்காகச் சொல்வது. பீடு என்றால் பெருமை; பீடம் என்றால் பெருமைக்குரிய இடம்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பீடு என்பது வேர்ச் சொல்லாக இருந்தால் மகிழ்ச்சி. ஆனால், பீடம் என்பது வடமொழிச் சொல் என்றுதான் சொல்கிறார்கள். திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். *2-9-1997* அன்று சென்னையில் நடைபெற்ற மங்கலங்கிழார் நூற்றாண்டு விழாவிலே எங்களுடைய அன்புத் தலைவர், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். என்னால் முடிந்த மிகப் பெரிய பாரத்தை அன்றைக்குப் பேசிய கவிஞர் வைரமுத்து என்மீது சுமத்தி இருக்கிறார்கள், இந்தப் பணியை நான் செவ்வனே செய்து முடிப்பேன் என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆனால், அதே வினாவினை *7-8-1996* அன்று நம்முடைய தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தமிழ்க்குடிமகனிடம் கேட்டபோது அவர்கள் இறுத்த பதில், உலகப் பொதுமறையாகத் திருக்குறள் இருப்பதனால், அதைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். ஏன் இந்த முரண்பாடு என்று நான் கேட்க விரும்புகின்றேன். திருக்குறள் தேசிய நூலாக ஆவதற்குத் தகுதியுள்ள நூல் என்று உள்ளபோது நம்முடைய மாநில அரசு தன்னுடைய செல்வாக்கினை முழுமையாகப் பயன்படுத்தி அதை செய்துமுடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உலக தமிழ்ப் பொது மாநாட்டைப்பற்றி எந்த ஓர் அறிவிப்பும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. எப்போது நடைபெறும், நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

பொதுவாக, இந்து அறநிலையத் துறையிலே நான் இன்றைக்கு முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் தோற்றுவிக்கிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசின் பொதுநலத் திட்டங்களில் ஒன்றான தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்திற்காக திருக்கோயில் நிலங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன; இதுவரையில் 17 கிராமங்களிலுள்ள ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இந்தத் திட்டத்திற்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது எப்படிப் பொருத்தமாக இருக்கிறதென்று எனக்குப் புரியவில்லை? பாட்டன் சொத்தை விற்று பிள்ளை வீடு கட்டுவதைப்போல, ஏற்கெனவே பல அறக் காரியங்களுக்காகத் தரப்பட்ட நிலங்களை விற்று இப்போது அரசாங்கம் போடுகின்ற புதுத் திட்டங்களை நிறைவேற்றுவது எப்படி நியாயமாக இருக்க முடியும் என்று நான் கேட்க விரும்புகின்றேன்.

குறிப்பாக, மீனாட்சி பக்தராக இருக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்க விரும்புகின்றேன்; கள்ளழகருக்குச் சொந்தமான நிலத்தை அவர்கள் விற்றிருக்கிறார்கள். இதைப் பார்த்தால் கள்ளழகர் ஆற்றில் இறங்கமாட்டார்; நிச்சயமாகக் கடலில்தான் இறங்குவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே எந்தத் தவறும் இல்லை என்று நான் தீர்ப்புக் கூறுகிறேன். ஏழைகளுக்காக கோயில் சொத்தைப் பயன்படுத்துவதில் எந்தத் தவறும் கிடையாது. கோயிலுக்குப் பணம் போய்ச் சேருகிறது. என்ன maket value-வோ அந்த value-வைத்தான் கொடுக்கிறார்கள். ஆகையினாலே தவறு இல்லை. நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** கோயிலுக்குச் சொந்தமானது என்றாலும் கோயிலுக்கு என்று பாரம்பரியமாக எந்தச் சொத்தும் கிடையாது. பிள்ளைப்பேறு இல்லாதவர்கள், தர்ம காரியங்கள் செய்ய நினைப்பவர்கள்தான் கோயில்களுக்கு நிலங்களை எழுதி வைக்கிறார்கள். அவர்களுடைய நோக்கத்தைதான் நீங்கள் நிறைவேற்ற வேண்டுமே தவிர, அந்த நோக்கத்தை நீங்கள் திசை திருப்பக் கூடாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நோக்கம் எப்படி திசை திருப்புவதாக இருக்க முடியும்? நன்செய் நிலம் என்றால் நீங்கள் சொல்வது சரி, புன்செய் நிலத்தை விற்று வங்கியிலே பணம் போட்டால், அதிலே வட்டி வருகிறது அல்லவா?

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** கோயிலைப் பராமரிப்பதற்காக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விவாதம் ஏன்? நீங்கள் என்னை வம்புக்கு இழுத்தீர்கள்? இன்னும் இரண்டு நிமிடத்திலே உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 1-15*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** கோயிலைப் பராமரிப்பதற்காகவும், பொதுவாக இருக்கின்ற சமயச் சார்புள்ள காரியங்கள் நடைபெறுவதற்காகவும்தான் அத்தகைய நிலங்கள் எழுதி வைக்கப்படுவது வழக்கம். பொதுவாக காலைச் சந்திக் கட்டளை, மாலைச் சந்திக் கட்டளை என்ற கட்டளைகள் நிறைவேற்றப்படுவதற்காக அத்தகைய மானியங்களைச் செல்வந்தர்கள் அளிப்பது வழக்கம். ஆகவே, அந்த நோக்கத்திலிருந்து அரசு விலகிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்மொழியை, உயர் தனிச் செம்மொழியாக-classical language-ஆக ஆக்குவோம் என்று மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்கள் 22-8-1996 அன்று கூறி இருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்னாலே, நேரடியாக தொலைபேசியில் அழைத்து, உடனடியாக நடந்ததைச் சொன்னார்கள் மத்திய அரசுக்கு. அதன் அடிப்படையில் கடிதம் எழுதப்பட்டுவிட்டது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று அவர்கள் எழுதி இருக்கின்றார்கள். கடிதம் எழுதி ஏறக்குறைய 4 ஆண்டுகள் ஆகியும், தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்தை மத்திய அரசு இதுகாறும் வழங்கவில்லை. இதற்காக தமிழ்நாடு அரசு எடுத்து இருக்கும் நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். பொதுவாக classical language என்று ஓர் அந்தஸ்தை தமிழ்மொழிக்குப் பெற முடியாத அரசு, எப்படி தமிழை மேற்கொண்டு சிறப்பிக்க முடியும் என்பதை நான் வினாவாக விடுக்க விரும்புகின்றேன். ஆகவே,

தங்களுடைய முயற்சிகளிலே வெல்வதற்கு தமிழ்நாடு அரசிடம் இருக்கின்ற முனைப்பு போதாது; நிச்சயமாக மேற்கொண்டு முனைப்போடு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டம், சோளிங்கரில், லட்சுமிநரசிம்மசாமி கோயில் மிகவும் புகழ்பெற்ற வைணவத் தலம். அந்தத் தலத்திற்கு மலைக்குச் செல்கின்ற வகையிலே ஒரு winch அல்லது escalator உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே மொழிப்போர் தியாகிகள் சுமார் 150 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு இருக்கிறது. என்னுடைய பகுதியான திருத்தணியை ஒட்டி இருக்கின்ற பகுதியிலே 120 மொழிப்போர் தியாகிகளுக்கு எத்தனை முறை ஓய்வூதியம் கேட்டும் கிடைக்கவில்லை. இந்த ஆண்டாவது கிடைக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன். அப்படிக் கிடைத்தால், அவர்கள் தங்கள் எஞ்சியுள்ள வாழ்விலே அந்தப் பலனை அனுபவிப்பார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட முல்லைப் பெரியார் விஷயத்தைக் குறிப்பிட்டபோது, தேவிகுளம், பீர்மேடு எல்லாம் நம்மோடு இருந்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது என்று குறிப்பிட்டார்கள். தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகள் தமிழ்நாட்டோடு இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட முதலமைச்சர் அவர்கள், வட எல்லைப் பகுதியில் இருக்கின்ற திருத்தணி உள்ளிட்ட பகுதிகள் எல்லாம் தமிழகத்தில் இருப்பதற்கு நிச்சயமாகப் பெருமைப்படுவார்கள்; அப்படிப் பெருமைப்படுகிற அந்த நேரத்திலே, அதற்காகப் பாடுபட்ட வட எல்லை தியாகிகளுக்கு உரிய ஓய்வூதியத்தை அவர்கள் வழங்குவார்கள் என்று நம்புகின்றேன்; வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செந்தமிழே, உயிரே, நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்கு அளித்தேனே!



நீ நைந்தாய் எனில் நைந்துபோகும் என்வாழ்வு!
நன்விலை உனக்கு எனில் எனக்கும்தானே!

என்பதை நினைவூட்டி, பல காலகட்டங்களில், பல நூற்றாண்டுகளில் அயலவர் படை எடுப்பாலும், அயல்மொழித் தாக்குதலாலும், சில காலம் அழுந்திக் கிடந்தாலும், தக்க நேரத்திலே எழுந்து நடைபோட்டு இன்றும் என்றும் தம் சீரிளமைத் திறத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் எங்கள் சிந்தை கவர்ந்தத் தமிழை முதலில் வாழ்த்துகிறேன்.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கல்லூரியில் பணியாற்றிய என்னை அழைத்து இந்தச் சிறப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்து இருக்கிறார்கள். விருப்பால் தமிழ் கற்று, விரிவுரைக்கு நான் தேர்ந்த திருப்பாலை மண்ணின் சிறியதோர் வட்டத்தில் சுற்றித் திரிந்த என்னைப் பற்றி உயர்வு அளித்து, எங்கோ ஓர் உச்சத்தில் ஏற்றி வைத்தவர் எங்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்; அவருக்கு முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே அறம் காத்த தமிழை அரவணைத்துக் காக்கவும், வளர்க்கவும் அன்புக் கட்டளை இட்ட தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, இந்த இரு துறைகளின் சார்பில் என்னுடைய குறிப்புகளை வழங்க விரும்புகிறேன்.

அறநிலையத் துறையின் சார்பில் எடுக்கப்பட்ட பெரும் முயற்சிகளில் பெருமளவுக்கு வெற்றி ஏற்பட்டு இருக்கிறது; வளம் சேர்ந்து இருக்கிறது; கோயில்களுக்குப் பெருமை கிடைத்திருக்கிறது என்பதனை மற்ற உறுப்பினர்கள் வாழ்த்திப் பாராட்டி இருக்கிறீர்கள். பெரும்பாலான அதைச் சொல்வது மட்டுமல்லாமல், ஆங்காங்கு சில குறைகளைச் சுட்டினீர்களே தவிர, யாரும் இந்த இரு துறைகளின்மீது குற்றம் ஏதும் கூறவில்லை. எனவே, அதற்காக தனிப்பட்ட முறையிலும் உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, நிலங்களை மீட்பதில் கடும் முயற்சி எடுக்க வேண்டி இருக்கிறது; நீதிமன்றத்திற்குப் போக வேண்டி இருக்கிறது; விதிகளைப் பயன்படுத்த வேண்டி இருக்கிறது; பிறகு நேரடியான நடவடிக்கையில் பல குடிசைகளை அகற்ற வேண்டிய தேவையும் ஏற்படுகிறது. இந்த வகையில், இந்த 4 ஆண்டு காலத்தில் மீட்கப்பட்ட 1859 ஏக்கர் நிலமும், மனைகள் என்று சொன்னால் 381 வீட்டடி மனைகள் என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். அதிலே எல்லா

கோயில்களைப் பற்றிய விவரங்களும் செய்தியாளர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், அதை விரிவாகப் படிக்கவில்லை; என்றாலும் இரண்டொன்றைச் சொல்ல வேண்டும்.

இராமேஸ்வரத்திற்குச் சொந்தமான திருதுறைப்பூண்டியில் 621 ஏக்கர்; ஆளவந்தார் அறக்கட்டளை 286 ஏக்கர்; பேரூர் பட்டீஸ்வரன் கோயிலுக்குச் சொந்தமான 381 ஏக்கர்; சுசீந்திரம் கோயிலுக்கு ஆனையடி 88 ஏக்கர்; ஈரோடு மாவட்டம் பெருந்தலையூரில் 20 ஏக்கர்; திருப்பூர் நகரத்தில் 53 ஏக்கர்; இன்னும் மனைகள் என்று பார்த்தால்—திருவட்டீஸ்வரர் கோயிலில் 220 மனைகள் என்றெல்லாம் பல வகைகளிலே நாம் நிலங்களை மீட்டு இருக்கிறோம். இது கடந்த 4 ஆண்டுகளாக அறநிலையத் துறை எடுத்துக்கொண்ட கடும் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி. அந்தப் பணிகளைத் தொடருவதில் எந்தவோர் இறை அன்பரும் எதிர்ப்பாக இல்லை. காரணம், நீங்கள் எல்லோரும் சொன்னதைப்போல, இறை காரியங்களுக்காக, இறை பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள், அதற்காகத்தான் சென்று சேர வேண்டுமே தவிர, யாராலும் கையகப்படுத்தப்பட்டு தனக்குள்ளே வைத்துக்கொள்கிற தன்னலப் போக்குகளுக்கு இடம் வரக்கூடாது என்ற அடிப்படையில் இவை மீட்கப்பட்டு இருக்கின்றன. எனவே, இது இந்த அரசின் சாதனை என நான் கருதுகிறேன்.

பல கோயில்கள் இன்னும் கவனிக்கப்படவில்லை, குடமுழுக்கு நடத்தப்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. காரணம், 36,324 கோவில்களைக் கொண்ட இந்தத் துறையில், பல கோயில்களுக்கு 500 ரூபாய்கூட வருமானம் இல்லை என்பதை நீங்கள் உணருவீர்கள். 25 ஆயிரம் கோயில்கள் 2 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவான வருமானத்தையே பெறுகின்றன. ஓர் ஓதுவாரையும், ஒரு காவலரையும் போட்டாலே, அந்த வருமானம் ஓராண்டுக்குகூடப் போதாது; இதுவும் எனக்குத் தெரியும்.

பிற்பகல் 1-20

ஆனாலும் ஒப்பிட்டுப் பார்த்தால், நாகரிகமாகச் சொல்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் 605 குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், இந்த ஆட்சிக் காலத்தில், இந்த 4 ஆண்டு காலத்தில் மட்டும் 2,072 குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைச் சொல்வதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அந்த அளவிற்குக் கவனம் எடுத்துச் செய்ததோடு மட்டுமல்லாமல், எத்தனைப் பெரிய கோயில்களுக்கு,



அதையும் பார்க்கிறோம்; எத்தனை சிறிய கோயில்களுக்கு, அதையும் பார்க்கிறோம்; தென்காசி, நெல்லை, ஆண்டாள் கோயில், இராமேஸ்வரம், திருப்பரங்குன்றம், திருவேரகம் என்று சொல்லப்படுகின்ற சுவாமிமலை, திருவரங்கம், மலைக்கோட்டை, கரூர் தான்தோன்றி ஈஸ்வரர், திருத்தணி, பழனி, தாடிக்கொம்பு, பட்டீஸ்வரம், திருவண்ணாமலை, திருவானைக்காவல், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் என்று ஏராளமான பெரிய கோயில்களுக்கே குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், இலவசத் திருமணங்கள் நடத்துவதிலும்கூட இந்தத் துறை முன்நிற்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் 327 இலவசத் திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த ஆட்சிக் காலத்தில், 4 ஆண்டுகளில் மட்டும், 1,856 இலவசத் திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. எனவே, அந்த அளவிற்கு, ஏழையெளிய மக்களுக்கு ரூபாய் 3,000/- வீதம் பல இலட்சகணக்கான ரூபாய்களைச் செலவிட்டு இந்தத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்தத் துறை இதில் அதிக கவனம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் தான் இதைச் சொன்னேன்.

சொத்துப் பதிவேடுகளில்தான் நாம் மிகப் பெரிய சாதனையைப் படைத்திருக்கிறோம். பலரும் சொத்துகளைப்பற்றிப் பேசினீர்கள். அதை யாருக்குக் கொடுப்பது என்பது முதலில் எடுக்கும் முடிவல்ல. அது யாருக்குத் தெரியும் என்பதுதான் முக்கியம். பல பேருக்கு சொத்து இருப்பதே தெரியாது. இன்னும் சொல்லப்போனால், கோயில் சார்ந்த அந்தத் துறையினருக்கே அதுபற்றித் தெரியாமல் இருந்தது. ஆனால், நம்முடைய அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் வாயிலாக, பட்டியலில் சேர்ந்த கோயில்கள் 2,998. அதாவது, 10,000 ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ள கோயில்கள். அதிலே, 1996-க்கு முன்பு 944 கோயில்களுக்கு மட்டும் சொத்துப் பதிவேடுகள் இருந்தன. இந்த 4 ஆண்டு காலத்தில் பதிவேடுகள் 2,028 கோயில்களுக்குச் சொத்துப் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பட்டியலில் சேராத கோயில்கள், 10,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவை, கடந்த ஆட்சிக் காலத்தில், அதற்கு முன்பு, வெறும் 436 கோயில்களுக்கு மட்டுமே சொத்துப் பதிவேடுகள் இருந்தன. இந்த 4 ஆண்டு காலத்தில் 6,201 கோயில்களுக்குச் சொத்துப் பதிவேடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, எங்கெல்லாம் கோயில்களுக்கு நிலம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, ஆய்வர்கள், செயல் அலுவலர்கள், இணை ஆணையர்கள் ஆகிய அனைவரும் எடுத்த முயற்சியின் விளைவாக இந்த ஓராண்டில்,

1-4-1999 முதல் 31-3-2000 வரை 2,194 கோயில்களுக்குச் சொத்துப் பதிவேடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. துறையினுடைய இந்த முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

வருவாய் நீதிமன்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். என்னுடைய கேள்வி குத்தகையை—விளையாத காலத்தில் தள்ளுபடி செய்வது என்பது வேறு. ஆனால்—விளைந்த காலத்தில் செலுத்தினீர்களா என்பதுதான். நிவாரணச் சட்டத்தை வைத்துக்கொண்டு, விளைந்த காலத்திலும் குத்தகையைச் செலுத்துவதில்லை. நான் வருத்தத்தோடு சொல்கிறேன். மன்னார்குடி பகுதியில் விளைந்த காலத்தில்கூட குத்தகையைச் செலுத்த முடியவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** ஐயா, குறுக்கிட்டால் நேரமெல்லாம் போய்விடும். நான் பேசி முடித்துவிடுகிறேன்.

மன்னார்குடி பகுதியில், நாகைப் பகுதியிலே உள்ள கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் 10 ஆண்டுகளில், சில ஆண்டுகளில் உள்ளபடியே பார்த்தால, ஏராளமான அளவில் விளைந்திருக்கிறது. ஆனால், மன்னார்குடி பகுதியிலேகூட, பத்தாண்டுகளாக பல பகுதிகளுக்கு குத்தகை செலுத்தப்படவில்லை. நடைமுறையில் சொல்லப்போனால், மன்னார்குடி காட்டில்தான் இப்போது மழையே பெய்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அங்கேயும் குத்தகையை ஒழுங்காகச் செலுத்தவில்லை என்பதுதான் வருந்தத்தக்கது. குத்தகை செலுத்தாதவர்களைப்பற்றி 'தினமணி' இதழ் எழுதியிருக்கிறது. குத்தகை செலுத்தாதவர்கள், பாக்கி வைத்தவர்கள் யார் யார் என்கிற விவரங்களை இப்போது கோயில்களில் எழுத வேண்டிய தேவை வந்துவிட்டது. 'கல்கி' பாராட்டியது. 'தினமணி' அதைப் பாராட்டியது. அதனுடைய விளைவாக, திருவானைக்காவல் கோயிலில் மட்டும் பட்டியல் வைத்தவுடனேயே, வெட்கப்பட்டு—அப்படி வைத்துக்கொள்ள வேண்டும் முறையாகச் செலுத்தியிருந்தால் அப்படிப் பட்டியலில் வந்திருக்காது—93,000 ரூபாய் ஒரு வாரத்திற்குள் வசூலாகியிருக்கிறது. அதேபோல, பார்த்தசாரதி திருக்கோயில். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் எடுக்கின்ற முயற்சிகளை நாங்கள் முறையாக எடுத்தால்தான், இவையெல்லாம் வந்தால்தான் இந்தக் காரியங்கள் நடைபெறும். உறுப்பினர்களுக்குத் தெரியாதது அல்ல. ஒருகாலப் பூஜைக்கே இடர்ப்படுகிற இந்த நிலையில்தான் 8,110 கோயில்களுக்கு



இப்போது ஒருகாலப் பூஜைக்கு பணம் தரப்பட்டிருக்கிறது. இன்னும் தர வேண்டும். நான் மறுக்கவில்லை. ஒவ்வோராண்டும் 500 கோயில்களுக்குத் தந்து கொண்டேயிருக்கிறோம். ஆனாலும், ஒரு பக்கம் மிகப் பெரிய அளவிலே நலிவடைந்த கோயில்கள், ஒரு பக்கம் வலுவடைந்த கோயில்கள். வலுவடைந்த கோயில்கள் என்று பார்த்தால் 200, 300 தேறும். மற்றவையெல்லாம் நலிவடைந்த கோயில்கள்தான். இவற்றையும் நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

தமிழ் வழிபாட்டைப் பொறுத்தவரையிலே, தமிழ் வளர்ச்சித் துறையும் இணைந்து இருக்கிற காரணத்தாலும், நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினாலும் வைணவம், சைவம், பொதுவான அம்மன் என்ற முறையிலும், நவகோள்கள் என்ற முறையிலும் மொத்தம் 22 போற்றி நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதுதான் எங்கள் இலக்கு, அத்தனை நூல்களையும் இந்தத் துறை வெளியிட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாக் கோயில்களிலும்—அண்மையிலே நடைபெற்ற மீனாட்சி சுந்தரேசுவரர் விழாவிலேகூட—நானும் பேரவைத் தலைவர் அவர்களும் கலந்து கொண்டபோது—தமிழில் அந்த 108 போற்றிகளையும் போற்றிய பிறகுதான் மற்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

சமத்துவபுரம்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய தவறான கருத்து, காரணம், சமத்துவபுரம் என்பது பொதுநலன் கருதியது. அதுபோல, பள்ளிகளுக்குத் தருவது, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தருவது, இன்னும் சொல்லப்போனால் நம்முடைய பழனிசாமி அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூபாய் 93 இலட்சத்தைப் பெற்றுக்கொண்டுதான் நாங்கள் கொடுத்திருக்கிறோம். இலவசமாகக் கொடுக்கவில்லை. எல்லாத் துறைகளும் எங்களுக்கு அந்தப் பணத்தை கொடுத்ததனுடைய விளைவாக இப்போது அதன் வாயிலாகக் கிடைத்த வருவாய் மட்டும் 1 கோடியே 26 இலட்ச ரூபாய் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, வேறு எந்தக் கோயிலுக்கும் போகவில்லை, நேரடியாக அந்தக் கோயிலுக்கே வந்து அந்தக் கோயிலினுடைய பணிகள் நடைபெறுவதற்கு மேலும் ஊக்கமளிக்கிறதே தவிர, இதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், தனிப்பட்ட யாருக்கும் அப்படி

விற்பனை செய்யப்படுவதில்லை. விற்பனை செய்வதற்கு சட்டத்தில் இடமில்லை. இதுதான் உண்மை.

பிறகு செயல் அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்றுச் சொன்னார்கள். உண்மையாகச் சொல்கிறேன். பணி இடங்கள் அதிகமாக காலியிருக்கின்றன என்று சொன்ன பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் எடுத்த எடுப்பிலே 200 செயல் அலுவலர்களை அமர்த்திக்கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்து இப்போது தேர்வாணையத்தின் மூலமாக விரைவிலே அந்த 200 பேரும் பணிக்கு வர இருக்கிறார்கள். இதற்கு முன்னால் எல்லாம் 446 பேர் என்றால் 116 பணியிடங்கள் காலியாக இருந்தன. ஒரு கட்டமாக 62, அடுத்து 200, உதவி ஆணையர்கள் 7, மீண்டும் 16 என்று இத்தனைப்பேரும் இந்த ஆட்சிக் காலத்தில்தான் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பணியாற்றுகிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல் நம்முடைய துறையே பல கல்வி நிறுவனங்களை நடத்துகிறது. கிட்டத்தட்ட 44 கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. அதற்கு மட்டும் நாங்கள் செலவிட்ட தொகை—ஏனென்றால் பட்டியல் படிக்க நேரம் இல்லை—2 கோடியே 56 இலட்சம் ரூபாய். எனவே, நலிவு அடைந்திருக்கிற கோயில்கள் எவ்வளவு இருந்தாலும், வலுவுள்ள கோயில்களிலே நடத்தப்படுகிற பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்கு ஏராளமான பணம் கொடுத்திருக்கிறோம்.

காரமடை பற்றி நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். அதுபற்றிய செய்தியை மட்டும் சொல்லிவிடுகிறேன். மூலஸ்தானத்திலே உள்ள மூலவருக்கு அட்டபந்தன மருந்து சாத்துவதற்கு, 'கோவை உதவி ஆணையர், நகை சரிபார்ப்பு அலுவலர் மேற்படி பணியை கண்காணிப்பதற்கு மூலஸ்தானத்திற்கு உள்ளே சென்றபோது, அவர்களை மேற்படி திருக்கோயில் ஸ்தலஸ்தார் சுவாமிகள்—பூஜை செய்யும் பட்டாச்சாரியார்கள் அல்ல—முதல் தீர்த்தக்காரர்கள் உள்ளே செல்லக்கூடாது என்று தெரிவித்து உள்ளனர். பின், செயல் அலுவலரால் நிலைமை தெளிவாக்கப்பட்டு சீரடைந்திருக்கிறது. அது ஒரு சிறு குறையே தவிர, ஆகம விதிகளுக்கு மாறாக எதுவும் செய்யப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிறகு அர்ச்சகர்கள் நியமனம். அனைத்துப் பிரிவினரும் அர்ச்சகர்களாக ஆக வேண்டுமென்று சொன்னார்கள். அது சட்டத் துறையில் ஏற்கெனவே ஆய்வில் இருக்கிறது. இன்னும்



சொல்லப்போனால், ஏற்கெனவே எங்களுடைய துறை தந்திருக்கிற குறிப்பு, வல்லுநர் குழுத் தலைவர் நீதிபதி மகராஜன் குழுவினுடைய அறிக்கை 80 பக்கத்திற்குமேல் இருக்கிறது. இது தொடர்பாக உள்ள உறுப்பினர்கள் வாய்ப்புக் கேட்டால், அந்த முழு அறிக்கையையும் நீங்கள் படிப்பதற்கு நான் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறேன். அதிலே சட்டத் திருத்தம் தேவை என்று தெரிகிறது. அது தொடர்பாக சட்டத் துறையினுடைய கருத்தைப் பெற்ற பிறகுதான் இதுகுறித்து நான் பதில் சொல்ல முடியும். ஆனாலும், உயர்ந்த நோக்கத்தில் நம்முடைய தலைவர் அவர்கள் இதைக் கொண்டு வந்தார்கள். காரணம், ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்பது உண்மையானால், அது ஆதிதிராவிடரும் சமம் என்பதுதான்.

இன்னும் சொல்லப்போனால், 1898-வது ஆண்டில் ஏற்பட்ட கலவரங்களில் ஆதிதிராவிடர்கள் அல்ல, ஜாதி இந்துக்களிலேகூட ஒரு பிரிவினர் உள்ளே விடப்படவில்லை. அதனால், எத்தனையோ கொள்ளைகள், எத்தனையோ கொலைகள்—நான் இடத்தை எல்லாம் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. ஆனால், அதற்குப் பிறகு ஏற்பட்ட முன்னேற்றங்கள், படிப்படியாக பலரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட முயற்சிகளால், இப்போது ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் நுழையலாம் என்று வந்தது. ஆனால், இந்த ஆட்சிக் காலத்தில், எல்லா ஆட்சிக் காலத்திலும், எந்த அறங்காவலர் குழுவிலும் ஓர் அறங்காவலர் கண்டிப்பாக ஆதிதிராவிடராக இருப்பார் என்பதையும் இப்போது 10,000-க்கு மேற்பட்ட ஆதிதிராவிடர்கள் அறங்காவலர்களாக இருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அளவிற்கு நிகழ்ச்சிகளைக் கொண்டுபோகிறபோது அறநிலையத் துறை சார்பிலே எடுக்கப்படுகிற முயற்சிகள் இந்தத் துறைக்குப் பெருமை சேர்த்திருக்கிறது என்பது மட்டுமல்லாமல், வருங்காலத்தில், இன்னும் சொல்லப்போனால் நம்முடைய தலைவர் சொன்னதுபோல நியாய வாடகை நிர்ணயம், குத்தகைச் சட்டங்கள், வருவாய் நீதிமன்றங்கள் இவற்றைப்பற்றியெல்லாம் முறையான ஆய்வுகள் செய்யப்பட்டு யாருக்கும் பாதகம் இல்லாமல்—மறந்துவிடக்கூடாது— நிலத்தைக் கொடுத்தவர்களுக்கும் பாதகம் வரக்கூடாது—அவர்களுடைய உள்நோக்கங்கள் நிறைவேறாமல் தடுக்கப்படக் கூடாது—எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், 896 ஏக்கர் நிலம் கொண்ட திருவாரூர் தியாகராஜர் சுவாமிகளுக்கே கடந்த 10 ஆண்டுகளாக—ஓர் ஆண்டிற்கு 1,098 குவிண்டால் நெல் வர வேண்டியது. கடந்த 10 ஆண்டுகளாக—ஒரு படி நெல்கூட வரவில்லை என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக்

கொள்கிறேன். இதனால்தான் துறை வெவ்வேறு வகையாகச் சிந்திக்க நேர்ந்தது என்பதைச் சொல்லி அறநிலையத் துறையினுடைய அந்தப் பகுதிகளை விடுத்து, தமிழ் வளர்ச்சித் துறை குறித்த என்னுடைய குறிப்புரையை வழங்க வருகிறேன்.

நண்பர்கள் நிறையப் பேசினார்கள். செவ்வியல் மொழி, தமிழ் மத்தியில் ஆட்சிமொழி, குறளை தேசிய நூலாக்குவது, பிறகு *(மணியடிக்கப்பெற்றது)* இது தொடர்பான குறிப்புகளை....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மத்திய அரசுக்கு வலியுறுத்தியிருக்கலாமே என்றார்கள். தலைவர் அவர்கள் ஏற்கெனவே 4-1-2000-ல் அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா முடிந்து வந்தவுடனே மத்திய அரசுக்கு மடல் எழுதியிருக்கிறார்கள். அதேபோல செவ்வியல் மொழி தொடர்பாகவும் ஏற்கெனவே மத்திய அரசுக்கு நம்முடைய தலைவர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். வெகுவிரைவில் தக்க தீர்வுகள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். நம்முடைய இராமன் அவர்கள் சொன்னார்கள். மொத்தத்தில் இது உலகப் பொதுமறை. ஏற்கெனவே 1996-லே தனிப்பட்ட முறையில் ஒரு குங்குமச் சிமிழுக்குள் அடைக்க வேண்டும் என்று விடை சொன்னதாக ஞாபகம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் கருத்தும் அதுதான். அவர்களேகூட இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தமிழர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அந்த விழாவிலே வலியுறுத்தியதை நினைவு வைத்து உலகப் பொதுமறையாக அறிமுகப்படுத்துவதற்கு முன்னால் அதை இந்திய தேசத்தில் எல்லோரும் ஒப்புக்கொள்கிற, நூறு கோடி மக்கள் ஒப்புக் கொள்கிற தேசிய நூலாக வரட்டும் என்று உங்களுடைய கருத்தினை வழிமொழியும் அடிப்படையில்தான் அவரும் இதை வலியுறுத்தியிருக்கிறார். நிச்சயமாக அதைப் பெற்றுத் தருவது மட்டுமல்லாமல் —கடந்த ஆண்டு சமஸ்கிருத ஆண்டு என அறிவிப்பு—இந்த ஆண்டு தமிழ் ஆண்டு என்று அறிவிக்கச் சொல்லி, அதையும் தலைவர் அவர்கள் மடல் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். வெகுவிரைவில் அதுவும் நிறைவேறும் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் மத்திய அரசோடு



தொடர்ந்து தொடர்புகொண்டு அவற்றைச் செயல்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, தமிழ்நாட்டில் ஆட்சிமொழி என்பது இன்னும் முழுமை பெறவில்லை என்பதைக் கருத்திற்கொண்டுதான் தலைவர் அவர்கள் இந்தத் துறையைத் தனியாகப் பிரித்து தனிக் கவனம் செலுத்தச் சொல்லி, 13-5-1996-ல் அதற்கு ஆணையிட்டார்கள். அதனுடைய விளைவை நாம் இப்போது பார்க்கிறோம்.

நண்பர்கள் வருத்தப்பட்டார்கள். தமிழிலே, கையெழுத்துக்கூட போடவில்லையே? உண்மைதான். 1978-லேயே அரசாணை வந்தும் தமிழில் கூட கையொப்பம் போடுவதற்கு இன்னும் தமிழர்களுக்கு மனம் வரவில்லையே என்பதைத்தான் நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இதற்கு வெறும் ஆணைகள் மட்டும் காரணமாக இருக்க முடியாது. அடிப்படை உணர்வும் தேவை. ஆனால், தலைமைச் செயலகத்தில் மிகப் பெரிய மாற்றம் இருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட வேண்டும். காரணம், தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்ற தலைமைச் செயலகத்தில்தான் அரசாணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. கோப்புகள் இங்கே பேணப்படுகின்றன. வரைவுகள் இங்கேதான் எழுதப்படுகின்றன. எனவே, தலைமைச் செயலகத்தில் அண்மைக்காலத்தில் ஆய்வு செய்து, அனைத்துத் துறைகளுடைய செயலாளர்களுக்கும் குறிப்புகள் தரப்பட்டதோடல்லாமல், எல்லா அமைச்சர்களுக்கும் அது தொடர்பாக நேர்முக மடல் தரப்பட்டிருக்கிறது. எல்லா அமைச்சர்களும், எல்லாச் செயலாளர்களும், எனக்கு அளித்துள்ள உறுதி, இன்னும் 5, 6 மாதத்தில் நூற்றுக்கு நூறு தமிழை ஆட்சிமொழி ஆக்குவதற்கு நாங்கள் எல்லோரும் துணை செய்வோம், எல்லா அரசாணைகளும் தமிழில் வரும், தேவைப்பட்ட நேரங்களில் மட்டும்தான் அது ஆங்கிலத்திலும் தரப்படும் என்பதை உறுதி செய்திருக்கிறார்கள். எனவே, தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்திலேயே தமிழ் நூற்றுக்கு நூறு ஆட்சி மொழியாகும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதில் எந்த ஐயப்பாடும் தேவையில்லை. அப்படி ஆட்சிமொழி ஆக்கத் தவறினால் இந்தத் துறையினுடைய இருப்புக்கு நியாயம் கிடைக்காது. எனவே, இந்தத் துறையினுடைய தேவையே அதை வலியுறுத்திச் செயல்படுத்துவதுதான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதனுடைய அடிப்படையில்தான் தொடக்கத்திலே 8 உதவி இயக்குநர்கள் இருந்தத் துறையில் இப்போது 29 உதவி இயக்குநர்களும், 6 மண்டல உதவி இயக்குநர்களும் வரக்கூடிய அளவுக்கு தலைவர் கலைஞர் அனுமதியுடன் அவர்களையெல்லாம் பணியமர்த்தி இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், மொழிப்போர்க் காவலர்களுக்கு ஏற்கெனவே கொடுத்ததுபோக, இந்த முறையும் ஆய்வு செய்து, இன்றைய வரை ஒட்டுமொத்தமாகக் கொடுத்திருப்பது, 2,846 மொழிக் காவலர்கள் தொகை பெறுகிறார்கள். மறந்து விடக்கூடாது, ரூ.400 ஆக இருந்ததை ரூ.500 ஆக உயர்த்தியவரும் தலைவர்தான், 500 ஆக இருந்ததை ரூ.1500 ஆக உயர்த்தியதும் தலைவர்தான், 1,500-ஐ ரூ.3,000 ஆக உயர்த்தியதும் தலைவர்தான். ஒருவேளை அதிகம் பேர் விண்ணப்பித்ததற்கு அதுவும்தான் காரணமாக இருக்கலாம். ஏனென்று கேட்டால், ரொம்ப காலத்திற்கு முன்னாலே விண்ணப்பிக்க வேண்டியவர்கள், பெறாமல் விட்டார்கள், விண்ணப்பிக்காமல் விட்டார்கள். ஆனால், தொகை ரூ.3,000 என்ற பிறகு நிறைய பேர் விண்ணப்பித்துள்ளார்கள். ஆனால் எதிர்பாராதவிதமாக அவர்களுக்கு சிறைச் சான்றிதழ் கிடைக்கவில்லை. இது இக்கட்டான சூழ்நிலை. ஒரு காலத்தில் நம்முடைய பேராசிரியர் பொறுப்பில் இருந்தபோது, சிறைச் சான்றிதழ் இல்லாமல், நாள் வரையறை இல்லாமல் கொடுக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் பேராசிரியர் இந்தத் துறையை வைத்திருக்கும்போது 952 பேருக்கு, 1989-லே கொடுத்திருக்கிறோம். 1990-லே 244 பேருக்குக் கொடுத்திருக்கிறோம். எனவே, அந்த வேறுபாடு பார்க்கவில்லை. ஆனால் இப்போது நீதிமன்றத்திற்குப் போய் திரும்ப வந்த காரணத்தினால் அதற்கு வரையறைகள் தேவைப்படுகின்றன. அதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அலுவலகங்களில் ஆய்வு செய்தபோது ஆட்சிச்சொல் அகராதிகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இப்போது புதிதாக 20,000 ஆட்சிச்சொல் அகராதிகள் அச்சில் உள்ளன. அதுமட்டுமல்ல, விருதுகள் கொடுப்பதிலே எல்லோருக்கும் கொடுக்கிறோம். அதில் வேறுபாடு இல்லாமல் கொடுக்கிறோம். புதிதாக அண்மைக்காலத்திலே, பாரதியார் விருதையும், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விருதையும், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் உருவாக்கியிருக்கிறார்கள். ரூ. 10,000/-ஆக இருந்தத் தொகையை ரூ.20,000/-ஆக உயர்த்தி, ரூ. 20,000/-ஐ ரூ. 1,00,000/- ஆக உயர்த்தியதும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர்தான் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், இ. ஆ. ப. தேர்வு



எழுதுகிறவர்களுக்கு என்று—இங்கே தமிழிலே நிறைய பேர் எழுதி வெற்றி பெறுகிறார்கள்,. இல்லை என்று சொல்லமுடியாது—கொஞ்சம் புதிதாக வருகிறார்கள்—கருவி நூல்கள் தேவை. குறிப்பாக மொழி வரலாறு அவர்களுக்கு விளங்குவதில்லை. எனவே, அந்த மொழி வரலாற்று நூலைத் தருவதற்காக 'தமிழ்மொழி வரலாறு' வெளியிடப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் வரலாறு, புவியியல் நூல்களும் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

இன்னும் சொல்லப்போனால், அகரமுதலிகள்கூட அதிகம் இல்லையென்று அடிக்கடி குறை சொல்லப்படுகிறது. ஏராளமாக அகர முதலிகள் வந்திருக்கின்றன. அருள்கூர்ந்து நண்பர்கள் அவற்றைப் பார்க்க வேண்டும். களஞ்சியங்கள் வரவில்லை என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றிக்கூட நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சியம் 3 தொகுதிகள், இசைக் கலைக் களஞ்சியம் 3 தொகுதிகள், மருத்துவக் கலைக் களஞ்சியம் 7 தொகுதிகள், வாழ்வியல் களஞ்சியம் 15 தொகுதிகள், அறிவியல் களஞ்சியம் 11 தொகுதிகள், சைவ சமய களஞ்சியம் 2 தொகுதிகள், குழந்தைகள் கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள், சட்டக் களஞ்சியம் ஒரு தொகுதி, கணினி கலைக் களஞ்சியம் ஒரு தொகுதி என்று இவ்வளவு களஞ்சியங்கள் வெளிவந்திருக்கின்றன. அருள்கூர்ந்து இவற்றையெல்லாம் பெற்றுப் படித்தால் இன்னும் நீங்கள் அகம் வடமொழியா, தமிழா என்ற ஆராய்ச்சிக்கே வரமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். காரணம் இவையெல்லாம் அதிலே இடம் பெற்றிருக்கின்ற தெளிவுகள்.

அருங்காட்சியகங்களைப் பொறுத்தளவில், 12 ஆக இருந்த அருங்காட்சியகங்களை ஏற்கெனவே 19 ஆக உயர்த்தித் தந்தவர் தலைவர் அவர்கள், இந்த முறையும் புதிய அருங்காட்சியகங்கள் இருக்கின்றன.

அதுபோல, வெளி மாநிலப் பல்கலைக்கழகங்களில், குறிப்பாக ஒரிசா மாநில உத்கல் பல்கலைக்கழகத்தில் 10 இலட்ச ரூபாய் செலவிட்டு ஓர் இருக்கை தொடங்கப்பட இருக்கிறது. அதேபோன்று ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்கும் வெளி மாநிலத்தில், தமிழ் இருக்கை தரப்படும் என்று தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மும்பையிலும், கல்கத்தாவிலும் தமிழ் மையங்கள் தொடங்கப்பட்டு இப்போது 10 ஆயிரம் ரூபாய் பெறுமான நூல்கள்

அனுப்பப்பட்டு, அய்யன் திருவள்ளுவர் நூலகம் இருப்பது மட்டுமல்ல, அங்கே தமிழில் வகுப்புகள் நடத்தவும், திருக்குறள் வகுப்புகள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்காக இதுவரை 467 பேருக்கு ரூ.500 என்று தரப்படுகிறது. அதையும் உயர்த்தித் தந்தவர் தலைவர் அவர்கள்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இணையத்தைப் பொறுத்தவரையில், இனிமேல் தட்டச்சுப் பொறிகள் கூடத் தேவையில்லை என்ற அளவுக்குக் கணிப்பொறி வந்துவிட்டது. கணிப்பொறிக்கு இணையாக இணையத் தளம்—web-site—வந்துவிட்டது. அதிலே மின் அஞ்சல் அனுப்புகின்ற வசதிகள் இருக்கின்றன. என்னைக் கேட்டால் இந்திய மொழிகளிலேயே இணையத்தால் அதிகமாகவும், முதலிடமாகவும் இடம் பெற்றிருப்பது தமிழ்மொழி ஒன்றுதான் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதை விரைவாக விரிவுபடுத்தத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் என்பதையே தொடங்கியிருக்கிறார்கள். அடுத்த 2001-லே நாம் சந்திக்கின்றபோது அது முழுமை பெற்றிருப்பதை நீங்கள் காண்பீர்கள் என்பதை மட்டும் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் Madras State என்பதை தமிழ்நாடு என்று மாற்றினார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை என்பதை சென்னை என்றே ஆங்கிலத்தில் எழுதுங்கள், பிற மொழிகளில் எழுதுங்கள் என்று ஆணையிட்டார்கள். எனவே, இன்று எல்லா இடங்களிலும் சென்னை, சென்னையாகவே இருப்பதற்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய உணர்வுதான் காரணம் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மொரீசியஸ் நாட்டில் இப்போது அஞ்சல் வழிக் கல்வியிலே பாடம் நடக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் பி.ஏ. தமிழ் இலக்கியம், எம்.ஏ. தமிழ் இலக்கியம், பி.லிட், என்ற பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வரலாற்று நூல்கள், 25 ஆண்டுகளில் 4 நூல்கள் வந்தன. இந்த 4 ஆண்டுகளில் மட்டும் 4 நூல்கள் வெளிவந்திருக்கின்றன. வெகு விரைவிலே முழுத் தொகுதியும் வரவிருக்கிறது. எனவே, அதிலும் இந்தத் துறை வேகம் காட்டியிருக்கிறது.



நாட்டுடைமை என்று எடுத்துக்கொண்டால், காங்கிரஸ் காலத்திலே பாரதியார் பாடல்கள், பிறகு ஒவ்வொரு காலத்திலும், இரண்டு, இரண்டு பெருமக்களின் நூல்கள் நாட்டுடைமைகள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில், இந்த 4 ஆண்டுகளில் 23 பெருமக்களின் நூல்களை—அது திராவிட இயக்கப் பெருமக்களின் நூல்கள் மட்டுமல்ல, தேசியக் கவிஞர்களாக இருக்கிற பெருமக்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து பல இலட்சக்கணக்கான ரூபாயை ஒதுக்கிய பெருமை தலைவர் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிறகு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தன்னுடைய பணிகளைச் செய்கிறபோது 1996வரை 25 ஆண்டுகளில் 235 நூல்களை வெளியிட்டிருக்கிறது. நான் சொல்வது 1970-லிருந்து 25 ஆண்டுகளில் 235 நூல்கள் ஆனால், இந்த 4 ஆண்டுகளில் மட்டும் 140 நூல்களை வெளியிட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கடந்த ஓராண்டில் மட்டும் 28 நூல்களை வெளியிட்டிருக்கிறது. இதிலே வருத்தம்—நானே சொல்லிவிடுகிறேன்—இந்த 28 நூல்களை வெளியிட்டிருக்கிற உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நிகராக தமிழ்ப் பல்கலைக்கழகம்கூட அந்தப் பணியை ஒழுங்காகச் செய்யவில்லை. அந்தப் பதிப்புத் துறை மிக மோசமாக இயங்குகிறது. எனவே, தக்க நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம். காரணம் 19 பேர் பணியாற்றுகின்ற அந்தப் பதிப்புத் துறையிலே ஓராண்டில் 7 நூல்கள் வெளிவந்திருக்கின்றன. பதிப்புத் துறையே இல்லாத இந்தத் துறையில் 28 நூல்கள் வந்திருக்கின்றன என்பதையும் உங்களுக்கு பதிலாக நானே ஒப்பிட்டுச் சொல்லிவிடுகிறேன். காரணம், குறைகள் எங்கே இருந்தாலும், களைவதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடும்; எடுக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், நம்முடைய தமிழ் எங்கே எல்லாம் இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையோடு எடுத்துச் சொன்னால், எங்கேயோ இருக்கின்ற கியுபெக் மாநிலத்தில் அவர்கள் பிரெஞ்ச் மொழியை, ஆங்கில மொழியை விளம்பரப் பலகைகளில் எழுதுகிறபோது பிரெஞ்ச் மொழியில் மட்டும்தான் எழுதமுடியும் என்று தீர்ப்பளித்தார்கள், அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குப் போனபோது, ஆங்கிலத்துக்கும் இடம் கொடுங்கள் என்று சொன்னார்கள். நான் சொல்வது கனடா நாட்டில், ஆங்கிலத்திற்கு இடம் கொடுங்கள் என்று கேட்கக்கூடிய நிலை கியுபெக்கில். ஆனால், தமிழ்நாட்டில், மேலே

தமிழில் எழுதுங்கள், அடுத்து ஆங்கிலத்தில், தேவைப்பட்டால் உங்கள் தாய்மொழியையும் பயன்படுத்துங்கள் என்று வாய்ப்புக் கொடுத்திருக்கிற ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். ஆனால், அதைக்கூட இன்னும் சிலர்—பலர் அல்ல—ஒழுங்காக எழுதவில்லை. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் இங்கே சொன்னபோது தலைவர் சொன்னார், நீங்கள் ஆளை அனுப்ப வேண்டாம், நாங்கள் ஆணை அனுப்புகிறோம் என்று. ஆணைகள் ஏற்கெனவே இருக்கின்றன. எனவே, வணிகப் பெருமக்கள் அதை உணர்ந்து முதலில் தமிழ்நாட்டில் தமிழுக்கு முதலிடம் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், ஒரு வியப்பான செய்தி, ஆஸ்திரேலிய நாட்டின் மாண்புமிகு ஜான் அக்குன்லாறா என்ற கல்வி அமைச்சர், ஆஸ்திரேலிய நாட்டில் இனிமேல் தமிழ் ஒரு பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பைச் செய்திருக்கிறார் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். எனவே, வெளிநாடுகளிலேயெல்லாம் தமிழைப் படிக்கக்கூடிய அக்கறையும், ஆர்வமும் இருக்கிறபோது, நம் நாட்டில் மட்டும் ஏன் இந்த நிலை என்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

பிற்பகல் 1-40

ஒன்றை மட்டும் சொல்கிறேன்; நாம் முகவரி எழுதுகிறபோதுகூட, மாங்குளத்திலிருந்து விழுப்புரத்திற்கு எழுதுகிறபோதுகூட, தமிழிலே எழுதுவதில்லை. அதற்குக் காரணம் ஆங்கில மோகம். அது எங்கே கொண்டுபோய் விடும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் என் கையில் இரண்டு உறைகளை வைத்திருக்கிறேன். ஒன்று, சிங்கப்பூரிலிருந்து வந்தது. மற்றொன்று, மலேசியாவிலிருந்து வந்தது. இரண்டு பேருமே முழுமையாகத் தமிழிலே முகவரி எழுதியிருக்கிறார்கள். சென்னை மட்டும்தான் ஆங்கிலத்திலே அல்லது South India என்பது ஆங்கிலத்திலே. முழுத் தமிழில் எழுதினால் இங்கே வந்துவிடுகிறது. ஆனால், நம்முடைய உள்ளூர்த் தமிழர்களுக்கு அந்த நம்பிக்கை இல்லை. அதனால் வருந்துகிறேன். இதனால்தான், தமிழனுக்கு இருக்கின்ற இந்த இயல்பு காரணமாகத்தான் நாம் பல கோணங்களிலே வீழ்ச்சி அடைகிறோம் என்பதைச் சொல்லி, நான் நிறைவுசெய்ய வேண்டியிருப்பதனால் இப்போது இறுதியாக அறிவிப்புகளை மட்டும் வெளியிட்டு விடுகிறேன்.



இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் குடமுழுக்குகள் நடத்துவதற்கு ஐந்து பெரிய கோயில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்;

தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில்;

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்;

திருச்சி மாவட்டம், திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்;

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்.

அதேபோல, நவ கைலாயம் என்று சொல்லப்படுகின்ற—ஏனென்றால் நவ திருப்பதி குடமுழுக்கு செய்யப்பட்டுவிட்டது—நெல்லை, தூத்துக்குடி, மாவட்டங்களில் இருக்கின்ற ஒன்பது கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு அம்மநாதசுவாமி திருக்கோயில், சேரன்மகாதேவி;

திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில், கோடகநல்லூர்;

திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு கோதைபரமேசுவரர் திருக்கோயில், குன்னத்தூர்;

திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், முரப்பநாடு;

தூத்துக்குடி மாவட்டம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், தென்திருப்பேரை;

தூத்துக்குடி மாவட்டம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், சேர்ந்தமங்கலம்;

திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில், பாபநாசம்;

தூத்துக்குடி மாவட்டம், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில், திருவைகுண்டம்;

தூத்துக்குடி மாவட்டம், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில், இராஜபதி.

அடுத்து, தேர்த் திருவிழா தேரெல்லாம் நிறைய கேட்டார்கள். பழைய காலத் தேர், பழுதுபட்ட தேர். அதைச் செய்ய வேண்டுமென்றால் 20 இலட்சம் ரூபாய் தேவை; மறந்து விடக் கூடாது. ஆனாலும் அதற்காக, கடந்த ஆண்டு 10 தேர்கள், இந்த முறை 7 தேர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருள்மிகு திந்தினீசுவரர் திருக்கோயில்;

நாகப்பட்டினம் மாவட்டம், தேரெழுந்தூர், அருள்மிகு ஆமருவி பெருமாள் திருக்கோயில்;

மதுரை மாவட்டம், திருவாதவூர் அருள்மிகு திருமறைநாத சுவாமி திருக்கோயில்;

மயிலாடுதுறை திருமுட்டம் அருள்மிகு பூவராகசுவாமி திருக்கோயில்;

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்;

புதுக்கோட்டை மாவட்டம், திருப்புனவாசல் அருள்மிகு விருத்தபுரீசுவரர் திருக்கோயில்;

புதுக்கோட்டை மாவட்டம், மிமிசல், அருள்மிகு கல்யாணராமசாமி திருக்கோயில்.

அதேபோல, திருமண மண்டபங்கள் இந்த முறை 6 திருமண மண்டபங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் அருள்மிகு சிங்காரத்தோப்பு முனீசுவரர் திருக்கோயில்;

சென்னை மாவட்டம், வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில்;

சென்னை மாவட்டம், பெரம்பூர் அருள்மிகு ரவீசுவரர் திருக்கோயில்;



கரூர் அருள்மிகு அபய பிரதான ரெங்கநாதசுவாமி திருக்கோயில்;

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்;

முகவை மாவட்டம், பரமக்குடி, அனுமார் கோதண்டராமசுவாமி திருக்கோயில்.

வசதி குறைந்த கோயில்களுக்கு, நம்முடைய உறுப்பினர் சொன்னதுபோல, ரூ.25 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. அதேநேரத்தில், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் எல்லாம் நிறைய பழுதாகியிருக்கின்றன. அந்தப் பழுதை நீக்குவதற்கு துறையே பொறுப்பேற்றுக்கொள்கிறது. ஏனென்று கேட்டால், நீண்டகாலமாக, ஏதோ பாழடைந்த மண்டபங்கள்போல அந்த வீடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்குத் துறையே பொறுப்பேற்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 100 கோயில்களுக்கு தூய்மை செய்யப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு மட்டும் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமது ஆட்சிக் காலத்தில் ஏற்கெனவே இருந்த திருமணங்கள் போக, இலவசத் திருமணங்களுக்கு 15 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழில் சிற்பச் சாஸ்திரக் கையேட்டை வெளியிட வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. காரணம், கோயில்களில் பணி செய்பவர்கள் சிற்பக் கலைஞர்கள் என்ற சொல்லப்படுகிற ஸ்தபதிகள். அவர்களில் பல பேருக்கு சிற்ப சாஸ்திரங்கள் தெரிவதில்லை. எனவே, அதை வற்புறுத்தி, அதைப் படித்து, அதற்குப் பிறகுதான் அவர்கள் தேர்ச்சி பெற்று வர வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

உலகிற்கு வழிகாட்டிய அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச் சிலையை நம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் புத்தாயிரமாவது ஆண்டின் தொடக்க நன்னாளில் கன்னியாகுமரியில் திறந்து வைத்தார்.

"குறளைப் போற்றுவோம்.

குவலயத்தின் மத்தியில்

குன்றா விளக்கை ஏற்றுவோம்."

என்ற நம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவுரைக்கு இணங்க பெரிய வருவாய் உள்ள, அதாவது ரூ. 10 இலட்சத்திற்கு மேல் வருவாய் உள்ள 108 கோயில்களிலும் அய்யன்

திருவள்ளுவருடைய புகழைப் பரப்புவதற்குத் தொடர்ந்து திருக்குறள் வகுப்புகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய உறுப்பினர் பூவேந்தன் அவர்கள் கேட்டதைப் போலவும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததைப் போலவும், பழனி நகர மையப் பேருந்து நிலையத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காகவும், வணிக வளாகம் அமைக்கும் வகையிலும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.1.5 கோடியை இந்து சமய அறநிலையத் துறை உள்ளாட்சித் துறைக்குக் கடனாக வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு நிதியிலிருந்து அறிவிக்கப்படுவது, இந்த ஆண்டும் ஆதிதிராவிடர் கோவில்களுக்கு 12-1/2 இலட்ச ரூபாய் அரசு நிதியாகவும், 12-1/2 இலட்ச ரூபாய் கோயில் நிதியாகவும் தரப்படுகிறது. அதுபோக, இத்துறையின்கீழ் இருக்கின்ற, ஆளுகையின்கீழ் இருக்கின்ற கோயில்களுக்கு தொலைபேசி, தொலைநகல் இணைப்பு தருவதற்கு 1.2 இலட்ச ரூபாய் தேவைப்படுகிறது. கணினி மென்பொருள் தயாரிப்பதற்கு ஒருவர் பணியமர்த்தப்பட இருக்கிறார். புதுக்கோட்டை சமஸ்தானம், நம்முடைய சுசீந்தரத்தைப் போலவே நலிவடைந்த கோவில். அங்கேயும், இங்கேயும் ஒரே வறுமை நிலைதான். எனவே, எப்படி சுசீந்திரம் சமஸ்தானத்திற்கு 37.30 இலட்சம் ரூபாய் தரப்படுகிறதோ, அதேபோல, புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.9 இலட்சம் என்பதை மாற்றி ரூ. 15 இலட்சமாக வழங்கப்படுகிறது.

அடுத்தப்படியாக தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை தொடர்பான என்னுடைய குறிப்பைத் தர விரும்புகிறேன். திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்கெனவே தமிழக அரசு ரூ.50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. அவர்கள் அதைக்கொண்டு திருவள்ளுவர் மாளிகை என்பதை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தத் திருவள்ளுவர் மாளிகை முழுமையாகக் கட்டப்பட்டுவிட்டது. இப்போது தலைவர் கலைஞர் அவர்கள் மனமுவந்து, மேலும் ரூ.25 இலட்சத்தைத் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். மறந்துவிடக் கூடாது. தென்னக மாநிலங்களிலேயே 75 இலட்சம் ரூபாய் கொடுத்த ஓரேயொரு மாநிலம், தலைவர் கலைஞர் ஆளுகின்ற மாநிலம்தான் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.



தமிழ்நாட்டில் புதிதாகத் தொடங்கப்பட்ட இசைப் பள்ளிகளுக்குக் கருவிகள் வாங்குவதற்காக ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. ஈரோடு, இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் புதிதாக இசைப் பள்ளிகள் தொடங்கப்படும். விருதுநகர் மாவட்டத்தில் புதிய அருங்காட்சியகம் தொடங்கப்படும். திருவையாற்றில் நீண்டகாலமாக நடைபெற்றுவரும் தமிழ் இசை மன்றத்திற்குத் தொடர்ந்து தமிழ் இசை விழாவை நடத்துவதற்கு ரூ.1 இலட்சம் தொடராச் செலவினமாக அல்ல, தொடர் செலவினமாக ஆண்டுதோறும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியாகப் பிரிக்கப்பட்ட திருவையாறு அரசு இசைக் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 1-45

தமிழில் இன்னும் அச்சு வடிவில் வாராத தமிழ் ஓலைச் சுவடிகளை அதிக அளவில் அச்சிடுவதற்கு, ரூ.4 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் புரிதிறனை வளர்க்கவும், அதற்காக தொடக்கக் கல்வியில் பயிற்றுவிக்கப்படும் பாடங்களை நாடகக் கலை மூலமாக வளர்க்கவும், நாடகப் பள்ளி ஒன்றைத் தொடங்கி நடத்திட அரசு இசைவு கொடுத்துள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்திற்கு ஒரு 'பணிப் பட்டறை' நடத்துவதற்காக ரூ.1 இலட்சம் தரப்பட்டிருக்கிறது.

இவ்வளவையும் அறிவிப்பாகச் செய்து, கடைசியாக நான் நினைவூட்ட விரும்புவது, பொதுவாக, தமிழ்நாட்டில், எத்தனையோ இதழ்கள் எங்களுடையப் பணிகளைப் பாராட்டி எழுதியிருக்கின்றன. திறனாய்வு செய்தும் எழுதியிருக்கின்றன. நாங்கள் இதிலே கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. அவர்கள் திறனாய்வு செய்கிறபோதெல்லாம் இன்னும் சீர்திருத்த வேண்டுமென்ற நல்ல நம்பிக்கையில் செய்கிறார்கள். அவற்றை நாங்கள் ஏற்றுக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஒரு செய்தித்தாளில் செய்தி வந்துவிட்டால், தலைவர் கலைஞர் அவர்கள், 7 மணிக்குத் தொலைபேசியில் சொல்வார். எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் பார்த்தவுடனேயே சொல்லிவிடுவார். என்ன செய்தீர்கள் என்று. எனவே, நாங்களும் விழிப்போடு இருந்து, அதை 6-3/4 மணிக்கே பார்த்தால்தான் நாங்கள் தப்பித்துக்கொள்ள முடியும். அந்த அளவுக்கு மிகுந்த கவனத்தோடு நடைபோடுகிற இந்த அரசு, காலத்தில் பல்வேறு

பணிகளைச் செய்கின்ற இந்த நாளில்—மறந்து விடக்கூடாது— நமக்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தமிழ் வளர்ச்சிக்கும் பணி செய்து இருக்கிறோம். அறநிலையத் துறைக்கும் பணி செய்திருக்கிறோம். நீங்கள் இங்கே குற்றங்கள் கூறவில்லை என்று நான் சொன்னதற்குக் காரணம், பெரிய அளவிலே அப்படிக் கூறினாலும், உடனுக்குடன் தீர்வு காண்பதற்கு இந்தத் துறைகள் எப்போதும் அணியமாக இருக்கின்றன. இந்த நிலையில் தமிழன் என்றைக்கும் தன்னை உணர்ந்து, தமிழால் வாழ்ந்து, என்றைக்கும் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

1981 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் எழுதிய மடலின் ஒரு பகுதியை நான் படித்துக் காட்டி, உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்:

"சோடையாகி விட்டான் தமிழன்;
சோரம்போய் விட்டான் தமிழன்;
சோதாக்களின் கூட்டத்தில் ஒருவனாகி விட்டான் தமிழன்;
தன் சுகம் ஒன்றே போதும் என சுயமரியாதையை
இழந்துவிட்டான் தமிழன் என்றெல்லாம்
உள்ள நிலைகளைத் தெரிந்து கொண்டு, நமக்கு எதிரானவர்கள்
இன்னும் வேகமாகக்கூடச் சுழற்றுவார்கள் வாளை;—

நமக்கு எதிரானவர்கள் இன்னும் வேகமாகக்கூட சுழற்றுவார்கள் வாளை;—

நமது இன மானங்கெட எழுதி நிரப்புவார்கள் தாளை;

இதைப் பொறுத்துக்கொண்டுதான் இருக்கப் போகிறானா தன்னலமற்ற தன்மானக் காளை"!

என்று கேட்டார்கள். அதையே நான் இங்கே நிறைவுரையாக வைத்து,

"வளமுற்ற தமிழை நாம் இப்போது செழுமைப்படுத்துவதற்காகக் கூடியிருக்கிறோம்; அறன் நிலைப்பதற்காகக் கூடியிருக்கிறோம்".



இங்கே வெட்டுத் தீர்மானங்களைத் தந்தவர்கள் எல்லாம் அவற்றைத் திரும்பப்பெற்றுக்கொண்டு, நிறைவேற்றித்தர வேண்டுமென்று கூறிக்கொள்வதோடு, கடைசியாக நான் நினைவூட்ட விரும்புகிறேன்:

"வளமுற்ற தமிழை வாழ்விக்கச் சிந்திப்போம்;

வாய்ப்பு வரும், சந்திப்போம்". (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12—1959 ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுகடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.



**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.24,94,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாடு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாடு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ.33,81,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை செவ்வாய்க்கிழமை (25-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

144. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 1989-90ஆம் ஆண்டில், சென்னை, தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம், அதற்குச் சொந்தமான லாரிகள் மற்றும் ஏனைய சொத்துகளை விற்பனை செய்ததன் பேரில் மிகையாக வசூலித்தத் தொகைக்காக செலுத்தத்தக்க அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 11-2-2000 ஆம் நாளிட்ட அரசாணை எண் (2டி) 13-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.



*(1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)*

145. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 18-1-2000 ஆம் நாளிட்ட 37 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)*

146. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் விதி 45-ல் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 25-1-2000 ஆம் நாளிட்ட 45 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *(1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)*

147. தமிழ்நாடு நகர்ப்புற நிதி-அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. *(1998-99) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

148. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. *(1997-98) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

115. மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

116. மானியக் கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ்)

117. மானியக் கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (ஆங்கிலம்)



## இணைப்பு—I

[69 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை எண் 12

## தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

### முன்னுரை

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் அறநிலையங்களாகிய நம் திருக்கோயில்கள் மற்றும் சமயத் தொடர்புடைய நிறுவனங்கள், தோன்றுதொட்டே மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்து வருகின்றன. கல்வி பயிற்றுவிக்கும் கல்விக் கூடங்களாக, இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய கலை பல வளர்க்கும் கலைக் கூடங்களாக, ஆவணக் காப்பகங்களாக, நூலகங்களாக, நீதிமன்றங்களாக, நோய்தீர்க்கும் மருத்துவச் சாலைகளாக, தம்மைச் சார்ந்து வாழும் மக்களுக்குப் பலவகைத் தொழில்களைத் தந்து வாழ்விக்கும் தொழில் நிறுவனங்களாகத் திருக்கோயில்கள் மிகப் பழங்காலந் தொட்டு இன்று வரை திகழ்ந்து வருகின்றன.

"ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"

என்ற சிவஞானபோதச் செம்மொழிக்கு இணங்க நம் வாழ்வின் அரணாகத் திகழும் திருக்கோயில்களையும், சமய நிறுவனங்களையும் போற்றிப் பாதுகாக்க நம் தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**இந்து சமய நிறுவனங்களின் பாராமரிப்பும் நிருவாகமும்:**

இந்து சமய அறநிலையங்களின் பராமரிப்பும் நிருவாகமும் செவ்வனே நடைபெறுவதைத் திறம்படக் கண்காணிப்பதும், அவற்றின் சொத்துக்களை நன்முறையில் பாதுகாப்பதும் அரசின் இன்றியமையாத கடமைகளாகும். இதற்காக ஆங்கிலேயர் காலந்தொட்டுப் பல்வேறு சட்டங்கள் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இறுதியாக ஒரு முழுமையான சட்டமாக 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) இயற்றப்பட்டது. இச்சட்டம் 1960ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இந்து சமய மற்றும் சமண சமய அற நிறுவனங்கள், இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டன.

இவ்வரசு பதவி ஏற்றதும் நிருவாகத்தை மேலும் சீரமைக்கும் வகையில் மேற்கண்ட சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்தது. திருத்தச் சட்டம் 39/1996 மூலம் மேற்கண்ட சட்டம் மேலும் திருத்தப்பட்டு, நிருவாக வாரியம், மாவட்டக் குழுக்கள் அகற்றப்பட்டு அவற்றிற்கு இருந்த அதிகாரங்கள் முறையே அரசுக்கும், ஆணையருக்கும், சார்நிலை அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டு அதிகார பரவலாக்கம் செய்யப்பட்டது. இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 78-ல் திருத்தம் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்ட வாடகை காலம் முடிந்ததும், வாடகைதாரர்கள் வெளியேறவில்லை எனில், அவர்களை ஆக்கிரமிப்புதாரர்கள் என அறிவிக்கவும், சட்டப் பிரிவு 79(பி) என்ற பிரிவு புதியதாக ஏற்படுத்தப்பட்டு, ஆக்கிரமிப்புதாரர்களை வெளியேற்ற குற்றவியல் வழக்கு பதிவு செய்து அவர்களுக்குத் தண்டனை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் சட்டப் பிரிவு 7-ன் கீழ் மாநில அளவில் அரசுக்கு ஆலோசனை கூறி வழி நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் பின்வரும் ஆன்றோர்களைக் கொண்ட திருக்கோயில் ஆலோசனைக் குழு அமைத்து 19-12-1996-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இக்குழுவின் பதவிக் காலம் 19-12-1999 முதல் மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.



**அ. அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:**

| | | |
|---|---|---|
| 1. தலைவர் | : | மாண்புமிகு முதலமைச்சர் |
| 2. துணைத் தலைவர் | : | மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் |
| 3. உறுப்பினர் | : | அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை |
| 4. உறுப்பினர்/செயலாளர் | : | இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் |

**ஆ. அலுவல் சாரா உறுப்பினர்கள்:**

5. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், குன்றக்குடி.
6. தவத்திரு திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர், திருப்பனந்தாள்.
7. தவத்திரு திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், திருவாவடுதுறை.
8. தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பேரூர்.
9. தவத்திரு ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவரங்கம்.
10. திருமதி சௌந்தரா கைலாசம், சென்னை.
11. திருமதி உமாமகேஸ்வரி, மாநகராட்சி மேயர், திருநெல்வேலி.
12. திரு. கருமுத்து கண்ணன், மதுரை.
13. தருமபுர ஆதீனகர்த்தரின் பிரதிநிதி. (சிறப்பு அழைப்பாளர்)

மேற்குறித்த பெரியோர்களின் ஆலோசனையின்கீழ் இத்துறையின் நிருவாகம் மேலும் சிறந்து செயல்பட்டு வருகிறது.

**மாவட்டக் குழுக்கள்:**

1996 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் சட்டப் பிரிவு 7-ஏ-ன் கீழ் மாவட்ட அளவில் ரூபாய் பத்து இலட்சத்திற்கும் குறைந்த வருவாய்

[2000 ஏப்ரல் 24

உள்ள இந்து சமய அறநிறுவனங்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்ய, பொருத்தமும் தகுதியும் உடையோரைப் பரிந்துரைக்க 30 மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

**சமய நிறுவனங்கள்:**

இத்துறையின் நிர்வாகத்தின்கீழ் இந்து மற்றும் சமண சமய அறநிறுவனங்கள் 36,324 உள்ளன. 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள், சட்டப் பிரிவு 45-ன்படி நியமிக்கப்பட்ட செயல் அலுவலர்கள் ஆகியோரால் இந்து சமய நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. செயல் அலுவலர் பணியமர்த்தப்படாத ஆலயங்கள் அறங்காவலர்களின் முழுமையான நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. இத்துறையின் நிருவாகத்தின் கீழுள்ள இந்து மற்றும் சமண சமய அறநிறுவனங்கள் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 34,284 |
| 2. | திருமடங்கள் | 56 |
| 3. | திருமடங்களைச் சார்ந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | கூட்டுத் தொகை | **36,324** |

மேற்கண்ட சமய நிறுவனங்கள் மூலம் 1999-2000 ஆண்டில் வரப்பெற்ற வருவாய் ரூபாய் 137.32 கோடி ஆகும். துறையின் முனைப்பான நடவடிக்கைகளின் காரணமாக ஆண்டுக்காண்டு இவ்வருவாய் உயர்ந்து வருகிறது.



2000 ஏப்ரல் 24]

**சமய நிறுவனங்களின் பாகுபாடு:**

சமய நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன:

| வ. எண் | சட்டப் பிரிவு | ஆண்டு வருவாய் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| | பட்டியலைச் சாரா நிறுவனங்கள் | | |
| 1. | 49 | ரூ.10,000-க்கு குறைவு. | 33,326 |
| | பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் | | |
| 2. | 46(i) | ரூ.10,000/-க்கு மேல் ரூ.2,00,000/-வரை | 2,583 |
| 3 | 46(ii) | ரூ.2,00,000/-க்கு மேல் ரூ.10,00,000/-வரை | 307 |
| 4. | 46(iii) | ரூ.10,00,000/-க்கு மேல் | 108 |
| | | கூட்டுத்தொகை | **36,324** |

**அறநிலையத் துறையின் நிருவாக அமைப்பு**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிருவாகம் நன்கு செயல்பட மாநில அளவில் ஆணையரின்கீழ் 10 இணை ஆணையர் மண்டலங்களும், 22 உதவி ஆணையர் சரகங்களும் செயல்பட்டு, பணிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ஆணையருக்கு உதவிட ஒரு கூடுதல் ஆணையர், ஓர் இணை ஆணையர், உதவி ஆணையர் நிலையில் இரண்டு நேர்முக உதவியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். திருக்கோயில் சார்பான வழக்குகள் மற்றும் துறை தொடர்புடைய வழக்குகள் ஆகியவற்றில் நடவடிக்கை எடுத்து உதவி புரிய உதவி ஆணையர் நிலையில் ஓர் அலுவலரும் உள்ளார். நிதி சம்பந்தமான பணிகளைக் கவனிக்கும் பொருட்டு கருவூலக் கணக்குத் துறையிலிருந்து

[2000 ஏப்ரல் 24

மாற்றுப் பணி மூலம் ஒரு கணக்கு அலுவலரும், ஓர் உதவிக் கணக்கு அலுவலரும் பணிபுரிந்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை ஆய்வு செய்தல், குத்தகைக்கு விடுதல், நில விற்பனை தொடர்பான பணிகளில் உதவிடும்பொருட்டு, வருவாய்த் துறையிலிருந்து மாற்றுப் பணி மூலம் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவரும், 5 தனி வட்டாட்சியர்களும் பணிபுரிந்து வருகின்றனர். திருக்கோயில் திருப்பணிகள் தொடர்பான பணிகளைக் கண்காணித்து உதவிட கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் பொறியியல் சார் அலுவலர்கள் பணிபுரிகின்றனர். திருக்கோயில்களிலுள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளைப் பாதுகாக்கவும், சிலைகள் பாதுகாப்பிற்காகவும் உதவிட ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் மூன்று காவல் துறை ஆய்வர்கள் பணிபுரிகின்றனர். திருக்கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்து, தணிக்கை அறிக்கை வெளியிடும்பொருட்டு உதவிட நிதித் துறைத் துணைச் செயலாளர் நிலையில் தலைமைத் தணிக்கை அலுவலர் பணிபுரிந்து வருகிறார். தலைமைத் தணிக்கை அலுவலருக்கு உதவியாக இரண்டு துணைத் தலைமை தணிக்கை அலுவலர்களும், 18 மண்டலத் தணிக்கை அலுவலர்களும், 28 உதவித் தணிக்கை அலுவலர்களும், 51 தணிக்கைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 198 தணிக்கை ஆய்வாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். இத்துறையின் நிருவாகத்தில் ஆணையர், சார்நிலை அலுவலர்கள், பொறியாளர்கள், தணிக்கை ஆய்வாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள், காவல் துறை பணியாளர்கள் ஆகியோர் மொத்தம் 2,477 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

இத்துறையின் சார்பில் வெளியிடப்படும் திருக்கோயில் மாத இதழ் தயாரித்து வெளியிடும் பணிகளைக் கவனிக்க உதவி ஆணையர் நிலையில் ஆசிரியர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

**செயல் அலுவலர்கள்:**

திருக்கோயில்களின் நிருவாகத்தைச் செம்மைப்படுத்த சட்டப் பிரிவு 45-ன்படி கீழ்க்கண்ட நிலைகளில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர்:



2000 ஏப்ரல் 24]

| வ. எண் | நிலை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணை ஆணையர்/செயல் அலுவலர் | 8 |
| 2. | துணை ஆணையர்/செயல் அலுவலர் | 12 |
| 3. | உதவி ஆணையர்/செயல் அலுவலர் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை 1 | 57 |
| 5. | செயல் அலுவலர் நிலை 2 | 120 |
| 6. | செயல் அலுவலர் நிலை 3 | 270 |
| 7. | செயல் அலுவலர் நிலை 4 | 199 |
| | கூட்டுத் தொகை .. | **693** |

ஒரே செயல் அலுவலரின்கீழ் பல திருக்கோயில்கள் இருப்பதினால் அவற்றைச் செம்மையாகக் கவனிக்க இயலாமையால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேலும் புதிதாக நிலை-3 மற்றும் நிலை-4 பதவிகளில் தலா 100 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திருமடங்கள் நிருவாகம்:**

திருமடங்களின் நிருவாகம் ஆதீனகர்த்தர்களால் நிருவகிக்கப்படுகின்றது. திருமடங்களின் நிருவாகம் மேலும் சிறப்புற நடைபெறவும், நிருவாகத்தை மேம்படுத்தவும், மடங்களின் வரவு-செலவுத் திட்டங்களைப் பரிசீலித்து ஒப்புதல் வழங்கவும் ஆணையரின் நேர்முக உதவியாளர் தலைமையில் அவருக்கு உதவியாக மண்டல தணிக்கை அதிகாரி மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய ஆய்வுப் பிரிவால் திருமடங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

**அறநிறுவனங்களின் நில நிருவாகம்:**

**(அ) நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள் விவரம்:**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தமிழ்நாடு முழுமையும் 4.91 லட்சம் ஏக்கர்கள் உள்ளன. அவற்றில் நன்செய், புன்செய், மானாவாரி நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி அடங்கியுள்ளன:

[2000 ஏப்ரல் 24

| நில விவரம் | பரப்பளவு ஏ.செ. |
|---|---|
| நன்செய் | 2,08,224.50 |
| புன்செய் | 2,63,396.72 |
| மானாவாரி | 18,761.90 |
| கூட்டுத் தொகை .. | **4,90,383.12** |

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை மொத்தம் 1,06,807 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 22,046 கட்டடங்கள் உள்ளன. அதில் மொத்தம் 22,629 வாடகைதாரர்கள் உள்ளனர். 22,592 கிரவுண்டு மனைப் பகுதிகள் உள்ளன. அவை 84,220 நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

**(ஆ) வருவாய் நீதிமன்றம்:**

நிலக்குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்க தமிழகம் முழுவதும் கீழ்க்கண்ட பதினொன்று இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:

1. மன்னார்குடி
2. திருவாரூர்
3. கும்பகோணம்
4. மயிலாடுதுறை
5. கடலூர்
6. தஞ்சாவூர்
7. திருச்சி
8. இலால்குடி
9. சேலம்
10. மதுரை
11. திருநெல்வேலி



2000 ஏப்ரல் 24]

இந்த வருவாய் நீதிமன்றங்களில் ரூ.2595.35 லட்சம் குத்தகை தொகை பாக்கியை உள்ளடக்கிய மொத்தம் 28,323 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ரூ.784.42 லட்சம் குத்தகைதாரர்களிடமிருந்து பழைய பாக்கியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**(இ) நியாய வாடகை நிர்ணயக் குழு அமைத்தல் மற்றும் நியாய வாடகை நிர்ணயம் செய்தல்:**

அறநிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மனைகளை அனுபவித்து வருவோர் குறைந்த தொகையையே பல ஆண்டுகளாக வாடகையாக செலுத்தி வருகின்றனர். இதனை மாற்றி திருக்கோயில் நலன் கருதி தற்போதைய சந்தை மதிப்பின்படி நியாய வாடகை நிர்ணயம் செய்து திருக்கோயில் வருமானத்தை பெருக்கும் நோக்கோடு பத்து இணை ஆணையர் மண்டலங்களுக்கும் அந்தந்த இணை ஆணையர்களை தலைவர்களாகக் கொண்டு தனித்தனி நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்குழுவில் உதவிக் கோட்டப் பொறியாளர், உதவி ஆணையர், செயல் அலுவலர், அறங்காவலர் குழுத் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்கள் மூலம் அறநிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மனைகளுக்கான வாடகையை அவைகளின் மதிப்பு, சார்-பதிவாளர் வழிகாட்டி மதிப்பு, அருகிலுள்ள தனியார் கட்டடங்களுக்கு வசூலிக்கப்படும் வாடகை இவற்றை அடிப்படையாகக் கொண்டு சில நெறிமுறைகள் அரசாணை மூலம் வகுத்தளிக்கப்பட்டன.

(i) திருக்கோயிலுக்குச் சொந்தமான கடைகளுக்கு கட்டடத்தின் மதிப்பில் 0.6 சதவிகிதம் வாடகையாக அல்லது அப்பகுதியில் நிலவும் தற்கால வாடகை இவற்றில் எது அதிகமோ அது வாடகையாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

(ii) திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி மனைகளை வணிக நோக்கத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட இனங்களில் இடத்தின் சந்தை மதிப்பில் 0.30 சதவிகிதம் வாடகையாக நிர்ணயிக்கப்படுகிறது.

(iii) திருக்கோயிலுக்குச் சொந்தமான வீடுகளுக்கு வீட்டின் மதிப்பில், 0.20 சதவிகிதம் வாடகையாக அல்லது அப்பகுதியில் நிலவும் தற்கால வாடகை இவற்றில் எது அதிகமோ அது வாடகையாக நிர்ணயிக்கப்படுகிறது.

[2000 ஏப்ரல் 24

(iv) திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி மனைகளை வீடு கட்ட குத்தகைக்கு விடப்பட்ட இனங்களில் இடத்தின் சந்தை மதிப்பில் 0.20 சதவிகிதம் வாடகையாக நிர்ணயிக்கப்படுகிறது.

(v) பொது சேவையாக நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள், நலிவுற்றோர் நலன் கருதி நடத்தப்படும் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வாடகைக்கு விடப்பட்ட காலி நிலங்களுக்கு இடத்தின் சந்தை மதிப்பில் 0.10 சதவிகிதம் வாடகையாக நிர்ணயிக்கப்படுகிறது.

(vi) திருக்கோயில் உட்பிரகாரத்தில் அல்லது மண்டபத்தில் அமைந்துள்ள கடைகளுக்கு திருக்கோயில் வெளியில் அதேபோன்ற இடத்தின் சந்தை மதிப்பில் 0.30 சதவிகிதம் வாடகையாக நிர்ணயிக்கப்படுகிறது.

மேற்படி அரசாணையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணையை விசாரித்த உயர் நீதிமன்றம் மேற்படி அரசாணையை நிலை நிறுத்தியுள்ளது. 31-12-1999 முடியவுள்ள காலத்தில், 14,661 கட்டடங்களுக்கும், 16,500 மனைகளுக்கும் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்வாயிலாக திங்கள் ஒன்றிற்கு ரூ.129.98 இலட்சம் திருக்கோயில்களில் வருவாய் உயர்வுக்கு வழி ஏற்பட்டுள்ளது.

**(ஈ) ஆலய கட்டடங்கள், மனைகளின் வாடகை உரிமத்தை உண்மை அனுபவதாரர்களுக்கு ஆலய ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்தல்:**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகள் மனைகள் ஆகியவற்றை உண்மையான வாடகைதாரர்கள் இல்லாமல் வேறு நபர்கள் பல ஆண்டுகளாக அனுபவித்து வருவதை முறைப்படுத்தி திருக்கோயில் கடைகள், வீடுகள், மனைகளை உண்மையில் அனுபவித்துக்கொண்டு, வாடகை செலுத்தி வருகின்ற நபர்களுக்கு வாடகை உரிமத்தினை திருக்கோயில் பதிவேடுகளில் பெயர் மாற்றம் செய்திட ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

**(உ) ஆக்கிரமிப்புகளை அகற்ற இணை ஆணையர்களுக்கு அதிகாரம்:**

ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டடங்கள், மனைகள் இவற்றைச் சட்டத்துக்குப் புறம்பான முறையில் ஆக்கிரமித்துக்கொண்டு ஆலயத்துக்கு எவ்வித குத்தகை / வாடகை செலுத்தாமல் அனுபவித்து வரும் நபர்களை ஆக்கிரமிப்புகளிலிருந்து வெளியேற்றவும், வாடகைக்



2000 ஏப்ரல் 24]

காலம் முடிவடைந்து வெளியேறாதோரை ஆக்கிரமிப்பாளர்களாகக் கருதி அவர்களை வெளியேற்றவும் தமிழ்நாடு சட்டம் 39/96-ன்படி இந்து சமய அறநிலைக் கொடை சட்டப் பிரிவுகள் 78 மற்றும் 79-க்கு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு துறையின் மண்டல இணை ஆணையர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட சட்டத்தின்படி இதுவரை 6,472 இனங்கள் ஆக்கிரமிப்புகள் என்று கண்டறியப்பட்டு அவற்றை நீக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஜூன் 1996 முதல் நாளது வரை விவசாய நிலங்கள் 386 ஏக்கர் 37 சென்ட் பரப்பளவும், 148 கிரவுண்டு 2,047 சதுர அடி மனைப் பகுதியும் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் கொண்டு வரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| (அ) 1. கண்டறியப்பட்ட மொத்த ஆக்கிரமிப்புகள் | 6,472 |
| 2. சட்டப் பிரிவு 78-ன்கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டவை | 4,600 |
| 3. விசாரணை முடிக்கப்பட்டவை | 305 |
| 4. வெளியேற ஆணை பிறப்பிக்கப்பட்டவை | 292 |
| 5. ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டவை | 203 |
| (ஆ) 1. சட்டப் பிரிவு 79-பி-ன்கீழ் வழக்கு தொடரப்பட்டவை | 116 |
| 2. ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டவை | 73 |
| 3. தீர்ப்பு நிலுவையில் உள்ளவை | 43 |

திருக்கோயில்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் பிரிவு 79-சி எனும் புதுப் பிரிவை ஏற்படுத்தி திருக்கோயில்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகையை நிலவரி பாக்கியை வசூலிப்பது போன்று வசூலிக்க இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு போதுமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இச்சட்டத் திருத்தம் 10-2-2000 முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் ஆணைப்படி இதுவரை கண்டறியப்படாத பிற ஆக்கிரமிப்புகளின் விவரம் அந்தந்த

திருக்கோயிலின் சொத்துப் பதிவேடுகளை சரிபார்த்து விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

**(ஊ) சமத்துவபுரம் மற்றும் இதர பொதுக் காரியங்களுக்கு நிலம் வழங்கியது:**

தமிழ்நாடு அரசின் பொது நலத் திட்டங்களில் ஒன்றான தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்திற்காக, திருக்கோயில் நிலங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதுவரையில் 17 கிராமங்களில் உள்ள ஆலயத்துக்குச் சொந்தமான நிலங்கள் இந்த திட்டத்திற்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | கிராமம் | பரப்பளவு ஏ.செ. | பெறப்பட்ட தொகை ரூபாய் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்-திருமங்கலம் வட்டம், மேலக்கோட்டை கிராமம் | 10.00 | 4,45,644 |
| 2. | சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கோனூர் கிராமம், அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் | 12.65 | 7,59,000 |
| 3. | சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கத்தேரி கிராமம், அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில் | 10.16 | 4,05,394 |
| 4. | சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், நெய்க்காரன்பட்டி கிராமம், அருள்மிகு அழகிரிப்பெருமாள் திருக்கோயில் | 7.85 | 7,67,338 |
| 5. | ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அந்தியூர் கிராமம், அருள்மிகு கரியபெருமாள் திருக்கோயில் | 9.25 | 4,15,025 |
| 6. | பெரம்பலூர் மாவட்டம், வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மதனகோபால சுவாமி திருக்கோயில் | 13.93 | 22,07,466 |
| 7. | நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், திருவாவடுதுறை அயன்சிங்கம்பட்டி கிராமம், அருள்மிகு திருவாவடுதுறை ஆதீனம் | 9.90 | 3,72,557 (தொகை பெறப்படவில்லை) |
| 8. | கரூர் மாவட்டம் மற்றும் வட்டம், மண்மங்கலம் கிராமம், அருள்மிகு மணிகண்டேசுவரர் திருக்கோயில் | 4.00.0 ஹெக்டேர் | 21,51,860 (தொகை பெறப்படவில்லை) |
| 9. | சேலம் மாவட்டம், சின்னசீரகாபாடி கிராமம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் | 4.48 | 8,96,000 (தொகை பெறப்படவில்லை. முன்னுரிமை அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது) |
| 10. | நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், கிராம்பூர் கிராமம், அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில் | 6.56 | விலை முடிவு செய்யப்படவில்லை |
| 11. | கரூர் மாவட்டம் மற்றும் வட்டம், கிருஷ்ணராயபுரம், மணவாசி கிராமம், அருள்மிகு பிடாரி திருக்கோயில் | 11.00 | 5,61,000 (தொகை பெறப்படவில்லை. முன்னுரிமை அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது) |

[2000 ஏப்ரல் 24

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 12. | திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், முடிகொண்டான் கிராமம், அருள்மிகு அம்துரேசுவர சுவாமி திருக்கோயில் | 1.30 | விலை முடிவு செய்யப் படவில்லை |
| 13. | தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், தீபாம்பாள் கிராமம், அருள்மிகு விசுவநாதசுவாமி மற்றும் வன்மீகநாதசுவாமி திருக்கோயில் | 8.32 | 3,36,960 (தொகை பெறப்பட வில்லை) |
| 14. | திருவாரூர் மாவட்டம், திருக்குவளை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு தியாகராசசுவாமி திருக்கோயில் | 15.78 | 8,49,753 (தொகை பெறப்பட வில்லை) |
| 15. | தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் அருள்மிகு அருணா சடேசுவரசுவாமி திருக்கோயில் | 7.39 | தொகை நிர்ணயம் செய்யப் படவில்லை |
| 16. | நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், திருமொளசி கிராமம், அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில் | 8.27 | விலை நிர்ணயம் செய்ய படவில்லை |
| 17. | தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், முழையூர் கிராமம் அருள்மிகு ஹெக்டேர் பரசுநாதசுவாமி திருக்கோயில் | 3.17.0 | 12,90,691.50 (தொகை பெறப் படவில்லை) |

இது தவிர கல்விக் கூடங்கள் அமைத்தல், மருத்துவமனைகள் அமைத்தல், மின் வாரியம், தொழிற் துறை, ஆதிதிராவிடர் நலம், பாசனத் திட்டங்கள், சாலைகள் அமைத்தல் போன்ற பொதுத் தேவைகளுக்காகவும், இதுவரையிலும், திருக்கோயில் நிலங்கள் 913.78 ஏக்கர் மொத்தம் ரூ.3,84,66,191-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கிடைக்கும் கிரயத் தொகை நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் நிரந்தர முதலீடு செய்யப்பட்டு திருக்கோயில்களின் மேம்பாட்டுக்கு அவற்றிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மட்டுமே செலவழிக்கப்படுகின்றது.



2000 ஏப்ரல் 24]

**(ஏ) வணிக வளாகங்கள் அமைத்தல்:**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான காலியிடங்களை தற்போது பாதுகாக்க மிகுந்த கவனம் எடுக்கப்பட்டு, நிலங்களின் மதிப்பு, வருங்கால ஆக்கிரமிப்புதாரர்களின் அச்சுறுத்தல், இதனால் ஏற்படும் வழக்கு மற்றும் பண விரயத்தைத் தவிர்க்கவேண்டி, கோயில் நிலங்களின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்தோடு வணிக வளாகங்கள் கட்டி வருவாயை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி, அருள்மிகு சங்கரராமேஸ்வரர் திருக்கோயில், தூத்துக்குடி மற்றும் அருள்மிகு பவஔஷதபுரீசுவரர் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி ஆகிய திருக்கோயில்களில் வணிக வளாகம் கட்ட அரசு அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அறங்காவலர் குழு நியமனம்:**

திருக்கோயில்களின் நிருவாகத்தை சட்ட விதிகளின்படி செய்திட பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படுகின்றது. இதுவரை 10,679 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், அறங்காவலர்கள் நியமனம் செய்திட மாவட்டக் குழுக்கள் மூலம் பெயர்ப் பட்டியல் பெறத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அறங்காவலர் நியமனம் குறித்து 1996-ல் வெளியிடப்பட்ட அவசரச் சட்டமும் அதனைத் தொடர்ந்து சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்து சமய அறநிலைக் கொடைகள் சிறப்பு விதிகள் (Special Provision) 3/96 சட்டத் திருத்தத்தை உயர்நீதிமன்றம் செல்லாது என தீர்ப்பு வழங்கியதால் ஏற்பட்ட சிக்கலை சரிசெய்ய சட்டத்திருத்தம் 48/99 கொண்டுவரப்பட்டு இதுவரை நிரப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பரம்பரை அல்லாத அறங்காவலர் பணியிடங்களை நிரப்ப விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது.

## திருக்கோயில் பணியாளர்கள் நலத் திட்டங்கள்:

### திருக்கோயில் பணியாளர்களின் ஊதியவிகிதம்:

திருக்கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களின் நலனை பேணி காப்பதற்கும், அவர்களது ஊதியத்தை சீரமைப்பதற்கும் 1996 மே திங்களில் நால்வர் குழு அரசால் அமைக்கப்பட்டது. இக்குழு அரசிற்கு சமர்ப்பித்த அறிக்கையினைப் பரிசீலனை செய்து அரசாணை (நிலை) எண் 257, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை நாள் 10-6-1998-ல் புதிய ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், தொழில் நுட்ப பணியாளர்கள் உள்ளிட்ட திருக்கோயில் பணியாளர்கள் ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகளை பரிசீலித்து திருத்திய ஊதிய விகிதங்கள் வழங்க அரசு கடிதம் (நிலை) எண் 401, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 4-9-1998-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அரசு ஊழியர்களுக்கு 1-1-1996-ல் புதிய ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டபோது அப்போது அவர்கள் பெற்ற 148% அகவிலைப்படி அடிப்படைச் சம்பளம் நிர்ணயம் செய்ய கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. திருக்கோயில் ஊழியர்களுக்கு 1-7-1997-ல் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதால் அப்போது அவர்கள் பெற்ற 182% அகவிலைப்படி அடிப்படைச் சம்பளம் நிர்ணயம் செய்ய கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 1-1-1998-ல் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்திற்குமேல் வருவாய் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு 3% அகவிலைப்படி அனுமதிக்கப்பட்டது. ஆனால், முதுநிலை திருக்கோயில் பணியாளர்கள் 1-1-1998-ல் அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அகவிலைப்படியான 16%-ஐ வழங்க கோரிக்கையை விடுத்தனர். இக்கோரிக்கையைப் பரிசீலிக்க மூன்று நபர்களைக் கொண்ட வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டது. இதற்கிடையில் தொழில் நுட்ப பணியாளர்களும் சில கோரிக்கைகளை வலியுறுத்தினர். அப்பணியாளர்களின் கோரிக்கைகளையும் பரிசீலித்து அறிக்கை அனுப்ப வல்லூநர் குழுவை அரசு கேட்டுக்கொண்டது. வல்லுநர் குழுவின் அறிக்கை பெறப்பட்டு அதில் உள்ள பரிந்துரைகளின் மீது திருக்கோயில் பணியாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசித்து இறுதி முடிவெடுக்கப்படும்.

#### (1) சிறப்பு வருங்கால வைப்புநிதித் திட்டம்:

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும்



பணியாளர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூபாய் ஏழு இலட்சம் கொண்டதான வைப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப்படி, மாதந்தோறும் ரூ.20 வீதம் பணியாளர்கள் உறுப்பினர் கட்டணத் தொகை செலுத்துகின்றனர். பணியாளர் ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை, வட்டியுடன் அவருக்கு வழங்கப்படுவதுடன் கூடுதலாக ரூ.1000/- வைப்பு நிதித் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகிறது.

#### (2) திருக்கோயில் பணியாளர் சேமநல நிதித் திட்டம்:

1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் பிரிவு 116 (2) (xxiii)-ன் கீழ் வெளியிடப்பட்ட அறநிலையங்களில் பணிபுரியும் பணியாளர் மற்றும் அலுவலர்களின் பணி விதிகளில் விதி 32-ன்படி பட்டியலில் சேர்ந்த திருக்கோயில் பணியாளர்களுக்கு வருங்கால சேமநிதி ஏற்படுத்த வேண்டுமென உள்ளது. அதற்கிணங்க உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.10,000/-க்கு மேல் உள்ள திருக்கோயில்க்ளில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்கு பணியாளரின் சம்பளத்தில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்து, பிடித்தம் செய்த தொகைக்கு இணையான தொகையினை திருக்கோயில் நிதியிலிருந்து இத்திட்டத்திற்கென தொடங்கப்பட்ட வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பணியாளர் ஓய்வு பெறும் தேதியில் மேற்படி தொகை வட்டியுடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது.

#### (3) திருக்கோயில் பணியாளர் நலநிதி திட்டம்:

இந்தத் திட்டத்தின்கீழ் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊதிய நிலுவைகளை வழங்க பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் மிகை நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனமாக வைப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அறநிலையங்களில் பணியாற்றிடும் ஊழியர்களுக்கு இந்த வைப்பு நிதி வட்டித் தொகையிலிருந்து சம்பள பாக்கிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டப்படி போதிய வருமானம் இல்லாத, ஆண்டு வருமானம் ரூ.40,000/-க்கும் கீழுள்ள அறநிலையங்களில் பணியாற்றி மாத ஊதியம் ரூ.400/-க்கும் குறைவாகப் பெற்றுவரும் ஊழியர்களின் சம்பள பாக்கி வழங்கப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பணியாளர்கள் சம்பள பாக்கிக்காக நிதியுதவி வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

| வருடம் | திருக்கோயில் எண்ணிக்கை | பயன்பெற்ற பணியாளர்கள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1996-97 | 497 | 818 | 15.31 |
| 1997-98 | 578 | 908 | 18.42 |
| 1998-99 | 539 | 831 | 16.98 |
| **கூட்டுத் தொகை** | **1614** | **2557** | **50.71** |

**(4) திருக்கோயில் பணியாளர் குடும்ப நலத் திட்டம்:**

திருக்கோயில்களிலும், அறநிலையங்களிலும் பணியாற்றுகின்ற பணியாளர்கள் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுகளுக்கு உதவித் தொகை வழங்கிட பணியாளர் குடும்ப நலத் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தில் மாதம் ரூ.100/-ம், அதற்கு மேலும் ஊதியம் பெறுகின்ற பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு உறுப்பினர் கட்டணமாக ரூ.5/- பெறப்பட்டு இயற்கை எய்திய பணியாளர்கள் குடும்பத்திற்கு ரூ.5000/- உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதி உதவி படிப்படியாக உயர்வு செய்யப்பட்டு இப்போது சந்தாத் தொகையை மாதம் ரூ.10/- ஆக உயர்வு செய்து உதவித் தொகை ரூ.60,000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டு 5-3-1999 முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில், இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பெற்ற உதவித் தொகை விவரம் பின்வருமாறு:-

| நிதி வழங்கப்பட்ட ஆண்டுகள் | பயன்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 1996-97 | 117 | 29.75 |
| 1997-98 | 89 | 23.85 |
| 1998-99 | 119 | 32.25 |
| 1999-2000 (01-02-2000 வரை) | 154 | 46.30 |
| **கூட்டுத் தொகை** | **479** | **132.15** |



**(5) ஓய்வூதிய நலத் திட்டம்:**

திருக்கோயில்களில் பணியாற்றி வயது முதிர்வு காரணமாக பதவியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களின் நலன் காக்க திருக்கோயில்களில் 20 ஆண்டு காலம் பணியாற்றி 60 வயதில ஓய்வு பெற்ற கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு பயனாளி ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:

| பணியாளர்கள் விவரம் | பயன் பெறும் நபர்கள் |
|---|---|
| 1. அர்ச்சகர்கள்: | |
| சைவம் | 459 |
| வைணவம் | 170 |
| 2. வேதபாராயணர்/திவ்யப்பிரபந்த கலைஞர்கள் | 42 |
| 3. இசைக் கலைஞர்கள் | 82 |
| 4. ஓதுவார்கள் | 116 |
| **கூட்டுத் தொகை** | **869** |

**(6) திருக்கோயில் பணியாளர்களுக்கான வேறு பல நலத் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:**

| வ. எண் (1) | திட்ட விவரம் (2) | தொகை (3) | எந்தத் தேதியிலிருந்து (4) |
|---|---|---|---|
| 1. | பணியில் இருக்கும்போது உயிர் இழக்கும் பணியாளர்களின் இறுதி சடங்கிற்கு முன்பணம் | ரூ.2,000 | 17-9-1997 |
| 2. | திருமண முன்பணம் பெண் பணியாளர் அல்லது பணியாளரின் மகள் திருமணத்திற்கு | ரூ.10,000 | 17-9-1997 |
| | ஆண் பணியாளர் அல்லது பணியாளரின் மகன் திருமணத்திற்கு | ரூ. 6,000 | 17-9-1997 |

[2000 ஏப்ரல் 24

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3. | பண்டிகை முன்பணம் | ரூ.1,000/- | |
| 4. | மருத்துவப்படி | திங்கள் தோறும் ரூ.50/- | 17-9-1997 |
| 5. | சீருடை சலவைப்படி | திங்கள் தோறும் ரூ.10/- | 17-9-1997 |
| 6. | இருசக்கர வாகனக் கடன் வசதி | ரூ.20,000/- | 17-9-1997 |
| 7. | பொங்கல் பரிசு முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு | ரூ.725/- | |
| | பிற திருக்கோயில் பணியாளர்களுக்கு | ரூ.675/- | 2000ஆம் ஆண்டு |
| 8. | திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி மற்றும் குடமுழுக்கின்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு ஊதியம் | ரூ.1,300/- மற்றும் ரூ.1,100/- (நிலைக்கு ஏற்ப) அல்லது ஒரு மாத சம்பளம் இதில் எது குறைவோ அத்தொகை | |

**கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்:**

தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து அறுபது வயதினை அடைந்து, ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ஓய்வூதியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுவரை 879 தகுதியுடைய பூசாரிகளுக்கு ரூ.500/- வீதம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

| ஆண்டு | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|
| 1997 | 622 |
| 1998 | — |
| 1999 | 171 |
| 2000 | 86 |



2000 ஏப்ரல் 24]

**திருப்பணியும் பழுதுபார்த்தலும்:**

அறநிலையங்களில் திருப்பணி, கட்டுமானம் மற்றும் பிற பழுது பார்த்தல் பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட வகைகளிலிருந்து நிதி திரட்டப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :

1. பொதுமக்கள் நன்கொடை
2. அந்தந்த சமய நிறுவனத்தின் நிதி
3. அரசுக் கொடை
4. பொதுநல நிதி
5. ஆலய மேம்பாட்டு நிதி
6. திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
7. திருக்கோயில்களின் மிகை நிதி மாற்றம்
8. கிராமப்புறத் திருப்பணி நிதி

**அரசுக் கொடை:**

ஒவ்வோர் ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காகத் தமிழ்நாடு அரசு நிதி உதவி வழங்குகிறது. கடந்த ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது:

| வ. எண் | ஆண்டு | பயன்பெற்ற திருக்கோயில்களின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 1995-96 | 23 | 45.00 |
| 2. | 1996-97 | 18 | 45.00 |
| 3. | 1997-98 | 39 | 45.00 |
| 4. | 1998-99 | 37 | 75.00 |
| 5. | 1999-2000 | 37 | 75.00 |

[2000 ஏப்ரல் 24

1959 ஆம் வருடத்திய அறநிலைக்கொடைச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, திருப்பணிக்காக வழங்கப்பட்ட அரசின் நிதி உதவி ரூ.3 இலட்சம் மட்டுமே. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் 1974-75 ஆம் ஆண்டு முதல் ரூ.15.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு, பின்னர் ரூ.45.00 இலட்சமாக வழங்கப்பட்டு வந்தது. 1998-99 ஆம் ஆண்டில் மேற்படி அரசுக் கொடை ரூ.45 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்வு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

## பொது நல நிதி:

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைச் சட்டத்தின் 97-ம் பிரிவின்கீழ் திருக்கோயில்கள் மற்றும் அறநிலையங்களிலிருந்து பொது நல நிதியாகப் பெறப்படும் தொகைகள் வைப்பீடு செய்யப்பட்டு, அத்தொகை திருக்கோயில்களில் திருப்பணி, பழுதுபார்ப்புப் பணி மேற்கொள்ள நிதி உதவி தேவைப்படும் திருக்கோயில்களுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் நிதி உதவி வழங்கப்பட்ட விவரம்:

| வ. எண் | ஆண்டு | பயன்பெற்ற திருக்கோயில் களின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 1996-97 | 21 | 12.56 |
| 2. | 1997-98 | 20 | 21.22 |
| 3. | 1998-99 | 17 | 35.23 |
| 4. | 1999-2000 | 19 | 20.76 |

## ஆலய மேம்பாட்டு நிதி:

நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி மாற்றம் மூலம் பெற்ற ரூ.5.00 கோடி வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டது. இவ்வைப்பு நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையைக் கொண்டு ஆழ்வார்கள், நாயன்மார்களால் பாடல் பெற்றதும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாச் சிறப்புடைய புராதனத் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.



2000 ஏப்ரல் 24]

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 70 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.335.03 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த, பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் பெற்ற திருக்கோயில்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | திருக்கோயில் விவரம் | வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | அருள்மிகு நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம் | ரூ.6,15,000/- |
| 2. | அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில், காஞ்சிபுரம் | 19,00,000/- |
| 3. | அருள்மிகு வீரட்டேசுவரர் திருக்கோயில், திருவதிகை | 7,00,000/ |
| 4. | அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயில், ஆவுடையார்கோயில் | 7,00,000/- |
| 5. | அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி | 9,00,000/- |
| 6. | அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், திருவில்லிபுத்தூர் | 25,75,000/- |
| 7. | அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில், திருக்கழுக்குன்றம் | 3,00,000/ |
| 8. | அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில், விருத்தாசலம் | 5,00,000/- |
| 9. | அருள்மிகு கள்ளபிரான் திருக்கோயில், திருவைகுண்டம் | 8,96,000/- |
| 10. | அருள்மிகு தியாகராசசுவாமி திருக்கோயில், திருக்குவளை | 9,50,000/- |

[2000 ஏப்ரல் 24

**திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி:**

தொண்டுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் நன்கொடைகள் பெற்று திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி ஏற்படுத்தப்பட்டது.

ஆழ்வார்கள், நாயன்மார்களால் பாடல்பெற்ற, மங்களாசாசனம் செய்யப்பட்ட வரலாற்றுப் பெருமைவாய்ந்த தொன்மையான, கலைச் சிறப்புகள் மிக்க திருக்கோயில்களின் திருப்பணிக்கு இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. இதுவரை 71 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூபாய் 321.39 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு காலபூசை வைப்பு நிதி ஏற்படுத்த திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1,300/- வீதம் இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதுவரை 7,610 திருக்கோயில்களுக்கு ரூ.178.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் திருவிதாங்கூர் தேவஸ்தான நிர்வாகத்தில் இருந்து தமிழக அறநிலையத் துறை நிருவாகத்திற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம் ஆகியவற்றிலுள்ள திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டத்தில் கிடைக்கும் வட்டியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.14 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

மேலும் இத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் நிதியுதவி இந்நிதியிலிருந்தும், அரசு மானியத்திலிருந்தும் வழங்கப்படுகிறது.

**குடமுழுக்கு:**

அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து திருக்குடமுழுக்கு விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதுவரையிலும் 2,126 திருக்குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன.



2000 ஏப்ரல் 24]

| ஆண்டு | திருக்கோயில்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1993 | 61 |
| 1994 | 65 |
| 1995 | 315 |
| 1996 | 306 |
| 1997 | 617 |
| 1998 | 421 |
| 1999 | 341 |
| கூட்டுத்தொகை | 2,126 |

**கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி:**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் மிகை நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனத்தை வைப்பு நிதியாக ஏற்படுத்தி, இந்த வைப்பு நிதி வட்டியிலிருந்து, வசதி குறைந்த மற்றும் நிதி தேவையுடைய கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நிதி அறநிலையத் துறை ஆணையர், பழனி திருக்கோயில் செயல் அலுவலர், பழனி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆகியோர் அடங்கிய குழுவினால் இயங்கி வரப்படுகிறது. இந்தக் குழு நிதி தேவைப்படுகின்ற திருக்கோயில்களின் பெயர்ப் பட்டியலைத் தேர்வு செய்து, அரசின் முன்அனுமதி பெற்று, ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.25,000/- வீதம் திருப்பணி நிதி உதவியாக வழங்கி வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 357 திருக்கோயில்களுக்கு ரூபாய் 89.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

| நிதியாண்டு | பயனடைந்த திருக்கோயில்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1995-96 | 140 | 35.00 |
| 1996-97 | 100 | 25.00 |
| 1997-98 | 60 | 15.00 |
| 1998-99 | 57 | 14.25 |
| கூட்டுத் தொகை | 357 | 89.25 |

**துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளில் உள்ள திருக்கோயில் திருப்பணி:**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளில் உள்ள 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.25,000/- வீதம் கடந்த மூன்றாண்டுகளில் 250 திருக்கோயில்களுக்கு நிதி அளிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | நிதியுதவி பெற்ற திருக்கோயில்கள் எண்ணிக்கை |
|---|---|
| 1997-98 | 50 |
| 1998-99 | 100 |
| 1999-2000 | 100 |

**உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள்:**

**உலோகத் திருமேனிகள் விவரம் :—**

| | |
|---|---|
| திருக்கோயில்களில் உள்ள மொத்த திருமேனிகள் எண்ணிக்கை | 65,786 |
| 100 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | 44,934 |
| 100 ஆண்டுகளுக்குக் குறைவானவை | 20,852 |
| தொல்பொருள் துறையில் பதிவு செய்யப்பட்டவை | 28,796 |



100 ஆண்டுகளுக்கு மேல் உள்ள உலோகத் திருமேனிகளில் 28,796 உலோகத் திருமேனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 16,138 உலோகத் திருமேனிகளை பதிவு செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களில் திருட்டு நடைபெறாமல் தடுக்கும் வண்ணம் இயன்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகளையும், இரும்புக் கதவுகளையும், தொட்டி பூட்டுகளை நிறுவுவதன் மூலம் திருட்டைத் தடுக்க பல முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன. இது தவிர உலோகத் திருமேனிகளின் பாதுகாப்புக்காக நான்கு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம், திருவாரூர்.
2. அருள்மிகு அகிலாண்டேசுவரி உடனுறை சம்புகேசுவரர் திருக்கோயில், திருச்சி.
3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
4. அருள்மிகு காந்திமதி உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்களில் 2,806 உலோகத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம், கடலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கப் பாதுகாப்பு மையங்கள் அமைக்க பொதுப் பணித் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பாதுகாப்புப் படை:**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருவுருவச் சிலைகள், நகைகள், ஏனைய மதிப்புமிக்க பொருட்கள், உண்டியல்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு, "திருக்கோயில் பாதுகாப்புப் படை" என்று தனியாக உருவாக்கப்பட்டுள்ளது. இப்படையில் 1,000 காவல் துறை காவலர்களும், 2,821 முன்னாள் படைவீரர்களும் பணி அமர்த்தப்பட்டனர். இப்பாதுகாப்புப் படையினர் உள்ளூர் காவல் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு உள்ளனர். 2,632 திருக்கோயில்களில் இப்பாதுகாப்புப் படையினர் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

[2000 ஏப்ரல் 24

**தல வரலாறு:**

திருக்கோயில்களின் சிறப்புகள் மற்றும் பெருமைகளை விளக்கும் வகையில் திருக்கோயில்களின் தல வரலாறு நூல்கள் வெளியிடப்படுகின்றன. இதுவரை 1,364 தல வரலாறுகளும், 226 சிறுநடைகளும், 9 தல புராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் மற்றும் 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், பழமையும், சிறப்பும் வாய்ந்த தல புராணங்கள் அழிந்துவிடாமல் பாதுகாக்கும்பொருட்டு தல புராணங்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து, திருக்கோயில்களிலும், தல வரலாறுகளோ அல்லது கையேடுகளோ வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கருணை இல்லங்கள்:**

ஆதரவற்ற சிறுவர், சிறுமியரைப் பேணுவதற்கு திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

38 திருக்கோயில்கள் மூலம் 43 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. அவற்றின் மூலம் 966 சிறுவர்களும், 433 சிறுமியர்களும் பயனடைந்து வருகின்றனர். மேற்கண்ட கருணை இல்லங்களில் 23 இல்லங்கள் சிறுவர்களுக்கும், 20 கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கும் உள்ளன. கருணை இல்லத்திலுள்ள சிறுவர் சிறுமியர் அனைவருக்கும் உணவு, உறைவிடம், உடை, மருத்துவம், கல்வி போன்ற அனைத்து வசதிகளும் திருக்கோயில் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி இவ்வகையில் ஏற்படும் செலவினத்தில் 50 விழுக்காடு அரசு மானியமாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 90.54 இலட்சம் அரசு மானியமாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆணையரால் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

இக்கருணை இல்லங்களில் தங்கிப் பயின்றுள்ள சிறார்கள் இக்கருணை இல்லங்களைவிட்டு வெளியேறி நல்லமுறையில் வாழ்க்கை நடத்த துறை தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**இலவசத் திருமணம்:**

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை இந்து மக்களுக்கு திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணத் திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதைத்



2000 ஏப்ரல் 24]

தொடர்ந்து இலவசத் திருமணங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஏற்கெனவே ஒரு தம்பதியினருக்கு ரூ.1,500 வீதம் செலவு செய்யத் திட்டமிட்டதனை மாற்றி திருமணம் ஒன்றுக்கு ரூ.3,000/- வீதம் உயர்த்தப்பட்டு திருக்கோயில்களின் சார்பாக இதுவரை 1,532 இலவசத் திருமணங்கள் 31-12-1999 முடிய ரூ.45,96,000/- செலவில் நடைபெற்றுள்ளன.

**தமிழில் வழிபாடு:**

தமிழ்நாட்டு திருக்கோயில்களில் தமிழ் மக்கள் தமிழிலேயே இறைவனுக்கு வழிபாடு நிகழ்த்துவது இயற்கை நெறிக்கு உகந்த ஒன்றாகும். மிகப் பழங்காலத்தில், தமிழ்நாட்டில் தமிழ் மொழியில்தான் திருக்கோயில்களில் வழிபாடுகள் நிகழ்ந்து வந்திருக்கின்றன என்பதனை, திருமுருகாற்றுப்படை முதலிய சங்க இலக்கியங்கள் நமக்கு தெரிவிக்கின்றன.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் தாம் சென்று வழிபட்ட திருத்தலங்களில் தமிழ் மொழியிலேயே தத்தம் பாடல்களைப் பாடி தமிழில் அர்ச்சனை புரிந்து இறைவனை வழிப்பட்டுள்ளனர். தமிழில் இறைவனை வழிபடுவதே அன்பிற்கு இயைந்த வழிபாட்டு நெறி என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து, தெளிந்து, தாய் மொழியின் வாயிலாக இறைவனை வழிபட மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர். திருக்கோயில்களில் நித்தமும் தமிழ் அர்ச்சனைகள் நடைபெறுவதைத் தமிழ் மக்கள் ஆர்வமுடன் வரவேற்று வருகின்றார்கள்.

மக்களின் விருப்பத்திற்கேற்ப இலட்சார்ச்சனைகளும், கோடியர்ச்சனைகளும் பெருமளவில் திருக்கோயில்களில் தமிழில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. தேவாரத் திருப்பதிகங்கள், திருப்பாவை மற்றும் திருவெம்பாவை ஆகியவைகளின் பாடல்கள் திருக்கோயில்களில் கல்வெட்டுகளாகப் பதிக்கப்பட்டு வருகின்றன.

திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை நெறிப்படுத்துவதற்கு தக்க ஆலோசனை வழங்க சைவ, வைணவ ஆனர்கப் பெரியோர்களையும், தமிழில் புலமைபெற்ற பெருமக்களையும் உள்ளடக்கிய குழு ஒன்று முதன் முதலாக அரசாணை (நிலை) எண் 520, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை நாள் 18-11-1997-ன்படி அமைக்கப்பட்டு, அவ்வப்போது பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டு தற்போது 17-11-2000. வரை மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குழுவின் கூட்டங்கள் ஒன்பது முறை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்று, திருமடங்களின் மடாதிபதிகளின் ஆலோசனையைப் பெற்று, அறிஞர் பெருமக்கள், திருக்கோயில் அர்ச்சகர்கள், அலுவலர்கள் ஆகியோர்களால் பரிசிலனை செய்து கீழ்க்கண்ட தமிழ் அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன:

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு முருகவேல் போற்றி
3. அருள்மிகு சிவன் போற்றி
4. அருள்மிகு திருமால் போற்றி
5. அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
6. அருள்மிகு நடராஜர் போற்றி
7. அருள்மிகு உமையம்மை போற்றி
8. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
9. அருள்மிகு தாயார் போற்றி
10. அருள்மிகு துர்க்கை அம்மன் போற்றி
11. அருள்மிகு காளியம்மன் போற்றி
12. அருள்மிகு மாரியம்மன் போற்றி
13. அருள்மிகு அனுமன் போற்றி
14. அருள்மிகு நவகோள்கள் போற்றி

மேலும் அருள்மிகு விநாயகர், அருள்மிகு சிவன், அருள்மிகு உமையம்மை ஆகிய தெய்வங்களுக்கு 1008 போற்றிகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நூல்கள் திருக்கோயில்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந்தப் போற்றி புத்தகங்களை பொதுமக்களுக்குக் குறைந்த விலைக்கு அளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



**தமிழில் ஆகம நூல்:**

திருக்கோயில் தொடர்பான ஆகம விதிகள் வடமொழியில் உள்ளதை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடக் கருதி முதற்கட்டமாக உத்தரகாமிக ஆகமம் என்ற நூல் 30-7-1999 அன்று தமிழில் வெளியிடப்பட்டது.

**கல்வெட்டு ஆய்வு:**

தமிழகத் திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுகள், வரலாற்றுச் செய்திகள், திருக்கோயில்களுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள், அக்காலத் தமிழர் வாழ்வு போன்றவைகளைப் பறைசாற்றும் மதிப்பில்லா கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. இவற்றையெல்லாம் இத்துறை சார்பாக ஆய்வு செய்து, செய்திகளை உரிய முறையில் திரட்டி, புத்தக வடிவில் வெளியிட ஓர் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கென அரசு ரூ.8.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்படி 100 பக்கங்கள் அச்சிடவும், 750 பக்கங்கள் கல்வெட்டுகளை படியெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஸ்தபதிகள் நியமனம்:**

இந்து சமய அறநிலையத் துறையில் பராமரிக்கப்படும் ஸ்தபதிகள் பட்டியலில் சேர்க்கப்படப் பல விண்ணப்பங்கள் வந்த நிலையில் சில நெறிமுறைகள் வகுத்து ஒரு வல்லுநர் குழுவின் தேர்வு செய்யலாம் என அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**பட்டயப் பொறியாளர் நியமனம்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் தற்போது பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றில் இருந்து அயல் பணியில் பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தற்போது காலியாக உள்ள பல பணியிடங்களை நிரப்ப தொடர்புத் துறைகளை அணுகியதில் காலி இடங்களை நிரப்ப இயலாது என்ற நிலையினைத் தெரிவித்தனர். இந்நிலையில் திருப்பணிகள் பல பாதிக்கப்பட்டுள்ளன. இத்துறையில் சுமார் ரூபாய் 5.50 கோடி மதிப்பில் திருப்பணிகள் மற்றும் இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளைத் துரிதமாக நடத்தும்பொருட்டு நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறையில் ஓய்வு பெற்ற பட்டம் பெற்ற பொறியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பட்டயப் பொறியாளர்களாக (Chartered Engineers) நியமிக்க முடிவு செய்யப்பட்டு 1999-2000ஆம் ஆண்டு பணியக்

[2000 ஏப்ரல் 24

கோரிக்கையின்போது திருக்கோயில் நிதி மூலம் செயல்படுத்திட "பட்டயப் பொறியாளர் ஒப்பந்த அடிப்படையில் நியமித்தல்" என்று தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து திருக்கோயில் கட்டுமானப் பணிகள் (Civil Works) போன்ற வேலைகளுக்கு மதிப்பீடு தயாரிக்க நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறையிலிருந்து ஓய்வுபெற்ற பொறியாளர்களைப் பட்டயப் பொறியாளர்களாக (Chartered Engineers) நியமிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**தமிழ்ப் புலவர்கள் நியமனம்:**

நிதி வசதி மிக்க திருக்கோயில்களில், அத்திருக்கோயில்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்ப் புலவர்கள் 150 பேர்களை நியமனம் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/- வீதம் திருக்கோயில் நிதியிலிருந்து தொகுப்பு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்:**

திருக்கோயில்களில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள், விடுதலைத் திருநாள் ஆகிய நாட்களில் அனைத்து சமுதாய மக்களும் ஏற்றத் தாழ்வின்றி, பங்குபெறும் வகையில் திருக்கோயில்களில் பொது விருந்தும், சிறப்பு வழிபாடுகளும் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

| | விடுதலை தின விழா (15-08-1999) | அண்ணா நினைவு நாள் (03-02-2000) |
|---|---|---|
| பங்குகொண்ட திருக்கோயில்கள் எண்ணிக்கை | 629 | 243 |
| ஆதி திராவிடர் வகுப்பினர் | 1,95,541 | 76,336 |
| இதர வகுப்பினர் | 1,91,702 | 1,05,678 |
| கூட்டுத்தொகை | 3,87,243 | 1,82,014 |
| **திருக்கோயில்களுக்கு ஏற்பட்ட மொத்த செலவு** | **ரூ. 21,85,559/-** | **ரூ. 8,35,422/-** |



2000 ஏப்ரல் 24]

**புத்தொளிப் பயிற்சி :**

திருக்கோயில்களில் நாள்தோறும் நடைபெறும் வழிபாடுகளும் சிறப்பு வழிபாடுகளும், திருவிழாக்களும் நம் முன்னோர்கள் அமைத்துக் கொடுத்துள்ள நெறிமுறைகளின்படி அமைந்துள்ளன. இவற்றை நம் இந்து சமய ஆகம நூல்களும், சாத்திர நூல்களும் விவரிக்கின்றன.

திருக்கோயில்களில் ஆகம, சாத்திர விதிகளின்படி வழிபாட்டு முறைகளைச் சிறப்புடன் நிகழ்த்திட திருக்கோயில் உள்துறைப் பணியாளர்கள், செயல் அலுவலர்கள், ஆய்வர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் ஆகியோர்களுக்குக் குறுகிய காலப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

சைவ சமயத்திலும், வைணவ சமயத்திலும் தலைசிறந்து விளங்கும் தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்ச் சான்றோர்களைக் கொண்டு இக்குறுகிய காலப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் கீழ்க்காணும் தலைப்புகளில் நிகழ்த்தப்பட்டுள்ளன:

1. சைவ ஆகமங்கள்
2. சிவாலயங்களில் திருவிழாக்கள்
3. சைவ சமய வரலாறு
4. சைவ சித்தாந்தம்
5. பன்னிரு திருமுறை
6. சாக்தம்
7. கௌமாரம்
8. வைணவ ஆகமங்கள், திருவிழாக்கள்
9. வைணவ சமய வரலாறு
10. நாலாயிர திவ்ய பிரபந்தம்-அமைப்பும், சிறப்பும்
11. தல புராணச் சிறப்பு
12. திருக்கோயில் அமைப்பும், வழிபாட்டு முறையும்

[2000 ஏப்ரல் 24

இப்பயிற்சி வகுப்புகள் 12 மையங்களில் நடத்தப்பட்டு 1,560 பேர் பயனடைந்துள்ளனர்.

**சைவத் திருமுறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்ய பிரபந்த பயிற்சி மையங்கள்:**

1998-99 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி திருக்கோயில்களில் பணிபுரிந்துவரும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் ஆகியோர்களுக்கு ஓராண்டு காலப் புத்தொளிப் பயிற்சி அளிக்க 20 சைவத் திருமுறை ஆகமப் பயிற்சி மையங்களும், 7 வைணவ திவ்ய பிரபந்த பயிற்சி மையங்களும் 10-06-1999 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

பயிற்சி மையம் ஒவ்வொன்றிலும் சுமார் 30 முதல் 35 பயிற்சியாளர்களுக்கு மிகாமல் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர் ஒருவருக்கு ஊக்கத் தொகையாக நாள் ஒன்றுக்கு ரூ.20/- வீதம் சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.500/- முதல் ரூ.2,500/- வரை சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து சம்பளமாக வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

துறை மற்றும் திருக்கோயில் அலுவலர்கள், பணியாளர்கள் தவிர பொதுமக்களும் பயன்பெறும் வகையில் தக்க சான்றோர்கள், அறிஞர்கள், சமய வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டு குறுகிய கால சமயப் பயிற்சி வகுப்பு 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் 66 மையங்களில் நடத்தப்பட்டன. இதன் மூலம் 4,120 பேர் பயனடைந்துள்ளனர்.

**நாதசுர இசைக் கலைஞர்களைப் புதிதாகப் பணியில் அமர்த்தல்:**

பாடல் பெற்ற மங்களாசாசனம் செய்யப்பெற்ற சரித்திரப் புகழ் வாய்ந்த, பழமையான திருக்கோயில்களில் கால பூசைகள் மற்றும் திருவிழாக்களின்பொழுது, "மங்கள இசை" எனச் சிறப்பிக்கப்படும் நாதசுர இசை இசைக்கப்படுவது மரபு. ஆனால் பல திருக்கோயில்களில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் நாதசுர இசை முழங்கவில்லை. எனவே, நாதசுரம், தவில் மற்றும் தாளம் இசைக் கலைஞர்களை நியமனம் செய்து முறையே ரூ.1000, ரூ.750, ரூ.500 வீதம் மாத ஊதியம் துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தனியாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கும் வட்டித் தொகை மூலம் நாதசுர இசைக் கலைஞர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.



2000 ஏப்ரல் 24]

இதுவரை 30 நாதசுரக் கலைஞர்கள், 14 தவில் கலைஞர்கள், 4 தாளம் கலைஞர்கள் ஆக 48 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 9 திருக்கோயில்களில் பணியாற்றும் 14 கலைஞர்களுக்கு ரூபாய் 94,070/- ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ் இசைப் பள்ளி:**

தற்பொழுது 5 சைவத் திருக்கோயில்களில் தேவார இசைப் பள்ளிகளும், 4 வைணவத் திருக்கோயில்களில் திவ்ய பிரபந்தப் பயிற்சி வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. 8 திருக்கோயில்களில் நாதசுரம், தவில் பயிற்சிப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. தேவார இசைப் பள்ளிகளில் 80 மாணவர்களும், திவ்ய பிரபந்த இசைப் பள்ளிகளில் 55 மாணவர்களும் பயின்று வருகின்றனர். நாதசுரம், தவில் பயிற்சிப் பள்ளிகளில் நாதசுரப் பயிற்சிக்கு 80 மாணவர்களும், தவில் பயிற்சிக்கு 40 மாணவர்களும் சேர்ந்து பயன்பெற்று வருகின்றார்கள்.

தேவாரம், திவ்ய பிரபந்தம், நாதசுரம் மற்றும் தவில் இசைப் பள்ளிகளில் பயிலும் உள்ளூர் மாணவர்களுக்கு மாதம் ரூ.300 வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு மாதம் ரூ.600/- வீதமும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்த அரசு பதவியேற்ற பின்னர்தான் தமிழ் இசைப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் - இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள்:**

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் என்பது 490 திருக்கோயில்களின் கூட்டமைப்பாகும். இந்தத் திருக்கோயில்கள் முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அமைந்திருந்தபோது திருவிதாங்கூர் மன்னரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. தற்போது அரசால் நியமிக்கப்படும் அறங்காவலர் குழு மற்றும் துணை ஆணையர்/செயல் அலுவலராலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் நிர்வாகத்தில் 5 திருக்கோயில்கள் தவிர 485 திருக்கோயில்களில்

ஆண்டுக்கு சுமார் ரூ.2,000/- முதல் ரூ.10,000/- வரைதான் வருமானம் வருகின்றது. மேற்படி திருக்கோயில்களில் நிர்வாகச் செலவுகளுக்குத் தற்போது அரசு மானியம் ரூ.13.70 இலட்சம் வழங்கப்படுகிறது. இத்திருக்கோயில்களின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு 1999-2000ஆம் ஆண்டு முதல் கூடுதலாக ரூபாய் ஆறு இலட்சம் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட வைப்பு நிதி ரூபாய் ஒரு கோடியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து மேற்படி திருக்கோயிலின் நிர்வாகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.14 இலட்சம் வழங்கப்படுகிறது.

இத்திருக்கோயில்களில் (1) அரசுப் பணியாளர்கள் (2) முதுநிலை திருக்கோயில் பணியாளர்கள் (3) தினக்கூலி பணியாளர்கள் என மூன்றுவித பணியாளர்கள் பணிபுரிகின்றனர். 764 தினக்கூலி பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/- முதல் ரூ.480/- வரை சம்பளம் வழங்கப்படுகிறது. இவர்கள், தங்களது சம்பளத்தை உயர்த்தி வழங்கக் கோரி அடிக்கடி போராட்டங்கள் நடத்தி வந்தனர். இவர்களது கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து திருக்கோயில் நிதி நிலையையும் கருத்தில்கொண்டு தினக்கூலிப்பணியாளர்களுக்கு 16-10-1998 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.25/- வீதம் ஊதிய உயர்வு செய்து வழங்கப்படுகிறது.

இது தவிர மேற்கண்ட பணியாளர்களுக்கு பசலி 1409 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.25/- வீதம் ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

**திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்படும் கல்வி மற்றும் பிற நிறுவனங்கள்:**

தமிழகத் திருக்கோயில்களில் ஆன்மீகப் பணிகள் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் அதேநேரத்தில் அடித்தள மக்களின் நலன்களுக்காகச் சமூகப் பணிகளிலும் இத்துறையைச் சார்ந்த திருக்கோயில்கள் தம்மை ஈடுபடுத்திச் செயல்பட்டு வருகின்றன. கல்வி, மருத்துவம், இசை, ஊனமுற்றோர் மேம்பாடு, முதியோர் நலன் ஆகியவற்றிற்காக திருக்கோயில்கள் பல அரிய பணிகளை ஆற்றி வருகின்றன. அவை பின்வருமாறு:



| வ. எண் | நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கல்லூரிகள் | 5 |
| 2. | தொழிற் பயிற்சி பள்ளிகள் | 2 |
| 3. | மேல்நிலைப் பள்ளிகள் | 12 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 10 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 2 |
| 6. | ஆரம்பப் பள்ளிகள் | 10 |
| 7. | நாதசுரம் மற்றும் தவில் பள்ளிகள் | 8 |
| 8. | தேவார இசைப் பள்ளிகள் | 5 |
| 9. | திவ்விய பிரபந்த இசைப் பள்ளிகள் | 4 |
| 10. | வேத ஆகமப் பள்ளிகள் | 5 |
| 11. | சித்த மருத்துவமனைகள் | 11 |
| 12. | கருணை இல்லங்கள் | 43 |
| 13. | முதியோர் இல்லங்கள் | 3 |
| 14 | காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் காப்பகம் | 1 |

**ஒரு காலபூசைத் திட்டம்:**

ஒரு காலபூசை கூட செய்ய வசதியற்ற திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2,500/- பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகவும், வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/-ம் நிதி மாற்றம் மூலமும், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/-ம் ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/-ம் ஆக மொத்தம் ரூ.25,000/- வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, அத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு, ஒரு காலபூசைக்கு அத்திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு நேரடியாக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றபின் இத்திட்டம் 1,850 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு இதுவரை 8,110 திருக்கோயில்களுக்கு வைப்பு நிதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 24

**தணிக்கைக் குழுக்கள்**

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களின் தணிக்கை மறுப்புகள் அதிக அளவில் நிலுவையில் உள்ளதால் அவற்றைச் சீராய்வு செய்து விரைவில் தீர்வு செய்யும் பொருட்டு மூன்று நிலைகளில் கீழ்க்காணுமாறு தணிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | தணிக்கை குழுக்கள் | பதவி | திருக்கோயில்களின் நிர்வாகப்படி வகைப்பாடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | முதல் நிலை | ஆணையர்-தலைவர்<br>அரசு கூடுதல் செயலர்<br>இ.செ.-உறுப்பினர்<br>தலைமைத் தணிக்கை<br>அலுவலர்-செயலாளர்<br>உறுப்பினர் | இணை<br>ஆணையர்/<br>செயல்<br>அலுவலர்<br>திருக்<br>கோயில்கள் |
| 2. | இரண்டாம் நிலை | கூடுதல் ஆணையர்-தலைவர்<br>அரசு துணைச்<br>செயலாளர்-உறுப்பினர்<br>நிதித் துறை<br>துணைத் தலைமை-செயலாளர்/<br>தணிக்கை அலுவலர் : உறுப்பினர் | துணை<br>ஆணையர்/<br>செயல்<br>அலுவலர்<br>திருக்<br>கோயில்கள் |
| 3. | மூன்றாம் நிலை | மண்டல இணை<br>ஆணையர்-தலைவர்<br>மண்டல தணிக்கை-செயலாளர்<br>அலுவலர்-உறுப்பினர் | உதவி<br>ஆணையர்/<br>செயல்<br>அலுவலர்<br>திருக்<br>கோயில்கள் |

**திருக்கோயில்களில் ஓதுவார் நியமனம்:**

தேவாரம், திருவாசகம் போன்ற சைவத் திருமுறைகள் பாடுவதற்கு ஓதுவார்கள் இல்லாத திருக்கோயில்களில் பணி நியமனம் செய்யவும்,



2000 ஏப்ரல் 24]

அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/- வீதம் தொகுப்பூதியம் வழங்கவும், நடவடிக்கை எடுத்து 43 திருக்கோயில்களுக்கு ஓதுவார் நியமனம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**பக்தர்களுக்கு வசதி:**

வழிபாட்டிற்காக திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் திருக்கோயில்களுக்கு அருகிலேயே தங்குவதற்கு வசதியாக ஓய்வு விடுதிகள், அறைகள் கட்டப்பட்டுள்ளன. மொத்தத்தில் 14 திருக்கோயில்களில் 58 ஓய்வு விடுதிகள், 231 குடில்கள், 951 தனி நபர் அறைகள் உள்ளன. மேலும் தேவையான இடங்களில் வசதிகள் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**'திருக்கோயில்' திங்கள் இதழ் வெளியீடு:**

இந்து சமய அறநிலையத் துறையின் வெளியீடாக "திருக்கோயில்" என்ற ஆன்மீகத் திங்கள் இதழ் 1958 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்து சமய அறநிலையத் துறை ஆற்றி வரும் அரும்பணிகள் யாவும் இவ்விதழில் மக்களுக்கு மிக விரிவாக விளக்கப்படுகின்றன. தமிழகத்தின் தலைசிறந்த சமயப் பெரியோர்களும், அறிஞர் பெருமக்களும் இவ்விதழில் இந்து மதக் கோட்பாடுகள் மற்றும் திருக்கோயில் வரலாறுகள், திருவிழாக்கள் ஆகியவற்றை விவரிக்கும் அரிய கட்டுரைகளை எழுதி வருகின்றார்கள்.

**நிறைவுரை:**

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடைப்பதே"

என்கிறார் திருநாவுக்கரசர்.

அவர்தம் திருவாக்கிற்கிணங்க சீரிய செயல் திட்டங்களை மேற்காட்டியவாறு திறம்பட வகுத்து அறநிலையத் துறை நாளும் நற்பணிகளைச் சிறப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

[2000 ஏப்ரல் 24

## இணைப்பு II

[81 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**மானியக் கோரிக்கை எண் 51**

## தமிழ் வளர்ச்சி-பண்பாடு

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

மொழி, மக்கள் தம் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளையும், எண்ணங்களையும், சிந்தனைகளையும் வெளிப்படுத்துவது. அது மனித சமுதாயத்தின் வாழ்வோடும், வளர்ச்சியோடும் இரண்டற கலந்து நிற்பது. சமுதாயத்தின் அன்றாட இயக்கத்துக்கான செய்திப் பரிமாற்றத்துக்குப் பயன்படுவது. மொழி, கருத்துப் பரிமாற்றத்துக்கான கருவி மட்டுமின்றி, அது பேசும் சமுதாயத்தின் - இனத்தின் பண்பாட்டுப் பலகணி-கலாச்சாரக் கண்ணாடி. மொழியும், நாகரிகமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டின் மொழி வளத்தைப் பொறுத்தே அமைவதாகும். மொழி வளமுடையதாயின் அதனைப் பேசும் மக்கள் நாகரிகமும், நல்ல பண்பாடும் உடையவர்களாக விளங்குவர். மொழி வளர்ச்சியும், கலை வளர்ச்சியும் நாட்டின் பிற வளர்ச்சிகளுக்கு அடிப்படைகளாகின்றன.

ஆட்சிமொழித் திட்டம் 1956-ல் சட்ட வடிவம் பெற்று, 1957-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சிமொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு மொழிப் பயன்பாட்டில் முழு நிறைவெய்தவும், தமிழ் மொழியை விரிவான முறையில் ஆட்சியிலும், ஆவணங்களிலும், அன்றாட நடைமுறையில் செயற்படுத்தவும், கலை, இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடனும் மொழி, கலை, பண்பாடு ஆகிய துறைகளும், பிரிவுகளும் ஓர் அமைப்பாகச் செயற்படும் வகையில் தலைமைச் செயலகத்தில் 1984 ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தோற்றுவிக்கப்பட்டது. இத்துறையின் கீழ் இயங்கும் அமைப்புகளும், நிறுவனங்களும் தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.



2000 ஏப்ரல் 24]

**தமிழ் நலம் பேணுவன:**

அ. தமிழ் வளர்ச்சி இயக்ககம்

ஆ. மொழிப்பெயர்ப்பு இயக்ககம்

இ. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஈ. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உ. தமிழ்ப் பல்கலைக்கழகம்

ஊ. தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் குறள்பீடம்

**தொன்மரபு காப்பன:**

எ. தொல்லியல் துறை

ஏ. அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்

ஐ. அரசு அருங்காட்சியங்கள்

**வளர்கலை ஊக்குவன:**

ஒ. கலை-பண்பாட்டு இயக்ககம்

1. மண்டலப் பண்பாட்டு மையங்கள்
2. அரசு இசைக் கல்லூரிகள், இசைப் பள்ளிகள்
3. அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரிகள்
4. அரசு கட்டட-சிற்பக் கல்லூரி
5. இயல் இசை நாடக மன்றம்
6. ஓவிய நுண்கலைக் குழு
7. ஜவகர் சிறுவர் மன்றம்

ஒரு மொழியின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வது அம்மொழியின் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. ஒரு மொழி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் அன்றாட இயக்கத்தின் பணிகளை

[2000 ஏப்ரல் 24

நிறைவேற்றுவதில் எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதையும், அச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய அன்றாட இயக்கத்துக்கு எந்த அளவுக்கு அந்த மொழியைச் சார்ந்துள்ளனர் என்பதையும் பொறுத்துதான் அம்மொழியின் பயன்பாட்டின் தன்மையும், இன்றியமையாமையும் அறியப்படுகின்றன. இதிலிருந்து அம்மொழியின் வளர்ச்சியும் வெளிப்படுகிறது. மொழி வளர்ச்சிக்கு 1. அரசு 2. மக்கள், 3. அறிஞர்கள் எனும் முத்தரப்பினரின் ஆதரவு தேவைப்படுகிறது. இவ்வகையில் அரசுப் பணிகளிலும், சமுதாயக் கடமைகளிலும் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்னும் கோட்பாட்டை நமது அரசு வலியுறுத்துகிறது. இந்திய மொழிகளின் வளர்ச்சிக்காக மைய அரசின் சாகித்ய அகாதமி செயற்பட்டு வருவதைப் போன்று தமிழ்ப் படைப்பிலக்கியத்தை வளர்க்கவும், அதற்கான முயற்சிகளை ஒருங்கிணைக்கவும் 1999-2000ஆம் நிதியாண்டில் தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் 'குறள்பீடம்' தோற்றுவிக்கப்பட்டது.

**2000-2001 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு (1) | | திட்டப் பணிகள் (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ***2059 பொதுப் பணிகள்*** | | | | |
| 01 | அலுவலகக் கட்டடங்கள் | | | |
| 051 | கட்டுமானம் | .. | 0.30 | 0.30 |
| 053 | பராமரித்தலும், செப்பனிடுதலும் | .. | 30.43 | 30.43 |
| ***2202 பொதுக் கல்வி*** | | | | |
| 102 | பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | 10.00 | 478.90 | 488.90 |
| ***05 மொழி வளர்ச்சி*** | | | | |
| 001 | நெறிப்படுத்தலும், நிருவாகமும் | 31.81 | 239.60 | 271.41 |
| 102 | இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 0.03 | 48.50 | 48.53 |
| 800 | ஏனைய செலவு | 64.01 | 862.33 | 926.34 |



2000 ஏப்ரல் 24]

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ***2205 00 கலையும் பண்பாடும்*** | | | | |
| 1 | நெறிப்படுத்துதலும், நிருவாகமும் | 35.00 | 19.65 | 54.65 |
| 101 | நுண்கலைக் கல்வி | 191.86 | 246.90 | 438.76 |
| 102 | கலைபண்பாட்டை வளர்த்தல் | 128.93 | 315.57 | 444.50 |
| 103 | தொல்பொருளியல் ஆய்வு | 44.09 | 251.23 | 295.32 |
| 105 | பொது நூலகங்கள் (அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்) | 1.64 | 29.59 | 31.23 |
| 107 | அரும்பொருட் காட்சியகங்கள் | 63.56 | 275.12 | 338.68 |
| 800 | ஏனைய செலவு | .. | 0.50 | 0.50 |
| ***2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்*** | | | | |
| 60 | ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் | | | |
| 200 | ஏனைய திட்டப் பணிகள் | 0.01 | .. | 0.01 |
| **மானியக் கோரிக்கை எண் 51** | | **570.94** | **2798.62** | **3369.56** |

[2000 ஏப்ரல் 24

## அ. தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம் 1971ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்றது. அரசு நிருவாகத்திலும், பொது வழக்கிலும், ஆட்சிமொழியாகிய தமிழ் மொழியின் பயன்பாட்டை விரிவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சி தொடர்பான பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவை இத்துறையின் தலையாய பணிகளாகும்.

### ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலகத்தைத் தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசுச் செயலாளரும், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களிலுள்ள மண்டல நிலை, மாவட்ட நிலை அலுவலகங்களை மண்டலத் துணை இயக்குநர்களும், மாவட்டச் சார்நிலை அலுவலகங்களை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்கின்றனர்.

### ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

ஆட்சிமொழித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வகை செய்ய மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் 1984ஆம் ஆண்டு முதல் நடத்தப்பெறுகின்றன. 1999-2000ஆம் ஆண்டில் எட்டு மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் ரூ.0.40 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. 2000-2001ஆம் ஆண்டில் எட்டு மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகளை நடத்த ரூ. 0.40 இலட்சம் ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம், ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில், ஆர்வமும் திறமையும் காட்டும் அரசு அலுவலகங்களுக்குக் கேடயமும் பாராட்டும் வழங்கும் திட்டம்

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள்



2000 ஏப்ரல் 24]

எழுதுவோர்க்குப் பரிசுகள் வழங்கப்பெற்று வருகின்றன. ஆட்சிமொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் துறைத் தலைமை அலுவலகம் ஒன்றையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுள் ஒன்றையும் தெரிவு செய்து அவற்றுக்குப் பரிசுக் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கும் திட்டம் ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டுவருகிறது.

### தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் 15 தலைப்புகளில் சிறந்த மூன்று நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. முதல் பரிசு ரூ.10 ஆயிரமும், இரண்டாம் பரிசு ரூ.5 ஆயிரமும், மூன்றாம் பரிசு ரூ.2 ஆயிரமும் எனப் பணப் பரிசுகள் வழங்கப்பெறுகின்றன. பரிசுக்குரிய நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பகத்தார்க்கு ரூ.2 ஆயிரம் பரிசுத் தொகையாகவும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. பாராட்டுச் சான்றிதழும் அளிக்கப்பெறுகிறது. 1998ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களில் 42 சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கவும், அந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகங்களுக்கு ரூ.2 ஆயிரம் பரிசுத் தொகை அளிக்கவும் 1999-2000ஆம் ஆண்டில் ரூ.3.70 இலட்சம் தொகை பெறப்பட்டு பரிசுகள் 16-1-2000 அன்று அளிக்கப்பட்டன. இது தொடர்பில் 2000-2001ஆம் ஆண்டிற்கு ரூ.3.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

தகுதியும் சிறப்பும் மிக்க நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நூல் ஆசிரியர்களுக்கு அரசு நிதியுதவி வழங்குகின்றது. இத்திட்ட விதிகளில் குறித்த தலைப்புகளுக்கு இணங்க, நூல் வெளியிட நிதியுதவி வேண்டி நூல் ஆசிரியர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள், வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்டுப் பரிந்துரைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி நூல் ஆசிரியர்களுக்குப் பெரும் அளவாக ரூ.25,000, அல்லது நூல் வெளியீட்டுச் செலவில் 50% தொகை,

இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. 1999-2000ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரிய நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பெறும் நூல்களுக்கு ரூ.20,000 அல்லது நூல் அச்சிட்ட செலவில் 60% தொகை, இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1999-2000ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. 2000-2001ஆம் ஆண்டிற்கு ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட இத்திட்டம் வகை செய்கிறது. இவ்வாறு வெளியிடப்பெறும் மொழியாக்க நூல்களுக்கு ரூ.20,000 அல்லது அச்சிட்ட செலவில் 60% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. 1999-2000ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் பெறப்பட்டது 2000-2001ஆம் ஆண்டிற்கு ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மாநில, மாவட்ட அளவில் தமிழில் போட்டிகள் நடத்துதல்

இத்திட்டம் 1996-97ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மாணவர்களுக்குத் தமிழ் மொழியின்பால் ஈடுபாட்டை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ் மொழித்தேர்ச்சியை ஊக்குவிக்கும் முறையிலும், தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்துக்கு உறுதுணைபுரியும் வகையிலும், அறிவியல் தமிழின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும் வகையிலும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் வாயிலாக மாவட்ட மாநில அளவில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கிடையே போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக ரூ.2 இலட்சம்



நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, இத்தொகை அரசு சார்பு நிதி நிறுவனமான தமிழ்நாடு போக்குவரத்து நிதிக் கழகத்தில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையைக் கொண்டு கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி போன்றவற்றை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. திங்கள் வருமானம் ரூ.400-க்கு மேற்படாத 58 அகவை முடிந்த தமிழறிஞர்கள் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தகுதி பெற்றவர்களாவர். நிதியுதவிக்குத் தெரிவு செய்யப்பெறுவோர்க்குத் திங்கள்தோறும் ரூ.500 வீதம் நிதியுதவி வழங்கப்பெற்றுவருகிறது. இத்திட்டத்தின்கீழ் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 1999ஆம் ஆண்டு முடிய மொத்தம் 467 பேர் பயனடைந்துள்ளனர். 1999-2000ஆம் ஆண்டிற்கு நிதியுதவியாக ரூ.27.12 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ.27.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தமிழ்மொழிக் காவலர் நிதியுதவித் திட்டம்

தமிழ் மொழி மற்றும் பண்பாட்டைப் பேணி வளர்க்கச் சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்குத் திங்கள்தோறும் நிதியுதவியாக ரூ.3,000-மும் மருத்துவப் படியாக ரூ.15-ம் சேர்த்து ரூ.3,015-ஆக வழங்கப்பட்டுவருகிறது. மேலும், மொழிக்காவலர்களின் மரபுரிமையினருக்கு நிதியுதவியாக ரூ.1,500/- மற்றும் மருத்துவப் படியாக ரூ.15-ம் சேர்த்து மொத்தம் ரூ.1515-ஆக் வழங்கப்பட்டுவருகிறது. அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை மொழிக்காவலர்கள் 2120 பேரும், மொழிக்காவலர்களின் மரபுரிமையர் 394 பேரும் ஆக மொத்தம் 2514 பேர் நிதியுதவி பெற்றுவருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் மொழி, எல்லைக் காவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மாவட்ட வாரியாகத் தொகுத்து ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

[2000 ஏப்ரல் 24

## விழாக்களும் விருதுகளும்

### திருவள்ளுவர் விருது

திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து திருவள்ளுவர் திருநாளில் திருவள்ளுவர் விருது வழங்கப்பெறுகிறது. விருதுத் தொகையாக ரூ.1 இலட்சமும், ஒரு பவுன் தங்கப் பதக்கமும் வழங்கப்படுகின்றன. 2000ஆம் ஆண்டிற்கான விருது திரு. த.சி.க. கண்ணன் அவர்களுக்கு 16-1-2000 அன்று வழங்கப்பெற்றது.

### பாவேந்தர் பாரதிதாசன் விருது

ஒவ்வோர் ஆண்டும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் சிறந்த கவிஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து இவ்விருது வழங்கப்பெறுகிறது. விருது பெறுபவர் விருதுத் தொகையாக ரூ.1 இலட்சமும், ஒரு பவுன் தங்கப் பதக்கமும் பரிசாகப் பெறுவார். 1999-ஆம் ஆண்டிற்குரிய விருது முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கு 24-12-1999 அன்று வழங்கப்பட்டது.

### திரு.வி.க. விருது

சிறந்த எழுத்தாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. பெயரால் விருது வழங்கும் திட்டம் 1979ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. விருது பெறுபவர் ரூ.1 இலட்சமும் ஒரு பவுன் தங்கப் பதக்கமும் பரிசாகப் பெறுவார். 1999ஆம் ஆண்டிற்குரிய விருது திரு. மன்னர்மன்னன் அவர்களுக்கு 24-12-1999 அன்று வழங்கப்பட்டது.

### பாரதியார் விருது

இவ்விருது 1997ஆம் ஆண்டு முதல் புதிதாகத் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. விருதுத் தொகை ரூ.1 இலட்சமும், ஒரு பவுன் தங்கப் பதக்கமும் வழங்கப்படுகின்றன. 1999ஆம் ஆண்டிற்கான இவ்விருது திரு. வலம்புரி ஜான் அவர்களுக்கு 24-12-1999 அன்று வழங்கப்பட்டது.

### முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் விருது

இவ்விருது 2000ஆம் ஆண்டு முதல் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சிறந்த தமிழ் அறிஞர் ஒருவரைத் தெரிவு செய்து ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படும். இவ்விருது பெறுவோர் ரூபாய் ஓர் இலட்சமும், ஒரு பவுன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கிச் சிறப்பிக்கப்படுவர்.



2000 ஏப்ரல் 24]

### தமிழ் வளர்ச்சி மன்றம்

தமிழ் வளர்ச்சி தொடர்பான பணிகளில், அறிவுரை கூறும் ஓர் உயர்நிலை அமைப்பாகச் செயற்படும் வகையில், 'தமிழ் வளர்ச்சி மன்றம்' என்ற அமைப்பினை அரசு அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இம்மன்றத்தை அரசு புதுப்பித்து அமைத்துள்ளது. இம்மன்றக் கூட்டங்கள் அவ்வப்போது கூடி, தமிழ் வளர்ச்சி தொடர்பான பரிந்துரைகளை அரசுக்கு அளித்துவருகிறது. இம்மன்றம் தமிழ் வழிக் கல்விக்குப் பரிந்துரை செய்தது. தமிழ்நாட்டில் 5ஆம் வகுப்பு வரையிலும் தமிழ் வழிக் கல்வி கற்க அரசாணை வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### கலைக் களஞ்சியம் வெளியிடல்

கலைக் களஞ்சியம் தயாரித்து வெளியிடும் திட்டமானது 1997-98-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பெற்றது. இதன் முதற் கட்டமாக 1997-98ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினால் வெளியிடப்பெற்ற குழந்தைகள் கலைக் களஞ்சியம் மறுப்பதிப்பு செய்து வெளியிடப்பட்டது. 1999-2000ஆம் ஆண்டுக்கு ரூ.10 இலட்சமும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட வாழ்வியல், அரசியல் கலைக் களஞ்சியம் வெளியிட ஒதுக்கப்பட்டது. 2000-2001ஆம் ஆண்டுக்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ.3 இலட்சம் திருக்குறள் கலைக் களஞ்சியம் வெளியிட வழங்கப்பட்டுள்ளது.

### தமிழ் மொழியைப் பரப்புதல் மற்றும் தமிழ் வளர்ச்சி தொடர்பான நிதியுதவி அல்லது நல்கை வழங்கும் திட்டம்

தமிழ் மொழியைப் பரப்புதல், தமிழ் மொழி வளர்ச்சி மேம்பாடு போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயற்பட்டுவருகிறது. இத்திட்டம் 1966ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டுவருகிறது. தமிழ் மொழியைப் பரப்புதல் மற்றும் தமிழ் வளர்ச்சி தொடர்பான நிதியுதவி அல்லது நல்கை வழங்கும் திட்டம் பின்வருமாறு மூன்று வகைகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**(அ) பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல், பட்டய வகுப்பு நடத்துதல் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மானியம் அல்லது நிதியுதவி அளித்தல்**

பிற மாநிலங்களிலுள்ள தமிழ் மக்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும்பொருட்டும், மற்றவர்கள் தமிழ் கற்கும் ஆர்வத்தினை ஊக்குவிக்கும்பொருட்டும், அயல் மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுவதற்கும் தமிழில் பட்டய வகுப்பு நடத்துவதற்கும் மானியம் அல்லது நிதியுதவி வழங்கப் பெற்றுள்ளது. வட மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இத்தகைய மானியம் அல்லது நிதியுதவி வழங்கப்பெற்றுள்ளது. இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயற்படுத்திவரும் பல்கலைக்கழகங்கள் மட்டுமே தற்போது நிதியுதவி பெற்றுவருகின்றன. மைசூரிலுள்ள இந்திய மொழிகள் மய்ய நிறுவனம், அயல் மாநிலப் பல்கலைக்கழகங்கள், தமிழ்ச் சங்கங்கள், தமிழ் அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து அவ்வப்போது வரப்பெறும் கோரிக்கைகளுக்கேற்ப இந்த நிதியுதவி அல்லது மானியம் வழங்கக் கருதப்படுகிறது. 1999-2000ஆம் ஆண்டில், ஒரிசா மாநிலத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்த ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

**(ஆ) தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி**

தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் உள்ள தமிழ்ச் சங்கங்களிலிருந்து அவ்வப்போது வரப்பெறும் வேண்டுகோளின் அடிப்படையில் அவற்றின் தேவைக்கேற்ப தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பெறுகிறது. கட்டடம் கட்டுதல், கட்டடச் சீரமைப்பு, சங்கத்தின் சார்பில் நடத்தப்பெறும் பள்ளிகளைப் பராமரித்தல், சங்கத்தின் மேம்பாடு மற்றும் தமிழ்ப் பணித் திட்டங்கள் ஆகியவற்றுக்காகத் தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பெறுகிறது. தில்லி தமிழ்ச் சங்கம், மதுரை தமிழ்ச் சங்கம், மும்பை தமிழ்ச் சங்கம் ஆகியவை அண்மையில் நிதியுதவி பெற்ற சங்கங்களாகும். மேலும், பெங்களூர் தமிழ்ச் சங்கம் நடத்தும் காமராசர் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.15,000/- மானியமாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

உலகில் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடன் தமிழியல் துறைகளுடன் இணைந்து ஆராய்ச்சியைப் போற்றி வளர்க்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு நிதி முழுமையும் தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக அரசு நல்கையாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவருகிறது. இந்நிறுவனத்துக்கு 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.48.50 இலட்சமும் 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.53.00





இலட்சமும் நல்கையாக வழங்கப்பட்டது. தற்போது இந்நிறுவனம் பெறும் நல்கை ரூ.65.25 இலட்சம் ஆகும்.

**(இ) தமிழாய்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல்**

தமிழியல், தமிழ்ப் பண்பாடு மொழி வளர்ச்சி தொடர்பிலான தமிழாய்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு அந்நிறுவனங்களின் ஆய்வுத் திட்டம், ஆய்வுப் பணிகளின் தன்மைக்கேற்ப மானியம் வழங்கப்பெறுகிறது.

சென்னை செம்மஞ்சேரியிலுள்ள ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை தென்மொழியியற் பள்ளி ஆகிய நிறுவனங்களுக்கு இவ்வகையிலான ஆண்டு மானியம் வழங்கப்பெற்று வருகிறது. அவ்வப்போது அந்தந்த நேர்வுகளுக்கேற்ப இதற்குரிய வரையறைகள் முடிவு செய்யப்பெறுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ஆசியவியல் ஆய்வு நிறுவனத்துக்கு ஆண்டு மானியமாக ரூ.22.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

**புதிய தமிழ் இலக்கண நூல்**

தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் அடிப்படையிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டைக் கருதியும் இக்காலத் தேவைக்கேற்பவும் புதிய இலக்கண நூல் தயாரிக்கப்பட வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது; பணிகள் நடைபெறுகின்றன.

**ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு**

ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு என்னும் நூலின் சிறப்புத் தன்மையைக் கருத்திற்கொண்டு அரசு, இதன் நூலாசிரியர் திரு. ஐ. சண்முகநாதன் அவர்களுக்கு ரூ. 3 இலட்சம் சிறப்பு நேர்வாகக் கருதி, மானியம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. அதனடிப்படையில் அவருக்கு ரூ. 1.50 இலட்சம் தொகை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை நூல் அச்சானதும் வழங்கப்படும்.

**இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு**

அரசியல், அறிவியல், இலக்கியம், சமூக சீர்திருத்தம், விளையாட்டுப் போன்ற துறைகளில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழர்களின் பங்களிப்பினைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தொகுத்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2000 ஏப்ரல் 24

**உலகத் தமிழ் இலக்கிய வரலாறு**

இதுவரை வெளிவந்த தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியங்களைச் சார்ந்துள்ளது. இந்நிலையை மாற்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் இலக்கிய வரலாறுகளையும் ஒருங்கிணைத்து உலகத் தமிழ் இலக்கிய வரலாற்று நூல் ஒன்றினை உருவாக்க, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு ரூ. 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல்**

வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழிருக்கை தோற்றுவிக்க முடிவு செய்து அவ்வாறு தமிழிருக்கை தோற்றுவிப்பதற்கு ரூ. 50 இலட்சம் அறக்கட்டளை மானியமாக வழங்கப்பட்டு, வெளிநாடுகளில் பத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இத்திட்டம்பற்றித் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பிற மாநிலங்களில் தமிழ் வளர்ச்சி மையம் தோற்றுவித்தல்**

இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. முதல் கட்டமாக மேற்கு வங்காளம், மகாராட்டிரம் ஆகிய இரு மாநிலங்களில் தமிழ் வளர்ச்சி மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்தொடர்பில் 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 9 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. 31-1-2000 ஆம் நாளன்று மும்பையிலும் 1-2-2000 ஆம் நாளன்று கல்கத்தாவிலும் தொடக்க விழா நடைபெற்றது. 2000-2001ஆம் ஆண்டுக்கு ரூ. 9.52 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அகராதி, சொல்லகராதி தயாரித்தல்**

1998-99 ஆம் ஆண்டு அகராதி, சொல்லகராதி தயாரிக்க ரூ.10 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டு 1998-99 ஆம் ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒதுக்கீடு, முதல் கட்டமாகப் பெறப்பட்டு இத்தொடர்பில், ஞானப்பிரகாச சுவாமிகள் எழுதி, வெளிவந்த சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி நூல் மறுபதிப்புச் செய்து வெளியிடப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் ஜே.பி. இராட்லர் அகராதி வெளியிட ரூ. 2 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 24]

**மருத்துவக் கலைக் களஞ்சியம் தயாரித்தல்**

1998-99 ஆம் ஆண்டு மருத்துவக் கலைக் களஞ்சியம் தயாரிக்க ரூ. 10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு முதல் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மருத்துவக் கலைக்களஞ்சியம் 5 ஆம் தொகுதியினை வெளியிடுவதற்காகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்துக்கு ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டு நூல் வெளியிடப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டுக்கு ரூ.2 இலட்சம் பெறப்படவுள்ளது.

**நூல்கள் நாட்டுடைமையாக்கல்**

பாரதியார், சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம் (விடுதலைப் போரில் தமிழகம் நூல் மட்டும்), கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், மறைமலையடிகள், திரு.வி.க., கல்கி ஆகியோரின் நூல்கள், படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்தம் குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகை வழங்கப்பட்டது. சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி, பதின்மூன்று தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுப் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டன. 1999-2000 ஆம் ஆண்டில் திரு. வெ. சாமிநாத சர்மா அவர்களின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டு நூல்கள் பதிப்புக்கு உரிமை பெற்று திரு. பெ.சு. மணி அவர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்பட்டது. பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்கு எளிய முறையில் உரை எழுதியவரும், சுயமரியாதை இயக்கத்தின் பெரும் எழுத்தாளருமான சீர்திருத்தச் செம்மல் சாமி. சிதம்பரனார் மற்றும் ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்த தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆகியோர். அவர்கள் எழுதிய நூல்கள் நூற்றாண்டையொட்டி நாட்டுடைமையாக்கப்பட்டு, தலா ரூ.10 இலட்சம் காப்பு நிதியாக 2000-2001 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளது. மேலும், திராவிட இயக்கக் கவிஞர் முடியரசன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுக் காப்பு நிதியாக ரூ.10 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

**குறள் பரிசு**

கன்னியாகுமரியில் 31-12-1999, 1-1-2000 ஆகிய நாட்களில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா நிகழ்ச்சியில் திருக்குறள் முற்றோதல் செய்த 23 மாணவச் செல்வங்களுக்குத் திங்கள்தோறும் ரூ.1000 வீதம் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 24

**விழாக்கள் மற்றும் நூற்றாண்டு விழாக்கள்**

ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழாவும், உ.வே. சாமிநாத அய்யர் அவர்களின் பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்படுகின்றன. காரைக்குடி தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம், மயிலை சீனி. வேங்கடசாமி, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், மங்கலங்கிழார் ஆகியோருக்கு நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

**இந்திய ஆட்சிப் பணித் தேர்வினைப் தமிழில் எழுதித் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்**

இந்திய ஆட்சிப் பணித் தேர்வினைத் தமிழில் எழுதுவோரை ஊக்குவிக்கவும், தொடர்ந்து இவ்வாறு எழுத மற்றவர்களை ஊககுவிக்கவும் இத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழில் இத்தேர்வினை எழுதித் தேர்ச்சி பெறுவோருள் ஆண்டுதோறும் முதல் மூன்று இடத்தில் வருவோர்க்குப் பரிசு வழங்கி, பாராட்டிப் பொன்னாடை போர்த்தவும் இத்திட்டம் வகைசெய்கிறது.

**நாளிதழ்கள், திங்கள் இதழ்களுக்குப் பரிசுகள்**

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் வகையில் வெளிவரும் தமிழ் நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்களுக்கு மூன்று பரிசுகள் வழங்கி ஊக்குவிக்க 1999-2000-ல் ரூ.2 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

**கணினி அகராதி தயாரித்து வெளியிடும் திட்டம்**

தற்போது வளர்ந்துவரும் அறிவியல், தொழில்நுட்பம், தொலைத்தகவல், கணினி ஆகியன தொடர்பாக, கணினிச் சொற்கள், ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து அகராதியாக வெளியிட முன்வரும் தனிப்பட்டவர்களுக்கும், நிறுவனங்களுக்கும் நல்கை வழங்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அகராதிகள் அச்சிட்டு வெளிக்கொணர்வதன்மூலம் ஆட்சி மொழித் திட்டப் பயன்பாட்டுக்கு மட்டுமின்றி, தமிழ் மக்களும் அறிவியல், தொழில்நுட்பச் சொற்களைத் தமிழில் கையாளுவதன்மூலம் மேலும் தமிழ் மொழிக்குச் சிறப்புச் சேர்ப்பதாக அமையும். இத்திட்டத்துக்கு 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சம் ஒதுக்கப்பட்டு, கணினி கலைச்சொல் அகராதி தயாரித்து வெளயிட்டுள்ள திரு. மணவை முஸ்தபா அவர்களுக்கு ரூ. 50,000 வழங்கப்பட்டது.



2000 ஏப்ரல் 24]

## நூல்கள் வெளியிடுதல்

**1. வரலாறு**

தமிழ்நாட்டு வரலாற்றினை முறைப்படி தொகுத்து ஏழு தொகுதிகளாக வெளியிட முடிவு செய்யப்பட்டு 1996-க்கு பின் பல்லவர், பாண்டியர் காலம்-இரண்டாம் பகுதி நூலும், சோழப் பெருவேந்தர் காலம் முதல் பகுதி, இரண்டாம் பகுதி நூல்களும், ஐந்தாம் தொகுதியாகிய பாண்டியப் பெருவேந்தர் காலம் நூலும் வெளிவந்துள்ளன. ஒரே தொகுதி நூலுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. விசய நகர-நாயக்கர் கால வரலாறும் உருவாகிவருகிறது.

**2. இ.ஆ.ப. கருவி நூல்**

இ.ஆ.ப. தேர்வினைத் தமிழில் எழுதுவோர்க்குத் துணைபுரியும் வகையில் தமிழில் கருவி நூல்கள் தயாரிக்கப்பட்டு 'தமிழ் மொழி வரலாறு' எனும் நூல் 16-1-2000 அன்று வெளியிடப்பட்டது. வரலாறு, புவியியல் கருவி நூல்கள் தயாரித்து வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3. ஆட்சித் தமிழ் நூல்**

ஆட்சிமொழித் திட்டம் பற்றி அரசுப் பணியாளர்கள் முழுமையாக அறிந்துகொள்ள உதவும் வகையில் 'ஆட்சித் தமிழ்' நூல் தயாரிக்கப்பட்டு 16-1-2000 அன்று வெளியிடப்பட்டது. தேர்வாணையம் வாயிலாக இதில் தேர்வெழுதித் தேர்ச்சி பெற்றால்தான் அரசுப் பணியாளர்களின் தகுதிகாண் பருவம் முடிக்கப்படும் எனும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**4. தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்**

தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் தேவையைக் கருதி 1998-ல் நான்காம் பதிப்பு 5000 படிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 24

## ஆ. மொழிபெயர்ப்புத் துறை

தமிழ்நாடு அரசு உயரிய நோக்கமாகக் கொண்டுள்ள ஒளிவு மறைவற்ற செயற்பாட்டிற்கு உதவும் வகையில் மக்கள் மொழியில் அரசின் ஆட்சி நடைபெற்றிட மொழிபெயர்ப்புத் துறை பணியாற்றிவருகிறது. தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறை அலுவல்களும் தமிழிலேயே நடைபெற மொழிபெயர்ப்புத் துறை பணியாற்றிவருகிறது. ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாக் கோப்புகளைத் தமிழில் இத்துறை மொழிபெயர்க்கின்றது.

அறிவிக்கைகள், பொதுக் கணக்கு, பொது நிறுவனக் குழு அறிக்கைகள், மாநில ஆட்சியறிக்கை, காவலர் பதக்க மதிப்புரைகள், விதிகள், துணை விதிகள், விதிமுறைகள், பொதுத் துறையின் மறைபொருள் கோப்புகள், விசாரணை ஆணைய அறிக்கைகள், தேர்தல் ஆணையக் கோப்புகள், நிதிக் குழு அறிக்கைகள், காபிபோசா சட்டத்தின்கீழ் நடவடிக்கை தொடர்பான கோப்புகள், அரசாணைகள் போன்ற அனைத்து வகைக் கோப்புகளும் மொழியாக்கம் செய்யப்பெறுகின்றன.

வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், துணை மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழிபெயர்க்கப் பணியாளர்களின் ஒரு தொகுதியினர் ஆண்டுதோறும் நிதித் துறைக்கு அனுப்பப்படுகின்றனர்.

## இ. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில் அகரமுதலி உருவாக்குதலும் தனிச் சிறப்பு வாய்ந்ததொரு பணியாகும். தமிழ் மொழியில் தனித் தன்மை வாய்ந்த பேரகரமுதலியைப் பன்மடலங்களில் வெளியிடும் நோக்கத்தின் விளைவாகச் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்' எனும் இத்துறை 1974-ல் அரசால் உருவாக்கப்பட்டது. இருமொழிப் பேரகரமுதலியான இதில் ஒவ்வொரு சொல்லுக்கும் எடுத்துக்காட்டுகளுடன் உரிய விளக்கமும், செந்தமிழ்ச் சொல்லாட்சிகளும், வேரும் வரலாறும் அளிக்கப்படுவதால் குறிப்பாகத் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளருக்கு இந்நூல் பெரிதும் பயன் அளிப்பதாயிருக்கும். தவிரவும், எல்லார்க்கும் பயன்படும் பொது வகையான சொற்பொருள் அகரமுதலியாகவும் இந்நூல் அமைந்துள்ளது.



2000 ஏப்ரல் 24]

திரட்டப்பெறும் சொற்களுக்குத் தொல்லியல், நாணவியல், கல்வெட்டியல் மற்றும் இலக்கண இலக்கியங்களிலிருந்து விரிவான விளக்கங்களும், சான்றுகளும், மேற்கோள்களும் தரப்படுவதோடு, தேவையான இடங்களில் படவிளக்கங்களும் இடம் பெற்று இப்பேரகரமுதலிக்கு அணி சேர்க்கின்றன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகளாக இதுவரையிலும் உயிரெழுத்துகள் வரிசையில் 'அ'கரத்தில் தொடங்கும் முதற் பகுதியும், 'ஆ'காரம் முதல் 'ஈ'காரம் வரையிலான இரண்டாம் பகுதியும் 'உ'காரம் முதல் 'ஔ'காரம் வரையிலான மூன்றாம் பகுதியும் வெளியிடப்பெற்றுள்ளன. இவை யாவும் மொழியியல் வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. இவற்றைத் தொடர்ந்து உயிர்மெய்யெழுத்துகள் வரிசையில் 'க'கரத்தில் தொடங்கும் முதற் பகுதி அண்மையில் திருவள்ளுவர் நாளன்று (16-1-2000) வெளியிடப்பட்டது. இதனையடுத்து 'கா'காரம் முதல் 'கௌ'காரம் வரையிலான இரு பகுதிகள் தற்போது அச்சில் உள்ளன. விரைவில் இப்பகுதிகள் வெளியிடப்பெறும். தொடர்ந்து 'ச', 'ஞ', 'த', 'ந', 'ப', 'ம', 'ய', 'வ' ஆகிய எழுத்துகளில் தொடங்கும் பகுதிகள் வெளியிடப்பெறும். இப்பகுதிகளின் சொல்லடைவு மற்றும் அட்டவணைப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. பேரகரமுதலியின் எஞ்சிய மடலங்கள் அனைத்தையும் விரைந்து வெளிக்கொணரும் வகையில் கணிப்பொறியமைப்பு, ஒளிக்கதிர் அச்சுக் கருவி, ஒளியச்சுக் கருவி முதலியவற்றின் துணை கொண்டு பணி விரைவுபடுத்தித் திட்டமிட்டவாறு இலக்கினை எய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## ஈ. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்வுக்காக 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயற்பட்டுவருகிறது. இந்நிறுவனத்தில் இலக்கியம்-சுவடிப்புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம் என்னும் நானகு துறைகள் தற்போது உள்ளன. நிறுவனத்தில் தமிழியல் தொடர்பான திட்டப் பணிகள், நூல் வெளியிடுதல், தமிழ் மொழிச் சுவடியியல், மொழிபெயர்ப்பியல் வகுப்புகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள்

நடத்துதல், செய்திக்கதிர், தமிழியல் இதழ் வெளியிடுதல் போன்ற பணிகள் நடைபெற்றுவருகின்றன.

### திட்டப் பணிகள்

நிறுவனக் கல்விசார் அலுவலர்கள் (13 பேர்) பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் செய்துவருகின்றனர். இவை இலக்கியம், மொழியியல், மொழி கற்பித்தல், வரலாறு, சமூகவியல், பண்பாடு, நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்புத் தொடர்பானவை என அமைகின்றன. மேலும், தற்போது நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியர்களாகப் பணியாற்றும் முனைவர் அகத்தியலிங்கம் (முன்னாள் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்) மற்றும் மலேசியாவின் முரசு நெடுமாறன் ஆகியோரும் தமிழியல் தொடர்பான திட்டப் பணிகளைச் செய்துவருகிறார்கள்.

'தமிழியல் ஆவணம்' என்ற திட்டப்பணி மூலம் தமிழியல் தொடர்பாக இதுவரையிலும் வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவை யாவும் சிறு விளக்கக் குறிப்புடன் தொகுக்கப்பட்டுக் கணினியில் பதிவு செய்யப்படவுள்ளன. பின்னர் அவை இணையம் (Internet) வாயிலாக உலகத்தினர் அனைவரும் தமிழியல் செய்திகளைப் பெறும் வகையில் அமைக்கப்படும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒரு தகவல் தொடர்பு மையமாக இயங்கவும் இத்திட்டப் பணி வழிவகுக்கும்.

தமிழ் மொழியைப் பிற மொழியினர், பிற நாட்டினர் கற்கத் துணையாகும் வண்ணம் 'கணினிப் பதிவுக் கையிருப்பு வட்டு' (C.D. Rom) என்னும் திட்டப் பணியை நிறுவனம் தற்போது செய்துவருகிறது.

### பதிப்புகள்

நிறுவனம் இதுவரையில் 375 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இங்குள்ள கல்விசார் அலுவலர் திட்டப் பணிகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், பிற தமிழறிஞர்கள் எழுதியவை ஆகியவற்றைக் கொண்ட வெளியீடுகளாக அமைகின்றன. ஜெர்மனியில் பணிபுரியும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. தாமோதரன் அவர்கள் எழுதிய நன்னூல் மூலமும் விருத்தியுரையும் என்ற நூலினை வெளியிட ஜெர்மன் நாட்டிலுள்ள ஹெடல்பர்க் பல்கலைக்கழகம் (Heidelberg University) நிதி உதவி வழங்கியது.





கீழ்த்திசைச் சுவடி விளக்க அட்டவணை தயாரிப்பதற்காகப் புது தில்லியிலுள்ள தேசிய ஆவணக் காப்பகம் (National Archives) ரூபாய் இரண்டு இலட்சம் நிதி வழங்கியுள்ளது. அந்நூலின் நான்கு பகுதிகள் தற்போது வெளிவந்துள்ளன.

தமிழ் வளர்ச்சித் துறையின் அரிய நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதி பெற்றும் இந்நிறுவனம் பல நூல்களை வெளியிட்டுள்ளது.

### கருத்தரங்குகள்

நிறுவனம் தனியாகவும் பிற நிறுவனங்களோடு இணைந்தும் பல கருத்தரங்குகளையும் பயிலரங்குகளையும் நடத்திவருகின்றது. 1999 ஏப்ரல் திங்கள் 22 முதல் 25 வரை அயலகத் தமிழ் கலை இலக்கியச் சமகாலச் செல்நெறிகள் எனும் பொருண்மையில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் பங்கேற்றனர்.

1999 மே திங்கள் 21, 22, 23 ஆகிய நாட்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் முப்பதாம் கருத்தரங்கினை நடத்தியது.

1999 சூன் திங்கள் பொன். நாவரசு அறக்கட்டளையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து 'குலோத்துங்கன் கவிதைகள் ஆய்வரங்கு' ஒன்றை நடத்தின.

மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்துடன் இணைந்து மேல்நிலைப் பள்ளி மொழி ஆசிரியர்களுக்கு 23-8-99 முதல் 29-8-99 வரை அகராதியியல் பயிலரங்கை நடத்தியது.

புது தில்லியிலுள்ள இந்தியக் கவிதையியல் கழகத்துடன் இணைந்து கல்லூரி மாணவர்களுக்கான கவிதையாக்கப் பயிலரங்கை 25-10-99 முதல் 27-10-99 வரை நிறுவனம் நடத்தியது.

புதுதில்லியிலுள்ள சாகித்திய அகாதெமியுடன் இணைந்து இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் என்ற கருத்தரங்கினை நவம்பர் 24 முதல் 27 வரை நடத்தியது.

மாநில ஆங்கில மொழி நிறுவனத்துடன் இணைந்து டிசம்பர் 7 முதல் 11 வரை கல்லூரி ஆசிரியர்களுக்கான மொழிபெயர்ப்பு தொடர்பான பயிலரங்கை நடத்தியது.

[2000 ஏப்ரல் 24

தமிழக அரசின் நிதியுதவியுடன் 2000 மார்ச் 27 முதல் 29 வரை 'உலகத் தமிழிலக்கிய வரலாறு' எனும் நூலினை வெளிக்கொணரும்பொருட்டு மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 35 தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்ட 3 நாள் பணி அவை நடைபெற்றது. 'உலகத் தமிழிலக்கிய வரலாறு' என்னும் இந்நூல் விரைவில் வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மய்யம், அகில இந்திய வானொலி நிலையம், சென்னைப் பல்கலைக்கழகம், காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை, சென்னை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், எழுத்தாளர் வட்டம், திருமதி கமலம் ஜான் சாமுவேல் கல்வி அறக்கட்டளை, கீழையியல் ஆய்வு நிறுவனக் கல்வி அறக்கட்டளை, இலக்கியச் சங்கம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து கல்கி நூற்றாண்டு விழா, தமிழ் இலக்கிய இதழ்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் வளர்ச்சி, பொதுவுடைமை இயக்க இதழ்கள், மகளிர் இதழ்கள், தொடர்பான கருத்தரங்குகள், இலக்கியச் சந்திப்பு போன்ற நிகழ்வுகளை நடத்தியது.

### அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

நிறுவனத்தில் தற்போது 27 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. இவ்வறக்கட்டளைப் பொறுப்புகள் கல்விசார் அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, அறக்கட்டளைப் பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### நூலகம்

தற்போது நூலகத்தில் 52,000 நூல்கள் உள்ளன. இந்நிறுவனத்தில் முன்னர் பணியாற்றிய, மறைந்த பேராசிரியர் முனைவர் தா.வே. வீராசாமி அவர்கள் குடும்பத்தினர் சுமார் 1100 நூல்களையும், ஆய்வேடுகளையும் இலவசமாக இந்நிறுவன நூலகத்துக்கு வழங்கியுள்ளனர். இந்நிறுவன நூலக நூல்களை முறையாகப் பேணவும், நூலகத்துக்கு வருகை தரும் தமிழ் ஆர்வலர்கள் நூலகத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவும், நூலகத்தை விரிவாக்கம் செய்ய திட்டம் உள்ளது. 25,000 நூல்களைக் கணினி மூலம் அட்டவணையிடும் பணி தில்லியிலுள்ள டெல்நெட் (Delnet) நிறுவனத்துடன் இணைந்து செய்து முடிக்கப்பட்டுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் தென்னிந்தியாவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், வட மாநிலத்தில் பாட்டியாலா பல்கலைக்கழகமும் இத்திட்டப் பணியைச் செய்யத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



2000 ஏப்ரல் 24]

உலக நாடுகளுடன் தொடர்பு கொண்டு தமிழியல் தொடர்பான செய்திகளை அறியவும், இங்கு நிகழும் தமிழியல் ஆய்வு தொடர்பான செய்திகளை அனுப்பவும் இந்நிறுவனத்தில் இரண்டு மின்னஞ்சல்கள் (E.Mail) அமைக்கப்பட்டுள்ளன.

## உ. தமிழ்ப் பல்கலைக்கழகம்

இந்தியப் பண்பாட்டின் வலுவான இயக்கத்துக்கு ஆதாரமான கருத்தாக்கங்களைப் பண்டுதொட்டே வழங்கியிருக்கும் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களை ஆராய்தல், எதிர்காலத்தில் தமிழினம் வீறுடன் முன்னியங்குவதற்கான அடிப்படைகளைக் கட்டமைக்கும் அறிவியல் பண்புமிக்க ஆராய்ச்சி நூல்களையும் நோக்கீட்டு நூல்களையும் உருவாக்குதல் என்ற உயர் குறிக்கோளுடன் 1981ஆம் ஆண்டு தமிழ் மொழியின் பெயரால் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஐந்து பெரும் புலங்களில் அடங்கும் 23 தனித் துறைகள் செயற்பட்டு வருகின்றன. 1998-99ஆம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு ரூ.113 இலட்சமாக இருந்த ஒட்டுமொத்த நல்கை, ரூ. 353 இலட்சங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. நாடகத் துறையினரால் தமிழக அரசின் நல்கையாக ரூ.3,30,000 பெற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு என ஆதிதிராவிடர் நாடக உருவாக்கம் என்னும் சிறப்புத் திட்டம் நடைபெற்று வருகிறது.

பல்கலைக்கழகப் பணிகளை வெளிப்படுத்தும் நிலையில், நூல் வெளியீடுகள் முதலிடம் வகிப்பன. இதுவரை 303 நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

'செந்தமிழைச் செழுந்தமிழாய் மாற்றவேண்டும்' என்ற பாரதிதாசனாரின் இலட்சிய நோக்குக்கேற்ப ஒவ்வொரு துறையிலும் ஆசிரியர்களால் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர, பல்கலைக்கழக நிதிக்குழு உதவியுடன் பெருந்திட்டங்களும், CSIR, ICHR, DOD, TNSCST போன்ற பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் நல்கை பெற்று சில திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மொழித் திட்டமிடல் மையம், நிகழ்த்துக் கலைகள் மய்யம், வரலாற்று மய்யம் ஆகிய மூன்று துறைகள் நிறுவ வேண்டி நூல்கள் மற்றும் இதழ்கள் ஆகிய இனங்களுக்குப் பல்கலைக்கழக மானியக் குழு ஒதுக்கியுள்ள ரூ.150 இலட்சத்தில் இதுகாறும் ரூ.90 இலட்சம் பெறப்பெற்றுள்ளது. இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி

மற்றும் இந்திய வனப் பணி அலுவலர்களுக்குத் தமிழ் மொழிப் பயிற்சி அளிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. தமிழக அரசு மகாகவி பாரதியார், திரு. ஏ.டி. பன்னீர்செல்வம் ஆகியோர் பெயரில் உருவாக்கியுள்ள அறக்கட்டளையிலிருந்து வரும் வட்டித் தொகையிலிருந்து சென்ற ஆண்டில் ஒவ்வொரு துறைகளிலும் 2 முனைவர் பட்ட மாணவர்களுக்கும், 3 ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்களுக்கும் ஆண்டொன்றுக்குத் தலா ரூ. 5,000 உதவித் தொகை அளிக்கப்பட்டது. ஒவ்வோராண்டும் இந்த உதவி தொடரும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மொத்தம் 40 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. அறக்கட்டளைகள் மூலம் சொற்பொழிவுகள், இசைப் போட்டிகள், ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இணையம் ஏற்படுத்தவும், யாணர் வருவாய்ப் பெருந்திட்டம் அமைக்கவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பங்காகவும், பாங்காகவும் இயங்கும். தமிழ் இணையப் பல்கலைக் கழகப் பட்ட, பட்டயச் சான்றிதழ் வகுப்புகளுக்குரிய பாடத் திட்டங்கள் எழுதப்பட்டுவருகின்றன. இணைய நூனிலைய அமைப்புக்குரிய குறுந்தகட்டுப் பதிவுகள் (CD ROM) ஆயத்தம் செய்யப்படுகின்றன.

## ஊ. தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் குறள்பீடம்

இந்திய நிலையிலும், உலக அளவிலும் வளர்ந்துவரும் தற்காலப் படைப்பிலக்கிய நிலைக்கேற்பத் தமிழ்ப் படைப்பிலக்கியத்தை வளர்த்தெடுப்பதும், படைப்பிலக்கிய முயற்சிகளை ஒருங்கிணைத்து ஊக்கமளிப்பதும், பிறமொழி இலக்கியங்களைத் தமிழிலும், தமிழ் மொழியின் தலைசிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்துத் தமிழ்நாட்டுக்கு வெளியே தமிழ்மொழி இலக்கியத்தைக் கொண்டு செல்வதும் தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் குறள் பீடத்தின் நோக்கமாகும். இந்நிறுவனத்துக்கு 2000-2001 ஆம் ஆண்டில் முதற் கட்டமாக ரூ.20 இலட்சம் ஒதுக்கப்படவுள்ளது. மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாளியைத் தேர்ந்தெடுத்து 'குறள்பீடம்' விருது வழங்கிச் சிறப்பிப்பது இவ்வமைப்பின் தலையாய பணியாகும்.



## எ. தொல்லியல் துறை

தொல்லியல் துறை 1961 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் அக்கல்வெட்டுகளை நூல் வடிவில் கொண்டுவருதல், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளுதல், அகழாய்வு நடைபெறும் இடங்களில் அகழ்வைப்பகங்கள் ஏற்படுத்துதல், நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொல்பொருள்களையும், பழங்கலைப் பொருள்களையும் பதிவு செய்தல், பழமையான மரபுச் சின்னங்களையும், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பாதுகாத்தல், அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகத்திலுள்ள ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்து நூல் வடிவில் அவற்றை வெளியிடுதல் ஆகிய நோக்கங்களுடன் இயங்கி வருகிறது.

### மரபுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

தமிழ்நாட்டில் இதுவரை 83 வரலாற்றுச் சின்னங்கள் கண்டறியப்பட்டு மரபுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை மதுரையிலுள்ள திருமலைநாயக்கர் அரண்மனையும், தஞ்சை அரண்மனைப் பகுதி வளாகத்திலுள்ள நான்கு மரபுச் சின்னங்களும், தரங்கம்பாடி கோட்டையும், சரபேந்திர இராஜபட்டினத்திலுள்ள மனோராவும், இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்க விலாசம் அரண்மனையும் ஆகும். உலக மரபியல் பண்பாட்டு வாரவிழா மதுரை திருமலைநாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை வளாகம், இராமலிங்க விலாச அரண்மனை, விழுப்புரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து இடங்களில் கொண்டாடப்பட்டது.

### கல்வெட்டாய்வு

1999 ஆம் ஆண்டு 75 கல்வெட்டுகள் படியெடுத்துப் படிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 37 ஊர்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் முதுகலைப் பட்டய வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. புது தில்லியிலுள்ள மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் நடத்தப்பட்ட குறுகிய காலக் கல்வெட்டியல் மற்றும் நாணயவியல் பயிற்சியில் மூன்று முதுநிலைக் கல்வெட்டாய்வாளர்கள் பங்கேற்றனர். முதுகலைப் பட்டய மாணவர்களால் வழங்கப்பட்ட 10 ஆய்வேடுகள் நூல் வடிவில் கொண்டுவரப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் கல்வெட்டுப்

படிகள் மற்றும் கல்வெட்டுப் படங்களைப் பாதுகாக்க ரூ.2.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கல்வெட்டுச் சொல்லகராதி தயாரித்தல்

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், திருவாங்கூர் மற்றும் புதுக்கோட்டைக் கல்வெட்டுத் தொகுதிகளிலிருந்து உயிரெழுத்துகளில் தொடங்கும் 1,004 கல்வெட்டுக் கலைச் சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய பொருள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது.

## அகழாய்வு

ஒவ்வோர் ஆண்டும் இத்துறை நில அகழாய்வு மேற்கொண்டு வருகிறது. இதுவரை 22 வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு நடத்தியுள்ளது. இவ்வகழாய்வில் விலை மதிப்பற்ற தொல்பொருள்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தேரிருவேலி மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள மாளிகைமேடு ஆகிய இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள ஏதுவாக மேற்பரப்பு ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. அழகன்குளம் அகழாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

## மாவட்ட அளவில் தொல்லியல் பணிகள்

மாவட்டந்தோறும் உள்ள தொல்லியல் அலுவலர்கள் அரிய ஓலைச் சுவடிகளையும், காசுகளையும், தொல்பொருள்களையும் சேகரித்துள்ளனர். இவை வேதியியல் முறையில் தூய்மை செய்யப்பட்டப் பின்னர் இத்துறையின் அகழ்வைப்பகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் தொல்லியல் அலுவலர்கள், காப்பாட்சியர்கள், கல்வெட்டாய்வாளர்கள் ஆகியோர் திருவாரூர், காஞ்சிபுரம், கரூர், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் கள ஆய்வுப் பணி மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வினைப் பயன்படுத்தித் தொல்லியல் வழிகாட்டி நூல் மேற்கண்ட மாவட்டங்களின் பெயரில் வெளியிடப்படவுள்ளன.

## அகழ்வைப்பகங்கள் மேம்பாடு

1999-2000 ஆண்டில் திருக்கோவிலூரில் அகழ்வைப்பகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. அகழ்வைப்பகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள் ரூ.50,000 செலவில் இரசாயன



முறையில் தூய்மைப்படுத்தப்பட்டு வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.6 இலட்சம் செலவில் ஆற்காடு மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள அகழ்வைப்பகங்கள் சீரமைக்கப்பட உள்ளன.

## நூல்கள் அச்சாக்குதல்

அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகத்துக்காக இரண்டு தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டன. துறையின் சார்பாக தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் மற்றும் நான்கு வெளியீடுகள் அச்சிடப்பட்டன. தொல்லியல் வழிகாட்டி நூல் என்னும் வரிசையில் திருவாரூர் மாவட்டத் தொல்லியல் வழிகாட்டி நூல் அச்சிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் மேலும் நான்கு மாவட்டத் தொல்லியல் வழிகாட்டி நூல்களும், இரண்டு ஊர் கல்வெட்டுகளும், இரண்டு அகழாய்வு அறிக்கைகளும் அச்சிடப்பட உள்ளன.

## கருத்தரங்கு

1999 அக்டோபர் திங்களில் 'தொல்லியல் நோக்கில் தமிழகம்' என்ற தலைப்பில் ஒரு சிறப்புக் கருத்தரங்கம் இத்துறையால் நடத்தப்பட்டது. அக்கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகள் தமிழகத்தின் பல்வேறு அரசியல், பண்பாடு, பொருளாதாரம் மற்றும் கலை வரலாற்றை எடுத்துக்காட்டும் வகையில் அமையப்பெற்றன.

## பண்டைய கலைப் பொருள்கள் பதிவு

1999 ஆம் ஆண்டில் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான கலைப் பொருள்களைப் பதிவு செய்வதற்காக 1,136 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. 781 விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதுவரை பழமையான பொருள்களைப் பதிவு செய்வதற்கு மொத்தமாக 48,402 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றுள் 35,020 விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 'சிலைத் திருட்டு' தொடர்பான சான்றாதாரங்களை இத்துறைப் பதிவு அலுவலர்கள் வழக்குமன்றங்களுக்கு அளித்துவருகின்றனர். மேலும், பதிவு செய்யப்பட்ட சிலைகளைக் கண்காணிக்கும்பொருட்டு அவ்வப்போது உரிய கோவில்களுக்குச் சென்று அங்குள்ள பதிவேடுகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்கின்றனர்.

**அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்**

இத்துறையின்கீழ் 'அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம்' சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் 72,000-க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகள் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு மொழிகளில் உள்ளன. இதுவரை 434 ஓலைச் சுவடிகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

## ஐ. அரசு அருங்காட்சியகங்கள்

இந்தியப் பெருநாட்டை அணிசெய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும் பெருமையும் கொண்டது சென்னை அருங்காட்சியகமாகும். தொல்லியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், கவின்கலை, சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக் கூடங்களோடு உலகப் புகழ்பெற்ற தென்னகப் படிமங்களைப் பெருமளவில் பெற்றுள்ளதால் இவ்வருங்காட்சியகம் புகழ்பெற்றுத் திகழ்கிறது. தேசிய மரபுச் செல்வங்களைக் 'காக்கும் கலைக் களஞ்சியமாக இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளதோடு, தொல்பொருள்களையும் பேணிக் காக்கிறது. பல்வேறு மாநில மக்களும் ஆர்வத்தோடு திரண்டு வந்து காணும் காட்சியகமாகவும் இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளது. இந்திய அருங்காட்சியகங்களுள் ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு காலமாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்துவரும் பெருமை இந்த அருங்காட்சியகத்துக்குரியது.

அரசு அருங்காட்சியகத் துறையின் கீழ் தற்போது புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருட்டிணகிரி, திருநெல்வேலி, திருவாரூர், சிவகங்கை, பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், கரூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய 19 மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன.

2000-2001 ஆம் நிதியாண்டில் சென்னை அருங்காட்சியகத்தில் வலைத் தளம் வெப்சைட் அமைத்தல், பொது மக்களுக்குக் கழிப்பிட வசதி செய்தல், கணிப்பொறிகள், அச்சீட்டுப்பொறி (பிரிண்டர்) வாங்குதல், சேமிப்பு நிலை அடுக்குகள் வாங்குதல், வளர்கலைக் கூடத்தில் விளக்கு வசதி முறையைப் புதுப்பித்தல், 'திருச்சி அருங்காட்சியகத்துக்குப் பாதுகாப்பு வசதி செய்தல் முதலிய திட்டங்களுக்காக ரூ.39.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





## ஒ. கலை-பண்பாட்டு இயக்ககம்

கலைக் கல்வி, பண்பாட்டு வளர்ச்சி தொடர்பான கல்வி நிலையங்களும், அரசு சார்பு அமைப்புகளும் தனித் தனித் துறைகளின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்தன. கலை-பண்பாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் இவ்வமைப்புகளை ஒருங்கிணைத்து, 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 'கலை-பண்பாட்டு இயக்ககம்' என புதிய துறை தோற்றுவிக்கப்பட்டது. இத்துறைக்கெனத் தனியாக இயக்ககம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் வளர்ச்சிப் பாதையில் மெல்ல நடைபோட்டு, 1996 ஆம் ஆண்டு முதல் விரிவான வளர்ச்சி பெற்றுச் சிறப்பாக முன்னேறியுள்ளது. தற்போது கலை-பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் நான்கு இசைக் கல்லூரிகள், இரண்டு கலைத் தொழிற் கல்லூரிகள், ஒரு கட்டடச் சிற்பக் கலைக் கல்லூரி, 15 இசைப் பள்ளிகள், 6 கலை-பண்பாட்டு மையங்கள், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம், அதனைச் சார்ந்த 22 மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள், 10 விரிவாக்க மையங்கள், 2 ஊரக ஜவகர் சிறுவர் மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ஆகிய நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

**அரசு இசைக் கல்லூரிகள்**

அரசு இசைக் கல்லூரிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்துச் செம்மைப்படுத்த மதிப்புறு இயக்குநர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இக்கல்லூரிகளில் மிடற்றிசை, நரம்பிசை (வீணை, வயலின்) ஆடற்கலை, தோற்கருவி இசை, நட்டுவாங்கம், நாட்டுப்புறக் கலை ஆகிய பல துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இக்கல்லூரிகளில் நாதசுரம், தவில், நட்டுவாங்கம் ஆகிய பிரிவுகளில் பயிலும் மாணவ, மாணவியருக்குத் திங்கள்தோறும் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு சனவரித் திங்களில் சென்னை இசைக் கல்லூரியில் சிறந்த கலை வல்லுநர்களைக் கொண்டு தமிழிசை விழா ஒரு வார காலம் நடத்தப்பட்டது. அதேபோன்று மதுரை இசைக் கல்லூரியிலும் பிப்ரவரியில் இசை விழாக்கள் நடத்தப்பட்டன. திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் இசைக் கல்லூரிகளில் தமிழிசை விழா மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டது. சீர்காழித் தமிழிசை மூவர் விழா மார்ச் திங்களில்

[2000 ஏப்ரல் 24

நடைபெற்றது. சென்னை இசைக் கல்லூரிக்குக் கணினி வாங்குதல், தமிழ் இசை விழா நடத்துதல், ஒலிநாடா நூலகம் அமைத்தல், அறைகலன்கள் வாங்குதல் ஆகிய திட்டங்கள் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.4.25 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படவுள்ளன.

### அரசு இசைப் பள்ளிகள்

தமிழ் இசை, தமிழ்க் கலை பரவலாகக் கற்பிக்கப்பட வேண்டும் எனனும் பெருவிழைவால் அனைத்து மாவட்டங்களிலும், இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்ற கொள்கைக்கிணங்க சேலம், புதுக்கோட்டை, திருவாரூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கடலூர், கரூர், தூத்துக்குடி, பெரம்பலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சீர்காழி, சிவகங்கை, கிருட்டிணகிரி ஆகிய 15 இடங்களில் மாவட்ட இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு இயங்கிவருகின்றன. இப்பள்ளிகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து மேம்படுத்த ஒரு மதிப்புறு இயக்குநர் பள்ளிகளுக்கெனத் தனியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.13.92 இலட்சம் செலவில் மேலும் இரு இசைப் பள்ளிகள் தொடங்கப்படவுள்ளன.

### அரசு கலைத்தொழிற் கல்லூரிகள்

சென்னையிலும், கும்பகோணத்திலும் அரசு கலைத்தொழிற் கல்லூரிகள் இயங்கிவருகின்றன. சென்னையில் இயங்கும் கல்லூரி 1850-ல் தொடங்கப்பட்ட பழமை வாய்ந்த கல்லூரியாகும். இக்கல்லூரிக்குக் கடந்த 1999-2000 ஆம் நிதியாண்டில் கூடுதலாக வகுப்புகளும், கலை அரங்கமும் கட்ட ரூ.19.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. இவ்விரு கல்லூரிகளிலும் வண்ணக் கலை, காட்சித் தொடர்பு வடிவமைப்பு, சிற்பக்கலை, துகிலியல் வடிவமைப்பு, சுடுமண் வடிவமைப்பு, பதிப்போவியக்கலை முதலிய துறைகளில் கலைக் கல்வி அளிக்கப்பட்டுவருகின்றது. கடந்த ஆண்டு சென்னை, கலைத்தொழிற் கல்லூரியில் வண்ணக் கலை, சுடுமண் பிரிவு, துகிலியல் போன்ற பட்ட மேற்படிப்புப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. 2000-2001 ஆம் நிதியாண்டில் அரசினர் கலைத்தொழிற் கல்லூரி விரிவுரையாளர்களுக்குக் கணினியை அடிப்படையாகக் கொண்ட துகிலியல் மற்றும் ஆடையக வடிவமைப்பில் பயிற்சி அளிக்க ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 24]

### அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி

கல்லும் கலை பேசும் வரலாற்றுப் புகழுடைய மாமல்லபுரத்தில் அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி அமைந்துள்ளது. இங்கு கோயில் கட்டடக் கலை, மரம், மாழை (உலோகம்), சுதைச் சிற்பக் கலை ஆகிய துறைகளில் கலைக் கல்வி அளிக்கப்படுகின்றது. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கைவினைத் திறன் பாரெங்கும் பாராட்டப்படுகிறது. கோயில் கட்டடக் கலையும், கட்டடம் சார்ந்த சிற்பக் கலையும் தென்னிந்தியாவிலேயே இங்கு மட்டுமே பயிற்றுவிக்கப்படுகின்றன.

### கலை-பண்பாட்டு மையங்கள்

கலை-பண்பாட்டு இயக்ககத்தின் செயற்பாடுகளை மாவட்ட அளவில், பரவலாக்கிடக் காஞ்சிபுரம், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் கலை-பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இம்மையங்கள் துறையின் சார்பு அலுவலகங்களாக மட்டுமல்லாமல் ஜவகர் சிறுவர் மன்றங்கள், இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு அமைப்பாகவும் செயற்பட்டுவருகின்றன. இக்கலை-பண்பாட்டு மையங்கள் மூலம் இவ்வாண்டு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் முத்தமிழ் விழா, மனிதநேயக் கலை விழா, குறிஞ்சி விழா, முல்லை விழா, மருதம் விழா, பாலை விழா, நல்லிணக்கக் கலை விழா, தெருக்கூத்துப் பயிற்சி, நாட்டுப்புறக் கலை விழா, இசை விழா, அருணகிரிநாதர் விழா, தப்பாட்டப் பயிற்சி, இளந்தளிர்க் கலை விழா, ஊரகக் கலை விழா, ஐந்திணைக் கலை விழா, கலைஞர்கள், கவிஞர்கள் உரையாடல், மயிலாடுதுறை மூவர் விழா, நயினார் பிள்ளை நினைவு இசை விழா, காஞ்சிபுரம் எல்லப்பா நினைவு விழா முதலிய இசை மரபினரின் புகழ் விழாக்கள் போன்ற கலை விழாக்களும், கலைப் பயிற்சிகளும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. 2000-2001-ல் கலை-பண்பாட்டு மையங்களுக்கு ரூ.4.50 இலட்சம் செலவில் கணினிகள் வாங்கப்படவுள்ளன. மேலும் ரூ.3.20 இலட்சம் செலவில் ஒலி-ஒளி நூலகம் ஏற்படுத்தப்படவுள்ளது. தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து திருவண்ணாமலை கார்த்திகை ஒளி விழா முதலிய விழாக்களைத் துறை நடந்திவருகிறது. மேலும், இவ்வாண்டு இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முறையாகப் பரதம், கோலாட்டம், கரகம், காவடி, சிலம்பாட்டம், பாட்டு, ஒயிலாட்டம் முதலிய தமிழ் கலைகளை அயல் மாநிலத்தில் பயிற்சியளிக்கும் 'கலைப் பலகணி'த் திட்டம்

டிசம்பர் 1999-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. குஜராத்திலுள்ள சிறுவர், சிறுமியரும், இளைஞர்களும் இப்பயிற்சியில் பங்குகொண்டு சிறப்பாகப் பயிற்சி பெற்றனர்.

தமிழிசைக்குத் தொண்டுபுரிந்த திரு. முத்துத்தாண்டவர், திரு. மாரிமுத்தாப் பிள்ளை, திரு. அருணாசலக் கவிராயர் ஆகியோரின் வாழ்விடமான சீர்காழியில் அப்பெருமக்களின் நினைவாக அவர்களின் சிலை அமைந்த மணிமண்டபம் எழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. ஆண்டுதோறும் சீர்காழியில் இம்மூவரின் நினைவாக 'தமிழிசை மூவர் விழா' நடத்தப்படுகிறது.

1996 ஆம் ஆண்டு பரதநாட்டியத்தில் தமிழகத்திலேயே பட்டப் படிப்புக்கான முதல் நுண்கலைக் கல்லூரி என்ற பெருமையோடு தனது கலைப் பணியைத் தொடர்ந்து நடத்துகின்ற திருச்சிராப்பள்ளி 'கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி' கலை நிகழ்ச்சிகளில் புதுமையைப் புகுத்தி மனித நேயம், மத நல்லிணக்கம் ஆகியவற்றைக் கருப் பொருளாக்கி வெளி நாடுகளிலும், உள் நாட்டிலும் ஆயிரம் நிகழ்ச்சிகளுக்கு மேல் நடத்தியுள்ளது. இதன் பணிகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் வகையில் கலைக் காவிரி நிறுவனத்தை அரசு உதவி பெறும் நிறுவனமாக (Aided Institution) ஏற்று அதற்குரிய மானியம் வழங்கப்படவுள்ளது.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 'மைய சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும் மாநில அரசால் தோற்றுவிக்கப்பெற்றது.

கலைத் துறையில் அரிய பணியாற்றிய புகழ்மிக்க கலைஞர்களைப் பாராட்டுகின்ற வகையில் ஆண்டுதோறும் கலைமாமணி விருது வழங்கப்பெறுகிறது. இதுவரை 1116 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருதுகள் வழங்கப்பெற்றுள்ளன. 'கலைமாமணி' விருது பெற்ற நலிவுற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையில் 147 கலைஞர்களுக்கு ரூ. 1,000/-, 17 கலைஞர்களுக்கு ரூ.5000/- பொற்கிழியாக இதுவரை வழங்கப்பெற்றுள்ளன. இத்தொகை ரூ. 10,000/- ஆக உயர்த்தப்பட்டு மேலும் 13 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை மேம்படுத்தவும், ஒரு பகுதி பண்பாட்டு



மரபினைப் பல்வேறு மாநில மக்களும் அறிந்துகொள்ளவும் உதவும் வகையில் மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் திரிபுராவிலிருந்து கலைக் குழுக்கள் தமிழ்நாட்டுக்கும், தமிழகக் கலைக் குழு திரிபுராவுக்கும் சென்று நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

வாழ்நாள் முழுவதும் கலைப் பணியாற்றி, அகவை முதிர்ந்து நலிந்துவரும் கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500 நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 5267 நலிந்த கலைஞர்கள் நிதியுதவி பெற்றுவருகின்றனர். இவ்வாண்டு மேலும் 500 கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குப் பேணுகைத் தொகை 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.5,000/- வீதம் 8 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை 197 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. புத்திளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம் மற்றும் பல்வேறு கலைப் பரிவுகளைச் சார்ந்த 29 இளங்கலைஞர்கள் 1999-2000 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கலை வடிவங்களை ஆவணமாக்கும் திட்டத்தின்கீழ் கொல்லிமலை மற்றும் உதகமண்டல மலைக் குன்றுகளில் வாழ்ந்துவரும் பழங்குடி மக்களின் அரிய கலைக் கூறுகள் ஆவணமாக்கப்பட்டுள்ளன. மூலக் கலையான தெருக்கூத்துக் கலையினை ஆவணமாக்கும் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம், புரிசை, குண்டையார்தண்டலம், திருப்பத்தூர், தருமபுரி ஆகிய இடங்களில் தெருக்கூத்து விழா நடத்தி ஆவணமாக்கப்பட்டுள்ளது. வெளி மாநில அரசு கலை விழாவினைத் தமிழகத்தில் நடத்திடும்பொருட்டு கேரளா, புதுச்சேரி, கோவா, ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலிருந்து புகழ்பெற்ற ஊரகக் கலைஞர்களை அழைத்துச் சென்னையில் 5-2-2000, 6-2-2000 ஆகிய இரண்டு நாட்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.3 இலட்சம் செலவில் கிராமியக் கலை விழா நடத்தப்படவுள்ளது.

## தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு கவின்கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், பரப்பவும் 1975-ல் தோற்றுவிக்கப்பட்டது. அரசால் அளிக்கப்படும் நல்கைத் தொகையைக் கொண்டு ஓவிய, சிற்பக் கலை வளர்ச்சி தொடர்பான திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

1998-1999 ஆம் ஆண்டில் சென்னை, கும்பகோணம் அரசினர் கலைத் தொழிற் கல்லூரிகள், கலாசேத்திர நிறுவனம், ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி இறுதியாண்டு இளங்கலை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ரூ.3,000 வீதம் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டன. 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து கூடுதலாகச் சென்னை, அரசு கலைத் தொழிற் கல்லூரியில் இறுதியாண்டு முதுகலை பயிலும் 4 மாணவர்களுக்கும், கும்பகோணம் அரசு கலைத் தொழிற் கல்லூரியில் இறுதியாண்டு முதுகலை பயிலும் 2 மாணவர்களுக்கும் தலா ரூ.5,000 வீதம் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டன. 1999-2000ஆம் ஆண்டு தனியார் கண்காட்சி, கூட்டுக் கண்காட்சி நடத்த நிதியுதவி வழங்கப்பட்டது. புதுப்பாணி கலைக் காட்சி நடத்தி விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், கலைக் காட்சியில் 30 அகவைக்கு மேற்பட்ட 'மூத்த கலைஞர்கள்' பங்குகொள்ளும் பிரிவில் கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்டுவந்த விருதுத் தொகை ரூ.10,000/-, ரூ.15,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் புதுப்பாணிப் பிரிவைச் சார்ந்த இரண்டு மூத்த ஓவியர்களுக்குக் 'கலைச் செம்மல்' விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர், சேலம், காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள மண்டல கலை-பண்பாட்டு மையங்கள் மூலமாகக் கலைக்காட்சிகள், கருத்தரங்குகள், கலைப் பட்டறை, விருது வழங்கு நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப்பட்டன. தமிழ்நாடு ஓவிய-சிற்பம் சார்ந்த 35 கலைஞர்கள் பற்றிய இரண்டாவது தொகுப்பு நூல் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்படவுள்ளது. நுண்கலைப் பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. 2000-2001ஆம் ஆண்டில் ரூ.3 இலட்சம் செலவில் நுண்கலைகள் குறித்த ஆவணத் தொகுப்பு தயாரிக்கப்படவுள்ளது.

**ஜவகர் சிறுவர் மன்றம்**

சிறுவர்களிடையே கலைப் பயிற்சி அளிக்கவும், கலைத் திறமைகளை மேம்படுத்தவும் வாய்ப்பளிக்கும்பொருட்டு, 1979 ஆம் ஆண்டு குழந்தைகள் நாளன்று அரசால் சென்னையில் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டு முதல், ஆண்டுக்கு ஐந்து மாவட்டங்களில் தொடங்குதல் என்ற வகையில் 1998-99 முடிய 17 மாவட்டங்களிலும், 2 ஊரக மையங்களும் தொடங்கப்பட்டுச் செயற்பட்டுவருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டு, மேலும் 5 மாவட்டங்களில் ஜவகர் சிறுவர் மன்றங்களும், 10 விரிவாக்க மையங்களும் தோற்றுவிக்கப்பட்டு





வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்புதுப்பட்டியிலும், மதுரை மாவட்டத்தில் ஆணையூரிலும் சிறுவர்மன்ற ஊரக மையங்கள் செயற்பட்டுவருகின்றன. தேசிய சிறுவர்மன்ற உதவியுடன் மலையக மையம் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் சிறுவர் இல்லங்களுக்கு நூல்கள் வாங்குதல், அறிவுத்திற மேம்பாட்டுப் பொருள்கள் வாங்குதல், நீர் குளிர்விப்புச் சாதனம் வாங்குதல் மற்றும் ஆண்டுத் திட்டங்களுக்கு ரூ.9.65 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கோடைக் கால, மாரிக் கால முகாம்கள் உதகமண்டலத்திலும், மதுரையிலும் நடத்தப்பெற்றன. இதில் பல்வேறு மாவட்டச் சிறுவர் மன்றங்களைச் சேர்ந்த 100 சிறார்கள் நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, நாடகம் ஆகிய கலைகளில் கலை வல்லுநர்கள் மூலமாகப் பயிற்சி பெற்றனர். இந்தியத் துணைக் கண்டத்தில் முதன் முறையாகக் 'கலை உலா' என்னும் பெயரில் கலைச் சிறார்கள் பரிமாற்றத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி டிசம்பரில் தமிழகச் சிறார்கள் அகமதாபாத் சென்று பல்வேறு இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தினர். மணிப்பூர் மாநிலச் சிறார்களால் சென்னை, சேலம், புதுக்கோட்டை, திண்டுக்கல், கன்னியாகுமரி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

⊠⊠⊠

223309